தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 5, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஆகஸ்ட் 21, செவ்வாய்க் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு."

தம் நிலைமையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக் கொள்ளாது. ஆகையால், உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக் குறியிட்ட வினாக்கள்.

மதுராந்தகம் தீயணைப்பு நிலையம்.

*1212 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் கடந்த சில மாதங்களாக தீயணைப்பு வண்டியில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தீயணைப்பு வண்டி வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் 12—3—1989 முதல் ஒரு தீயணைப்பு நீர்த்தாங்கி வண்டி எண் டி.எம்.ஒய். 7973 நிறுத்தப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 29—12—1988 முதல் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி எண் டி.எம்.ஜே. 7741 மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டு அதுவும் நல்ல முறையில் பணியாற்றி வருகின்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களிலே நாம் தீயணைப்பு நிலையங்களை ஆரம்பித்து இருக்கிறோம். இப்போது நிலக்கோட்டை, வத்தலகுண்டு, இதுமாதிரி பல இடங்களிலே, தீயணைப்புப் பகுதியிலே வேலை செய்யக்கூடிய ஆட்களும் சரியாக இல்லை. அதோடு அந்தத் தீயணைப்பு வண்டியும் சரியாக இல்லை என்று அரசினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா ? ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நிலக்கோட்டை பகுதியிலே உள்ள தீயணைக்கும் வண்டி நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா என்று அம்மையார் கேட்கிறார்கள். புகார் இருக்கிறதா ? (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : வண்டியே இல்லை சார். அதற்கு ஏதாவது பண்ண முடியுமா ? (குறுக்கீடு) வண்டியே இல்லை.

(பதில் இல்லை.)

தமிழ்நாடு பரிசுச் சீட்டு அச்சடிப்பு.

*1638 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு எந்த அச்சகத்தில் அச்சிடப் படுகிறது ;

(ஆ) அதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு, கர்நாடக மாநிலம், மணிப்பாலில் உள்ள கனரா செக்யூரிட்டி அச்சகத்தில் அச்சிடப் படுகிறது.

(ஆ) இதற்கான செலவு, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பரிசுச் சீட்டுக் குலுக்கல்களின் எண்ணிக்கை, வெளியிடப்படும் வரிசைகளின் எண்ணிக்கை ஆகியவைகளைப்பொறுத்து, ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். 1988-89 ஆண்டில் பரிசுச் சீட்டு அச்சிடுவதற்கு அரசு ரூ. 24,42,208.35 காசு செலவு செய்துள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களிலே நாம் தீயணைப்பு நிலையங்களை ஆரம்பித்து இருக்கிறோம். இப்போது நிலக்கோட்டை, வத்தலகுண்டு, இதுமாதிரி பல இடங்களிலே, தீயணைப்புப் பகுதியிலே வேலை செய்யக்கூடிய ஆட்களும் சரியாக இல்லை. அதோடு அந்தத் தீயணைப்பு வண்டியும் சரியாக இல்லை என்று அரசினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா ? ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நிலக்கோட்டை பகுதியிலே உள்ள தீயணைக்கும் வண்டி நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா என்று அம்மையார் கேட்கிறார்கள். புகார் இருக்கிறதா ? (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : வண்டியே இல்லை சார். அதற்கு ஏதாவது பண்ண முடியுமா ? (குறுக்கீடு) வண்டியே இல்லை.

(பதில் இல்லை.)

தமிழ்நாடு பரிசுச் சீட்டு அச்சடிப்பு.

*1638 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு எந்த அச்சகத்தில் அச்சிடப்படுகிறது ;

(ஆ) அதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு, கர்நாடக மாநிலம், மணிப்பாலில் உள்ள கனரா செக்யூரிட்டி அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.

(ஆ) இதற்கான செலவு, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பரிசுச் சீட்டுக் குலுக்கல்களின் எண்ணிக்கை, வெளியிடப்படும் வரிசைகளின் எண்ணிக்கை ஆகியவைகளைப்பொறுத்து, ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். 1988-89 ஆண்டில் பரிசுச் சீட்டு அச்சிடுவதற்கு அரசு ரூ. 24,42,208.35 காசு செலவு செய்துள்ளது.

1990 ஆகஸ்ட் 21]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே சிறந்த அச்சகம் இருக்கும்போது, வெளி மாநிலங்களிலே அச்சிடுவதற்கு என்ன காரணம்? அதே போன்று இந்தப் பரிசுச் சீட்டுகள் தவறான முறையில் கள்ளத்தனமாக அச்சிடப்பட்டு பல இடங்களிலே விநியோகிக்கப்படுவது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏற்கனவே அரசு அச்சகத்திலேதான் இந்தப் பரிசுச் சீட்டுகள் அச்சிடப்பட்டன. ஆனால் வேறு மாநிலங்களில் இருந்து வருகின்ற பரிசுச் சீட்டுகள் கவர்ச்சிகரமாகவும், பல வண்ணங்களிலும் அச்சிடப்பட்ட காரணத்தினால், அது போன்ற பரிசுச் சீட்டுகளை நாமும் அச்சிட வேண்டும் என்று எண்ணியபோது, நம்முடைய அரசு அச்சகத்தில் அதற்கான வசதிகள் இல்லை. எனவேதான் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும்போது, நம்முடைய மாநிலத்திலே மாத்திரம் என்று குறிப்பிட்டு அப்படிப்பட்ட டெண்டர் விடமுடியாது. எனவே எல்லா மாநில அளவிலே ஒப்பந்தங்கள் கோரப்பட்டபோது, இங்கே குறிப்பிடப்பட்ட மணிப்பாலிலே உள்ள கனரா செக்யூரிட்டி என்ற அச்சகம், மற்ற அச்சகத்தார் கோரியதை விடக் குறைவான அளவுக்கு ஒப்பந்தத்திற்கு ஒத்துக்கொண்ட காரணத்தால் அங்கே இந்தப் பரிசுச் சீட்டுகள் அச்சிடப்படுவதற்கு 1986 ஆம் ஆண்டுக்கு முன்பே கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு மாநிலங்களில் இங்குள்ள பரிசுச் சீட்டுகளைப் போல, போலிச் சீட்டுகள் அச்சிடுவதைப் பற்றிக் கேட்டார்கள். அதைப் பற்றிய விவரங்கள் இப்போது இல்லை.

9-05 மணி

திரு. கோ. பூவராகன் : தலைவரவர்களே, தற்போது சிறந்த முறையிலே, நம்முடைய மாநிலத்திலே கூட நல்ல பளபளப்பாகவும், நல்ல கவர்ச்சிகரமாகவும் அச்சிடக்கூடிய திறமையுள்ள அச்சகங்கள் இருக்கின்றன. இங்கு யாராவது அந்தச் சமயத்திலே டெண்டர் போடுகிறபோது கோரியிருந்தார்களா? தவிர, வெளிமாநிலங்களிலிருந்து ஏராளமான பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்திற்கு வந்து ஆக்கிரமம் செய்து, கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறதே, தொடர்ந்து அவ்வாறு நடத்துவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் முதல் பகுதிக்குப் பதில், அப்போது டெண்டர் கேட்டதற்கு மூன்று அச்சகத்தார் டெண்டர் கோரியிருந்தார்கள். அதிலே கனரா செக்யூரிட்டி, மணிப்பால் அச்சகத்தார்தான் ரூ. 38.40, ரூ. 40.68, ரூ. 43.26, ரூ. 46 என்று பலவித சீட்டுகளுக்கு தங்களுடைய டெண்டரைக் கோரியிருந்தார்கள். அடுத்த அச்சகத்தார் 50 ரூபாய் வரையில் கோரியிருந்தார்கள். அதற்கு ''மணிப்பால் பவர் பிரஸ் என்று''

பெயர். ஜெமினி கிராஃபிக்ஸ் என்ற அச்சகத்தார் 79 ரூபாய் வரையிலே கோரியிருந்தார்கள். ரூ. 79, ரூ. 50. ரூ. 46 என்று பார்த்தபோது, 46 ரூபாய் டெண்டருக்கே அது தரப்பட்டிருக்கிறது. இங்கு அழகாக அச்சிடக்கூடிய அச்சகங்கள் இருந்தாலும்கூட, இந்த டெண்டரைப் பொறுத்தவரையில், 20—6—1990-உடன் முடிவடைகிறது. இதைத்தொடர்ந்து அடுத்த டெண்டர் விடப்படும்போது, தமிழ்நாட்டிலே உள்ள அழகான முறையிலே அச்சிடக்கூடிய அச்சகத்தாரும், அந்த டெண்டரிலே பங்கு பெறலாம். அது நமக்கு வசதி வாய்ப்பான டெண்டராக, குறைந்த விலையிலே அச்சிடக்கூடிய அளவிலே இருக்குமானால், அவர்களுக்குத் தருவதிலே எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

அடுத்த பகுதியாக இன்னொரு கேள்வியை அவர்கள் எழுப்பினார்கள். வெளி மாநிலங்களிலே இருந்து இங்கு வந்து விற்பனையாகிற பரிசுச் சீட்டுகள் பற்றி எழுப்பினார்கள். அதன் மூலமாக ஆண்டொன்றுக்கு 500 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ் நாட்டுப் பணம் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறது என்ற காரணத்தினால்தான், அது தடுக்கப்பட்டது. இடையிலே வழக்குகள் எல்லாம் நடைபெற்று, இப்போது மீண்டும் தடுக்கப்படும் நிலையிலேதான் அது இருக்கிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலமாகக் கடந்த ஆண்டு எவ்வளவு தொகை வருமானமாக அரசுக்கு வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1989-90-ல் அதாவது டிசம்பர் மாதம் வரையிலான—நிதி ஆண்டு அல்லது டிசம்பர் மாதம் வரையிலான மொத்த நிகர வரவாக 2.44 கோடி ரூபாய் அரசுக்கு வந்திருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகளுக்கு பரிசு அடிக்கும்போது, அந்தச் சீட்டானது கள்ளச் சந்தையிலே விற்கப்பட்டு பணம் ஆக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானங்கள் அதனால் இழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பரிசு விழுந்தவர்கள் அதைக் கள்ளச் சந்தையிலே விற்றால், அது பற்றி நாம் கவலைப்பட முடியாது. ஏனென்றால், பரிசு விழுந்தவர்கள் தங்களுடைய கருப்புப் பணத்தை மாற்றிக் கொள்வதற்காக கள்ளச் சந்தையிலே விற்பதாக சில செய்திகள் வந்திருக்கின்றன. உரிய முறையிலே அந்தப் புகார்கள் அரசின் கவனத்திற்கு வருமேயானால், வருமான வரி இலாக்கா மூலமாக அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

1990 ஆகஸ்ட் 21]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு முறையானது சூதாட்டம் போன்ற ஒரு காரியத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இதனால் சாதாரணமாக உழைக்கிற மக்கள், அதுவும் கூலி வேலை செய்யக்கூடியவர்கள், அன்றாடம் 5 ரூபாய், 10 ரூபாய் என்று வரக்கூடிய வருமானத்தையும் தொலைத்து விடு கிறார்கள். இதன் மூலம் வெளி மாநிலங்களுக்கு ரூ. 500 கோடி இங்கிருந்து போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அதை நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கும் போது, நம்முடைய மாநிலத்திலே இந்தச் சீட்டுகள் நடத்து வதன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன—அறவே பரிசுச் சீட்டு முறையையே நிறுத்துவதற்கு—தமிழ் நாட்டிற்குள்ளே நுழையவிடாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய் வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒருமுறை இராஜாஜி நினைவகத்தைத் திறந்து வைக்க வந்த திரு. ஜெயபிரகாஷ் நாராயண் இந்தக் கருத்தை வெளியிட்டு, அப்போது கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, நிறுத்தப் பட்டது. ஆனால், இப்போது இந்தியா முழுமையும், மாண்பு மிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி குறிப்பிட்டதைப் போல, இந்தச் சூதாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தி னாலே, நாமும் அதிலே கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து நம்முடைய தமிழகத் திற்கு வந்து பரிசு விழுகிற சீட்டுகளுக்கு அவர்கள் 'பிரைஸ்' கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. சிலர் லோக லாகவே அழகான முறையிலே பிரிண்ட் செய்து விற் கிறார்கள். அந்தப் பரிசுச் சீட்டின் நம்பர் விழுந்தால்கூட, பரிசுச் சீட்டு விழுந்தவர்கள் யாரிடமிருந்து வாங்குவது என்று தெரியாத அளவில்தான் இருக்கிறது. ஆகவே, 500 கோடி ரூபாய் என்று வெளி மாநிலங்களின் பெயரைச் சொல்லி, பலபேர் கொள்ளையடித்து வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை மனதிற்கொண்டு, வெளி மாநிலங் களிலிருந்து பரிசுச் சீட்டுகள் இங்கு வராமல் தடுத்து, நம்முடைய மாநிலத்திலிருந்துதான் பரிசுச் சீட்டுகள் வாங்க வேண்டும் என்கிற அளவில் ஒரு ஆணையை—சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

9–10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, என்னதான் நாம் எடுதது்ச் சொன்னாலும், நம்முடைய

மாநிலத்து மக்களுக்கு வெளி மாநிலத்திலேயிருந்து அழகாக, கவர்ச்சியாக வருகின்ற அந்தச் சீட்டுகள் மீதுதான் ஒரு பிரேமையே இருக்கிறது. (சிரிப்பு)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு அச்சிடுவதற்கு வெளி மாநிலத்திலே இருந்து டெண்டர் போடுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். அப்படி டெண்டர் கோருகின்றபோது இந்த மாநிலத்திலே இருக்கிற அச்சகத்தினுடைய உரிமையாளர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் நம்முடைய மாநில அளவிலேயே டெண்டர் கோரப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நமது மாநில அளவிலேயே ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருவது விதிமுறைகளுக்குப் புறம்பானது.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில லாட்டரிச் சீட்டு ஏஜென்டுகள் விற்பனை வரியைத் தங்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்போது, சென்னை உயர்நீதிமன்றம், 'தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட்' 'புரவிஷன்ஸ்'ஸை வெளி மாநில லாட்டரிச் சீட்டு ஏஜென்டுகள் மீது பிரயோகிக்கக்கூடாது என்று தடையாணை பிறப்பித்திருக்கிறதே, அதை அரசாங்கம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்படுவது குறித்த கேள்வி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரமறிந்து பதில் சொல்ல இயலும்.

ஆசிரியர் பயிற்சி

* *1073* திரு. மு. இராமநாதன்,

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டைச் சார்ந்தோர் அண்டை மாநிலங்களின் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துச் சான்றிதழ் பெற்று வரக்கூடியவர்களுக்குத் தமிழக அரசு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் நடைமுறை சிக்கல் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) அவர்கள் பெற்றுள்ள சான்றிதழ்கள் தகுதியற்றது என அரசு கருதுகிறதா ?

மாநிலத்து மக்களுக்கு வெளி மாநிலத்திலேயிருந்து அழகாக, கவர்ச்சியாக வருகின்ற அந்தச் சீட்டுகள் மீதுதான் ஒரு பிரேமையே இருக்கிறது. (சிரிப்பு)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு அச்சிடுவதற்கு வெளி மாநிலத்திலே இருந்து டெண்டர் போடுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். அப்படி டெண்டர் கோருகின்றபோது இந்த மாநிலத்திலே இருக்கிற அச்சகத்தினுடைய உரிமையாளர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் நம்முடைய மாநில அளவிலேயே டெண்டர் கோரப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நமது மாநில அளவிலேயே ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருவது விதிமுறைகளுக்குப் புறம்பானது.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில லாட்டரிச் சீட்டு ஏஜெண்டுகள் விற்பனை வரியைத் தங்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்போது, சென்னை உயர்நீதிமன்றம், 'தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட்' 'புரவிஷன்ஸ்'ஸை வெளி மாநில லாட்டரிச் சீட்டு ஏஜெண்டுகள் மீது பிரயோகிக்கக்கூடாது என்று தடையாணை பிறப்பித்திருக்கிறதே, அதை அரசாங்கம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்படுவது குறித்த கேள்வி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரமறிந்து பதில் சொல்ல இயலும்.

ஆசிரியர் பயிற்சி

* *1073* திரு. மு. இராமநாதன்,

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டைச் சார்ந்தோர் அண்டை மாநிலங்களின் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துச் சான்றிதழ் பெற்று வரக்கூடியவர்களுக்குத் தமிழக அரசு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் நடைமுறை சிக்கல் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) அவர்கள் பெற்றுள்ள சான்றிதழ்கள் தகுதியற்றது என அரசு கருதுகிறதா ?

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அண்டை மாநிலங்களில் பயிற்சி பெற்றோரின் சான்றிதழ்கள் உண்மையானவை என்றும், தமிழ்நாடு அரசு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுக்குச் சமமானவை என்றும் மதிப்பீடு செய்யப்பட்டால் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவதில் தடையேதுமில்லை.

(ஆ) அண்டை மாநிலங்களில் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சான்றிதழ்கள் அரசால் வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பம் செய்து இங்கு பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாக் காரணத்தினால்தான் அவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று இத்தகைய சான்றிதழ்களைப் பெற்று, பிறகு தாய் நாட்டில் வேலைவாய்ப்பை வேண்டி விண்ணப்பிக்கின்ற சூழ்நிலையும், அதன் காரணமாக அது சரியான சான்றிதழ் அல்ல என்று அரசு வேலைவாய்ப்பை மறுக்கின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, தாய் நாட்டிலேயே விண்ணப்பிப்பவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கின்ற முறையிலே ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா ? அந்த வாய்ப்பை ஆசிரியர் பயிற்சிக்குச் செல்லக் கூடியவர்களுக்குத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு, மறு ஆய்வு செய்யப்பட்டு, நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மறுபடியும் சில முடிவுகள் எடுக்கப்பட்டு தொடர்ந்து வருகிற ஒன்றாகும். ஒன்று. பிற மாநிலங்களில் பயிற்சி பெறுகின்றவர்களுக்குப் பயிற்சிக்குச் செல்வதற்கே தகுதி குறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்று வெற்றி பெறுவதற்கும் கூட, பட்டயம் பெறுவதற்கும் கூட, மதிப்பு எண்கள் குறைவாக இருக்கின்றன. எனவே, நம்முடைய மாநிலத்திலே தகுதி பெறுகிறவர்களுக்கு அவர்கள் முழுவதும் ஈடாவது இல்லை. மேலும் ஒன்று, பயிற்சி பெற்றதாக தவறான, பொய்யான சான்றுகளும் பெறப்படுகின்றன. நம்முடைய மாநிலத்திலேயும், ஒரு ஆண்டுக்கு எவ்வளவு பேர் இப்படிப்பட்ட அலுவலில் இடம் பெறுவார்களோ ஆசிரியர்களாக, அவர்களைப் போல பல மடங்கு பயிற்சி பெற்றவர்கள், தமிழ்நாட்டிலேயே பயிற்சி பெற்றவர்கள் இப்போது இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வேலை

வாய்ப்பு வழங்கவேண்டும் என்றாலும்கூட, உரிய விதிகளுக் குட்பட்டுத்தான் வழங்கமுடியும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சியில் இடம் பெறமுடியாத காரணத்தினால் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறார்கள். அதுபோன்று தமிழ்நாட்டில் அரசு அனுமதி பெறாத பள்ளி களில் ஏராளமானவர்கள் சேர்ந்து படித்துவிட்டு, கடைசியில் ஏமாந்து போய் வேலைவாய்ப்பைப் பெறமுடியாத சூழ்நிலை யில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை மாற்ற, அரசு அனுமதி பெறாத பள்ளிகள் அனைத்தையும் தடை செய்வதோடு, கடந்த காலத்தில் கர்நாடகாவில் படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மட்டுமாவது வேலைவாய்ப்பை இந்த அரசு தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 குறிக்கோள்களில் இந்தக் கேள்வி இடம் பெற்றிருக்கிறது. ஒன்று, தமிழ்நாட்டிலேயே படித்தவர்களுக்கு வேலையில்லாத நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரே ஏற்றுக்கொண்டிருக்கிறார். இரண்டாவது, வெளி மாநிலங்களில் படித்தவர்களுக்கு வேலை வழங்கமுடியுமா என்று கேட்கிறபோது அவர்களுடைய தகுதி, தமிழ்நாட்டில் படித்தவர்களுடைய தகுதிக்குச் சமமாக இருக்குமானால் அது கருதிப் பார்க்கப்படலாம். அப்போது மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்கப்படும். 50 எண்கள் பெற்றவர் கள்தான் தமிழ்நாட்டில் இடம் பெறலாம் என்றால், 40 எண்கள் பெற்றவர்கள் அங்கே இடம் பெறுவதாக அவர் களாலேயே சொல்லப்படுகிறது. இங்கே சான்றிதழ் பெற 50 விழுக்காடு எண்கள் பெற வேண்டுமென்று இருக்கிறது. அங்கே 40 விழுக்காடு என்று இருக்கிறது. எனவே, அதிலே தகுதிக் குறைவு ஏற்படுகிறது. மற்றும் ஒன்று—தமிழ்நாட்டிலே ஆசிரியர் பயிற்சியும் பெற்று, தகுதியும் பெற்று, வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறபோது, அதிலேயும் தமிழ்நாட்டுப் பயிற்சிப் பள்ளிகளிலே இடம் கிடைக்காமல் இருக்கிற நிலையால் அவர்கள் வெளி மாநிலங்களுக்குப் பயிற்சிபெறச் செல் கிறார்கள் என்றால், தமிழ்நாட்டிலே வேலை கிடைக்காத போது, அவர்கள் வெளி மாநிலங்களிலேயே வேலையும் தேடிக்கொள்ளலாம்.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சம்பந்தமாகச் சொல்லும்போது, இங்கே தமிழகத்திலே ஆயிரக்கணக்கான

1990 ஆகஸ்ட் 21]

மாணவர்கள் அப்பயிற்சி பெற்று இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதே நேரத்தில், சென்ற அரசாங்கம், சிறு மழலையர் பயிற்சி என்று ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை ஆசிரியர்களாக அங்கீகரிக்காமல் இருக்கிறது. சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அவ்வாறு இருப்பதாகக் கருதுகிறேன். அவர்களையும் ஆசிரியர்களாக அங்கீகரித்து, தமிழக அரசே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களை வேலைகளுக்காகத் தேர்வு செய்வதில் செக்கண்டரி கிரேட் என்ற அளவுக்கு தேர்வு செய்வதில், நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு மகளிராக இருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மழலையர் ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர்கள் இரண்டாயிரம் பேர்கள் இருப்பதாகப் புள்ளி விவரம் இல்லை. அவர்களும் சில நிலைகளில் தேர்வு செய்யப்படுவதற்கு வழி இருப்பதாகவே அந்தத் துறை கருதுகிறது. அந்த நிலைகளில் அவர்கள் வேலைக்கு விண்ணப்பிப்பார்களேயானால், அது குறித்து கருதப் படும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக் கிறிஸ்தவர்கள் நடத்துகிறார்கள். அதிலே மற்றவர்களுக்கு இடம் தருவதில்லை. நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் ஒன்றாம் இரண்டாம் வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பெண்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், 30 சதவிகிதம் அவர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்றும், சலுகை அளித்திருக்கிறார்கள். ஆனால், நெல்லை மாவட்டத்தில் பலருக்கு இந்தப் பள்ளிகளில் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறபோது, இந்தச் சட்டத்தினால் பயன்பெற முடியவில்லை. இதனைக் கருத்தில் கொண்டாவது, கேரளா, மைசூர் போன்ற இடங்களில் படித்து பயிற்சி பெற்றவர்களுக்கு இங்கு வேலை வாய்ப்புத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமய அடிப்படையில் தொண்டு செய்ய வந்தவர்கள், பள்ளிகள் நடத்துகிறபோது பெரும்பாலும் இலவசமாக உதவி செய்கிற முறையில் நடத்துகிற காரணத்தால், சில நேரங்களில் ஒரு சார்பு நிலை தோன்றுகிறது. அதே போல், தொண்டு நிறுவனங்கள் யாராவது முன்வருவார்களேயானால், அது தொண்டு நிறுவனமாக இருந்து, குற்றங்

குறைகளுக்கு இடம் தராமல் இருக்குமானால், அது பரிசீலிக்கப் படலாமே தவிர, தொழில் முறையிலே அத்தகைய பயிற்சிக் கூடங்கள் தொடங்கினால், முறைகேடாக நடக்கிற அந்த நிலையிலேயுள்ள பள்ளிகளை நாம் அனுமதிக்கவும் முடியாது. ஏற்கவும் தேவையில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவிலே படித்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு, 1984–க்குப் பின்னால் தேறிய வர்கள் குறைந்தபட்சம் 50 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. சிலபேர் 1984க்கு முன்னால் படித்து, அங்கே பரீட்சை எழுதி, பரீட்சையிலே தோற்றிருக்கிறார்கள். அவர்கள் தோற்றப் பரீட்சைகளை மட்டும் 1984-க்குப் பிறகு எழுதி, அதிலே 50 மதிப்பெண் களுக்கு மேலே பெற்றிருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்னரே தேறியுள்ள பகுதிகளில் 50 மதிப்பெண்களுக்கு குறையப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள், ஏதோ 100, 150 பேர்தான் அப்படி இருக்கிறார்கள். அவர்களுக்காவது அரசு சலுகை வழங்கி, ஏற்கனவே 1984-க்கு முன்னரே முழுமை யாகத் தேறியவர்களுக்கு அரசு நியமனம் செய்ய உத்தர விட்டதைப் போல, அவர்களுக்கும் உத்தரவிடுமா என அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு 17–9–1984 வரை எவ்வித நிபந் தனையுமின்றி மனிதாபிமான நோக்குடன் தேர்வு செய்யலாம் என்று ஏற்கனவே வழங்கியுள்ள ஆணையே ஒரு சலுகையாக இருக்கிறது. அதற்குமேல் தனிப்பட்டவர்கள் யாராவது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல, தங்களுடைய தகுதியை உயர்த்திக் கொண்டிருப்பார்களேயானால், உயர்த்திக் கொண்ட தகுதியை அரசுக்கு அல்லது அந்தத் துறைக்குத் தெரிவித்து, அதன் மூலம் தங்களுடைய தகுதியை நிரூபித்துக் கொள்ளலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சின்ன 'கிளாரிபிகேஷன்'. நான் கேட்டதை, அமைச்சரவர்களுக்கு என்னால் சரியாகப் புரிய வைக்க முடியவில்லை என்று நினைக்கிறேன். அதாவது 1984க்கு முன்னால் பாஸ் பண்ணியவர்கள் சில பேப்பர்களில் பெயில் ஆகியிருக்கிறார்கள். அவர்களுக்கு 50 விழுக்காடு மார்க் என்று 'பிக்ஸ்' பண்ணியிருக்கிறது, குறைந்தபட்சம் வாங்க வேண்டுமென்று சொல்லி After the year 1984, they have passed these papers, securing more than 50 per cent. But, in

the papers which they have passed before 1984, they have secured only 40 or 45 per cent marks. They cannot also write those papers again. At least for those people, the Government can show some consideration.

9-20 மணி

The Hon, Dr. K. Anbazhagan: Only if and when there is such a scarcity for qualified Teachers in Tamil Nadu, such applications can be considered.

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பு

* 5238 திரு. பா. அப்துல் சமத்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பை மீண்டும் தொழில்நுட்ப இயக்ககத்தின்கீழ் தொடங்கக்கூடிய செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிறைய சர்க்கரை ஆலைகள் இருக்கிற இந்த நிலையில், நம்முடைய அரசும் புதிய சர்க்கரை ஆலையைத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிற இந்த நேரத்தில் இது போன்ற சர்க்கரைத் தொழில் கல்வி டிப்ளமோ படிப்பைத் தொடங்குவதற்கு, சூழ்நிலையின் தேவையைக் கருதி, அது ஏற்கெனவே நடத்தப்பட்டு வந்து இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் கருதி, அரசு மீண்டும் உரிய நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனத் தொழில் நுட்பப் பயிலகத்திலே நடத்தப்பட்ட அந்தப் பயிற்சி வகுப்பு மூன்றரை ஆண்டுக் காலம் கொண்டது; டிப்ளமோ வழங்கப்பட்டது. அது 1986 ஆம் ஆண்டு வரை சிறப்பாக நடைபெற்றது. அந்தப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை என்ற அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னரும் அந்தப் பயிற்சி வகுப்பைத் தனியாக நடத்துவதிலே அதிகப் பயன் இல்லை என்ற காரணத்தால், அம்முடியில் உள்ள சர்க்கரை

the papers which they have passed before 1984, they have secured only 40 or 45 per cent marks. They cannot also write those papers again. At least for those people, the Government can show some consideration.

9-20 மணி

The Hon, Dr. K. Anbazhagan: Only if and when there is such a scarcity for qualified Teachers in Tamil Nadu, such applications can be considered.

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பு

* 5238 திரு. பா. அப்துல் சமத்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பை மீண்டும் தொழில்நுட்ப இயக்ககத்தின்கீழ் தொடங்கக்கூடிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிறைய சர்க்கரை ஆலைகள் இருக்கிற இந்த நிலையில், நம்முடைய அரசும் புதிய சர்க்கரை ஆலையைத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிற இந்த நேரத்தில் இது போன்ற சர்க்கரைத் தொழில் கல்வி டிப்ளமோ படிப்பைத் தொடங்குவதற்கு, சூழ்நிலையின் தேவையைக் கருதி, அது ஏற்கெனவே நடத்தப்பட்டு வந்து இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் கருதி, அரசு மீண்டும் உரிய நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனத் தொழில் நுட்பப் பயிலகத்திலே நடத்தப்பட்ட அந்தப் பயிற்சி வகுப்பு மூன்றரை ஆண்டுக் காலம் கொண்டது; டிப்ளமோ வழங்கப்பட்டது. அது 1986 ஆம் ஆண்டு வரை சிறப்பாக நடைபெற்றது. அந்தப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை என்ற அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னரும் அந்தப் பயிற்சி வகுப்பைத் தனியாக நடத்துவதிலே அதிகப் பயன் இல்லை என்ற காரணத்தால், அம்முடியில் உள்ள சர்க்கரை

ஆராய்ச்சிப் பள்ளி, சர்க்கரை தொழில்நுட்ப பயிற்சி அளித்து வருகிற காரணத்தால் அந்தப் பயிற்சி நிலையத்திலே தேவைப் பட்டவர்கள் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தனியாக நடத்துவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சி மத்திய சிறைச்சாலைக்குக் குடிநிர் வழங்குதல்

* 8721 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜூன் 1991-ல் திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறைக்குக் குடிநீர்த் திட்டம் 1983-ஆம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்காக ரூ. 80 இலட்சம் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் இந்தத் திட்டப் பணிகள் எதுவும் செயல் படுத்தப்படவில்லை என்று தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. ஏன் இவ்வளவு நீண்ட காலதாமதம் ஆனது ? இந்தப் பணி எப்போது தொடங்கப்பட்டது. அப்போது அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு பற்றிய குறிப்பு இப்போது இல்லை. ஆனால் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சியின் காரணமாக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆராய்ச்சிப் பள்ளி, சர்க்கரை தொழில்நுட்ப பயிற்சி அளித்து வருகிற காரணத்தால் அந்தப் பயிற்சி நிலையத்திலே தேவைப் பட்டவர்கள் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தனியாக நடத்துவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சி மத்திய சிறைச்சாலைக்குக் குடிநிர் வழங்குதல்

* 8721 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜூன் 1991-ல் திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க் கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறைக்குக் குடிநீர்த் திட்டம் 1983-ஆம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்காக ரூ. 80 இலட்சம் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் இந்தத் திட்டப் பணிகள் எதுவும் செயல் படுத்தப்படவில்லை என்று தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. ஏன் இவ்வளவு நீண்ட காலதாமதம் ஆனது ? இந்தப் பணி எப்போது தொடங்கப்பட்டது. அப்போது அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு பற்றிய குறிப்பு இப்போது இல்லை. ஆனால் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சியின் காரணமாக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1990 ஆகஸ்ட் 21]

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பணம் ஒப்படைக்கப்பட்ட பிறகும் குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தாததன் காரணமாக ஆண்டுதோறும் இந்தச் சிறைக்குக் குடிநீர் சப்ளை செய்ததற்காக லாரிகளுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கிறது. இது வீண் நஷ்டம் என்றும் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்ட அந்த ரூ. 80 இலட்சம் தொகைக்கு வட்டியேனும் சிறைத்துறை பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கான அறிவிப்புகளை அரசு, இலாக்காவிற்குத் தெரிவித்திருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ஜெயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது, இரண்டாண்டுக் காலமாக இயங்கவில்லை. அது பற்றி அரசுக்குத் தெரியுமா ? அதை இயங்க வைப்பதற்குத் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காவிரி ஆற்றிலிருந்து திருச்சி சிறைக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பற்றிய குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துத் தெரிவிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 8105 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) மயிலாடுதுறையைத் தலைமை இடமாகக் கொண்டு வள்ளியம்மை மாவட்டம் என பெயரிடப்படுமா ?

1990 ஆகஸ்ட் 21]

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பணம் ஒப்படைக்கப்பட்ட பிறகும் குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தாததன் காரணமாக ஆண்டுதோறும் இந்தச் சிறைக்குக் குடிநீர் சப்ளை செய்ததற்காக லாரிகளுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கிறது. இது வீண் நஷ்டம் என்றும் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்ட அந்த ரூ. 80 இலட்சம் தொகைக்கு வட்டியேனும் சிறைத்துறை பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கான அறிவிப்புகளை அரசு, இலாக்காவிற்குத் தெரிவித்திருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ஜெயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது, இரண்டாண்டுக் காலமாக இயங்க வில்லை. அது பற்றி அரசுக்குத் தெரியுமா ? அதை இயங்க வைப்பதற்குத் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காவிரி ஆற்றிலிருந்து திருச்சி சிறைக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பற்றிய குறிப்பு இல்லை.. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துத் தெரிவிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 8105 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) மயிலாடுதுறையைத் தலைமை இடமாகக் கொண்டு வள்ளியம்மை மாவட்டம் என பெயரிடப்படுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தை மூன்றாக பிரிக்க முந்தைய அரசால் முடிவெடுக்கப்பட்டது. இன்றைய அரசு இதைப்பற்றி இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

(ஆ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

9–25 மணி)

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கீழ்த்தஞ்சைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இப்போது பெரும்பாலான மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. அதைப் போல தஞ்சை மாவட்டத்தையும் பிரிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள மக்கள் எல்லாம் மிகவும் ஆவலாக உள்ளார்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்தவுடன் நிச்சயமாக மாவட்டம் பிரிக்கப்படும் என்ற ஆவல் இருக்கிற காரணத்தால் விரைவில் அந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்கள் பெற்றிருக்கிற ஆவலுக்கு எனது பாராட்டு. புதியதாக ஒரு மாவட்டத்தை உருவாக்க அரசுக்கு தொடரினச் செலவாக நான்கு கோடி ரூபாயும், தொடரா இனச் செலவாக பதினைந்து கோடி ரூபாயும் ஏற்படும் என்பதால் இந்தப் பிரச்சினையைப் பற்றி முடிவெடுக்கவில்லை.

குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்குதல்.

***10246 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சென்னை பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது வீட்டு மனை வழங்கப்படும் ?

(இ) எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தை மூன்றாக பிரிக்க முந்தைய அரசால் முடிவெடுக்கப்பட்டது. இன்றைய அரசு இதைப்பற்றி இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

(ஆ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

9–25 மணி)

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கீழ்த்தஞ்சைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இப்போது பெரும்பாலான மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. அதைப் போல தஞ்சை மாவட்டத்தையும் பிரிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள மக்கள் எல்லாம் மிகவும் ஆவலாக உள்ளார்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்தவுடன் நிச்சயமாக மாவட்டம் பிரிக்கப்படும் என்ற ஆவல் இருக்கிற காரணத்தால் விரைவில் அந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்கள் பெற்றிருக்கிற ஆவலுக்கு எனது பாராட்டு. புதியதாக ஒரு மாவட்டத்தை உருவாக்க அரசுக்கு தொடரினச் செலவாக நான்கு கோடி ரூபாயும், தொடரா இனச் செலவாக பதினைந்து கோடி ரூபாயும் ஏற்படும் என்பதால் இந்தப் பிரச்சினையைப் பற்றி முடிவெடுக்கவில்லை.

குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்குதல்.

***10246 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சென்னை பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது வீட்டு மனை வழங்கப்படும் ?

(இ) எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :

மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ), (ஆ), மற்றும் (இ); சென்னை பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்க கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் அனைத்து வேலைகளும் விரைவாக நடைபெறுவதைப் போல அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் விரைவாக செயல்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். எனவே, அண்மையில் வரவிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது வீட்டு மனைகளை வழங்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேதி குறிக்கவோ, நேரம் குறிக்கவோ இப்போது முடியாது. ஆனால், வீட்டு மனை வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் குளத்தூர் ஏரி என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேரியின் நீர்ப்பிடிப்பு பகுதி, சாலை வசதி, கழிவு நீர் வெளியேற்றம், குடிநீர் முதலிய பொதுக் காரியங்களுக்குத் தேவையான நிலம் நீங்கலாக எவ்வளவு நிலம் இத்திட்டத்தின் பயன்பாட்டிற்குக் கிடைக்கும் என்றும், இந்நிலப் பகுதியில் வரக் கூடிய வீட்டு மனைகளின் எண்ணிக்கை, புலத்தின் வரைபடம் (Site plan) லே-அவுட் (Layout plan) மற்றும் வசூலிக்கப்பட வேண்டிய மேம்பாட்டுக் கட்டணம் (Betterment Charges) ஆகியவை பற்றி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் (Madras Metropolitan Development Authority) விவர அறிக்கை கோரப்பட்டுள்ளது. அது எதிர் நோக்கப்படும். சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து கோரப்பட்டுள்ள அறிக்கை பெறப்பட்டதும் பரிசீலிக்கப்படும். எந்த அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூரில் பல இடங்கள் தற்போது செங்கல் சூளைக்காரர்களாலும், மற்றவர்களாலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகின்றன என்று அறிய வருகிறேன். இதனால் இன்னும் தாமதம் ஏற்பட்டால் சிக்கல்கள் பல ஏற்படும். எனவே, விரைவாக ஆக்கிரமிப்புகளை அகற்றி அரசு ஊழியர்களுக்கு உடனடியாக வீட்டு மனைகளைத் தர வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகிற இந்த நேரத்தில், இத்திட்டம் உடனடியாக செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டும் கருத்துருவை விடுத்து, வீட்டு மனை களாக ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. அங்கே செங்கல்லை அடுக்குகிறார்களா அல்லது செங்கல்லை அங்கே செய்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. அது பற்றி பரிசீலிக்கப்படும். செங்கல்களை நிரப்புவதற்கும், ஆழமாகக் குழி தோண்டி அதிலேயிருந்து கிடைக்கிற மண்ணை வைத்து செங்கல்லை உருவாக்குவதற்கும் ஆக்கிரமிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-30 மணி

இன்னொன்று, கேட்காத கேள்விக்கு, சபை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். நிலத்தின் பரப்பளவு குறைவாக உள்ள பட்சத்திலும், பெரும்பான்மையான அரசு ஊழியர்கள் பயன் பெறவேண்டுமென்ற நோக்கத்துடனும் வீட்டு மனைகளின் அளவு வெகுவாக குறைக்கப்பட்டு, முக்கால் கிரவுண்ட் மற்றும் அரை கிரவுண்ட் எனவும் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பகுதியில் 100 அடி அகலம் கொண்ட உள் வட்டச் சாலை (Inner Ring Road) அமைக்கப்படவுள்ளது. இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் பாதுகாக்க வேண்டி, இப்பகுதியின் தாழ்வான பகுதியில் 5 ஏக்கர் நிலம் நீர் விடு பகுதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிலையில் இவ்வேரியின் நீர்ப் பிடிப்புப் பகுதி, சாலை வசதி, கழிவு நீர் வெளியேற்றம், குடிநீர் முதலிய இந்தக் காரியங்களுக்குத் தேவையான நிலம் நீங்கலாக எவ்வளவு நிலம் இத்திட்டத்தின் பயன்பாட்டுக்குக் கிடைக்கும் என்றும், இந்நிலப் பகுதியில் வரக்கூடிய வீட்டுமனைகளின் எண்ணிக்கை; புலத்தின் வரைபடம் (Site Plan Layout Plan) மற்றும் வசூலிக்கப்பட வேண்டிய மேம்பாட்டுக் கட்டணம் (Betterment Charge) ஆகியவற்றைப்பற்றி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் (Madras Metropolitan Development Authority) விவரங்கள் கோரப்பட்டு உள்ளன. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. விடை தரப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதிக்காரர் என்ற முறையில் திரு. வரதராசன் ஏதோ கேட்க வேண்டுமாம்.

திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 800

வீட்டு மனைகள் தர இயலும் என்று அறியப்படுகிறது. அரசு ஊழியர்கள் வீட்டு மனை கோரும்போது, இன்றைக்கு வீடு கட்டுகிற பொருட்களின் விலைவாசி எல்லாம் ஏறிக் கொண்டு இருக்கிற நேரத்திலே, விரைவாக இந்த வீட்டு மனைகளை வழங்கினால், அவர்கள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். எம்.எம்.டி.ஏ.-வே ஏன் இவ்வளவு காலதாமதம் செய்கிறது? அதுவும் அரசுத் துறைதான் என்கிற முறையிலே, எம்.எம்.டி.ஏ. வுக்கு ஒரு காலக் கெடு நிர்ணயித்து, அதற்கான, லே அவுட் பெறப்பட்டு, இந்த வீட்டு மனைகளை விரைவாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும், அங்கே ஆக்கிரமிப்புகள் நடக்காமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களின் தொகுதிக்காக நான் இதைப் பேசவில்லை. இந்தப் பிரச்சினையில் அரசுக்கு அதிகப் படியான அக்கறை உண்டு என்பதை அழுத்தந்திருத்தமாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவது என்ன கேட்டீர்கள்? (குறுக்கீடு) என்குரோச்மென்ட இருக்கிறதா என்பதைப் பற்றி, ஆக்கிரமிப்பு நடைபெறுவதாக அந்தப் பகுதியின் உறுப்பினரே தெரிவிக்கிறார். நானும் பகுதி உறுப்பினரும் ஒரு கூட்டத்தில் பேசும்போது எந்த வகையிலும் ஆக்கிரமிப்பை ஆதரிக்கக் கூடாது என்றும் ஆக்கிரமிப்பு செய்கிறவர்களை துரத்த வேண்டும் என்றும், கலெக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டு இருக்கிறது என்றும் தெளிவாகத் தெரிவித்தேன். நான்மட்டும், நான் பங்கு பெற்றிருக்கிற அரசின் தலைமை பொறுப்பை ஏற்று இருக்கிற கலைஞர் அவர்கள் மட்டும், அல்லது அமைச்சரவை மட்டும், இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் போதாது. பொறுப்புள்ள உறுப்பினராக இருக்கிற திரு. வரதராசன் போன்றவர்களும் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு, அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடமை தவறாத நல்லவர் அவர். ஆகையினாலே, இதைச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

ராதாபுரம் நகரத்தை மையமாக் கொண்டு நகரப் பேருந்து இயக்குதல்.

* 7540 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

வீட்டு மனைகள் தர இயலும் என்று அறியப்படுகிறது. அரசு ஊழியர்கள் வீட்டு மனை கோரும்போது, இன்றைக்கு வீடு கட்டுகிற பொருட்களின் விலைவாசி எல்லாம் ஏறிக் கொண்டு இருக்கிற நேரத்திலே, விரைவாக இந்த வீட்டு மனைகளை வழங்கினால், அவர்கள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். எம்.எம்.டி.ஏ.-வே ஏன் இவ்வளவு காலதாமதம் செய்கிறது? அதுவும் அரசுத் துறைதான் என்கிற முறையிலே, எம்.எம்.டி.ஏ. வுக்கு ஒரு காலக் கெடு நிர்ணயித்து, அதற்கான, லே அவுட் பெறப்பட்டு, இந்த வீட்டு மனைகளை விரைவாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும், அங்கே ஆக்கிரமிப்புகள் நடக்காமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களின் தொகுதிக்காக நான் இதைப் பேசவில்லை. இந்தப் பிரச்சினையில் அரசுக்கு அதிகப் படியான அக்கறை உண்டு என்பதை அழுத்தந்திருத்தமாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவது என்ன கேட்டீர்கள்? (குறுக்கீடு) என்குரோச்மென்ட இருக்கிறதா என்பதைப் பற்றி, ஆக்கிரமிப்பு நடைபெறுவதாக அந்தப் பகுதியின் உறுப்பினரே தெரிவிக்கிறார். நானும் பகுதி உறுப்பினரும் ஒரு கூட்டத்தில் பேசும்பொது எந்த வகையிலும் ஆக்கிரமிப்பை ஆதரிக்கக் கூடாது என்றும் ஆக்கிரமிப்பு செய்கிறவர்களை துரத்த வேண்டும் என்றும், கலெக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டு இருக்கிறது என்றும் தெளிவாகத் தெரிவித்தேன். நான்மட்டும், நான் பங்கு பெற்றிருக்கிற அரசின் தலைமை பொறுப்பை ஏற்று இருக்கிற கலைஞர் அவர்கள் மட்டும், அல்லது அமைச்சரவை மட்டும், இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் போதாது. பொறுப்புள்ள உறுப்பினராக இருக்கிற திரு. வரதராசன் போன்றவர்களும் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு, அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடமை தவறாத நல்லவர் அவர். ஆகையினாலே, இதைச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

ராதாபுரம் நகரத்தை மையமாக் கொண்டு நகரப் பேருந்து இயக்குதல்.

* 7540 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

[1990 ஆகஸ்ட் 21

ராதாபுரம் நகரத்தை மையமாகக் கொண்டு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராதாபுரம் நகரம் இன்றையவரை ஒரு கிராமப் பஞ்சாயத்தாகவே இருந்து வருகிறது. இது ஒன்றியத் தலைநகராகவும், தொகுதியின் தலைநகராகவும், தாலுக்காவின் தலைநகராகவும் இருந்து வருகிறது. ஜனத்தொகை 10 ஆயிரத்திற்கும் மேலே இருக்கிறது. மாத வருமானம், கிராமப் பஞ்சாயத்திற்கு 20 ஆயிரத்திற்கும் மேலே இருக்கிறது. பல் வேறு அலுவலகங்கள், அதாவது, மேல்நிலைப் பள்ளி, அரசு மருத்துவமனை, சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ் தாலுக்கா ஆபிஸ் போன்ற இப்படிப்பட்ட பல்வேறு அலுவலகங்கள் எல்லாம் அங்கே இருக்கிற காரணத்தாலே, தொகுதியில் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற மக்கள் தொடர்பு கொள்வதற்கு, இதை நகரப் பேருந்தை இயக்கும் மையமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் ஏற்கனவே 30 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் அருகாமையில் அமைந்திருக்கிற பனகுடி, வள்ளியூர், திசையன்விளை, கன்னியாகுமரி போன்ற பேரூராட்சிகளோடு நகரப் பேருந்துகளால் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இந்த ராதா புரம் வழியாக 24 பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 114 ஒரு வழிப் பயணத்துடன் அந்த வழியாகச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால்தான் தற்போது ராதாபுரத்தை நகரம் என அறிவிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது. இருந்தாலும் உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, தற்போதைய சூழ்நிலையில் நகரமாக இதை அறிவிக்க வேண்டுமா என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி பரவலாக பல பகுதிகளாக சிதறிய ஒரு தொகுதியாகக் காணப்படுகிற காரணத்தால், ஒதுங்கி இருக்கிற பல்வேறு முனைகளில் அமைந்திருக்கிற கிராமங்களோடு தொடர்பு கொள்வதற்கு இந்த 35 கிலோ மிட்டர் என்று வரையறை இருக்கிற காரணத்தாலே, தொடர்பு கொள்ள முடியாமல் மக்கள் தவிக்கிறார்கள். உதாரணமாக உவரி

1990 ஆகஸ்ட் 21]

கன்னியாகுமரி பார்டரிலே எல்லாம் எங்கள் கிராமங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பகுதிகளிலேயிருந்து வருகின்றவர்களுக்கு எல்லாம் இந்த கிலோ மீட்டர் கணக்கு தடையாக இருக்கிற காரணத்தால், ஜனத்தொகை, மாத வருமானம் இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இதை நகரப் பேருந்துகளை இயக்கும் மையமாக நீங்கள் நிச்சயமாக ஆக்கவேண்டும் என்ற வேண்டுகோளை எனது தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு வைக்கிறேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடுதல்.

* 9367 திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இல்லை.

9-35 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்திலிருந்து சென்னைக்கு 400 மைல்களுக்கு மேலாக பயணிகள் பயணம் செய்வதால், கோடைகாலத்தில் அதிகமான வெப்பத்தால் தாக்குண்டு, பயணிகள் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகளின் கஷ்டத்தை உணர்ந்தாவது கம்பத்திலிருந்து சென்னைக்கு கோடை காலத்தில் மட்டும் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து கம்பம் வரை 2 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டன. போதுமான அளவிற்கு வசூல் இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 21]

கன்னியாகுமரி பார்டரிலே எல்லாம் எங்கள் கிராமங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பகுதிகளிலேயிருந்து வருகின்றவர்களுக்கு எல்லாம் இந்த கிலோ மீட்டர் கணக்கு தடையாக இருக்கிற காரணத்தால், ஜனத்தொகை, மாத வருமானம் இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இதை நகரப் பேருந்துகளை இயக்கும் மையமாக நீங்கள் நிச்சயமாக ஆக்கவேண்டும் என்ற வேண்டுகோளை எனது தொகுதி மக்கள் சார்பாக அரசுக்கு வைக்கிறேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடுதல்.

* 9367 திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கம்பம்-சென்னைக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

இல்லை.

9-35 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்திலிருந்து சென்னைக்கு 400 மைல்களுக்கு மேலாக பயணிகள் பயணம் செய்வதால், கோடைகாலத்தில் அதிகமான வெப்பத்தால் தாக்குண்டு, பயணிகள் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகளின் கஷ்டத்தை உணர்ந்தாவது கம்பத்திலிருந்து சென்னைக்கு கோடை காலத்தில் மட்டும் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்து விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து கம்பம் வரை 2 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டன. போதுமான அளவிற்கு வசூல் இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் புராதன கோயிலைப் புதுப்பித்தல்.

* 4425 திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் புராதனக் கோயில் அழிந்துள்ள நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் அமைந்துள்ள இப் புராதன திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய இந்துசமய அறநிலையத்துறை ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாவட்டம் ஒன்றாக இருந்த நேரத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகும். இன்று திருவண்ணா மலை-சம்புவராயர் மாவட்டத்தில் கலசப்பாக்கம் தொகுதியில் இந்த கோவிலூர் புராதனக் கோயில் அமைந்திருக்கிறது. அது சோழப் பேரரசர்களால் கட்டப்பட்ட கோயில் என்றும் அங்கே சொல்லப்படுகிறது. அதில் விரைவான நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா? அதற்காக தற்சமயம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இது புராதன திருக்கோயில், மிகப் பாழ்பட்ட நிலையில் இருக்கிறது. இங்கே நுழைவாயில், முகப்பு, மதிற்சுவர், கர்ப்பக் கிரகம், விமானம் போன்ற பல பணிகள் செய்ய வேண்டி இருக்கிறது. ஆணையர் அங்கேயிருக்கக்கூடிய உதவிப் பொறி யாளரை, இதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அதைத் தற்சமயம் நம்மைப் போன்றவர்கள் படிக்க முடியாத ஒரு நிலையிலிருக்கிறது. எனவே நம்முடைய

1990 ஆகஸ்ட் 21]

அறநிலையத் துறையின் மூலமாக, அந்தக் கல்வெட்டுக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசு ஆய்ந்து அறிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வெட்டுக்களிலே என்ன இருக்கின்றன என்பதை ஆய்ந்து சொல்வதற்கு வேலூரில் இருக்கும் தொல்பொருள் துறையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, களப்பிரர்கள் அங்கே படையெடுத்ததன் காரணமாக பல்லவ நாட்டில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக ராஜ குடும்பம், ஜவ்வாது மலையில் தான் தஞ்சம் புகுந்தது என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் காலத்தில் புராதனமான பல கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலூர் கோயில் மட்டுமல்லாமல், நெல்லிவாசலிலே இருக்கின்ற பகவதி கோயில் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு கோயிலாகும். அதே நேரத்தில் மலைரெட்டியூர் என்ற ஊரிலுள்ள செல்ராயன் என்ற கோயில் அதைவிடப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். பொதுவாக ஜவ்வாது மலையில் பல புராதனக் கோயில்கள் பல்லவர்களால் கட்டப்பட்டன என்பது வரலாறு. எனவே அந்தக் கோயில்களை எல்லாம் ஆய்வு செய்து, அவைகளில் திருப்பணி செய்வதற்கு அரசு ஒரு பொது நடவடிக்கையாக, 'காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்' மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஜவ்வாது மலை மட்டுமல்ல. தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய, அப்போதுள்ள மன்னர்களால் கட்டப்பட்டு, இன்றைக்குப் பாழ்பட்டிருக்கக்கூடிய நிலையில் பல திருக்கோயில்கள் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப எந்தெந்த கோயில்களை எடுக்கவேண்டுமோ, அவைகளை எடுத்து, திருப்பணிகள் செய்யப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கூலி.

* 8050 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைப் போல், தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

1990 ஆகஸ்ட் 21]

அறநிலையத் துறையின் மூலமாக, அந்தக் கல்வெட்டுக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசு ஆய்ந்து அறிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வெட்டுக்களிலே என்ன இருக்கின்றன என்பதை ஆய்ந்து சொல்வதற்கு வேலூரில் இருக்கும் தொல்பொருள் துறையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, களப்பிரர்கள் அங்கே படையெடுத்ததன் காரணமாக பல்லவ நாட்டில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக ராஜ குடும்பம், ஜவ்வாது மலையில் தான் தஞ்சம் புகுந்தது என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் காலத்தில் புராதனமான பல கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலூர் கோயில் மட்டுமல்லாமல், நெல்லிவாசலிலே இருக்கின்ற பகவதி கோயில் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு கோயிலாகும். அதே நேரத்தில் மலைரெட்டியூர் என்ற ஊரிலுள்ள செல்ராயன் என்ற கோயில் அதைவிடப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். பொதுவாக ஜவ்வாது மலையில் பல புராதனக் கோயில்கள் பல்லவர்களால் கட்டப்பட்டன என்பது வரலாறு. எனவே அந்தக் கோயில்களை எல்லாம் ஆய்வு செய்து, அவைகளில் திருப்பணி செய்வதற்கு அரசு ஒரு பொது நடவடிக்கையாக, 'காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்' மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஜவ்வாது மலை மட்டுமல்ல. தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய, அப்போதுள்ள மன்னர்களால் கட்டப்பட்டு, இன்றைக்குப் பாழ்பட்டிருக்கக்கூடிய நிலையில் பல திருக்கோயில்கள் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப எந்தெந்த கோயில்களை எடுக்கவேண்டுமோ, அவைகளை எடுத்து, திருப்பணிகள் செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கூலி.

* *8050* திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைப் போல், தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

[1990 ஆகஸ்ட் 21

9-40 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலிக்கு இணையாக தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் கொடுக்க கடந்த மே மாதத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1—1—1990 முதல் திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விகிதம், ஊதிய விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியம் சம சம்பளம் 1-ஆம் தேதியிலிருந்து கொண்டு வந்தமைக்காக தமிழ்நாட்டின் முதலமைச்சர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கே. அவர்களுக்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு அந்த.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக் கேட்பவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் நன்றி தெரிவித்தல், பாராட்டுத் தெரிவித்தல் எல்லாம் வினா நேரத்தில் சேர்த்தால், அது பொருத்தமாக இராது. நல்ல மரபாக இருக்காது. நல்ல பண்பு என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் மரபு அல்ல.

திரு. எம். கே. கரீம் : ஒரே ஒரு சின்ன விஷயம், சமீபத்தில் சின்கோனாவும் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் அந்தச் சம சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கடந்த மே மாதம் 16-ஆம் தேதி ஊட்டியிலே தொழிற் சங்கத் தலைவர்களுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரீம் அவர்களும் கலந்து கொண்டார்கள். நானும் அங்கே இருந்தேன். அந்த சின்கோனா தொழிலாளர்களுடைய பிரச்சினையும் அங்கே எழுந்தது. இப்போது அந்தத் துறை, தேயிலைத் தோட்ட வாரியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக இணை

1990 ஆகஸ்ட் 21]

யான சம்பளம் கொடுக்க முடியாது. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இப்போது சற்று உயர்த்தி, பிறகு படிப்படியாக இணையான சம்பளம் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி இருக்கும்படியான பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் இங்கே, தமிழ்நாட்டில் புதிய திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு நல்ல வரவேற்கத்தக்க விஷயம். கூலியிலிருந்த வித்தியாசமும் எடுக்கப்பட்டு 1—1—1990 முதல் சமமான கூலி, தனியார் தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கக்கூடிய கூலி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் பிளான்டேஷன் ஆக்ட் பிரகாரம், சட்டப் பிரகாரம் உள்ள இதர சலுகைகளும்—அவர்களுக்கு இருக்கும்படியான சர்வீஸ் சலுகைகள், குடியிருக்கும் வீடு பற்றிய சலுகைகள், லீவு சலுகைகள் போன்றவை—அவர்கள் தகுதியான சம்பளம் பெறும் போது, அவற்றையும் அமல் ஆக்குவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, 'TANTEA' என்று சொல்லப்படுகிற இந்தத் தேயிலைத் தோட்ட வாரியம் அந்தத் தொழிலாளர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இதுபற்றி முடிவு செய்ய அறிவுறுத்தலாம்.

பொதுப்பணித் துறையில் தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்துதல்.

* 7683 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறையில் 18 ஆண்டுகளாக தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப் படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1990 ஆகஸ்ட் 21]

யான சம்பளம் கொடுக்க முடியாது. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இப்போது சற்று உயர்த்தி, பிறகு படிப்படியாக இணையான சம்பளம் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி இருக்கும்படியான பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் இங்கே, தமிழ்நாட்டில் புதிய திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு நல்ல வரவேற்கத்தக்க விஷயம். கூலியிலிருந்த வித்தியாசமும் எடுக்கப்பட்டு 1—1—1990 முதல் சமமான கூலி, தனியார் தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கக்கூடிய கூலி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் பிளான்டேஷன் ஆக்ட் பிரகாரம், சட்டப் பிரகாரம் உள்ள இதர சலுகைகளும்—அவர்களுக்கு இருக்கும்படியான சர்வீஸ் சலுகைகள், குடியிருக்கும் வீடு பற்றிய சலுகைகள், லீவு சலுகைகள் போன்றவை—அவர்கள் தகுதியான சம்பளம் பெறும்போது, அவற்றையும் அமல் ஆக்குவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, 'TANTEA' என்று சொல்லப்படுகிற இந்தத் தேயிலைத் தோட்ட வாரியம் அந்தத் தொழிலாளர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இதுபற்றி முடிவு செய்ய அறிவுறுத்தலாம்.

பொதுப்பணித் துறையில் தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்துதல்.

* 7683 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறையில் 18 ஆண்டுகளாக தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தினக்கூலி பணியாளர்கள் (NMR) சம்பந்தப்பட்ட விவரங்களைத் தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்துப் பொதுப் பணித் துறை வட்டங்களிலிருந்தும் சேகரித்து, அவர்களது கல்வித் தகுதி, வயது மற்றும் பணி நியமன முறை முதலிய தகுதிகளின் அடிப்படையில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் சற்று காலதாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 480 நாட்கள் பணி புரிந்தாலே, அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது விதி. ஆனால் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், பல பேரை உடனடியாக நீக்குவது, மறுபடியும் எடுப்பது என்ற முறையில் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைத் தொடர்வது சரியல்ல என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அது காலதாமதம் இல்லாது விரைவில் முடிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அம்மையாருக்கு ஒரு செய்தியைச் சொல்கிறேன். 1984 ஆம் ஆண்டிலிருந்தே இந்தப் பிரச்சினையை யாரும் அணுகவில்லை. 1984, 1985, 1986, 1987, 1988 முடிந்து கலைஞருடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு இந்த அவையிலே யாரும் கேட்காமலேயே, நாங்களே—அமைச்சர்கள்—கலைஞருடைய ஆலோசனையின் பேரிலே நானே அறிவித்தேன். இப்படி பொதுப்பணித் துறையிலே ஆண்டுக் கணக்காக இருப்பவர்களை நிரந்தரம் செய்யலாமா என்று யோசித்து 10 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து ஒரு முடிவு எடுத்து இந்த அவையிலே அறிவித்தேன். அறிவித்ததற்கிணங்க 1984 முதல் 1986 டிசம்பர் முடிய 602 பணியாளர்கள் அப்படி இருக்கிறார்கள் என்று எனக்கு தென்பட்டார்கள். அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தலாம் என்று, பொதுப் பணித் துறையின் 22-1-1990 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 193-ல் பணிவரன் முறை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 310. அதைப் போலவே நியமன விதிகளை நிறைவு செய்யாத தினக் கூலிப் பணியாளர்களின் எண்ணிக்கை 816 ஆகும். அட்ஹாக் ரூல்ஸ்ஸுக்கு ஒத்து வராதவர்களை எல்லாம் ரெகுலரைஸ் செய்வது குறித்து இப்போது ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, நீண்ட காலமாக இருக்கும் இந்தப் பிரச்சினையை இந்த அரசே மனமுவந்து செய்திருப்பதற்கு, அம்மையார் அவர்கள் பாராட்ட வேண்டும். அம்மையார் கருத்தை அரசு கவனத்திலே கொள்ளும்.

1990 ஆகஸ்ட் 21]

திருமதி பாப்பா உமாநாத் : நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கூறியபடி நான் பாராட்டுவதற்குத் தயார். ஆனால் அவர்கள் கூறியபடி நடவடிக்கை எடுத்த பிறகு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கத் தயார். அதுவும் கேள்வி நேரத்திலே பாராட்டக் கூடாது என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தனியாக அந்த ஏற்பாட்டை வைத்துக் கொள்ளலாம். 1984–லிருந்து பல விவகாரங்கள் நடந்திருக்கின்றன. துரதிருஷ்டவசமாக அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. இப்போது தேர்வு செய்யப்பட்டிருப்பதால் தற்போதுதான் பார்க்கிறேன். அமைச்சர் சொல்வது போல் அல்ல. துவக்க காலத்திலேயே இந்தச் சபையிலே நான் அந்தக் கேள்வியை எழுப்பி அதைச் சொல்லியிருக்கிறேன். எனவே காலதாமதம் இல்லாமல் அமைச்சர் செய்தால் நிச்சயமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அம்மையாருக்குத் தெரிவித்து கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக அப்போது நான் அமைச்சராக இல்லை. போகட்டும். அம்மையார் இந்தக் கேள்வியை கேட்டதற்கு முன்னாலேயே இந்த அரசு 31—8—1990–க்குள் மீதி இருக்கின்ற அத்தனை பேர்களுடைய பணிப் புத்தகங்களை அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக பொதுப்பணித் துறையில் பி.இ. படித்த எலெக்ட்ரானிக் என்ஜினியர்ஸ் 37 பேர்கள் தற்காலிகமாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு ஏ.இ.க்கு உள்ள முழுச் சம்பளம் தரப்படுகிறது. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதுவும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசீலித்து விரைந்து நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது என்.எம்.ஆர். பொறுத்த கேள்வி. அந்தப் பணியாளர்கள் மீது இவ்வளவு அக்கறை செலுத்தும் திரு. சீனிவாசன் ஒரு தனிக் கேள்வி போடலாம்.

சனத்குமார் நதியில் அணைக் கட்டுதல்.

* 8128 திரு. டி. சி. விஜயேந்திரையா :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

1990 ஆகஸ்ட் 21]

திருமதி பாப்பா உமாநாத் : நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கூறியபடி நான் பாராட்டுவதற்குத் தயார். ஆனால் அவர்கள் கூறியபடி நடவடிக்கை எடுத்த பிறகு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கத் தயார். அதுவும் கேள்வி நேரத்திலே பாராட்டக் கூடாது என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தனியாக அந்த ஏற்பாட்டை வைத்துக் கொள்ளலாம். 1984-லிருந்து பல விவகாரங்கள் நடந்திருக்கின்றன. துரதிருஷ்டவசமாக அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. இப்போது தேர்வு செய்யப்பட்டிருப்பதால் தற்போதுதான் பார்க்கிறேன். அமைச்சர் சொல்வது போல் அல்ல. துவக்க காலத்திலேயே இந்தச் சபையிலே நான் அந்தக் கேள்வியை எழுப்பி அதைச் சொல்லியிருக்கிறேன். எனவே காலதாமதம் இல்லாமல் அமைச்சர் செய்தால் நிச்சயமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அம்மையாருக்குத் தெரிவித்து கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக அப்போது நான் அமைச்சராக இல்லை. போகட்டும். அம்மையார் இந்தக் கேள்வியை கேட்டதற்கு முன்னாலேயே இந்த அரசு 31—8—1990-க்குள் மீதி இருக்கின்ற அத்தனை பேர்களுடைய பணிப் புத்தகங்களை அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக பொதுப்பணித் துறையில் பி.இ. படித்த எலெக்ட்ரானிக் என்ஜினியர்ஸ் 37 பேர்கள் தற்காலிகமாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு ஏ.இ.க்கு உள்ள முழுச் சம்பளம் தரப்படுகிறது. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதுவும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசீலித்து விரைந்து நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது என்.எம்.ஆர். பொறுத்த கேள்வி. அந்தப் பணியாளர்கள் மீது இவ்வளவு அக்கறை செலுத்தும் திரு. சீனிவாசன் ஒரு தனிக் கேள்வி போடலாம்.

சனத்குமார் நதியில் அணைக் கட்டுதல்.

* 8128 திரு. டி. சி. விஜயேந்திரையா :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

[1990 ஆகஸ்ட் 21

(அ) தருமபுரி மாவட்டம், தண்டரை கிராமத்தை ஒட்டிச் செல்லும் சனத்குமார் நதியில் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. டி. சி. விஜயேந்திரையா : பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியில் தண்டரை கிராமத்தை ஒட்டிச் செல்லும் சனத்குமார் நதியில் அணை கட்டுவதற்கு ஏற்கனவே இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் பணத்தை ஒதுக்கி ஆய்வுகள் நடத்தப்பட்டு வேலை நின்றிருக்கிறது. தளி தொகுதியில் இந்த அணையை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் தண்ணீருக்கு மிகவும் பஞ்சமாக இருப்பதால், விவசாயக் குடிமக்களுக்கு தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அணையைக் கட்ட வேண்டும். இது மேட்டுப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் அங்கு தண்ணீர் தேங்குவதும் இல்லை. கிணறுகளில் தண்ணீர் தங்குவதற்கு வழியில்லை. எனவே இந்த அணையைக் கட்டி கிணறுகளில் தண்ணீர் ஊற்றை ஏற்படுத்தி விவசாயத்திற்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மானியக் கோரிக்கை அல்ல. வினாவாகக் கேளுங்கள்.

திரு. டி. சி. விஜயேந்திரையா : தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கி, தண்ணீர் வசதியை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையைக் கட்டுவது பெரிது அல்ல, செலவு செய்வதும் பெரிது அல்ல. அதனால் மக்களுக்கு ஏதேனும் பயன உண்டா என்றும் அரசு பார்க்கவேண்டும். இந்த அணையைக் கட்ட, கிட்டத்தட்ட இன்றையதின மதிப்பீட்டின்படி 10, 15 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். 300 ஏக்கர் நிலத்திற்கு மேல் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்கள் சொன்னது போல் மழை இல்லை, தண்ணீர் தேங்குவதும் இல்லை. இன்றைக்கு அதனுடைய பயன் விகிதாசாரம் மிக மிகக் குறைவாக, அதாவது 0.251 என்ற விகிதத்தில் அமைந்து இருக்கிறது. ஆய்வு அறிக்கையும் அந்த நிலைமையில் இருக்கிறது. நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கு

1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் பல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஓசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

*9418 திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

*5204 திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் பல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஓசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

** 9418* திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

**5204* திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் பல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஓசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

*9418 திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

*5204 திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

[1990 ஆகஸ்ட் 21

சென்னை, கோவை ஆகிய இடங்களில் சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

சென்னை அருகில் செங்கை அண்ணா மாவட்டம், பனப்பாக்கம் கிராமத்தில் சித்த மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தேசிய சித்த ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஆயிரக்கணக்கான ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது 220 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவு இருக்கிறது. மீதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாவட்ட தாலுக்கா மருத்துவமனைகளில் இந்த சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்தி போதுமான டாக்டர்களை உருவாக்கி சென்னையிலும், கோவையிலும் வருகிற ஆண்டிலாவது இந்தக் கல்லூரிகளை உருவாக்கித் தந்திட அரசுக்கு எண்ணம் உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை மேலும் விரிவுபடுத்துகின்ற நோக்கத்துடன்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவை சரியாக, செம்மையாக செயல்பட வேண்டும் என்றும், பல்வேறு மருத்துவர்களை உருவாக்கவும் இந்த அரசு இப்போது கருத்தில் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இப்போது பதிலில் சொல்லப்பட்டதுபோல் பனப்பாக்கம் கிராமத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட இருக்கிறது. அந்த சித்த மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சிப் பாடங்களை அரசு உருவாக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனப்பாக்கத்தில் ஒரு கல்லூரியும், ஆராய்ச்சி மையமும் அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது அண்ணா நகரில் மத்திய அரசால் அமைக்கப்பட்டு இருக்கிற ஆராய்ச்சிப் பிரிவில் 6 வகையான நோய்களுக்கு ஆராய்ச்சி செய்ய மருத்துவ வசதி

செய்யப்பட்டிருக்கிறது. பனப்பாக்கத்தில் ஆரம்பிக்கின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உரு வாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசீய சித்த ஆராய்ச்சி நிலையமாக உருவாக்கப்படும். இதற்கு மத்திய அரசு உதவியும் கிடைக்கிறது. மத்திய அரசு உதவியாக மூன்றில் இரண்டு பங்கும், மாநில அரசு உதவியாக மூன்றில் ஒரு பங்கும் செலவிட இருக்கிறது. மேலும் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் சித்த பட்டப் படிப்பு கல்லூரியும், 11 சித்த மேற்பட்டப் படிப்புத் துறையும், சுமார் 500 சித்த மருத்துவப் பிரிவை உண்டாக்கும் திட்டமும் மற்றும் பிற ஆராய்ச்சிப் பிரிவுகளும் அமைக்கப்படும்.

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்புகளாகப் பொருத்தும் சட்டம்

*6198 திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்பு களாகப் பொருத்தும் (Cadavar Organ of Transplantation) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இப்படிப்பட்ட சட்டம் தமிழ்நாட்டிலும், மகாராஷ் டிரத்திலும் கொண்டு வரப்பட்டு ஏதோ சில சட்டச் சிக்கல் காரணமாக இது அமல் செய்யப்படாமல் இருக்கிறது என்ற ஒரு செய்தி கிடைத்து இருக்கிறது. இந்த மனித உறுப்புகள் குறிப்பாக சிறுநீரகம், இருதயம், ஈரல் போன்றவைகளை உடனே பொருத்துவதால் பல்வேறு வியாதியஸ்தர்களை உயிர் இழக்கும் ஆபத்திலிருந்து மீட்கும் நிலை இருப்பதால் கிட்டத்தட்ட அதற்கு உதவி செய்யும் அந்த மருத்துவச் சட்டம் இங்கே வந்திருக்கிறது. சட்டச் சிக்கல் காரணமாக அதை அமல் செய்யாத காரணத்தால் இங்கே சென்னையில் குறிப்பாக சிறுநீரகம் ஏராளமாக

செய்யப்பட்டிருக்கிறது. பனப்பாக்கத்தில் ஆரம்பிக்கின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உரு வாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசீய சித்த ஆராய்ச்சி நிலையமாக உருவாக்கப்படும். இதற்கு மத்திய அரசு உதவியும் கிடைக்கிறது. மத்திய அரசு உதவியாக மூன்றில் இரண்டு பங்கும், மாநில அரசு உதவியாக மூன்றில் ஒரு பங்கும் செலவிட இருக்கிறது. மேலும் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் சித்த பட்டப் படிப்பு கல்லூரியும், 11 சித்த மேற்பட்டப் படிப்புத் துறையும், சுமார் 500 சித்த மருத்துவப் பிரிவை உண்டாக்கும் திட்டமும் மற்றும் பிற ஆராய்ச்சிப் பிரிவுகளும் அமைக்கப்படும்.

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்புகளாகப் பொருத்தும் சட்டம்

*6198 திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்பு களாகப் பொருத்தும் (Cadavar Organ of Transplantation) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இப்படிப்பட்ட சட்டம் தமிழ்நாட்டிலும், மகாராஷ் டிரத்திலும் கொண்டு வரப்பட்டு ஏதோ சில சட்டச் சிக்கல் காரணமாக இது அமல் செய்யப்படாமல் இருக்கிறது என்ற ஒரு செய்தி கிடைத்து இருக்கிறது. இந்த மனித உறுப்புகள் குறிப்பாக சிறுநீரகம், இருதயம், ஈரல் போன்றவைகளை உடனே பொருத்துவதால் பல்வேறு வியாதியஸ்தர்களை உயிர் இழக்கும் ஆபத்திலிருந்து மீட்கும் நிலை இருப்பதால் கிட்டத்தட்ட அதற்கு உதவி செய்யும் அந்த மருத்துவச் சட்டம் இங்கே வந்திருக்கிறது. சட்டச் சிக்கல் காரணமாக அதை அமல் செய்யாத காரணத்தால் இங்கே சென்னையில் குறிப்பாக சிறுநீரகம் ஏராளமாக

விற்பனை ஆகிறது என்று சொல்லி வெளிநாடுகளிலிருந்து சிகிச்சைக்காக இங்கே வந்து அரசு பொது மருத்துவமனை, அப்போலோ ஆஸ்பத்திரி ஆகிய இரண்டைத் தவிர மற்ற எல்லா தனியார் மருத்துவமனைகளிலும் அப்படிப்பட்ட உறுப்பு பொருத்தும் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. ஏழைகள் 25 ஆயிரம் ரூபாய்க்கு சிறுநீரகங்களை விற்கிற நிலைமை இருக்கிறது. வெளிநாட்டுக்காரர்கள் 1 இலட்சம் 2 இலட்சம் ரூபாய்க்கு வாங்குகிறார்கள். இது தமிழ்நாட்டுக்கே அவமானம். ஆகவே, சட்டச் சிக்கலைத் தீர்த்து, சட்டத்தை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தில் இறந்தவர்களைப் பற்றி காவல்துறை மூலமாக உடனடியாக விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. விபத்து நடந்து 6 மணி நேரத்திற்குள் உறுப்புகளை எடுத்தாக வேண்டும். ஆனால் உடலை பரிசோதனை செய்த பிறகுதான் உறுப்புகளை எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எவ்வாறு இந்த முறையை அமல் படுத்த முடியும் என்பதைப் பற்றி சிறுநீரகம் சம்பந்தப்பட்ட துறையையும், இருதயம் சம்பந்தப்பட்ட துறையையும் கேட்டிருக்கிறோம். அவர்களும் குறிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை முடிந்த பிறகு அது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கலே இங்கேதான் இருக்கிறது. விபத்தில் இறந்தால் உடனடியாக ஆர்டிபிஷியலாக பம்ப் செய்து வெளி நாடுகளிலே உறுப்புகளை எடுக்கிறார்கள். உயிர் பிரிந்து 6 மணி நேரம், 8 மணி நேரம் ஆனதற்குப் பிறகு எடுத்து பிரயோஜனம் இல்லை. அதற்கு முன்னால் ஆர்டிபிஷியலாக பம்ப் செய்து எடுக்கின்ற முறை மேல்நாடுகளிலே பல்வேறு இடங்களிலே இருக்கிறது. அதைத்தான் மருத்துவத் துறையினர் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து அந்த முறையிலே சட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் குறிப்பிட்டேன். விபத்து நடந்தவுடனே இறந்தவர்களை உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முடியாது. அதற்கான காவல்துறை சம்பந்தப்பட்ட விதிமுறைகள்

இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாக, மருத்துவத் துறையையும் காவல் துறையையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்த பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறத்தல்.

*2063 திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் சுந்திராபுரம் பகுதியில் மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

(ஆ) அந்த ஆலையை அரசே ஏற்று நடத்துமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு இந்த ஆலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள தேவையான முயற்சிகளை எடுத்தது. இருப்பினும் இவ்வாலை தொழிலியல் மற்றும் நிதியியல் மறு சீரமைப்பு வாரியத்தின் முன்னால் நிலுவையில் உள்ளது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அங்கே பணியாற்றும் 25 இலங்கை அகதிகளுக்காக முன்பிருந்த அரசாங்கம் இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. எனவே, அரசாங்கமே இந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை எடுத்து நடத்துவதற்காக முயற்சி செய்தபோது மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது. ஆனால் இப்போது இந்த ஆலையினுடைய உரிமையாளரே அதைத் திறப்பதற்காகத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு, இப்போது பி. ஐ. எஃப். ஆர்.-ல் பெண்டிங்காக இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதைத் தீர்த்து அதைத் திறக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் திறப்போம் என்று

1990 ஆகஸ்ட் 21]

இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாக, மருத்துவத் துறையையும் காவல் துறையையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்த பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறத்தல்.

*2063 திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் சுந்திராபுரம் பகுதியில் மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

(ஆ) அந்த ஆலையை அரசே ஏற்று நடத்துமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு இந்த ஆலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள தேவையான முயற்சிகளை எடுத்தது. இருப்பினும் இவ்வாலை தொழிலியல் மற்றும் நிதியியல் மறு சீரமைப்பு வாரியத்தின் முன்னால் நிலுவையில் உள்ளது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படு கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த ஆலையிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றி வரு கிறார்கள். அங்கே பணியாற்றும் 25 இலங்கை அகதிகளுக் காக முன்பிருந்த அரசாங்கம் இலட்சம் ரூபாய் வழங்கியிருக் கிறது. எனவே, அரசாங்கமே இந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை எடுத்து நடத்துவதற்காக முயற்சி செய்தபோது மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது. ஆனால் இப்போது இந்த ஆலையினுடைய உரிமையாளரே அதைத் திறப்பதற்காகத் தீவிர முயற்சி எடுத் துக்கொண்டு, இப்போது பி. ஐ. எஃப். ஆர்.-ல் பெண்டிங்காக இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதைத் தீர்த்து அதைத் திறக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் திறப்போம் என்று

சொல்லி, நேற்று முன்தினம் இங்கே அவர்கள் வருகை தந்து அரசு அதிகாரிகளையெல்லாம் சந்தித்துச் சென்று இருக்கிறார்கள். விரைவாக அதைத் திறப்பதற்கு அரசு முடிந்த உதவிகளைச் செய்யும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை நிர்வாகம் ஏற்கனவே இந்த ஆலையைத் திறப்பதாகச் சொல்லி அங்கேயிருந்த நிலங்களையெல்லாம் விற்பனை செய்து விட்டது. அந்த ஆலைக்குச் சொந்தமான நிலங்களை மேலும் விற்காமல் இருப்பதற்கு அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, தொழிலாளர் ஆணையர் முன்பு போடப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தில் அந்த ஆலையினுடைய நிலங்களையெல்லாம் விற்கக் கூடாது என்றுதான் போடப்பட்டிருக்கிறது.

கலைஞர்கள் தினம் கொண்டாடுதல்

*10291 திரு. டி. கே. பழனிச்சாமி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினங்கள் போன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் மாதம் 3ம் தேதியை கலைஞர்கள் தினமாகக் கொண்டாட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முத்தமிழ் அறிஞர், ஒப்பற்ற தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழா ஜூன் மாதம் 3 ஆம் தேதி வருகிறது. உலகத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தமிழர்களும் அந்த விழாவை தேசிய விழாவாக நடத்தி வருகிறார்கள். அதேபோல, இந்தியாவிலே வாழ்கின்ற இந்திய மக்களும், இந்திய தேசியத் தலைவர்களில் ஒருவராக விளங்கி வருகிற தானைத் தலைவர், அண்ணன் கலைஞர் அவர்களுக்கு, விழா எடுத்து நடத்தி வருகிறார்கள். எத்தனையோ தலைவர்களுக்கு ஆசிரியர் தினம், குழந்தைகள் தினம் என்று கொண்டாடப்படுகிறது. . ..

சொல்லி, நேற்று முன்தினம் இங்கே அவர்கள் வருகை தந்து அரசு அதிகாரிகளையெல்லாம் சந்தித்துச் சென்று இருக்கிறார்கள். விரைவாக அதைத் திறப்பதற்கு அரசு முடிந்த உதவிகளைச் செய்யும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை நிர்வாகம் ஏற்கனவே இந்த ஆலையைத் திறப்பதாகச் சொல்லி அங்கேயிருந்த நிலங்களையெல்லாம் விற்பனை செய்து விட்டது. அந்த ஆலைக்குச் சொந்தமான நிலங்களை மேலும் விற்காமல் இருப்பதற்கு அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, தொழிலாளர் ஆணையர் முன்பு போடப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தில் அந்த ஆலையினுடைய நிலங்களையெல்லாம் விற்கக் கூடாது என்றுதான் போடப்பட்டிருக்கிறது.

கலைஞர்கள் தினம் கொண்டாடுதல்

*10291 திரு. டி. கே. பழனிச்சாமி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினங்கள் போன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் மாதம் 3ம் தேதியை கலைஞர்கள் தினமாகக் கொண்டாட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முத்தமிழ் அறிஞர், ஒப்பற்ற தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழா ஜூன் மாதம் 3ஆம் தேதி வருகிறது. உலகத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தமிழர்களும் அந்த விழாவை தேசிய விழாவாக நடத்தி வருகிறார்கள். அதேபோல, இந்தியாவிலே வாழ்கின்ற இந்திய மக்களும், இந்திய தேசியத் தலைவர்களில் ஒருவராக விளங்கி வருகிற தானைத் தலைவர், அண்ணன் கலைஞர் அவர்களுக்கு, விழா எடுத்து நடத்தி வருகிறார்கள். எத்தனையோ தலைவர்களுக்கு ஆசிரியர் தினம், குழந்தைகள் தினம் என்று கொண்டாடப்படுகிறது....

1990 ஆகஸ்ட் 21]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. கே. பழனிச்சாமி : நமது ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. சினிமாத் துறையைப் புரட்சிகரமாக ஏற்படச் செய்த, பல நடிகர்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை, குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம் என்பதைப் போல் கொண்டாட இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

கைத்தறி ரகங்களுக்குத் தள்ளுபடி

*8027 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி ரகங்களுக்கு சில்லறை விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவது போல் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகம் துவக்குதல்.

*6546 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி, திருவாதவூர் மற்றும் வெள்ளளூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1990 ஆகஸ்ட் 21]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. கே. பழனிச்சாமி : நமது ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. சினிமாத் துறையைப் புரட்சிகரமாக ஏற்படச் செய்த, பல நடிகர்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை, குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம் என்பதைப் போல் கொண்டாட இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

கைத்தறி ரகங்களுக்குத் தள்ளுபடி

*8027 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி ரகங்களுக்கு சில்லறை விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவது போல் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகம் துவக்குதல்.

*6546 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி, திருவாதவூர் மற்றும் வெள்ளளூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1990 ஆகஸ்ட் 21]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. கே. பழனிச்சாமி : நமது ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. சினிமாத் துறையைப் புரட்சிகரமாக ஏற்படச் செய்த, பல நடிகர்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை, குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம் என்பதைப் போல் கொண்டாட இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

கைத்தறி ரகங்களுக்குத் தள்ளுபடி

*8027 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி ரகங்களுக்கு சில்லறை விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவது போல் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகம் துவக்குதல்.

*6546 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி, திருவாதவூர் மற்றும் வெள்ளளூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவாதவூர் மற்றும் வெள்ளலூரில் மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை செயற்கை முறை இனவிருத்தி கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1989–90-ல் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்குவதற்கான கருத்துரு பரிசீலிக்கப் பட்டது. ஆனால் உத்தேச இடங்களின் பட்டியலில் மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதவூர் மற்றும் வெள்ளலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக் காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் 23 ஆம் தேதியி லிருந்து 31 ஆம் தேதி வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருப்பதாக நோட்டீஸ், கொடுத்திருக்கிறார்கள் ; உண்ணாவிரதம் இருந்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அகில உலக எழுத்தறிவு ஆண்டிலே—13 ஆண்டு காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் அவர்கள் ; அவர்களுக்கு இனி வேலைவாய்ப்பே கிடைக்காது. ஏனென்றால் 40 வயது தாண்டிவிட்டது. அதனால் வேலையே கிடைக்காது. ஆனால் அமைச்சரவர்கள் நிதிநிலைமை காரணம் என்று முன்னாலேயும் சொல்லி இருக்கிறார்கள் ; இப்போதும் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் அவ்வளவு பேருக்கும் உடனே கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட— ஆயிரத்து சொச்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள் அந்த மாவட்டத்திலே—ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்து உண்மையிலேயே இந்த ஆசிரியர்கள் தேவைதானா, அங்கே மாணவர்கள் பயிலுகிறார்களா என்று பார்த்து ஒரு

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவாதவூர் மற்றும் வெள்ளலூரில் மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை செயற்கை முறை இனவிருத்தி கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1989–90-ல் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்குவதற்கான கருத்துரு பரிசீலிக்கப் பட்டது. ஆனால் உத்தேச இடங்களின் பட்டியலில் மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதவூர் மற்றும் வெள்ளலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக் காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் 23 ஆம் தேதியி லிருந்து 31 ஆம் தேதி வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருப்பதாக நோட்டீஸ், கொடுத்திருக்கிறார்கள் ; உண்ணாவிரதம் இருந்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அகில உலக எழுத்தறிவு ஆண்டிலே—13 ஆண்டு காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் அவர்கள் ; அவர்களுக்கு இனி வேலைவாய்ப்பே கிடைக்காது. ஏனென்றால் 40 வயது தாண்டிவிட்டது. அதனால் வேலையே கிடைக்காது. ஆனால் அமைச்சரவர்கள் நிதிநிலைமை காரணம் என்று முன்னாலேயும் சொல்லி இருக்கிறார்கள் ; இப்போதும் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் அவ்வளவு பேருக்கும் உடனே கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட— ஆயிரத்து சொச்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள் அந்த மாவட்டத்திலே—ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்து உண்மையிலேயே இந்த ஆசிரியர்கள் தேவைதானா, அங்கே மாணவர்கள் பயிலுகிறார்களா என்று பார்த்து ஒரு

1990 ஆகஸ்ட் 21] [திரு. மா. சுந்தரதாஸ்]

'ஃபேஸ்ட் மேனர்' என்ற அடிப்படையில் 'இயர் பை இயர்' 50, 60 என்று 'போஸ்ட்ஸ்' கொடுத்தாவது அவர்களுடைய குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா? உண்மையிலேயே அங்கே மாணவர்கள் படிக்கிறார்கள்; அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் பிரச்சினை இல்லை. அங்கீகாரம் கொடுக்கப்பட்ட இளைநிலை ஆசிரியர்கள், ஹையர் செக்கண்டரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 1,300 பேர் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதுபோல் தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் இருப்பார்கள். ஆகவே, தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கல்வியமைச்சர் அவர்களும் ஒரு 'பேஸ்ட் மேனர்' என்ற அடிப்படையில் படிப்படியாக 'போஸ்ட்ஸ் சாங்ஷன்' கொடுத்து அவர்களின் குறையை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ் நாட்டில் கல்விக்காக நிதி ஒதுக்கப்படுகிற அளவின் விகிதாச்சாரம் பல ஆண்டுகாலமாக உயர்ந்து கொண்டே வருகிறது. அப்படி உயர்ந்து கொண்டு வருகிற காரணத்தால் உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் மேலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறபோது அரசாங்கத்தினுடைய நிதி கொடுக்கப்படாமலே நிதி பெறுவதற்குத் தேவையில்லாமலே அவர்களாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆசிரியர்களை நியமிப்பது தவறு என்று அரசாங்கம் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தினிடத்தில் அதற்கான நிதியைப் பெறுகிற உரிமையை வற்புறுத்தக் கூடாது என்ற அடிப்படையில் 10, 12 ஆண்டுக் காலமாக அப்படி தாங்களாகவே நியமித்துக் கொண்ட பணியிடங்களை ஒத்துக்கொண்டாலும் கூட அந்தப் பணிக்கான நிதியை ஒத்துக் கொள்ளாத நிலைமை நீடித்து விட்டது. அப்படி நீட்டித்த காரணத்தால் இன்றையதினம் அது பெரிய சுமையாக ஆகி இருக்கிறது. அதுபற்றி எந்த அடிப்படையில் அணுகுவது என்பதே புரியாத அளவுக்கு அது விரிந்து கொண்டு போய்விட்டது. அண்மைக் காலத்தில் அதாவது கடந்த மூன்றாண்டு காலமாக உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதாக இருந்தாலும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதாக இருந்தாலும் அந்த நிதிப் பொறுப்பை, சுமையை ஏற்றுக் கொண்டால் அந்தத் தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு நிதி இல்லை என்று தொடங்கி, இந்த ஆண்டு 5 ஆண்டுகள் அப்படி ஏற்றால்தான் ஒத்துக் கொள்ளலாம் என்று சொல்லி அப்படி அதையும் நிதியை பொறுத்தவரையிலே தள்ளி வைக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது என்றாலும் இந்தப் பிரச்சனையை

வேறு எந்த வகையில் அணுக முடியும் நெருங்க முடியும் என்பது தொடர்ந்து ஆராயப்படுகிறது.

(ஆ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது தொடர்பாக 20-8-1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்து.

10-05. மணி

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நீங்கள் அளித்த அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் சபையிலிருந்து தூக்கி வெளியிலே போடுகிற அளவுக்கு ஒரு நிலையை உண்டாக்கி விட்டீர்கள்.

ஆனால் நேற்றைக்கு நீங்கள் வரும்போதே படித்த திருக்குறளை நான் பார்த்தபோது அந்தத் திருக்குறளுக்கு அடுத்த திருக்குறள்

'' வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு ''

என்ற ஒரு திருக்குறளும், அதற்கடுத்து

'' உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று ''

என்ற திருக்குறளும் இருக்கிறது என்ற அடிப்படையிலே தான் எங்கள் கட்சியிலே நாங்கள் எடுத்த நடவடிக்கையை எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர், கட்சிக்கு உகந்தது என்று நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை, பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு அனுப்பி வைத்து, எங்கள் கட்சியிலிருந்து நீக்கப் பட்டவர்களை நீங்கள் தனியாக உட்கார வைக்க வேண்டும், பிரித்து உட்கார வைக்க வேண்டுமென்று கேட்டிருப்பது, எங்களுக்கிருக்கிற உரிமையாகும். (குறுக்கீடு) (மணியடிக்கப் பெற்றது)

..

தலைவர் அவர்களே, அந்த வகையில் இன்றைக்கு நாங்கள் உங்களைத் தலைவராக ஏற்று, இங்கே உட்கார்ந்து பணியாற்றுகிறோம். நீங்கள் ஒரு தீர்ப்பை அளித்தால், தாங்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது

வேறு எந்த வகையில் அணுக முடியும் நெருங்க முடியும் என்பது தொடர்ந்து ஆராயப்படுகிறது.

(ஆ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது தொடர்பாக 20-8-1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்து.

10-05. மணி

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நீங்கள் அளித்த அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் சபையிலிருந்து தூக்கி வெளியிலே போடுகிற அளவுக்கு ஒரு நிலையை உண்டாக்கி விட்டீர்கள்.

ஆனால் நேற்றைக்கு நீங்கள் வரும்போதே படித்த திருக்குறளை நான் பார்த்தபோது அந்தத் திருக்குறளுக்கு அடுத்த திருக்குறள்

'' வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு ''

என்ற ஒரு திருக்குறளும், அதற்கடுத்து

'' உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைத் தற்று ''

என்ற திருக்குறளும் இருக்கிறது என்ற அடிப்படையிலே தான் எங்கள் கட்சியிலே நாங்கள் எடுத்த நடவடிக்கையை எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர், கட்சிக்கு உகந்தது என்று நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை, பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு அனுப்பி வைத்து, எங்கள் கட்சியிலிருந்து நீக்கப் பட்டவர்களை நீங்கள் தனியாக உட்கார வைக்க வேண்டும், பிரித்து உட்கார வைக்க வேண்டுமென்று கேட்டிருப்பது, எங்களுக்கிருக்கிற உரிமையாகும். (குறுக்கீடு) (மணியடிக்கப் பெற்றது)

..

தலைவர் அவர்களே, அந்த வகையில் இன்றைக்கு நாங்கள் உங்களைத் தலைவராக ஏற்று, இங்கே உட்கார்ந்து பணியாற்றுகிறோம். நீங்கள் ஒரு தீர்ப்பை அளித்தால், தாங்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது

1990 ஆகஸ்ட் 21] [திரு. எஸ். ஆர். இராதா]

எங்களுடைய கடமை. அதேபோல, எங்களுடைய சட்ட மன்றக் கட்சிக்கு நான் தலைவர். (மணியடிக்கப்பெற்றது)

** ** **

(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகளை வீசக்கூடாது. ஏற்கெனவே தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். மீண்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற எதிர்க் கட்சித் தலைவர், அவருடைய கருத்தைச் சொல்வதற்கு உரிமையிருந்தாலுங் கூட, * * * *
என்று சொன்ன தொடரை, சட்டமன்ற விவாதக் குறிப்பில் இருக்க அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். * * * *

அது கொள்கைக்காக அல்ல, நடைமுறைக்காக அல்ல, சட்ட மன்ற நடைமுறையாக இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் போடுகிற ஒரு உத்தரவின் காரணமாக நீங்கள் சொல்கிற அந்தத் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எங்களுடைய கட்சியை உடைக்க வேண்டுமென்ற முயற்சியில் இன்றைக்குக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணய நிலையாக இந்தக் கட்சியை அழித்துவிட்டு, அதன் மூலமாக தன்னுடைய எதிர்கால வாழ்வுக்கு வழி தேட வேண்டுமென்ற நிலையை எடுத்திருக்கிறார்கள் என்று நாடு இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

(**) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி முறைகளை, அல்லது ஒழுங்குமுறைகளைப் பற்றி ஒரு எதிர்க் கட்சித் தலைவர் ஏதேனும் அழுத்தமான மாறுபட்ட கருத்துக்கள் இருக்கு மானால் தெரிவிக்கலாமே தவிர, இப்படி எழுந்து பேசுகிற போது எந்த ஒரு கட்சித் தலைவரைப் பற்றியும் கூட குற்றம் சாட்டுவதற்கு உரிமை கிடையாது. குற்றம் சாட்டினால் அதற்கு மறுப்பு அளிக்க வேண்டும். மறுப்பு அளிக்கப்படு மானால், வாதம் நடைபெற வேண்டும். இது வாதம் நடத்துவதற்கான நேரமல்ல. எனவே கருத்துக்களைச் சொல்கிறபோது, யாரையும் குற்றம் சாட்டுவதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த நேரம் உரிமை யான நேரமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவுகளை நீங்கள் இடுகிறபோது, எங்களை வெளியேற்றுகிற நேரத்தில், நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். எங்களை நேற்று ரொம்ப சாதாரணமாகக் காவலர்கள் வெளியேற்றி விட்டார்கள். தூக்கிப் போட்டார் கள். அவைகளையெல்லாம். . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாதாரணமாகத் தூக்கிப் போடவில்லை. 3-4 முறைகள் சொல்லி, அன்பாக வேண்டு கோள் என்று சொல்லி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகப் பெரிய மாண்பைச் சேர்த்து எத்தனையோ முறை வலியுறுத்தப்பட்டும் நான் இட்ட எளிதான கட்டளையை நீங்கள் இயல்பாகச் செயல்படுத்தாத காரணத்தால் கடைசி எல்லை வரைக்கும் போக வேண்டியிருந்தது. அதை மீண்டும் நினைவு கொள்ள வேண்டும்.

10-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல தாங்கள் குறிப்பிடுகிற அலுவல் இல்லாத இந்த நேரத்தில் சில பிரச்சினைகளை எழுப்புவதற்கு உறுப்பினர் களுக்கு வகை செய்யப்பட்ட அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பேசும்போது தாங்கள் ஏந்த ஒரு குறிப்பிட்ட நிலையைப் பற்றிச் சொல்கிறோம் என்பதைத்தான் சொல்ல வேண்டுமே யல்லாமல் விமரிசனங்களில் ஈடுபடுவது முறையல்ல. எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசும்பொழுது முதலமைச்சர் தன்னுடைய எதிர்கால வாழ்வைச் சரி செய்வதற்காக என்று குறிப்பிட் டிருக்கிறார். எனக்கு 67 வயது ஆகிவிட்டது. இன்னும் மிச்சம் இருக்கிற எதிர்கால வாழ்வு என்பது 5 ஆண்டோ 10 ஆண்டோ 20 ஆண்டோ அல்லது ஓர் ஆண்டோ ஈராண்டோ. திரு. இராதா போன்ற இளைஞர்களுக்குதான் நீண்ட எதிர்

1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

காலம் இருக்கிறது. எனவே எதிர்கால வாழ்வுக்காக நான் எங்கும் கலகம் செய்து அதன் மூலமாகத்தான் இந்தக் கட்சியை வளர்க்க வேண்டுமென்ற ஈனபுத்தி கொண்டவனல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஒரு விளக்கம் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய வயதைப் பொறுத்த வரையில் அவர் இன்னும் 100 ஆண்டுக் காலம் வாழ்ந்து நடைபெறுகிற எல்லா நிகழ்ச்சிகளையும் அவர் பார்த்து செய்திருக்கிற அத்தனைக் காரியங்களுக்கும் எதிர் வருகிற நிகழ்ச்சிகளை அவர் அனுபவிக்க வேண்டுமென்ற நிலையிலேதான் (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் செய்தவைகளுக்குத்தான் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். வரம்புகளுக்கு உட்பட்டுப் பேசுவதாக இருந்தால் மட்டும்தான் நான் அனுமதிக்க முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவுகள் எழுகிற நேரத்தில் காவல் துறையைப் பற்றி ஒன்று சொல்லியாக வேண்டும். நேற்றைக்கு எங்களைத் தூக்கி வெளியிலே போடுகிற நேரத்தில் எங்களுடைய கொறடா ஆக இருக்கின்ற திரு. அர்ஜுனன் அவர்கள் (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். வெளியேற்றப்படுவது என்பது நீங்கள் வெளியேற மறுப்பதால் ஏற்படுவது. நான் வெளியேறக் கட்டளையிடுகிறேன் என்ற உடனேயே நீங்கள் வெளியேறலாம். அல்லது ‘‘ காவலர்கள் ’’ என்று அழைக்கப்பட்ட உடனேயே மிகுந்த மதிப்போடு அவர்களுடன் நடந்து விடலாம். அந்த எல்லைகளை மீறுகிறபோது இங்குமங்கும் தள்ளுகிறபோது நீங்களே படுத்து உருள்கின்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொள்கின்றபோது அப்படிப்பட்ட நிலைமைகளில் அவர்கள் வெளியேற்றுகிறபோது ஏற்படுகிற சிக்கல்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. நீங்கள் அவற்றை மனதில் வைத்துக் கொண்டு செயலாற்றினால் இந்த அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பே கிடையாது. மீண்டும் அதைக் கிளறுவதை நான் அனுமதிக்கவே முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ரத்தக்காயம் ஏற்படுகிற அளவுக்கு காவலர்கள் தூக்கி (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு செய்தி இருந்தால் பேசுங்கள். அவ்வளவுதான். திருப்பித் திருப்பி பேசிக் கொண்டிருக்க முடியாது. வேறு செய்தி இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நியாயமாக தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் அநியாயத்தை எப்போதும் பேச மாட்டேன். எனவே அந்த வகையிலே திரு. துரை ராமசாமி காயம்பட்டிருக்கிறார். திரு. அர்ஜுனன் காயம்பட்டார். நான் அதைப்பற்றி கூட உங்களிடத்திலே நியாயம் கேட்க விரும்பவில்லை. ஆனால் யாரோ ஓர் உத்தரவைப் போட்டார்கள். எங்கோ நீதி மன்றத்தில் ஓர் உத்தரவு இருக்கிறது என்று சொல்லி. . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக நேற்றே தீர்ப்பு அளித்தாகி விட்டது. அதற்குமேல் எந்த விமர்சனத்திற்கும் இடமே கிடையாது. (குறுக்கீடு) இதுபற்றி இதற்கு மேலே பேச முடியாது. (குறுக்கீடு) இல்லை இல்லை, இதற்கு மேலே தீர்ப்புத் தொடர்பாக எந்தப் பேச்சுக்கும் இடமே கிடையாது. (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சத்தியா ஸ்டுடியோவிலேதான் போட்டார்கள். சத்தியா ஸ்டுடியோவிலே பொதுக் குழுவிலேதான் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கவனியுங்கள். (குறுக்கீடு). இருங்கள் திரு. சீனிவாசன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது தொடர்பாக விட்டுவிட்டு வேறு ஏதாவது செய்தி பேசுவதாக இருந்தால் அனுமதிப்பேன். இதையே தொடர்ந்தால் அனுமதிக்க மாட்டேன்.

திரு. எஸ். ஆர் இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இது தொடர்பாக வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் போங்கள். ஆனால் இப்போது என்ன வேறு செய்தி சொல்ல வருகிறீர்கள், அதை மட்டும் சொல்லுங்கள்.

1990 ஆகஸ்ட் 21]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியிலே நேற்று தீர்மானம் நிறைவேற்றி, எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் இங்கே கட்டுப்படாத நிலையிலே இருக்கிற உறுப்பினர்கள் என்று அல்லாமல் திரு. மூக்கன் அவர்களுக்கும், திருமதி லட்சுமி.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு என்று ஒரு கட்சி இருக்கிறது. அதற்கு என்று பொதுச் செயலாளர் இருக்கிறார்கள். நீங்கள் கட்சி நிலையிலே, அங்கே வைத்து, வெளியே வைத்து நடவடிக்கை எடுங்கள். ஏன், எதற்காகத் தயங்குகிறீர்கள் என்றுதான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே நான் அதைச் சொல்ல முடியாது. இப்போது நீங்கள் உங்கள் நிலைமையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். இது தொடர்பாக எந்தச் செய்தியையும் பேசினால் நான் அனுமதிக்க மாட்டேன். இந்தச் செய்தி தொடர்பாகப் பேசுவதற்கு எந்த உரிமையும் கிடையாது. இது குறித்து ஏற்கனவே தீர்ப்பு அளித்தாயிற்று. (குறுக்கீடு) இது எல்லாம் உங்களுடைய கட்சியிலே, உங்கள் பொதுக் குழுவிலே வைத்துப் பேச வேண்டிய செய்தி. (குறுக்கீடு) அதை இந்த நேரத்திற்கு ஒதுக்க முடியாது. (குறுக்கீடு) தீர்ப்பு அளித்த பிறகு அதைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசினால் நான் வெளியேற்ற வேண்டியிருக்கும். அவ்வளவுதான் சொல்வேன். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். பொதுப் பிரச்சினை இருந்தால் பேசுங்கள் (குறுக்கீடு) திரு. உ.ரா. வரதராசன். மற்றவர்களுக்கு ஒலி வாங்கி எதுவும் வேலை செய்யாது. (குறுக்கீடுகள்)

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of clarification (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். நீங்கள் அவர்களுடைய பொதுச் செயலாளர் கொடுத்த கடிதத்திலே ஒன்றின்மீது ஒரு நிலையை எடுத்தீர்கள். இன்னொன்று மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பொதுச் செயலாளரே 3 பேர் மீது ஒரு நடவடிக்கை எடுத்தார்கள். பாக்கி 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்களே, அது ஏன் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் தர வேண்டும்.

10-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது யாரும் யாருக்கும் விளக்கம் சொல்ல வேண்டிய தேவை கிடையாது. இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா? நேற்று மாதிரி ரொம்ப நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன். (குறுக்கீடு) மணிச்

கணக்கில் வேண்டுகோள் விடுகிற வேலையெல்லாம் வைத்துக் கொள்ள மாட்டேன். (குறுக்கீடு) இப்போது நீங்கள் எல்லோரும் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் இடத்திலே உட்கார வேண்டும். (குறுக்கீடு) அதையெல்லாம் எங்கே வேண்டுமானாலும் நடத்துங்கள். இங்கே, அவை மரபுக்குப் புறம்பாக நின்று கொண்டிருந்தால், கட்டளைக்குக் கீழ்ப் படியவில்லை என்றால் நடவடிக்கைதான். (கூச்சல்—குழப்பம்) கடைசி வேண்டுகோள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், இடத்தில் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) இதிலே பேசுவதற்கு இடமே இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) இங்கே அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. நேற்றே அதைப் பற்றித் தீர்ப்பு அளித்தாகிவிட்டது. அதிலே விமர்சனத்திற்கு இடமேயில்லை. அதிலே மேலும் பேசுவதற்கு வாய்ப்புக் கிடையாது. (குறுக்கீடு) இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா? நீங்கள் பேரவைத் தலைவரை எதிர்த்து, பேரவைத் தலைவருக்கு '' Direction '' கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறீர்கள், விதிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல். யாருக்கு எந்த அதிகாரம் இருக்கிறது என்று தெரியாமல் நீங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) திரு. அர்ஜுனன் அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) திரு. துரை ராமசாமியை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) திரு. வி. கே. சின்னசாமி மற்றும் அவர்களைச் சார்ந்த உறுப்பினர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) பேரவைப் பாதுகாவலர்கள், அவர்கள் எல்லோரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்-குழப்பம்)

(பேரவைக் காவலர்கள் அவ்வுறுப்பினர்களைப் பேரவையினின்றும் வெளியேற்றினர்)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்பு விசேட பொதுக் குழு கடந்த 1—8—1990 அன்று கூடி, அதற்கு முன்னாலே தற்காலிகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த செல்வி ஜெயலலிதா அவர்களை அந்தப் பொறுப்பிலிருந்தும், கழக உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நீக்கி, கழக நிர்வாகிகள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் செல்வி ஜெயலலிதா அவர்கள் எந்தவிதமான சட்ட திட்டங்களையும் பின்பற்றாமல்,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விதிகளைப் பின் பற்றாமல் எங்களை எல்லாம் கட்சியில் இருந்து நீக்குவதாக அவர்கள் எதேச்சாதிகாரமாக, தான்தோன்றித் தனமாக அறிவித்தார். அண்ணா தி.மு.க. சட்ட திட்ட விதிகளின்படி கழகத்தினுடைய உறுப்பினரை நீக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் அவர்களுக்குத் தகவல் அளித்து, ஒரு வார கால அவகாசத்திற்குப் பின்னாலேதான், அவர்களிடமிருந்து பதிலைப் பெற்றதற்குப் பின்னாலேதான்.... (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு).

10-20 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணித்துளி திரு. குமரி அனந்தன். (குறுக்கீடுகள்)

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் பேசியதை முடித்து விடுகிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒரு ''Point of order'' கேட்கிறார்.

திரு. கே. ரமணி : I am raising a point of order

திரு. குமரி அனந்தன் : Thiru Varadarajan was allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. நீங்கள் அவர் பேசிய பிறகு பேசுங்கள். நான் அனுமதிக்கிறேன்.

திரு. கே. ரமணி: பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். இந்த அவையினுடைய நேரத்தை முறைப்படி பயன்படுத்துவது என்பது தங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அவை விதிகளும் அதற்காகத்தான் இயற்றப்பட்டுள்ளன. கட்சிகளிலே மாற்றங்கள் ஏற்படலாம். அது சம்பந்தமான முழு ரிப்போர்ட்களும் தங்களுக்கு அனுப்பப்பட்டு, விதிமுறைகளுக்கு உட்பட்டு அதைத் தாங்கள் பரிசீலித்து, தங்களுடைய அறையிலே அதைப் பிராசஸ் பண்ணி, தேவையானால் பிசினஸ் அட்வைசரி கமிட்டியோ அல்லது இதர கமிட்டிகளோ, அமைச்சர் பெருமக்களோ அதுபற்றிக் கலந்து பேசி முடிவு எடுத்து அந்த விஷயத்தை இங்கே கொண்டுவருவது தான் சரியாக இருக்கும். இப்போது மதிப்புக்குரிய திருநாவுக்கரசு அவர்கள் கிளப்பக்கூடிய விஷயம் அவர்களுடைய கட்சியில்

ஏற்பட்டு இருக்கிற நிலை. அந்த நிலையை இங்கே இப்படி டைரக்டாக நீங்கள் அனுமதித்தால் இந்த சபை முழுவதும் கூடி, நாங்கள் விவாதித்து முடிவுக்கு வர முடியுமா? வர வேண்டி இருக்கும்; அப்படித்தானே புரசிஜெர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் ரமணி அவர்கள் சொன்னதைப் போல, இப்போது நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே என்ன வாதங்களை எடுத்து வைக்கிறாரோ, இவைகளை எல்லாம் நீதிமன்றத்திலே எடுத்து வைத்து, தீர்ப்பைப் பெற்றுத்தான் இங்கே வந்து இருக்கிறார். எனவே அவைகளை மீண்டும் இங்கே சொல்லி நேரத்தை வீணாக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன், ஒரு மணித்துளி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நானும் அதைத்தான், இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், திரு. இராதா அவர்கள் கட்சிப் பிரச்சினையை எடுத்துச் சொன்ன உடனேயே, 'நீங்கள் வெளியே வைத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னீர்கள். அதைப்போலவே அவர்களுடைய வாதத்தை எடுத்து வைப்பதற்கு அவர்கள் இல்லாதபோது, அவர்கள் சொல்கிறார்கள். ஒருங்கிணைந்த அண்ணா தி. மு. க. என்னைத் தேர்ந்தெடுத்தது, சத்தியா ஸ்டுடியோவிலே ஆகஸ்ட் 20 ஆம் தேதி என்று சொல்கிறார்கள். எனவே அவர்களுடைய வாதத்தை எடுத்து வைப்பதற்குரியவர்களை அனுமதிக்காமல் அவர்களை நாம் வெளியே அனுப்பி இருக்கிறோம். இந்த நேரத்திலே (குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரே நிமிடம், நான் முடித்து விடுகிறேன். நான் வேறு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து நமது மார்ஷல்களை வைத்து நீங்கள் வெளியே அனுப்பச் சொல்வதிலே எங்களுக்கு உங்களுடைய தீர்ப்பிலே கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் அவர்கள் அழைத்த உடனே இவர்கள் போக வேண்டும் என்பதையும் (குறுக்கீடு) நான் ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் ஒரு தடவை சொல்லிவிடுகிறேன்.......

திரு. குமரி அனந்தன்: தயவுசெய்து ஒத்துக் கொள்ள வருகிறேன். ஆனால், வருகிற நேரத்திலே ஏதோ வீராவேசத்தோடு வந்து அவர்களைப் பிடிப்பதுபோல வரக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு வீராவேசம் எல்லாம் கிடையாது. வெளியிலே நடக்கிறவர்கள் தாராளமாக நடக்கலாம். யாரும் அதையெல்லாம் கை வைத்து எதுவும் செய்யமாட்டார்கள். 'நீங்கள் வாருங்கள்' என்று கூப்பிட்டவுடன் வந்துவிட்டால் வேலை முடிந்துவிட்டது. இதில் என்ன வீராவேசம் இருக்கிறது ? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. அவர்களையெல்லாம் குற்றம் சாட்டக்கூடாது. (குறுக்கீடு) குற்றம் சாட்ட வேண்டாம். 'வாருங்கள்' என்று சொன்னால் வந்துவிட வேண்டியது தானே ? ஒரு மரபுக்காகத்தான் அவர்களும் செய்கிறார்கள். நாங்களும் ஒரு மரபு மீறக் கூடாது என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கிறோம். இதில் பிறகு இழுக்க வேண்டிய சூழ்நிலையை எதற்கு உண்டாக்குகிறார்கள் ? (குறுக்கீடு) அவர்களை வந்து, பேசாமல் கொஞ்ச நேரம் நிற்கச் சொல்வோமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் இரண்டு கருத்துகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒன்று, எதிர்க் கட்சித் தலைவர் இப்போது திரு. திருநாவுக்கரசு பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டபோது போல் அனுமதிக்கப்பட வேண்டும் ; அதற்கு மாறாக அனுமதிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதுபோல் அனுமதிக்க ஆரம்பித்துத்தான் சபாநாயகருடைய தீர்ப்பை அவர் குற்றம் சொல்லி, நேற்று வழங்கிய தீர்ப்புக்கு மாறாக நியாயம் கேட்டார். தீர்ப்பு வழங்கிய பின்னர் நியாயம் கேட்பது முறையல்ல. வழங்கப்பட்ட தீர்ப்பிலே கூட முடிவு பின்னர் அறிவிக்க வேண்டிய தீர்ப்பும் இருக்கிறது. எனவே, நியாயம் கேட்டு, நியாயம் கிடைத்தால்தான் என்றால், சபாநாயகர் நான் சொல்வதை ஒத்துக் கொண்டால்தான் என்று பொருள்படும். எனவே சபாநாயகரைக் கட்டுப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. எனவே அந்த வகையில் தொடர்ந்து பேசுவது அனுமதிக்கப்படவில்லை.

மற்றொன்று, இங்கே பேரவைப் பாதுகாவலர்கள் நடந்து கொள்வது என்பது, சபாநாயகர் தீர்ப்பை மீறிய காரணத்தால் செயல்பட்டது. சபாநாயகர் வெளியேற உத்தரவிடுகிறார். உத்திரவிட்டால், ஒருவேளை தங்களுக்கு மறுப்பு இருந்தால், அவரிடத்திலேயே "நாங்கள் போக மறுக்கிறோம்" என்று சொல்லலாமே தவிர போகாமல் இருக்க முடியாது. எனவே கட்டாயப்படுத்த வேண்டிய ஒரு நிலைக்கு ஆளாகியது காரணமாக, கட்டாயமாக அவர்களை வெளியே கொண்டு போகிறபோது மறுக்கிறார்கள், கீழே படுத்துக் கொள்கிறார்கள். ஏதோ அவர்களுக்குத் தெரிந்த அத்தனைத் திறமைகளையும் காட்டுகிறார்கள். வேறு வழி இல்லாத நிலைமை ஏற்படுகிறது. எனவே சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேறு வழி கிடையாது.

[1990 ஆகஸ்ட் 21

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தப் பிரச்சினை பற்றி இப்போது பேச வேண்டாம். ஏனென்றால் நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. உங்களுடைய கட்சிப் பிரச்சினைகள் தொடர்பாக நான் உங்களுடைய வாதங்களை எல்லாம், நீங்கள் எழுதிக் கொடுத்த கடிதங்கள், அவர்கள் எழுதிக் கொடுத்த கடிதங்கள், தீர்ப்புரைகள் அத்தனையையும் ஒன்றாக வைத்து நான் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்து நேற்றுத் தீர்ப்பு அளித்து இருக்கிறேன். எனவே அதன் மீது மேலும் விவாதம் வேண்டாம். வேறு ஏதாவது செய்தி நீங்கள் சொல்வது என்றால் சொல்லுங்கள். உங்களுடைய கட்சிப் பிரச்சினைகளை இனிமேல் இங்கே பேச வேண்டாம். ஏனென்றால் அதற்கு வேறு அரங்கங்கள் இருக்கின்றன. இந்த அவையினுடைய நேரம் அந்த வகையில் வீணாகக் கூடாது என்ற உறுப்பினருடைய உணர்வை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பல குற்றச்சாட்டுகளைப் பேசுகிறபோது சொல்லி, அது பதிவாகி இருக்கிறது. நான் எல்லா விவரங்களையும் இப்போது தங்களிடத்திலே சொல்ல முற்படவில்லை. ஏற்கெனவே நீதிமன்றத்திலே சொல்லி..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒலி வாங்கி வேலை செய்யாததால் அப்பகுதி பதிவாகியிருக்காது. அது வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனவே உயர்நீதி மன்றத்திலே நாங்கள் வழக்குத் தொடர்ந்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அப்படியே விட்டுவிடலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அந்தப் பாயின்ட்டை மட்டும் சொல்லிவிடுகிறேன். கேஸைப் பற்றி நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம் ; இந்த நேரத்தை வீணாக்க வேண்டாம். மண்டல் குழு தீர்மானம் எல்லாம் இருக்கிறது. அதிலே நீங்கள் கொஞ்சம் பேசுவதற்கு

1990 ஆகஸ்ட் 21] [பேரவைத் தலைவர்]

நான் வாய்ப்பு அளிக்கலாம் ; அதுதான் நன்றாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இருக்கை மாற்றியது பற்றி எங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தொடர்பாகவும் நேற்றுத் தீர்ப்பு அளித்துவிட்டேன்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தில் 23 ஆம் தேதி வரை பழைய நிலையிலேயே அண்ணா தி.மு.க.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. திருநாவுக்கரசு அவர்களுடைய ஒலி வாங்கி வேலை செய்யாது. (குறுக்கீடு) இல்லை, எல்லோருக்கும் ஒரே நீதிதான். (குறுக்கீடு) உங்களுடைய உரிமைகளைக் கோருங்கள். (குறுக்கீடு) இல்லை. எல்லோருக்கும் ஒரே நீதிதான். இது தொடர்பாக கட்சிப் பிரச்சினையை ஏற்கெனவே நேற்றே நான் ஆய்வு செய்து, முடிவு செய்து, தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. அதன் மீது மீண்டும் கட்சிப் பிரச்சினைகளை இங்கே எழுப்ப வேண்டாம். (குறுக்கீடு) அதையெல்லாம் நேற்றே சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) அதற்கும் தீர்ப்புச் சொல்லியாகி விட்டது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு வேறு வழி இல்லாமல் 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்று என்னை வம்புக்கு இழுப்பது வேடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து இந்தப் பிரச்சினைகளை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை அனுமதிப்பது நல்லது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்காரலாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்கார வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேரவைத் தலைவர், ஆறாவது விதியின்படி செய்த வரிசை முறைப்படி உட்காருவது என்றால் இப்போது உட்கார்ந்துவிடலாம். இல்லையென்றால் நான் வெளியேற்ற வேண்டி இருக்கும். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு உட்கார வேண்டும். திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் உட்கார வேண்டும். திரு. உகம்சந்த் உட்கார வேண்டும். திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களை வெளியேறுமாறு கட்டளை இடுகிறேன். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு அவர்களை வெளியேறுமாறு கட்டளை இடுகிறேன்.

10–25 மணி

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. உகம்சந்ந் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராஜு, திரு. மாதப்பன், திரு. மூக்கன், திருமதி இலட்சுமி ஆகியோர் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காரவில்லையென்றால் அவர்களை வெளியேற்றுமாறு கட்டளையிடுகிறேன். பாது காவலர்கள் இந்த 7 பேரையும் வெளியேற்றுமாறு கட்டளை யிடுகிறேன். பேரவைப் பாதுகாவலர்கள் இப்போது அவர் களை வெளியேற்றுவார்கள்.

(அவ்வுறுப்பினர்கள் அனைவரும் பேரவைப் பாதுகாவலர்களால் வெளியேற்றப்பட்டார்கள்.)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேசுகின்ற போது தங்கள் மீது ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அதை நீக்க வேண் டும் என்று சொன்னார்கள். அவரே திரும்பப் பெறுவார் என்று நீங்கள் சொன்னீர்கள். அவர் திரும்பப் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய வாக்கியம் முற்றிலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : அதே போல் வெளியேற்றப் பட்டது இந்நாள் மட்டுமா, இல்லையா என்பது குறித்துத் தீர்ப்புச் சொல்வது நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரத ராசன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, * * *
* * * * * * * * * *
என்ற அந்த வாசகம் மாத்திரம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றது ஒலி வாங்கி இல்லாததால் பதிவாகியிருக்காது. இன்றைக்கு அவையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் இன்று முழுவதும் அவைக்கு வர இயலாது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1990 ஆகஸ்ட் 21]

(இ) மேல்நிலை வகுப்பு கேள்வித்தாள்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களினால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

10–30 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிளஸ் 2 வகுப்புகளில படிக்கும்படியான பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒரு கடுமையான குழப்பத்திற்குள்ளே சிக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்த கேள்வித் தாள்களில் சில புதிய மாற்றங்களை உருவாக்கி, ஏற்கெனவே அவர்கள் அந்த கேள்வித் தாள்களில் பதில் எழுதுவதற்கும், அவர்களுடைய சாய்சை உபயோகப் படுத்துவதற்கும் இருந்த சந்தர்ப்பங்களை இழக்கும்படியான நிலை ஏற்பட்டு, அதனால் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் அவர்கள் பதில் எழுதி, மார்க் பெற்று, வெற்றி பெறுவது சாத்தியமல்ல என்ற பயமும் குழப்பமும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. பரவலாக எல்லா இடங்களிலும் இது வந்திருக்கிறது. நேற்றையதினம் எனக்கு மாலையில் கோவையிலிருந்து கொடுக்கப்பட்ட டெலிபோன் செய்தியில் 62 பள்ளிகளில் அந்த மாவட்டத்தில் மட்டும் வேலை நிறுத்தம் பண்ணியிருக்கிறார்கள். அவர்களை அமைதியாகவும், கட்டுப் பாடாகவும் இருந்து அரசினுடைய உத்தரவை எதிர்பார்க்கும் படி நான் கேட்டுக் கொண்டேன். நீலகிரி மாவட்டத்தில் 17 பள்ளிகள் மூடப்பட்ட செய்தி வந்திருக்கிறது. இதே மாதிரி மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. பிறகு டைரக்டர் ஆப் எக்சாமினேஷன்ஸ் அவர்கள் சில அறிக்கைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கமும் சரியான விளக்கமாக, அவர்களுடைய சந்தேகத்தையும், பயத்தையும் போக்கும்படியாக தெளிவாக இல்லை. அரை குறையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கோவையில் இருக்கிற முதன்மை கல்வி அதிகாரியை நான் நேற்று முன்தினம் கேட்டேன். அந்த அறிக்கையின் நடைமுறைப்படி என்ன தெளிவு ஏற்படும் என்பது எழுத்து மூலமாக அவர்கள் கையில் கிடைக்கவில்லை. அதனால் ஆபத்து ஒன்றும் வராது என்று பொதுவாகத்தான் அவரால் சொல்ல முடிந்தது. எனவே, இந்த பயத்தைப் போக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுடைய இன்றைய வேண்டுகோள் என்னவென்றால் பழையமுறையில் அவர்களுடைய கேள்வித்தாள்களை அமைத்து கொடுக்க வேண்டும் என்பதுதான். அரசும் அதற்கு உத்தரவிட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கொஞ்சம் தெளிவாக, சந்தேகத்திற்கு இடமின்றி, குழப்பத்திற்கு இடமின்றி, வேறு யாரும் அந்த மாணவர்களிடத்தில் அப்படிப்பட்ட குழப்பத்தை, சந்தேகத்தை தூண்டுவதற்கு இடமளிக்காதபடி, அதுபற்றி மாண்புமிகு கல்வி

அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி கல்வியில் பாடத்திட்டங்கள் மேலும் உயர்த்தப்பட வேண்டுமென்பது ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் அரசாங்கத்தால் கருதப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு முன்னால் புதிய பாடத் திட்டங்கள், சற்று விரிவான பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டு, அந்தப் புதிய பாடத் திட்டங்கள் நடைமுறைக்கு வருகிறபோது எந்தவொரு பாடப் பகுதியும் கேள்வியிலிருந்து விடுபடக்கூடாது என்ற ஒரு நோக்கத்தோடு, எந்தவொரு பகுதியையும் மொத்தமாக விட்டுவிட்டு தேர்வு எழுதக்கூடிய வாய்ப்பைத் தந்தால் புதிய பாடத் திட்டத்தில் தகுந்த அளவிற்கு மாணவர்கள் அக்கறை செலுத்தமாட்டார்கள் என்பதற்காக அதற்குரிய முறையில் கேள்வித்தாள் நிபுணர்களால், அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களால் வகுக்கப்பட்டு, அதுதான் அனுப்பப்பட்டது. அந்தக் கேள்வித்தாள் ஏற்கெனவே உள்ள அதே மாடலில் இல்லாத காரணத்தால், மாடல் கொஸ்டின் பேப்பர் வேறுபட்ட காரணத்தால், மாணவர்களில் சிலபேருக்கு இது கடினமான கேள்வித்தாள் என்ற எண்ணம் ஏற்பட்டு, இந்தக் கேள்வித் தாள் கடுமையானது, அரசாங்கம் இதை கவனிக்க வேண்டும் என்ற முதல் குரல் வந்தவுடனே, நம்முடைய முதலமைச்சர் அவர்களே கூடக் கல்வித் துறை செயலாளரை அழைத்து, இப்படி வருகிறதே இது என்னவென்று கேட்டு, இது புதிய பாடத்தின்படி வந்த அமைப்பு என்று சொன்னவுடன், இருந்தாலும் பழைய முறையிலேயே பாடக் கேள்விகள் அமைவது நல்லது என்று ஆலோசனைகள் வழங்கப்பட்டு, கல்வித்துறையினர் கடந்த காலத்தில் எந்த முறையில் கேள்வித் தாள்களை அமைத்திருந்தனரோ அதே முறையில் இப்போதும் அமைத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்து, அது தொடர்பாகப் பள்ளித் தேர்வுத் துறை இயக்குநர் திரு. முருகண்ணன் அவர்கள் ஆகஸ்ட் 16 ஆம் நாளன்று ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். பிளஸ் 2 மாணவர்களுக்கு கணிதம், தாவரவியல் ஆகியவற்றில் இரண்டு மதிப்பெண்கள் கொண்ட கேள்விகள் தேர்வு செய்து எழுதும் முறையில் மாற்றியமைக்கப்படும். தேர்வு செய்து எழுதும் முறை என்றால் சாய்சோடு அமைக்கப்படும் என்று பொருள். இவ்வாறு அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. அதன்படி மாற்றியமைக்கப்பட்ட பகுதிகள் ஆய்வு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

10-35 மணி

தேர்வு, கேள்வித்தாள் முதலானவற்றைக் குறிக்கிற அலுவலர்களுக்கு இந்த முடிவு அனுப்பப்பட்டு உள்ளது. மற்ற பாடங்களில், சாய்ஸ் கேள்விகள் அதாவது எதை வேண்டுமானா

1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் க. அன்பழகன்]

லும் தேர்ந்து எழுத, அதாவது ஆப்ஷன் கேள்விகள் பழைய வினாத்தாளில் உள்ளபடியே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பாடங்களில் பழைய மாதிரி வினாத்தாளில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றும், ஏற்கனவே உள்ள முறை நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது.

இப்போது மாணவர்களில் சிலர் இப்படிப்பட்ட ஐயங் களைத் தூண்டிவிட்டு ஒரு கிளர்ச்சியை நடத்துவது ஒரு பெரிய, தாங்கள் தனிப்பட்ட முறையில் தனித் தலைமை, செல்வாக்கு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு என்பதுபோல ஒரு உணர்வு இருக்கிறது. ஏன் என்றால், இது எல்லாம் தெளிவுபடுத்தப்பட்டு, பெரும் பாலும் அந்தத் துறையைச் சார்ந்த தலைமை ஆசிரியர்கள், பிற ஆசிரியர்கள் குழுக்களிலே பாடத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துக்களும் கூட மறுபடியும் பரி சீலனை செய்யப்பட்டு, ஏதேனும் பாடத் திட்டங்களில் விடுபட வேண்டியது இருக்குமானால், கைவிடவேண்டியதிருக்குமானால் அதைக் கூடப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பாடத் திட்டத்தைச் சுமையாக ஆக்குவது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல. அதைப்போல கேள்வித்தாளை மாணவர்கள் அச்சம் அடைகிற அளவுக்கு கடுமையாக்குவது அரசாங்கத்தினு டைய நோக்கம் அல்ல. மாணவர்களுக்கு, ஏற்கனவே உள்ள, அவர்களுக்கு திருப்தியான கேள்வித்தாள் எந்த முறையில் அமைக் கப்பட்டதோ, அதே முறையில், அமைக்கப்படும் என்றும், நான் இந்த அவையின் மூலமாக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். கேள்வித்தாளில் புதிய மாற்றங்கள் புகுத்தப்படமாட் டாது. (குறுக்கீடு). மற்ற பாடங்களிலும் ஏற்கனவே உள்ள முறைதான்.

(ஈ) கர்நாடக மாநிலம் உடுப்பியிலுள்ள சட்டக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாடு மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி வேளையிலே எங்களைக் கொஞ்சம் பேச விட வேண்டும். சண்டை போடுகிறவர்களை மாத்திரம் முதலிலே விட்டுவிட்டு, எங்களை கடைசியாகப் பேசவிடுவதைவிட, எங்களை முதலிலே பேசவிட்டுவிட்டு சண்டை போடுகிறவர்களை கடைசி யாகப் பேசவிட்டால் நன்றாக இருக்கும். எனவே, இந்த சீரோ அவரிலே, எங்களை முதலில் விட்டுவிட்டு, சண்டைபோடுகிறவர் களை, கடைசியாக விட்டுவிடுங்கள். நாங்கள் எல்லாம் நின்று கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையிலேயிருந்து உங்களுக்கு முதலில் வாய்ப்பு அளிக்கப்படும்.

லும் தேர்ந்து எழுத, அதாவது ஆப்ஷன் கேள்விகள் பழைய வினாத்தாளில் உள்ளபடியே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பாடங்களில் பழைய மாதிரி வினாத்தாளில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றும், ஏற்கனவே உள்ள முறை நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது.

இப்போது மாணவர்களில் சிலர் இப்படிப்பட்ட ஐயங் களைத் தூண்டிவிட்டு ஒரு கிளர்ச்சியை நடத்துவது ஒரு பெரிய, தாங்கள் தனிப்பட்ட முறையில் தனித் தலைமை, செல்வாக்கு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு என்பதுபோல ஒரு உணர்வு இருக்கிறது. ஏன் என்றால், இது எல்லாம் தெளிவுபடுத்தப்பட்டு, பெரும் பாலும் அந்தத் துறையைச் சார்ந்த தலைமை ஆசிரியர்கள், பிற ஆசிரியர்கள் குழுக்களிலே பாடத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துக்களும் கூட மறுபடியும் பரி சீலனை செய்யப்பட்டு, ஏதேனும் பாடத் திட்டங்களில் விடுபட வேண்டியது இருக்குமானால், கைவிடவேண்டியதிருக்குமானால் அதைக் கூடப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பாடத் திட்டத்தைச் சுமையாக ஆக்குவது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல. அதைப்போல கேள்வித்தாளை மாணவர்கள் அச்சம் அடைகிற அளவுக்கு கடுமையாக்குவது அரசாங்கத்தினு டைய நோக்கம் அல்ல. மாணவர்களுக்கு, ஏற்கனவே உள்ள, அவர்களுக்கு திருப்தியான கேள்வித்தாள் எந்த முறையில் அமைக் கப்பட்டதோ, அதே முறையில், அமைக்கப்படும் என்றும், நான் இந்த அவையின் மூலமாக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். கேள்வித்தாளில் புதிய மாற்றங்கள் புகுத்தப்படமாட் டாது. (குறுக்கீடு). மற்ற பாடங்களிலும் ஏற்கனவே உள்ள முறைதான்.

(ஈ) கர்நாடக மாநிலம் உடுப்பியிலுள்ள சட்டக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாடு மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த மாதிரி வேளையிலே எங்களைக் கொஞ்சம் பேச விட வேண்டும். சண்டை போடுகிறவர்களை மாத்திரம் முதலிலே விட்டுவிட்டு, எங்களை கடைசியாகப் பேசவிடுவதைவிட, எங்களை முதலிலே பேசவிட்டுவிட்டு சண்டை போடுகிறவர்களை கடைசி யாகப் பேசவிட்டால் நன்றாக இருக்கும். எனவே, இந்த சீரோ அவரிலே, எங்களை முதலில் விட்டுவிட்டு, சண்டைபோடுகிறவர் களை, கடைசியாக விட்டுவிடுங்கள். நாங்கள் எல்லாம் நின்று கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளையிலேயிருந்து உங்களுக்கு முதலில் வாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நாங்கள் எப்போதாவது ஒருமுறைதான் கேட்கிறோம்.

இப்போது நான் தெரிவிக்க விரும்புவது, கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுப்பியிலே உள்ள சட்டக் கல்லூரியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு கொடூரமான சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்கிறது, அவர்கள் எல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்ற முறையில் அங்கேயிருந்து தந்தி வந்திருக்கிறது. அதாவது உடுப்பியில் இருக்கிற சட்டக் கல்லூரியில், தமிழ்நாட்டிலேயிருந்து சென்று படிக்கிற மாணவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள். இதில் உடனடியாக, தமிழ்நாடு சர்க்கார் தலையிட்டு, ஆவன செய்ய வேண்டும் என்று எங்களுக்கு தந்தி வந்திருக்கிறது. எனவே, இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படுகிற அந்நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள், செய்திகள் அரசுக்கு வரவில்லை. ராக்கிங் நடத்துவது பல இடங்களில் வழக்கத்திலே இருக்கின்றன. தமிழ்நாட்டிலே, அது தடை செய்யப்பட்டு இருக்கிறது. எங்காவது நடைபெறுமானால், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ராக்கிங் நடத்தப்படுகிறபோது, எந்த மாநிலத்து மாணவர்கள் என்று எந்த மாணவனும் பார்க்கமாட்டான். அதிலே மாத்திரம் ஜாதி மத வேற்றுமை எல்லாம் கிடையாது. எனவே, ராக்கிங் ஒரு பைத்தியக்காரத்தனமான ஆர்வச் செயல். எனவே, அந்த பைத்தியக்காரத்தனமான ஆர்வச் செயலில் தமிழ்நாட்டு மாணவர்களா, ஆந்திர மாநிலத்து மாணவர்களா, கர்நாடக மாணவர்களா என்று பார்த்து நடந்திருப்பர் என்று நான் கருதவில்லை. ஒருவேளை அப்படி ஒரு பாதிக்கப்பட்ட நிலைமை இருக்குமானால், தமிழக அரசு அந்த அரசுக்குத் தெரிவித்து, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தர கேட்டுக்கொள்ளப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, அங்கேயிருந்து வந்திருக்கிற தந்தியிலே தமிழ்நாட்டு மாணவர்கள் கொடூரப்படுத்தப்படுகிறார்கள் என்றும், இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்றும், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தற்போது தந்தி வந்திருக்கிறது. அங்கேயிருக்கிற மற்ற மாணவர்களைப் பற்றியோ, ராக்கிங் பற்றியோ, எந்த வார்த்தையும் காணவில்லை. அதைப்பற்றி வந்திருக்குமானால், எங்களுக்கும் கொஞ்சம் அரைகுறையாகத் தெரியும் அல்லவா ?

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ''ராக்கிங்'' கொடூரம் நடைபெறக்கூடாது என்றும், மீறி நடைபெறுமேயானால், அப்படிப்பட்ட மாணவர்கள் அந்தக் கல்வி நிலையங்களில் இருந்து விலக்கப்படுவார்கள் என்றும் கடுமையாக அரசின் சார்பில் எச்சரிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் சொல்வது, கர்நாடக மாநிலத்தைப் பற்றியது. இப்போது இங்கே விவாதிக்கப்பட்ட இந்தச் செய்திகள் பத்திரிகைகளிலே வருமேயானால், அதை வைத்துக்கொண்டு, தீட்சிதர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், அதைப்பற்றிய நடவடிக்கையை கர்நாடகத்தினுடைய மாநில அரசு, அதனுடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

10-40 மணி

(உ) விவசாயக் கடன் நிவாரணம் முழுமையாக அமலாக்கப்படும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலைத் தள்ளிவைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும், அரசு, கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்துவதன் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கிராமிய பொருளாதாரத்தில் ஆதாரமாக இருப்பது கிராமங்களில் இருக்கின்ற விவசாயக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள். அந்தக் கிராமங்களில் வாழக்கூடிய ஏழை விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தினுடைய இந்த அமைப்பில்தான் பங்கு பெறக் கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலில் நிற்க வேண்டுமென்று சொன்னால் அந்தச் சங்கங்களுக்கு ஏதாவது கடன் பாக்கி இருக்கக்கூடாது.

தற்போது மத்திய அரசு ரூ. 10,000 வரையிலான விவசாயக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவினை அமல்படுத்துகின்ற முயற்சிகளில் சில வட்டாரங்களில் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில பேர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களுக்கு அறிவிப்பு வந்திருக்கிறது. சில பேர்களுக்கு இன்னும் வரவில்லை. எனவே, யார் யாருக்கு கடன் தள்ளுபடி என்கின்ற விவரத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையில்கூட நடைமுறையில் ஒழுங்கான ஒரு ஒப்புதல் இல்லை, என நான் நினைக்கிறேன். இந்தச் சூழ்நிலையில், அந்த விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு நிச்சயமாக தேர்தலில் பங்குபெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். எங்கள் மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சம் ஏழை விவசாயிகளுக்கு இந்த பலன் கிடைக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ''ராக்கிங்'' கொடூரம் நடைபெறக்கூடாது என்றும், மீறி நடைபெறுமேயானால், அப்படிப்பட்ட மாணவர்கள் அந்தக் கல்வி நிலையங்களில் இருந்து விலக்கப்படுவார்கள் என்றும் கடுமையாக அரசின் சார்பில் எச்சரிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் சொல்வது, கர்நாடக மாநிலத்தைப் பற்றியது. இப்போது இங்கே விவாதிக்கப்பட்ட இந்தச் செய்திகள் பத்திரிகைகளிலே வருமேயானால், அதை வைத்துக்கொண்டு, தீட்சிதர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், அதைப்பற்றிய நடவடிக்கையை கர்நாடகத்தினுடைய மாநில அரசு, அதனுடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

10-40 மணி

(உ) விவசாயக் கடன் நிவாரணம் முழுமையாக அமலாக்கப்படும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலைத் தள்ளிவைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும், அரசு, கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்துவதன் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கிராமிய பொருளாதாரத்தில் ஆதாரமாக இருப்பது கிராமங்களில் இருக்கின்ற விவசாயக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள். அந்தக் கிராமங்களில் வாழக்கூடிய ஏழை விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தினுடைய இந்த அமைப்பில்தான் பங்கு பெறக் கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலில் நிற்க வேண்டுமென்று சொன்னால் அந்தச் சங்கங்களுக்கு ஏதாவது கடன் பாக்கி இருக்கக்கூடாது.

தற்போது மத்திய அரசு ரூ. 10,000 வரையிலான விவசாயக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவினை அமல்படுத்துகின்ற முயற்சிகளில் சில வட்டாரங்களில் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில பேர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களுக்கு அறிவிப்பு வந்திருக்கிறது. சில பேர்களுக்கு இன்னும் வரவில்லை. எனவே, யார் யாருக்கு கடன் தள்ளுபடி என்கின்ற விவரத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையில்கூட நடைமுறையில் ஒழுங்கான ஒரு ஒப்புதல் இல்லை, என நான் நினைக்கிறேன். இந்தச் சூழ்நிலையில், அந்த விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு நிச்சயமாக தேர்தலில் பங்குபெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். எங்கள் மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சம் ஏழை விவசாயிகளுக்கு இந்த பலன் கிடைக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்

துவது என்பது, இந்த விவசாயிகளுக்கு அந்தக் கடன் தள்ளுபடிக்கான பலனையும் கொடுத்து, அதே நேரத்தில் அவர்களைக் கூட்டுறவு இயக்கங்களில் பங்குபெறாமல் செய்வது, சித்திரம் வாங்கிக் கொடுத்துவிட்டு, கண்ணைப் பறிப்பதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க மாட்டானா என்ற ஒரு பழமொழி எங்கள் மாவட்டத்திலே உண்டு. இவ்வளவு அவசரப்பட்டு, இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் என்ன ? ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் தள்ளி இருந்து, இந்த ஏழை விவசாயிகளுக்கு அந்தப் பலன் கிடைக்கிறதா என்று பார்த்து, அந்த ஏழை விவசாயிகளும் இந்தக் கூட்டுறவு இயக்கங்களில் பங்குபெறக்கூடிய முறையிலே, ஒரு மாதம் அதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் இப்போது அரசியலுக்காக வேண்டிப் பேசவில்லை. 4,000, 5,000 பேர்கள் தமிழ்நாடு முழுவதும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கை காப்பாற்ற என்று அரசு சொல்கிறது. அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை. அதில் தேர்தலில் போட்டியிடக் கூடியவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஜெயிலில் வைத்துக்கொண்டு, ஒரு தேர்தலை நடத்துவது என்பது அடிப்படையிலே அந்தத் தேர்தல் ஒழுங்கான முறையில் நடைபெறும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, விவசாயக் கடன் தள்ளுபடி பற்றி ஒரு நிலையான கொள்கை வந்து, அந்தக் கொள்கை நிலையான பலனைக் கொடுக்கின்ற வகையில், அந்தத் தேர்தலை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்காவது தள்ளிவைக்க முடியுமா என்று நான் அரசினுடைய முடிவை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய இந்தப் பிரச்சினைக்கு உறுப்பினர்களுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் விளக்கமான பதில் அளிக்க இருக்கிறார். இருந்தாலும் சட்டம், ஒழுங்கு, அமைதியைப்பற்றி இதில் சேர்த்திருக்கின்ற காரணத்தினால் இதில் நான் குறுக்கிட வேண்டியதாயிற்று.

அவர்கள் ஒன்றை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வட்டாரத்தில் மாத்திரம் ஒரு இலட்சம் ஏழை விவசாயிகள் இந்தக் கடன் நிவாரணத்தினால் பயன் பெறுகிறார்கள் என்று சொன்னார். நன்றி. இந்த நேரத்திலாவது ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். 2,000, 3,000 பேர்களைச் சிறையில் போட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் எல்லாம் இந்தத் தேர்தலில் எப்படிக் கலந்துகொள்ள முடியும் என்றும் கூறியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் முன்னெச்ச

ரிக்கையாகக் கைது செய்யப்பட்டவர்கள். சட்டம், ஒழுங்கு. அமைதி கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டவர்கள், உடனடியாக விடுவிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பது பற்றிய சில விளக்கங்களைக் கோரி இங்கே கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள 385 வட்டாரங்களில் 241 வட்டாரங்களுக்கு கடன் ரத்து பற்றிய கணக்குகள் முழுமையாக முடிக்கப்பட்டு தொடர்புடைய விவசாயிகளுக்கு எல்லாம் கடிதங்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள்ளாக அனைத்து 385 வட்டாரங்களுக்குமான கடன்கள் ரத்து செய்யப்பட்டு, அதற்கான விளக்கங்கள் தொடர்புடைய விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு தெரிவிக்க விரும்புகிறேன். கடன் நிவாரணம் பற்றிய எந்தக் குழப்பமும் யாருக்கும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, பல கட்டங்களில், பத்திரிகைகளில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற முறையில் நானும் அந்தக் குழப்பங்களுக்கான பல்வேறு விளக்கங்களை பல கட்டங்களில் பத்திரிகை வாயிலாக, விளம்பரங்கள் வாயிலாக, அவ்வப்போது கொடுத்து வந்திருக்கிறோம்.

10-45 மணி

இன்னும் தெளிவாகச் சொன்னால், தொடர்புடைய விவசாயிகளுக்கு அந்தத் தொடக்க கூட்டுறவு வங்கியிலே எவ்வளவு கடன் பாக்கி இருக்கிறது, அரசினுடைய கடன் நிவாரணத் திட்டத்தாலே எவ்வளவு பேர் அதனால் பயன் பெறுவார்கள் என்கின்ற விளக்கங்கள் எல்லாம் தொடர்புடைய தொடக்கக் கூட்டுறவு வங்கியில் அதற்கான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்கின்ற அறிவிப்பும் அவ்வப்போது அந்தந்த வட்டாரப் பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே படிப்படியாக நிதானமாக எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய தக்க வகையிலேதான் இந்தக் கடன் நிவாரணத் திட்டம் தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே மத்திய அரசாலே அறிவிக்கப்பட்ட கடன் நிவாரணத் திட்டத்தை ஒழுக்கமாக முழுவதுமாக நிறைவேற்றுகிற முதல் மாநிலமாக கோவாவை அவர்கள் சொல்லி இருந்தாலும் கூட, பெரிய மாநில அந்தஸ்திலே உள்ள முதல் மாநிலமாக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை

யிலே உள்ள இந்த ஆட்சிதான் நிறைவேற்றியிருக்கிறது என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதிலேயும் கடன்பாக்கி உள்ளவர்கள் நிற்க முடியாதே என்று சொன்னார்கள். கடன் பாக்கி உள்ளவர்கள் தேர்தலிலே தான் போட்டி இட முடியாது என்பது விதி. ஆனால் இந்த நிவாரணத்தின் மூலமாக அவர்கள் தகுதி உடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னதாக, கடன் பாக்கி எவ்வளவு இருக்கிறதோ, அவற்றை செலுத்திவிட்டு, பின்னாலே தகுதி உள்ளவர்கள் என்கிற காரணத்திலே தேர்தல் முடிந்த பின்னால், அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் அதிக ஆர்வம் இதிலே காட்டுகிற காரணத்தினாலே அவர்களுக்கு வேண்டிய நபர்கள் யாராவது இத்தகைய நிலையில் இருப்பார்களேயானால் ஆல்போன்ஸ் அவர்கள், அவர்களுக்கு உதவி செய்து பின்னாலே பணத்தை பெற்றுக் கொள்ளலாம். அப்படி பின்னாலே பெறுவதற்கான உறுதியை இந்த அரசு நிச்சயமாக வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொன்னார், ' சித்திரத்தை வாங்கிக் கொடுத்து கண்ணை எடுத்து விடுவது போல என்று, சொன்னார்கள் ' சித்திரத்தை நாங்கள் வழங்கியிருக்கிறோம், தயவுசெய்து கண்ணை மூடிக்கொள்ளாதீர்கள் என்று மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த நேரத்திலே நான் உங்களுக்கெல்லாம் தெரிவித்து இதுபற்றி எவ்வளவு விளக்கம் வேண்டுமானாலும் இந்த அரசு தருவதற்கு தயாராக இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் அவர்களும் இது தொடர்பாகத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். அவர்கள் பெயரும் இத்தோடு இணைக்கப்படுகிறது.

(ஊ) 20–8–1990 ஆம் நாளன்று ஒர் ஊர்வலம் நடைபெற்றதை யொட்டி முன்னெச்சரிக்கையாகச் சிலர் கைது செய்ய பெற்றுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னபோது முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டது பற்றி சொன்னார்கள். நேற்று ஊர்வலம் நடந்த பிறகும் கூட, நான் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் பி-1 போலீஸ் ஸ்டேஷனிலே கூட ஆயிரகாம் என்று சொல்லப்படக்கூடிய எங்களுடைய தோழர் கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே பின்னாலே கூட, ஒரு பேரணிக்காக இவ்வளவு முன் எச்சரிக்கை வேண்டுமா என்பது

யிலே உள்ள இந்த ஆட்சிதான் நிறைவேற்றியிருக்கிறது என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதிலேயும் கடன்பாக்கி உள்ளவர்கள் நிற்க முடியாதே என்று சொன்னார்கள். கடன் பாக்கி உள்ளவர்கள் தேர்தலிலே தான் போட்டி இட முடியாது என்பது விதி. ஆனால் இந்த நிவாரணத்தின் மூலமாக அவர்கள் தகுதி உடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னதாக, கடன் பாக்கி எவ்வளவு இருக்கிறதோ, அவற்றை செலுத்திவிட்டு, பின்னாலே தகுதி உள்ளவர்கள் என்கிற காரணத்திலே தேர்தல் முடிந்த பின்னால், அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் அதிக ஆர்வம் இதிலே காட்டுகிற காரணத்தினாலே அவர்களுக்கு வேண்டிய நபர்கள் யாராவது இத்தகைய நிலையில் இருப்பார்களேயானால் ஆல்போன்ஸ் அவர்கள், அவர்களுக்கு உதவி செய்து பின்னாலே பணத்தை பெற்றுக் கொள்ளலாம். அப்படி பின்னாலே பெறுவதற்கான உறுதியை இந்த அரசு நிச்சயமாக வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இன்னொன்றையும் சொன்னார், 'சித்திரத்தை வாங்கிக் கொடுத்து கண்ணை எடுத்து விடுவது போல என்று, சொன்னார்கள்' சித்திரத்தை நாங்கள் வழங்கியிருக்கிறோம், தயவுசெய்து கண்ணை மூடிக்கொள்ளாதீர்கள் என்று மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த நேரத்திலே நான் உங்களுக்கெல்லாம் தெரிவித்து இதுபற்றி எவ்வளவு விளக்கம் வேண்டுமானாலும் இந்த அரசு தருவதற்கு தயாராக இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் அவர்களும் இது தொடர்பாகத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். அவர்கள் பெயரும் இத்தோடு இணைக்கப்படுகிறது.

(ஊ) 20–8–1990 ஆம் நாளன்று ஓர் ஊர்வலம் நடைபெற்றதை யொட்டி முன்னெச்சரிக்கையாகச் சிலர் கைது செய்ய பெற்றுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னபோது முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டது பற்றி சொன்னார்கள். நேற்று ஊர்வலம் நடந்த பிறகும் கூட, நான் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் பி-1 போலீஸ் ஸ்டேஷனிலே கூட ஆபிரகாம் என்று சொல்லப்படக்கூடிய எங்களுடைய தோழர் கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே பின்னாலே கூட, ஒரு பேரணிக்காக இவ்வளவு முன் எச்சரிக்கை வேண்டுமா என்பது

எங்களுக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இருந்தும் இவைகள் நடைபெற்றிருக்கிறது. அதை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்தினுடைய பண்புகள் மீது அதிக அக்கறை உள்ள இலக்கியச் செல்வர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்படுவது அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருந்த அந்தக் காலக் கட்டத்திலே இருந்து நடந்து வருகிற ஒருவாடிக்கைதான். அது மாத்திரம் அல்ல, பெரிய தலைவர்கள் டெல்லியிலிருந்து வந்தாலும் முன்னெச்சரிக்கையாகப் பலபேர்கள் கைது செய்யப்படுவதும் வாடிக்கை. அதைப் போலத்தான் முன்னெச்சரிக்கையாக இது நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் விபரீத விளைவுகள் எல்லாம் ஏற்படப் போகிறது என்று சொன்னதன் காரணமாகவும், முதலமைச்சரையே கோட்டைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று பேசியதன் காரணமாகவும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும்படியும் நேரிட்டது. ஊர்வலம் நடந்த பிறகுகூட சிலர் கைது செய்யப் பட்டிருப்பதாக அவர் இங்கே சொன்னார். ஊர்வலம் நடந்த பிறகும்கூட செருப்புகளும், கற்களும் மிகப் பண்பான முறையிலே வீசப்பட்டன என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உளுந்தூர்பேட்டையில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலர் மரணமுற்றது, காயமுற்றது மற்றும் பலத்த சேதங்கள் விளைந்துள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எஸ். டி. உகம்சந்த் மற்றும் திரு சி. கோவிந்தராஜன் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜூன் மாதம் 1990இல் உளுந்தூர்பேட்டையிலே நடந்த வெடி விபத்தில் பலர் மரணமுற்றும், காயம் அடைந்தும், பலத்த சேதங்கள் விளைந்ததன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்துப் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கோரி அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன். திரு எஸ். டி. உகம்சந்த் இடத்தில் இல்லை. திரு. சி. கோவிந்தராஜன்.

* திரு சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய கோர விபத்து உளுந்தூர்பேட்டையிலே

எங்களுக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இருந்தும் இவைகள் நடைபெற்றிருக்கிறது. அதை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்தினுடைய பண்புகள் மீது அதிக அக்கறை உள்ள இலக்கியச் செல்வர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்படுவது அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருந்த அந்தக் காலக் கட்டத்திலே இருந்து நடந்து வருகிற ஒருவாடிக்கைதான். அது மாத்திரம் அல்ல, பெரிய தலைவர்கள் டெல்லியிலிருந்து வந்தாலும் முன்னெச்சரிக்கையாகப் பலபேர்கள் கைது செய்யப்படுவதும் வாடிக்கை. அதைப் போலத்தான் முன்னெச்சரிக்கையாக இது நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் விபரீத விளைவுகள் எல்லாம் ஏற்படப் போகிறது என்று சொன்னதன் காரணமாகவும், முதலமைச்சரையே கோட்டைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று பேசியதன் காரணமாகவும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும்படியும் நேரிட்டது. ஊர்வலம் நடந்த பிறகுகூட சிலர் கைது செய்யப் பட்டிருப்பதாக அவர் இங்கே சொன்னார். ஊர்வலம் நடந்த பிறகும்கூட செருப்புகளும், கற்களும் மிகப் பண்பான முறையிலே வீசப்பட்டன என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உளுந்தூர்பேட்டையில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலர் மரணமுற்றது, காயமுற்றது மற்றும் பலத்த சேதங்கள் விளைந்துள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எஸ். டி. உகம்சந்த் மற்றும் திரு சி. கோவிந்தராஜன் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜூன் மாதம் 1990இல் உளுந்தூர்பேட்டையிலே நடந்த வெடி விபத்தில் பலர் மரணமுற்றும், காயம் அடைந்தும், பலத்த சேதங்கள் விளைந்ததன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்துப் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கோரி அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன். திரு எஸ். டி. உகம்சந்த் இடத்தில் இல்லை. திரு. சி. கோவிந்தராஜன்.

* திரு சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய கோர விபத்து உளுந்தூர்பேட்டையிலே

நடந்துள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் இந்தக் காலத்திலே ஆழ்கிணறுகளை தோண்டுவதற்கும் பாறைகளை உடைப்பதற்கும் 'ஜெல்லட்டின்' என்ற வெடி மருந்து பயன்படுத்தப்படுகிறது. அந்த வெடி மருந்துகளை உரிமத்தோடுதான் வாங்குகிறார்களா, அல்லது உரிமம் இல்லாமல் வாங்குகிறார்களா என்பது குறித்து மிகப் பெரிய விசாரணை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கு நடந்த வெடி விபத்தில் அந்த வெடி மருந்து எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டுமோ அந்த இடத்தில் வைக்கப்படாமல் மக்கள் வாழக்கூடிய, இடத்தில் குறிப்பாக கடைத்தெருவே இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அது வெடித்த காரணத்தால் இந்த தீ விபத்து நடந்து அநேகமாக 18 பேர்களுக்கு மேல் மாண்டிருப்பதாக கணக்கு கூறுகிறது. மற்றவர்களைப் பற்றி நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. அது மட்டும் அல்ல. கடைகள் நிறைந்த பிரதேசமாக இருப்பதால், லட்சக்கணக்கான பொருட்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இந்த நிலைமையிலே அந்த வெடி மருந்தை வைத்திருந்தவர் உரிமம் பெற்றவரா அல்லது உரிமம் பெறாதவரா என்பதைப்பற்றியெல்லாம் தீர விசாரிக்க வேண்டிய நிலைமையில் இருந்தாலும் கூட, உளுந்தூர்பேட்டையில் வெடிமருந்தை வைத்திருந்தவர் அதைச் சொல்லாத காரணத்தால் இந்தக் கோர விபத்து ஏற்பட்டது. தீ பிடித்த உடனே தீயணைப்புப் படை அங்கே செல்கிறது. தீயணைப்பு வீரர்களுக்குக்கூட அது தெரியாத காரணத்தினால் அவர்களும்கூட அந்த வெடி விபத்தில் மாள வேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்படுகிறது. அரசு இதை அறிந்தவுடனே இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 25,000-மும், அரசு ஊழியர்களாக இருந்தவர்களுக்கு ரூ. 40,000-மும் நஷ்ட ஈடு கொடுத்து இருப்பது என்பது உண்மை. ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

10-50 மணி

அண்மையில்கூட 11-ந் தேதி நெல்லை மாவட்டத்தில் மேலப்பாளையம் நாச்சியார் கோவில் காலனியில் ஒரு வீடு வெடித்து தூள் தூளாகிப் போய் இருக்கிறது. பல வீடுகள் இடிந்து கிடக்கின்றன. எனவே இதற்கும் இதுதான் காரணமாக இருக்குமோ என்று சந்தேகிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பதட்ட நிலைமை உளுந்தூர்பேட்டையில் ஏற்பட்டது மட்டுமல்ல பல இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வெடி மருந்து சம்பந்தப்பட்டவரை யாருக்கு உரிமம் வழங்கப்படுகிறது? அப்படி உரிமம் வழங்கப்படக்கூடிய இடத்தில் அந்த வெடி மருந்துகளை வைக்கிறார்களா? பாதுகாப்பான இடங்களில் வைக்கிறார்களா? இவைகள்

இல்லாத காரணத்தினால் தான் பல்வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட நிலைமை வருவதால், தீயணைப்பு படை கூட மாள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் இது மிகவும் படு மோசமான நிலைமை. எனவே இதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, அந்த உரிமம் வழங்குவது எப்படி, எந்த இடத்தில் இந்த வெடி மருந்து வைக்க வேண்டும் என்பது இல்லாத காரணத்தினால் பல்வேறு மாவட்டங்களில் அநேகமாக இந்த பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து விவாதிப் பதற்கு அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 2–7–1990 அன்று பகல் சுமார் 12-45 மணிக்கு உளுந்தூர் பேட்டை ஜூபிளி தெருவிலே உள்ள குமார் என்பவரது வீட்டில் தற்செயலாக தீப்பிடித்தது. அக்கம்பக்கத்திலே உள்ள வீடு களிலிருந்து கொட்டப்படும் சாம்பலிலிருந்த அணையாத கரித் துண்டிலிருந்து கிளம்பிய தீப்பொறியின் காரணமாக தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது. பக்கத்து வீடுகளுக்கும் தீ விரைவில் பரவியது. தீ விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும், உளுந்தூர் பேட்டை, விருத்தாசலம், வேப்பூர், நெல்லிக்குப்பம், விழுப்புரம் திண்டிவனம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஆகிய ஊர்களிலிருந்து தீயணைப்புப் படை பிரிவுகள் உள்ளூர் காவல் துறையினருடைய ஒத்துழைப்போடு விரைந்து சென்று பகல் சுமார் 1 மணியிலே யிருந்து தீயை அணைப்பதிலே ஈடுபட்டன. ஜூபிளி தெருவிலே உள்ள ஆரிஸ் முகமது என்பவரது கல் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரே வரிசையில் 4 குடிசைகள் அமைந்திருந்தன. அந்தக் குடிசை களில் ஒன்றினை ஆத்தூர் மணி என்பவர் வாடகைக்கு எடுத்து, அக்குடிசைக்குள் கிணறுகளை ஆழப்படுத்தும், ஆழப்படுத்தப் பயன்படுத்தப்படும் வெடி மருந்துகள், ஜெல்லட்டின் மற்றும் டெட்டனேட்டர் இவைகளை பதுக்கி வைத்திருந்தார். இந்தக் குடிசையிலும் தீ பரவவே வெடி மருந்துகள் திடீரென வெடிக்க ஆரம்பித்தன. இதனால் உளுந்தூர்பேட்டை வ.உ.சி. தெருவிலே இருந்த பல குடிசைகள் சேதம் அடைந்தன. மேலும் ஆரிஸ் முகமதுவின் கல் வீடும், அருகில் இருந்த வீடுகளும் சரிந்து விழுந் தன. அரசு மருத்துவமனையின் ஜன்னல் கண்ணாடிகளும் உடைந்தன. இந்த தீ விபத்தின் காரணமாக மொத்தம் 16 பேர் மரணமுற்றனர். இவர்களில் 3 பேர் பெண்கள். தீயணைப் பில் ஈடுபட்டிருந்த 2 தீயணைப்புப் படை வீரர்களும் இவர்களில் அடங்குவர். மொத்தத்தில் 62 பேர் காயம் அடைந்தார்கள். இவர்களில் ஒருவர் காவல் துறையையும், 7 பேர் தீயணைப்புத் துறையையும் சேர்ந்தவர்கள். 22 பேர் கடலூர் அரசு மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள். மற்றவர்கள் உளுந்தூர்பேட்டையிலே உள்ள ஒரு தனி மருத்துவரிடம் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றனர்.

23 கல் வீடுகளும் 47 குடிசை வீடுகளும் தீ விபத்தின் காரணமாக சேதம் அடைந்தன. சேத மதிப்பு சுமார் 5 இலட்சம் ரூபாய் ஆகும்.

இந்தத் தீ விபத்து சம்பந்தமாக உளுந்தூர்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 681/90-ல் குற்ற நடைமுறைச் சட்டம் 174-வது பிரிவு, இந்திய தண்டனைச் சட்டம் 304 மற்றும் 436-வது பிரிவுகள், இந்திய வெடி மருந்துச் சட்டம் 3, மற்றும் 5-வது பிரிவுகள், வெடி மருந்துப்பொருள் சட்டம் 9 அ (1) பிரிவு ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுகிறது. தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளர், காவல்துறை துணைத் தலைவர் மற்றும் கடலூர், விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் உளுந்தூர் பேட்டைக்குச் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

10-55 மணி

வெடி குண்டு நிபுணர் குழு விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பரிசோதித்தது. வெடிக்காத வெடி மருந்துகள் எதுவும் கிடைக்கவில்லை. வெடிவிபத்து வழக்கில் எதிரியான ஆத்தூர் மணி என்பவர் 10-7-1990 அன்று சேலத்தில் நீதிமன்றத்தில் சரண் அடைந்தார். இவர் பற்றிய வழக்கு விசாரணையில் உள்ளது. தீ விபத்து நடந்த இடத்திற்கு அருகிலே வசித்து வரும் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஜெயச்சந்திரன் என்பவர் வீட்டிலிருந்து உரிமம் இல்லாமல் வைக்கப்பட்டிருந்த ஆயிரம் ஜெல்லட்டினும், ஆயிரம் டெட்டனேட்டரும் 2-7-90 அன்றே கைப்பற்றப்பட்டன. ஜெயச்சந்திரன் 25-7-1990 அன்று சென்னையில் நீதிமன்றத்தில் சரண் அடைந்தார். இதுவன்றி காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர சோதனைகள் விளைவாக தென் ஆற்காடு மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டி பதுக்கி வைத்திருந்த சுமார் 1,500 வெடி மருந்துகளும் 26 டெட்டனேட்டர்களும் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக 67 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 67 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

விபத்து நடைபெற்ற சில நாட்களுக்குள்ளாகவே பொதுப் பணித் துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் அங்கே நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக

உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்னியில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு அந்தத் தொகையிலிருந்து இறந்தவர் குடும்பத்திற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 16 பேர் இறந்ததில் 3 பேர் அடையாளம் தெரியாதவர்கள். 3 பேர் அரசு அலுவலர், மீதமுள்ள 10 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் தரப்பட்டது. அரசு அலுவலர் 3 பேர், அரசு முறைப்படி தரும் 40 ஆயிரம் ரூபாய் தவிர மேலும் 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டது. 23 பாதிக்கப்பட்ட கல் வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதமும், பாதிக்கப்பட்ட 47 குடிசை வீட்டின் உரிமையாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாய் வீதமும் காயம் அடைந்த 22 பேர்களுக்குத் தலா 500 ரூபாய் வீதமும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இப்போது அங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக எவ்விதப் பதட்டமான நிலையும் இல்லை என்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை வட்டத்திலும் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல் படாமல் இருப்பதாலும் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விடாமல் இருப்பதாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து :

திரு. வே. தங்கபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலும் அதை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இங்கே நிகழ்ச்சி நிரலில் தரப்பட்டதை மட்டும் தான் படிக்கவேண்டும். நீங்கள் எழுதிக்கொடுத்ததையெல்லாம் படிக்கக்கூடாது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம் அருப்புக் கோட்டை பகுதிகளில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல்படாமல் இருப்பது குறித்தும் புதிய வழித்தடங்

உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்னியில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு அந்தத் தொகையிலிருந்து இறந்தவர் குடும்பத்திற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 16 பேர் இறந்ததில் 3 பேர் அடையாளம் தெரியாதவர்கள். 3 பேர் அரசு அலுவலர், மீதமுள்ள 10 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் தரப்பட்டது. அரசு அலுவலர் 3 பேர், அரசு முறைப்படி தரும் 40 ஆயிரம் ரூபாய் தவிர மேலும் 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டது. 23 பாதிக்கப்பட்ட கல் வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதமும், பாதிக்கப்பட்ட 47 குடிசை வீட்டின் உரிமையாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாய் வீதமும் காயம் அடைந்த 22 பேர்களுக்குத் தலா 500 ரூபாய் வீதமும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இப்போது அங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக எவ்விதப் பதட்டமான நிலையும் இல்லை என்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை வட்டத்திலும் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல் படாமல் இருப்பதாலும் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விடாமல் இருப்பதாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து :

திரு. வே. தங்கபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலும் அதை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இங்கே நிகழ்ச்சி நிரலில் தரப்பட்டதை மட்டும் தான் படிக்கவேண்டும். நீங்கள் எழுதிக்கொடுத்ததையெல்லாம் படிக்கக்கூடாது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை பகுதிகளில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல்படாமல் இருப்பது குறித்தும் புதிய வழித்தடங்

களில் பேருந்துகளை விடாமல் இருப்பது குறித்தும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மூ. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்று மட்டும் தான் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மூ. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகிய இரண்டு தாலூக்காக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. ஏனைய விருதுநகர், திருவில்லிபுத்தூர் சாத்தூர், ராஜபாளையம் தாலுக்காகளின் தேவைகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பூர்த்தி செய்து வருகிறது.

2. அருப்புக் கோட்டையில் மருதுபாண்டியன் போக்கு வரத்துக் கழக கிளை 1–4–1983 முதல் 7 நகர் பேருந்துகள் மற்றும் 3 புறநகர் பேருந்துகள் ஆக 10 பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் 18 புறநகர் பேருந்துகள் மற்றும் 24 நகர் பேருந்துகள் ஆக 42 பேருந்துகளுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. நகர் பேருந்துகளை பல்முனைத் திட்டத்தின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. 1–4–1983-க்குப் பிறகு 88 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வழித்தடங்களை நீட்டித்து இயக்க வாய்ப்புள்ள வழித்தடங்களை நீட்டித்து இயக்கியும் வருகிறது.

11-00 மணி

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் காரைக்குடியில் இருக்கிற காரணத்தால் 100 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள அருப்புக்கோட்டை பகுதியின் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவுக்கு அவர் களுடைய பணிகள் நடைபெறவில்லை. கடந்த 6 மாதகாலத்தில் 27 பஸ் போராட்டங்கள் நடைப்பெற்றிருக்கின்றன. இந்த மிகப்

பெரிய பகுதியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இயங்காத காரணத்தால் மாவட்டத்தில் இருக்கிற 5 நகராட்சிகளில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்குவதைப்போல அருப்புக்கோட்டையையும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நிர்வாகத்தைக் கொண்டு வந்தால் இந்தச் சிரமங்கள் போக்கப்படும். அரசு அதுப்பற்றி பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிர்வாக வசதிக்கேற்றப்படி பிரித்து இருப்பதினுடைய அடிப்படையில் எந்த அளவிற்கு போக்குவரத்து வசதிகளை மேலும் விரிவாக்கலாம் என்று கருத்து அறிவதற்காகத்தான் சென்ற மாதம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே நடத்தப்பட்டு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு, அதனுடைய அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகங்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது பிரிக்கப்படவேண்டும் என்பதான போன்ற கருத்துக்கள், நிபுணர் குழு அறிக்கை வந்ததற்குப் பின்னர்தான் அரசு இறுதியான முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய இறுதியான முடிவு வரும்வரைக்கு மாவது இடைக்காலத்திலே அந்தப் பகுதியினுடைய மக்களுடைய தேவைகளை அறிந்து புதிய வழித்தடங்களையும் அல்லது வேண்டிய இடங்களுக்கு வழித்தடங்களை நீட்டுகிற வேண்டுகோள்களையும் அரசு பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு பரிசீலித்து நிறைவேற்றும்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

பெரிய பகுதியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இயங்காத காரணத்தால் மாவட்டத்தில் இருக்கிற 5 நகராட்சிகளில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்குவதைப்போல அருப்புக்கோட்டையையும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நிர்வாகத்தைக் கொண்டு வந்தால் இந்தச் சிரமங்கள் போக்கப்படும். அரசு அதுப்பற்றி பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிர்வாக வசதிக்கேற்றப்படி பிரித்து இருப்பதினுடைய அடிப்படையில் எந்த அளவிற்கு போக்குவரத்து வசதிகளை மேலும் விரிவாக்கலாம் என்று கருத்து அறிவதற்காகத்தான் சென்ற மாதம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே நடத்தப்பட்டு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு, அதனுடைய அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகங்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது பிரிக்கப்படவேண்டும் என்பதான போன்ற கருத்துக்கள், நிபுணர் குழு அறிக்கை வந்ததற்குப் பின்னர்தான் அரசு இறுதியான முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய இறுதியான முடிவு வரும்வரைக்கு மாவது இடைக்காலத்திலே அந்தப் பகுதியினுடைய மக்களுடைய தேவைகளை அறிந்து புதிய வழித்தடங்களையும் அல்லது வேண்டிய இடங்களுக்கு வழித்தடங்களை நீட்டுகிற வேண்டுகோள்களையும் அரசு பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு பரிசீலித்து நிறைவேற்றும்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அரசினர் தனித் தீர்மானம்.

மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப் படுத்த ஆணை பிறப்பித்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் வி.பி. சிங். அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க, கீழ்க்கண்ட பாராட்டு, நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை மொழிவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அரசினர் தனித் தீர்மானம்.

மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப் படுத்த ஆணை பிறப்பித்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் வி.பி. சிங். அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க, கீழ்க்கண்ட பாராட்டு, நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை மொழிவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அரசினர் தனித் தீர்மானம்.

மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப் படுத்த ஆணை பிறப்பித்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் வி.பி. சிங். அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க, கீழ்க்கண்ட பாராட்டு, நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை மொழிவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல்

சட்டத்தின் 340வது பிரிவின்படி அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்ட் 7ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன் அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது.

12—5—1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவையெடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது."

11-05 மணி.

இது குறித்து உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கிய பிறகு இறுதியாக என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

வணக்கத்திற்குரிய தமிழினத் தலைவர் முதல்வர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தில் ஏற்கெனவே ஜனதா கவர்ன்மென்ட்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தை மட்டும் படிக்கவும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி யாரால் அமைக்கப்பட்ட என்று சொல்லப் படவில்லை. முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் காலத்திலேயே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து உங்கள் கையிலே இருக்கின்ற வாக்கியத்தைப் படிக்கவேண்டும். உங்கள் சார்பிலே நான் படிக்கவா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நானே படிக்கிறேன். தெரியாவிட்டால் அல்லவா நீங்கள் படிக்கவேண்டும். இங்கிலீஸில் கொடுத்தாலும் படிப்பேன். வேறு எதில் கொடுத்தாலும் படிக்கத்

தயாராய் இருக்கிறேன். நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''முதல் பத்தியில், அரசியல் சட்டத்தின் 340-வது பிரிவின்படி' என்ற சொற்றொடருக்குப் பிறகு, 'மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியிலே' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அதர்களுடைய திருத்தத்தை ஏற்று அதை அரசின் சார்பாகவே கொண்டு வருகிறேன்.

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்டு 7ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன், அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

12—5—1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாகப் கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.''

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானம் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது, விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. குமரி அனந்தன்,

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி, அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன், இந்தத் தீர்மானத்தில் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று சொல்லியிருக்கிற அந்தச் செய்திகளின் அடிப்படையிலே நம்முடைய சட்டமன்றமும் இதிலே வரலாற்றைப் படைத்திருக்கிறது என்ற காரணத்தாலே அதை நினைவுபடுத்தி இங்கே ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். 12—5—1989 அன்று இந்தப் பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது என்று. அந்தத் தீர்மானத்திலும் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தபோது நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது இந்தத் தீர்மானம் என்பது தான் அன்று நான் பேசியது. ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளோடு சொல்லப்பட்டு மத்திய அரசினுடைய உதவியோடு ஏழை எளிய மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு நன்மை செய்வதிலே இந்திய தேசிய காங்கிரஸும் துணை நிற்கும் என்று சொல்லி அமைகிறேன் என்று சென்ற முறை என்னுடைய சொற்பொழிவை நான் முத்தாய்ப்பாக வைத்திருக்கிறேன். இன்று தொடங்குகிற நேரத்தில் இது இவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்போது வந்திருக்கிறது என்று சொல்கிற ஆதங்கம், அதனாலே வந்திருக்கின்ற ஒரு மகிழ்ச்சி என்று சொல்கிற இருவேறு உணர்வுகள் இங்கே தெரிவிக்கப்படுகிற காரணத்தால் சொல்கிறேன். இதைக் கிடப்பில் போடவேண்டும் என்ற நோக்கத்தோடு யாரும் போட்டுவிடவில்லை. ராஜீவ் காந்தியினுடைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, அதற்கு முன்னால் இருந்த அன்னை இந்திரா காந்தியினுடைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மொரார்ஜி தேசாய் அவர்களுடைய தலைமையில் ஒரு ஆட்சி மன்றக் குழுவைப் போட்டு அந்தப் பரிந்துரை வந்ததற்குப் பிறகும் கூட அந்தப் பரிந்துரையிலே மண்டல் குழுவினுடைய உறுப்பினராக இருந்தவர்கள் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக. ஒருமித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதிலே இருந்த நாயக் என்று சொல்கிற பெருமகனார் தனியாகவே தன்னுடைய கருத்துக்களைச் சொல்லி ‘டிசன்ட் நோட்’ அதாவது மறுப்புக் கருத்து என்று தனியாகவே கொடுத்தார்கள். எனவே அதை உடனே எடுத்துச் செயல்படுத்த முடியாத ஒரு நிலைமை இருந்தது என்பதற்கு ஒரு சான்றாக நான் சொல்கிறேன்.

இரண்டாவது கூட அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு போடப்பட்டு இந்தப் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டன. ‘எ சப் கமிட்டி ஆஃப் தி அஃபிஷீயல்ஸ்’. அதற்குப் பிறகும் அதைச் செம்மைப் படுத்த முடியாத நிலைமையில் அமைச்சர்களைக் கொண்டு குழு போடப்பட்டது. அந்த அமைச்சர்களைக் கொண்ட குழுவிலே இப்போது கூட்டாட்சித்தலைவராக அமர்ந்திருக்கின்ற மாண்புக்குரிய வெங்கட்ராமன் அவர்கள் அப்போது அமைச்சராக இருந்த காரணத்தாலே அவரும் உறுப்பினராக இருந்தார், எனவே குழுக்களுக்கு மேல் குழுக்களாகப் போட்டு, மக்களுடைய கருத்தை

[திரு. குமரி அனந்தன்] [1990 ஆகஸ்ட் 21

அறியவேண்டுமென்று, to elicit public opinion பெறப்பட வேண்டுமென்பதற்காக, பல மாநிலங்களுக்கு அவை அனுப்பப் பட்டன. சில மாநிலங்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல் லவே இல்லை. நமது மாநிலம் அதிலே முதன்மையாக இருந்தது என்பதைப் பாராட்டலாம். ஆயினும் கூட ஒரு செய்தியை இங்கே சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

மண்டல் குழுவின் பரிந்துரையை உடனடியாக அன்றைக்குச் செயல்படுத்த முடியாமல் இருந்ததற்குக் காரணம், பின்தங்கிய மக்கள் என்று சொல்கிற பட்டியலில் சில மாநிலங்களே இடம் பெறவில்லை. நாகாலாந்து என்ற மாநிலத்தில் பின்தங்கியவர் களே இல்லை. பட்டியலே இல்லையென்று சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே நாகாலாந்தில் பின்தங்கியவர்கள் இல்லையா? இருக்கிறார்கள், எனவேதான் மக்களுடைய கருத்து, உண்மையிலேயே பின்தங்கியவர்கள் யார் யார், எங்கே இருக்கி றார்கள் என்று பார்க்க வேண்டியிருந்தது. சரி, குழுக்களுக்கு மேல் குழுக்களாகப் போட்டுக் கொண்டிருந்தீர்களே, அதனால் காலதாமதம் செய்து விட்டீர்கள் என்று சொன்னால் நான் மீண்டும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

11-10 மணி

தேசிய முன்னணி அரசு வந்ததற்குப் பிறகும் கூட, உடனேயே அதை அமல்படுத்தவேண்டுமென்ற முடிவுக்கு அவர்கள் வந்து விடவில்லை. திரு. தேவிலால் தலைமையில் குழுவொன்று அத னைப் பரிசீலிப்பதற்காகப் போடப்பட்டது. தேவிலால் அந்தப் பரிசீலனையில் ஈடுபட்டு அவருடைய அறிக்கையைக் கொடுத்து விட்டாரா? இன்று வரை தரவில்லை. அப்படித் தராத நிலையி யிலே, வி. பி. சிங் அவர்கள் 'இதனை நாங்கள் அமல்படுத்தப் போகிறோம்' என்று அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு அதற்கு வந்திருக்கிற எதிர்ப்புகள் சிலருடைய தூண்டுதல்களால் கூட வந்திருக்கலாம். போராட்டங் கள் வந்திருக்கலாம், அந்தப் போராட்டத்தையெல்லாம் நாங்கள் வரவேற்கவில்லை. நடுத்தெருவிலே வந்து நின்று, இந்தப் பின் தங்கிய மக்களுக்குச் சலுகைகளைக் கொடுப்பதைத் தடுக்க வேண்டுமென்று யாராவது விரும்புகிறார்கள் என்று சொன்னால் அதைக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாரும் ஆதரிக்கவில்லை. அதைக் கண்டிக்கக் கூட செய்கிறோம். ஆனால் மக்களுடைய உணர்வுகள் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டுமென்பதற்காக, ஒரு சிறு சான்றை நான் சொல் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தேவிலால் கமிட்டி ரிப்போர்ட் வருவதற்கு முன்னாலேயே இப்போது எங்கெங்கே போராட்டங்கள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன என்பதிலே என்னுடைய நேரத்தைச் செலவிடுவ

தற்குப் பதிலாக, தேசிய முன்னணியிலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ''அவசரத்தில் இது, கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. பொருளாதாரத்தில் பின் தங்கிய முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இட ஒதுக்கீடு கொடுப்பது பற்றி பேசியிருக்கவேண்டும்'' என்று கூறியிருக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) என்ன சொல்கிறது? ''பொருளாதார அடிப்படையை கணக்கில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்'' என்று சொல்கிறது. பாரதீய ஜனதா கட்சி என்ன சொல்கிறதென்றால், கொஞ்சம் தெளிவாகவே, வேகமாகவே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

''Decision of Mandal is aimed at thwarting Devilals threat"

'' தேவிலாலால் எழுந்து எழுச்சி மிக்கக் கிளர்ச்சியை முடக்குவதற்கு இந்த மண்டல் குழு அறிக்கை அமல்படுத்தப் படுவதாக'' பி. ஜே. பி. கூறுகிறது. ஆக, தேசிய முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிற கட்சிகள் என்பதை விட (குறுக்கீடு).

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், சி. பி. ஐ., சி.பி.ஐ. (எம்), பி. ஜே.பி. ஆகிய 3 கட்சிகளும் தேசிய முன்னணியில், தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கவில்லை. வெளியிலிருந்துதான் ஆதரவு அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: அந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒன்று, அங்கம் வகிக்கிற என்பதற்குப் பதிலாக ஆதரிக்கின்ற கட்சிகள் என்று அந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். 'ஆதரிக்கிற' என்று சொல்கிறபோது அந்த ஆதரவு இல்லையென்று சொன்னால், ஒரு கணம் கூட அந்த ஆட்சி அங்கே தங்காது என்று சொல்கிற அளவுக்கு ஆதரித்துக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு அங்கமாக ஆகிவிட்டதோ என்று சொல்கிற அளவுக்கு ஆதரித்துக் கொண்டிருக்கிற கட்சிகளாக எண்ணக்கூடிய அளவுக்கு இருக்கிறதே தவிர, அங்கம் என்று இல்லை.

திரு. கே. ரமணி: எங்களுடைய உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் தெளிவாக விஷயத்தைச் சொன்னார். ஆனால் திரு. குமரி அனந்தன் நினைக்கிற மாதிரி, நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று அவசியம் இல்லை. ஆதரவு என்பது அவர்களுடைய அரசாங்கம் நிலைத்து நீடிக்கவேண்டும் என்பதற்காக. காரணம் என்னவென்றால், இதுவரைக்கும் இருந்திருக்கிற மாதிரி ஒரு அரசாங்கம், சர்வாதிகார அரசாங்கம் இருக்கக் கூடாது என்று தான் அந்த ஆதரவு.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : எங்கள் துணைத் தலைவர் அவர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள். அதற்காக நீங்கள் முன்பிருந்த அரசாங்கத்தை விமரிசிக்கவேண்டுமென்ற அவசியம் கிடையாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-15 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் ஆட்சேபிக்கிறேன். நீக்குவது அல்ல. காரணம், இது ஓர் அரசியல் விமர்சனம். அப்படி என்றால் எந்த அரசியலையும் நாம் இங்கே பேச முடியாமல் போய்விடும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்வாதிகார அரசுகள் எவை எவை என்பதை எல்லோரும் பார்த்துக்கொண்டிருப்பார்கள், பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், வருகிற நேரத்தில் நானும் சில சொல்ல இருக்கிறேன், சில செய்திகளை. எனவே, அந்த ஆதரவு இல்லை யென்று சொன்னால் வீழ்ந்துவிடும், அது விழக்கூடாது என்பதற்காக ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், தேசிய முன்னணி அரசு, இந்த மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு எடுத்திருக்கிற அந்த நடவடிக்கைகளில் தாங்கள் முழு மனதாக ஆதரவுத் தெரிவிக்கவில்லை. எங்களை அங்கம் என்று சொல்லிவிடாதீர்கள் என்று ஆதங்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் சொன்னதாக நான் ஏற்றுக்கொள்கிறேன். எனவே, பின்னால் இருந்து அவர்கள் ஆதரவு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து கொண்டு ஆதரவு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்கு மத்தியிலே அமைந்திருக்கிற அரசைப் பற்றி, அதிலே இருக்கக்கூடிய கட்சிகளைப் பற்றி ஓர் உண்மையை விளக்கிச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு ஆதங்கம் இருப்பதாக உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஆதங்கம் என்று .சொல்கிற பொழுது ஓர் அக்கறை. அவ்வளவுதான். வேறொன்றும் இல்லை. ஆதங்கம் என்று சொல்கிற நேரத்திலே, ஐயோ இப்படி வந்து விடக் கூடாதே என்று எண்ணுவதன் பெயர், ஓர் ஆதங்கம். ஆக, இவர்கள் எல்லாம் சொல்வதிலிருந்து வேறுபட்டு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கிற முன்னாள்

1990 ஆகஸ்ட் 21] [திரு. குமரி அனந்தன்]

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியோ அல்லது திரு. ராஜீவ் காந்தியால் வழிநடத்தப்படுகிற காங்கிரஸ் கட்சியோ ஏதாவது சொல்லியிருக்கிறதாஎன்றால்இல்லை. 27 விழுக்காடு பின்தங்கிய மக்களுக்குகொடுக்கவேண்டும். குவிந்துகிடக்கிறசமுதாயம்நிமிர்ந்து நிற்கவேண்டும். தாழ்ந்து கிடக்கிறவர்கள் உயர்ந்து நிற்கவேண்டும் என்பதிலே திரு. ராஜீவ் காந்தி அவர்கள் முழுக்க முழுக்க முன்வந்து உதவுவதற்கு தயாராக இருக்கிறார்கள். அதற்கு ஆயிரம் சான்றுகளை நான் சொல்ல முடியும். நமது எஸ்.ஸி., எஸ்.டி., என்று சொல்கின்ற அன்புக்குரிய தோழர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலே, அவர்கள் பதவிகளிலே தங்களால் அமர முடியாத அளவுக்கோ அல்லது அமரக் கூடிய சூழ்நிலை இல்லாமலோ இருந்ததால் 45 ஆயிரம் காலியாக கிடந்த இடங்களை ஆறே மாதங்களில் இட்டு நிரப்ப வேண்டுமென்று உத்தரவு போட்டு நிறைவேற்றிக் காட்டினார் அவர். எனவே, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறையோடு இருப்பவர்தான். அவர் இதிலே கூறுவது என்னவென்றால், 27 சதவிகிதம் இவர்களுக்கு ஒதுக்குங்கள். நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இது கல்வியிலும் ஒதுக்கப்படவேண்டும்.

'சீர்வை' அவர்கள் அருமையாக ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதில் அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், 'எபிசியன்சி' என்ற பெயரை அதிலே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதற்காக, ஒருவருக்கு திறன் இல்லை என்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட இனத்தாரை அடக்கி, ஒடுக்கி, மூலையிலே முடக்கி விடக் கூடாது. அவர்களைத் திறமையுடையவர்களாக உயர்த்தி மேலுக்குக் கொண்டு வர வேண்டும். அப்படி உயர்த்திக் கொண்டு வருவதற்கு கல்வியிலே அதற்குரிய வசதிகளைச் செய்து கொடுத்துவிட வேண்டும். கல்வி கற்கின்ற காலத்திலேயே அவர்களுக்கு அந்த ஊக்கத்தைக் கொடுத்து, அந்த வகையிலே உயர்வுக்குக் கொண்டு வர சொல்கிறோம். அப்படி செய்து நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை. பின்தங்கியவர்கள் இல்லை என்று நெஞ்சு நிமிர்ந்து நிற்கின்ற அளவுக்கு அத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடவேண்டும். அப்படி செய்தால்தான் அவர்களுக்கு திறமை தாமாக வந்துவிடுகிறது. அந்தத் திறமையை அடித்தளத்திலிருந்து கொண்டே கொண்டு வர வேண்டும் என்பதுதான் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தாக அமைகிறது. எனவே, அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இவர்கள் அப்படி சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நீங்கள் ஒரு 'பில்' கொண்டு வருகிறீர்கள். அதில்கூட 3 சதவீதம் 'ஹேன்டிகேப்புக்கு' கொண்டு வருவது போல— அதை நான் பாராட்டுகிறேன் — வரவேற்கிறேன் — இந்த பின்தங்கியவர்களுக்கும், எல்லா இடங்களிலும் கல்விக் கூடங்களிலிருந்தும், பயிற்சிக் கூடங்களிலிருந்தும் அந்த வாய்ப்பை

[திரு. குமரி அனந்தன்] [1990 ஆகஸ்ட் 21

கொடுத்துவிடுகிறபோது, அவர்கள் அந்த இடத்தை இட்டு நிரப்புகின்ற நேரத்திலே ஆற்றலாளர்களாக இவர்கள் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். மற்றவர்களுக்கு சமமாக கூட அல்ல, அவர்களை விட உயர்ந்துவிடுகின்ற தகுதியையும் பெற்றுவிடுகிறார்கள் என்பதுதான் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய குறிக்கோள்.

இரண்டாவது ஒன்றைச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி என்று சொல்லி, அவர்கள் ஆட்சியைப் பற்றி இங்கே சுட்டிக் காட்டப்பட்டது. தமிழ்நாட்டிலே எழுந்த அந்தக் கிளர்ச்சி, எழுச்சி, டில்லி மாநகரத்திலே முட்டி மோதி அவர்களுடைய காதிலே எதிரொலித்து, பாராளுமன்றத்திலே முதன் முதலாக அன்றைக்கு கம்யூனல் ஜி.ஓ. ஆக அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது என்றால் எங்கள் பண்டிட் நேரு அவர்கள் ஆட்சியில்தான் அது திருத்தப்பட்டது. திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய தாத்தா ஆட்சியில் திருத்தப் பட்டது. ஆதலாலே அங்கிருந்து வருகிறதையும் நீங்கள் எடுத்துக்கொண்டு பார்த்தால் முதல் முதலாக அரசியல் அமைப்புச் சட்டத்தினையே திருத்தியது நாங்கள்தான். ஆகவே, அந்தப் பின்தங்கிய மக்களுக்காக இட ஒதுக்கீட்டிற்காக என்று அவர்கள் கருத்துக்களைச் சொல்கின்றபோது தவறு எதுவும் வருவதற்கு இல்லை. பிறகு என்ன? ஆக, 27 சதவிகிதம் என்பதை அப்படியே ஒத்துக்கொள்கிறோம்.

11-20 மணி

இன்னும் சிலருக்கு, முன்னேறியவர்கள் என்று கருதப் படுகிறவர்களுக்கு, அவர்கள் அதிலே பின்தங்கியிருக்கிற நேரத் தில், பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கிற நேரத்தில், அவர் களுக்குரிய வாய்ப்புகளை அவர்களே பெற முடியாத நிலையில், அவர்களுக்கும் சில இட ஒதுக்கீடுகளைக் கொடுங்கள் என்று சொல்வதைத தவிர வேறு எதையும் திரு. ராஜீவ் காந்தி சொல்லவில்லை. 27 விழுக்காட்டைத் தொட்டு, 27 விழுக் காடு கூட போதாது என்று சொல்லுகின்ற அளவுக்கு கூட்டிக் கொடுங்கள். ஏனென்றால், பின்தங்கியவர்கள் ஜனத்தொகை 52 சதவிகிதம் என்று சொல்லுகிறார்கள். இந்த 27 விழுக்காட்டிலே யார் யார் பட்டியலில் இருப்பது என்பது பற்றி கருத்து வேறுபாடு, கருத்து மோதல்கள் வேறு வருகின் றன. அந்தக் கருத்து மோதல்கள் இருக்கிற காரணத்தாலே தான் தேவிலால் அவர்களுடைய தலைமையிலேகூட போடப் பட்டது. இத்தனையும் இருக்கின்ற நேரத்திலே அவர் என்ன சொல்லுகிறார். முன்னேறிய சமுதாயம் என்று அழைக்கப் படுகிறவர்களிலேயும் மிகவும் பொருளாதாரத்திலே பின் தங்கி இருக்கிறவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு நீங்கள் சில விழுக்காடுகளை ஒதுக்க வேண்டும் என்று சொல்லுகிறார் அந்த விழுக்காட்டை இந்த 27-லே எடுக்கக்கூடாது என்பது. தான் திரு. ராஜீவ் காந்தியினுடைய, காங்கிரஸ் கட்சியினுடைய வாதமாக இருக்கிறது.

இங்கே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்ன ஒரு கருத்தை எடுத்து வைக்க வேண்டுமென்று கருதுகிறேன். அந்தக் கருத்திலே அவர்கள் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கத்தக்க ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். அது என்ன? ஒரு குடும்பத்திலே இதுவரை அக்காளோ, தங்கையோ, வேறு யாரோ, உறவினர்களோ பட்டதாரிகளாக இல்லை என்று சொன்னால், அந்த பட்டதாரி இல்லாமல் இருக்கிற அந்தக் குடும்பத்திலே ஒருவர் பட்டதாரியாக வரவேண்டுமென்று சொன்னால், அது தொழிற் கல்வியாக இருக்கட்டும், மருத்துவக் கல்வியாக இருக்கட்டும், அந்தக் குடும்பத்தில் ஒருவர் அந்த உயர்வைப் பெறுவதற்கு 5 எண்களை நான் கொடுக்கிறேன் என்று சொல்லி, ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு, அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாதவர்களுக்கு நான் அந்த வாய்ப்பை அளிக்கிறேன் என்று அவர்கள் சொன்னதை நாங்களும் வரவேற்கிறோம். நல்ல வழி என்று சொன்ன காரணத்தாலே அதை வரவேற்கிறோம். அந்த வாதத்தை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள்? பட்டதாரிகள் இல்லாத குடும்பமாக இருந்தால் அந்தக் குடும்பம் அக்கிரகாரத்துக் குடும்பமாக இருந்தாலும் ஆதி திராவிடர் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும் அது வன்னியர் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும், தேவர்-யாதவர் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும், பிற்பட்ட வகுப்புக் குடும்பமாக இருந்தாலும், அங்கே நான் 'யார்' என்று பார்க்கப் போவதில்லை, ஆதி திராவிடரா, அக்கிரகாரமா என்று பார்க்கப் போவதில்லை. 'யாதவர்' குலம் என்று பார்க்காமல், 'யாது அவர்' குலம் என்று பார்க்காமல், அவர்களுடைய குடும்பத்திலே பட்டதாரிகள் இல்லாமல் இருந்தால், அவர்கள் பட்டதாரிகளாக வருவதற்கு வாய்ப்பு கொடுக்கிறேன் என்று சொல்லுகிற அதே வாதத்தை எடுத்து வைத்து, பொருளாதாரத்திலே பின் தங்கியிருப்பவர்களுக்கு, இப்போது ஒதுக்கியுள்ள 27 விழுக்காட்டுக்கு மேலே, சில விழுக்காடுகளை ஒதுக்க வேண்டும். 27 விழுக்காட்டுக்கு வெளியிலே நின்று கொண்டிருக்கிற மற்ற மக்களிலேகூட பொருளாதாரத்திலே தாழ்ந்து கிடப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆதி திராவிடர்களா, அக்கிரகாரத்தவர்களா என்று பார்க்காமல், அவர்கள் எவராக இருந்தாலும், பொருளாதாரத்திலே பின் தங்கியவர்களாக இருந்தால், அவர்களுக்கு என்று சில விழுக்காடுகளைக் கொடுங்கள் என்று கேட்பதுதான் ராஜீவ் காந்தியின் நோக்கம், காங்கிரஸ் கட்சியினுடைய நோக்கம். வேறல்ல. எனவே, இப்படி ராஜீவ் காந்தி சொல்லுகின்றபோது, அவரை எதிர்த்து, அவர் உயர் ஜாதிக்காரர்களுக்காக வாதாடுகிறார் என்ற சொற்றொடர்கள் எல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக காங்கிரஸ் கட்சியின் தொண்டன் என்பதால் இதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த வாதத்தின் அடிப்படையிலே பார்க்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் இவர்களை எல்லாம் மேலே தூக்கிவிட வேண்டுமென்ற ஆதங்கம் இருக்கிற காரணத்தாலே சொல்கிறேன். மண்டல் குழுவினுடைய பரிந்துரையை வரவேற்கிறோம். 27 சதவிகிதம் என்பதை அதிகரிப்பதானாலும் அதை வரவேற்கிறோம். அதற்கு வெளியே நின்றுகொண்டிருக்கிற முற்பட்ட சமுதாயத்திலே மிகவும் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களாக, நிமிர்ந்து நிற்க முடியாதவர்களாக, உலகத்தில் எத்தனை வாய்ப்பு வசதிகள் வந்துவிட்ட போதிலும் அதனைப் பெற்றுக்கொள்ள வசதி இல்லாதவர்களாக இருக்கிறவர்களுக்கும் ஒரு சதவிகிதத்தை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற திட்டத்தைத்தான் அவர்கள் சொல்லுகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் ஒன்றை அத்தனை பேரும் சொல்லிவிட்டார்கள். வி.பி. சிங் அவர்களே, இவ்வளவு அவசரப்பட்டு நீங்கள் செய்திருக்கிறீர்களே, எங்களை எல்லாம் கலந்துகொள்ள வேண்டாமா என்றெல்லாம் சி.பி.ஐ. சொல்லுகிறது, சி.பி.எம். சொல்லுகிறது, பி.ஜே.பி. சொல்லுகிறது. எங்களைக் கலந்துகொள்ளாமல் நீங்கள் செய்துவிட்டீர்களே என்று சொல்லுவதுதானே சர்வாதிகாரம்? நீங்களே அதிகாரத்தை எடுத்துக்கொண்டு சொல்லிவிட்டீர்களே என்பதுதான் அது. எங்களை எல்லாம் கலந்திருக்க வேண்டுமென்று சொல்வதுதானே சர்வாதிகாரம். அது நியாயம்தானே; அதுதானே ஜனநாயக முறை. எனவே வெளிப்படையாக நடைபெறுகிற ஒரு அரசாங்கம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும்கூட, அதைப் பண்படுத்தி, செம்மைப்படுத்தி, நடைமுறைப்படுத்துவதற்கு மற்றவர்கள் உதவியையும் பெற்றிருக்க வேண்டும். மற்றவர்களும் இத்தகைய நல்வாழ்வு கிடைப்பதற்கு உரிய வழிவகைகளைக் காண வேண்டுமென்று சொல்கிற அளவுக்கு இதனை எங்கள் கருத்தாக வைத்து, தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் இலக்கியச் செல்வர் அவர்கள் ஒன்றைச் சொல்லுகிறார்கள். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்துகின்றபோது, யாரையும் கலக்கவில்லை என்று பி.ஜே.பி. சொல்லுகிறதென்று சொன்னார்கள். அந்த பி.ஜே.பி. அதனை மறுக்கிறதா என்பதற்கு அவர்கள் விளக்கம் சொல்லவில்லை. நல்ல காரியங்கள் செய்யும்போது யாரையும் கலந்து ஆலோசிக்கத் தேவையில்லை. அதற்கு ஏதாவது சட்டம் இருக்கிறதா? எங்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை, நாங்கள் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று பி.ஜே.பி. மாறுபட்ட கருத்து ஏதாவது சொல்லி இருக்கிறதா என்பதற்கு அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும்.

1990 ஆகஸ்ட் 21]

திரு. குமரி அனந்தன் : மாறுபட்ட கருத்து சொல்ல வில்லை. சர்வாதிகாரம் என்று சொல்லும்போது ஒன்றைச் சொல்ல வேண்டும். திரு. ஜியார்ஜ் பெர்னான்டஸ் அவர்கள் டி.வி.யிலே ஒரு பேட்டி கொடுக்கிறார்கள். 20 பேர்கள் இருந்து வினா தொடுக்கிறார்கள். மண்டல் கமிஷன் பரிந்துரை பற்றி மாறுபட்ட கருத்து சொன்னவுடனே அது வெட்டி எறியப் படுகிறது. அது டி.வி.-யில் வரவேயில்லை. இதுதான் சர்வாதி காரம் என்று நாங்கள் சொல்வது. கலந்து ஆலோசிக்கின்ற உங்கள் அமைச்சர், 20 பேரைக் கலந்து ஆலோசித்ததுகூட வெளியே வரவில்லை. அதைத்தான் நாங்கள் சொன்னோம். (குறுக்கீடுகள்).

11-25 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'Point of order' கிடையாது. திரு. தீட்சிதர் சொன்னதற்கு திரு. குமரி அனந்தன் அவர்கள் சரியான பதிலைச் சொல்லி விட்டார்கள்.

திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே மற்றவர்கள் சொன்னதையெல்லாம் சொல்லவில்லை என்று சொல்லுகிறார் கள். டி.வி.யிலே ஒரு காலத்திலே ஒரு ஆளையே காண்பித்துக் கொண்டிருந்தார்களே ! அது என்ன சர்வாதிகாரம் ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : துணைத் தலைவர் அவர்களே, டி.வி. யையே சர்வாதிகாரமாக நடத்திய சர்க்காரை உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். பிறகு சட்டத்தைக் கொண்டு வந்து டி. வி. சர்வாதிகாரம், ரேடியோ சர்வாதி காரம் கூடாது. நாட்டிலே சர்வாதிகார ஆட்சியே கூடாது. ஏகாதிபத்தியம்தான் இருக்க வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டுள்ள அரசு கலந்தாலோசிக்கத் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் சிபார்சை ஏற்று மத்தியஅரசின்பணிகளிலும், மற்றும்மத்தியஅரசுக்குச்சொந்தமான பொதுத் துறை நிறுவனங்களிலும், கல்வியிலும், சமுதாயத் திலும் பிற்பட்ட நிலையில் இருக்கக்கூடிய பிற்பட்டோர் என்ற வரையறைக்கு உட்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்கின்ற விதத்தில் ஒரு சிறப்பு வாய்ந்த பிரகடனத்தை ஏழாம் தேதி அறிவித்த நம்முடைய தேசிய முன்னணி அரசுக்கும், நம்முடைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கும் இந்த அரசு பாராட்டு தெரிவிக்கின்ற விதத்திலே, நன்றி தெரிவிக்கின்ற விதத்தில் அரசின் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த அரசின் தீர்மானத்தை இலட்சோப இலட்சம் மக்கள், பிற்பட்ட மக்களின் சார்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக, திராவிட முன்னேற்றக்

கழக உணர்வுகள் சார்பாக மனப்பூர்வமாக வாழ்த்தி வரவேற்கிறோம். ஆனால் இந்த அரசு தேசீய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கூடிய அதே நேரத்தில், அந்தப் பிரகடனத்தை நாடாளுமன்றத்திலே அறிவித்தபோது நம்முடைய பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசியிருக்கிறார்கள். அந்த வாசகத்தை உங்கள் அனுமதியோடு வாசிக்க விரும்புகிறேன். திரு. வி.பி. சிங், நம்முடைய பிரதமர் பேசியிருக்கிறார்—

"I had written to all the Chief Ministers. I had got the most enthusiastic support from Karunanidhiji and I want to thank him-Karunanidhiji for his support in this matter."

"நான் பல முதலமைச்சர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாக கடிதம் எழுதினேன். ஆனால் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கக் கூடிய திரு. கருணாநிதி அவர்கள்தான் மிகுந்த உற்சாகம் காட்டி ஆதரவு கொடுத்தார்கள். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.'' அவர் தெரிவித்திருக்கிறார்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, '' பல முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதினேன், தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து உற்சாகமான வரவேற்பு வந்தது '' என்று சொன்னார்கள். அப்படி எழுதப்பட்ட முதலமைச்சர்களுள் ஜனதாதள் முதலமைச்சர்கள் கூட அதை வரவேற்கவில்லையா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : மற்ற முதலமைச்சர்கள் இது குறித்து வரவேற்றார்களா, வரவேற்கவில்லையா என்பதை பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள்தான் முறையாக தகவல் கொடுக்கக் கூடிய நிலையிலே இருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் இந்த அரசு அவருக்கு நன்றி தெரிவித்தால் அவர் நம் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கிறார். அதைப் போலவே இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையினுடைய மூலகர்த்தாவாக திகழ்கின்ற டாக்டர் அம்பேத்கார், தந்தை பெரியார், டாக்டர் ராம் மனோகர் லோகியா ஆகியவர்களை மறக்க முடியாது.

In fact this is the realisation of the dream of Bharath Rathna Dr. Ambedkar, of the Great Periyar Ramasami and Dr. Ram Manohar Lohia. என்று குறிப்பிடுகிறார். காலமெல்லாம் எந்த தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்ட மேல் சாதிக்காரர்கள் ஆதிக்கம் வேலை வாய்ப்பிலும், கல்வித்துறையிலும் மேலோங்கியிருந்ததை தகர்த்தெறிய அரும்பாடுபட்டாரோ, காலமெல்லாம் உழைத்தாரோ அந்த தந்தை பெரியார்

அவர்களின் கனவுகளுக்கு கால் முளைத்து, காவிரியாற்றுக் கரையில் மட்டுமல்லாது கங்கை ஆறு பாயும் கரைகளிலும், நாடாளுமன்றத்திலும், அவருடைய பெயரும், கலைஞருடைய பெயரும் உச்சரிக்கப்படுகிறது. அவர்களுக்கு நன்றி சொல்லப் படுகிறது என்றால், டாக்டர் அம்பேத்கார் மற்றும் டாக்டர் ராம் மனோகர்லோகியா ஆகியவர்களுக்கு நன்றி சொல்லப் படுகிறது. என்றால், உள்ளபடியே சரித்திரத்தில் பொறிக்கப் பட வேண்டிய உண்மையான சிறப்பான நிகழ்ச்சியாகும். இது ஏதோ வார்த்தை அலங்காரத்திற்காக நம்முடைய மரியாதைக் குரிய திரு. வி.பி. சிங் அவர்கள் சொல்லியிருப்பதாக யாரும் கருதக்கூடாது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய முன்னணிக்கு இந்த இட ஒதுக்கீட்டுக்காக நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில், அதற்குப் பின்னாலும் பிற்பட்ட சமுதாயத்திற்காக, தாழ்த் தப்பட்ட சமுதாயத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதன் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் எவ் வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

11-30 மணி

பிற்பட்டவர்களுக்காக இது வரைக்கும் தமிழ்நாட்டிலே தனி இலாக்கா கிடையாது, தனி அமைச்சர் கிடையாது. கலைஞர் அவர்கள் முதல்வராக வந்ததற்குப் பிறகுதான், திராவிட முன் னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் பிற்பட்டவர் களுக்கு என்று ஒரு தனி இலாக்கா, அதற்கென்று ஒரு அமைச்சர். கலைஞர் அவர்கள் முதல்வராக ஆன பிறகு, தி.மு.க. ஆட்சி இருந்த போதுதான் சட்டநாதன் கமிஷன் அமைக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால் மிகமிக பிற்பட்டவர் என்ற ஒரு பிரிவு இன்றைக்கு இந்தியா முழுவதும் எந்த மாநிலத்திலாவது இருக் கிறதா என்று கேட்டால், இல்லை. தி.மு.க. ஆட்சியில், கலைஞர் முதல்வராக இருக்கும் போதுதான் மோஸ்ட் பேக்வார்ட் என்று சொல்லி, 20 சதவீதம் அவர்களுக்காக ஒதுக்கி சீர்மரபினர், வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மிகவும் பிற்பட்டவர்களுக்கு தொழில் கல்வியிலே, வேலை வாய்ப்பிலே தனி ஒதுக்கீடு என்ற நிலைமை ஏற்பட்டு கதவுகள் திறந்து விடப்படுகின்றன.

இன்னுமொன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பிற்பட்டோர் பட்டியலில் கொங்கு வேளாளர் இனத்தை இணைக்க வேண்டுமென்று சொன்னவுடனே, சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பிற்பட்டவர்கள் தான் என்று ஏற்றுக் கொண்டு இன்றைக்கு வேலை வாய்ப்பிலும் கல்வி வாய்ப்பிலும் இடம் பெறுகிற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் அது மட்டுமல்லாமல், இலவச பட்டப்படிப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., போன்ற படிப்புகள் ஆதி திராவிட மக்கள் தாழ்த்தப் பட்ட மக்கள் யார்வேண்டுமானாலும் படிக்கலாம். இதிலே

பொருளாதாரக் கண்ணோட்டம் வேண்டாமா என்று இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் கேட்கிறார். வகுப்புரிமை என்பது வேறு, ஏழையெளியவர்கள் சலுகைகள் பெறுவது என்பது வேறு. அக்கிரகாரத்தில் இருப்பவர்களுக்கும் 5 சதவீதம் கிரேஸ் மார்க், ஆதி திராவிடர்களுக்கும் 5 சதவீதம் கிரேஸ் மார்க், பிற்பட்டவர்களுக்கும் 5 சதவீதம் கிரேஸ் மார்க். இது எதற்காக வழங்கப்படுகிறது என்றால் தலைமையில் எவருமே டாக்டராக, என்ஜினியராக, வக்கீலாக இல்லையென்றால் அவர்கள் நன்மை பெறட்டுமே என்பதற்காகத்தான். இதிலே எவரும் சாதியைப் பார்க்கவில்லை. கன்செஷன் என்பது வேறு, வகுப்புவாரி பிரதி நிதித்துவ பிறப்புரிமை என்பது வேறு.

இன்னும் சொல்லப் போனால் நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைக்கு முதல்வராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் மிக நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. 9,000 ரூபாய் வருட வருமானம் உடையவர்கள் பிற்பட்டவர்கள் என்ற வரையறை எம்.ஜி.ஆர். காலத்திலே இருந்தது. கலைஞர் அவர்களுடைய போராட்டத்திற்குப் பின்பு, தி.மு.க. வினுடைய போராட்டத்திற்குப் பின்பு, மக்களே கொதித்தெழுந்த பிறகு அந்த உத்திரவு தூக்கியெறியப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்த பெர்சென்டேஜ் மீண்டும் உயர்த்தப்பட்டது. இவைகளையெல்லாம் நான் எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் என்று சொன்னால், நாம் எந்தக் கட்சியிலே இருந்தாலும், பிற்பட்ட மக்கள் இந்திய தேசிய கட்சியாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், முஸ்லீம் லீக் கட்சியாக இருந்தாலும், திரு. வி. பி. சிங்கின் தேசிய முன்னணியின் அரசுக்கு இந்த அரசு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றும் விதத்தில், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு பிற்பட்ட சமுதாயத்தின் பிணிகளைப் போக்க வந்த தமிழக முதலமைச்சருக்கு இந்த சட்டசபையிலேயே ஒரு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவது நம்முடைய கடமையாகும் என்பதற்காகத்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குறுகிய நேரத்தில் இந்த ஆதாரங்களைச் சுட்டிக் காட்டினேன். இதை கட்சி அரசியலுக்காக நீங்கள் மறுக்க முடியுமா?

திரு. குமரி அனந்தன் : கட்சி அரசியலுக்காக நாங்கள் மறுக்கவில்லை. கட்சி அரசியல் சார்பிலே நாங்கள் எதிர்க்கவில்லை. வரவேற்கிறேன் என்று சொல்லி விட்டேன். ஆனால் சில மாற்றங்களோடு. மிகவும் பிற்பட்டோர் என்று சொல்லக் கூடிய பட்டியல் என்பது பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே தொடங்கப்பட்டது. எனவே நீண்ட காலமாக நடைபெற்று வருகிற போராட்டத்திலே சலுகை போன்றவைகள் அளிக்க ஆரம்பிக்கப்பட்ட திட்டம் அது. எனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட திட்டம். முதலிலே நாங்கள் தொடக்கினோம். அதனுடைய தொடர்ச்சியாக நாம் வெற்றியை இப்போது பெற்று வருகிறோம்.

1990 ஆகஸ்ட் 21]

திரு. அ. இரகுமான்கான் : இட ஒதுக்கீடு சம்பந்தமாக அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்தம் செய்யப்பட்டது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே என்று பெருமையோடு சொன்னார்கள். ஆனால் ஓர் உண்மையைச் சொல்லிவிட்டு இன்னொரு உண்மையை மறைக்கிறார்கள். வகுப்பு வாரி ஆணை, கம்யூனல் ஜீ.ஓ. செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த பிறகு தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய பேருரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள்.

11-35 மணி

இந்தக் கிளர்ச்சியானது இட ஒதுக்கீடு சம்பந்தமாக அரசியல் சட்டத்தினுடைய 'பண்டமென்டல் ரைட்டுக்கு' விரோதமானது என்று சொல்லி மேல் சாதிக்காரர்கள், ''ஈக்குவாலிட்டி பிஃபோர் லா'' என்ற அந்த அடிப்படையிலே வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். எல்லோரும் சமம் என்று சொல்லிவிட்டு பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது சட்ட விரோதம் இல்லையா என்று கேட்கும் நேரத்திலே நீண்ட காலமாக கோர்ட்டுக்கு வராமல் அரசியல் நிர்ணயச் சட்ட உறுப்பினராக இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், மக்களைப் பாதுகாக்க, மேல் ஜாதிக்காரர் மக்களை பாதுகாக்க மதறாஸ் ஐகோர்ட்டில் வாதாடினார்கள். சட்டப்படி செல்லாது என்று தீர்ப்பு சொன்னார்கள். அதற்கு பிறகு சுப்ரீம் கோர்ட்டிலும் அதை உறுதிசெய்தார்கள். அந்த நிலையில்தான் தந்தை பெரியார் அவர்கள் கிளர்ச்சி செய்து, அந்த மண்டல் கமிஷன் போடுவதற்கு முன்பாக, மத்திய சர்க்கார் அலுவலகங்கள் ஒரு குறிப்பிட்ட மேல் ஜாதிக்காரர்களின் ஆதிக்கபுரியாக இருக்கக் கூடாது, அதனுடைய கதவுகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தந்தை பெரியார் அவர்கள் பேசுகிறார்கள். நிறையவே அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்போது காங்கிரஸ்காரர்களுடைய நிலை என்ன என்பதை அவர்கள் சொல்கிறார்கள். இந்தக் கிளர்ச்சியானது அரசியல் காரணத்திற்காக என்று காங்கிரஸ் தோழர்கள் எழுதி வருகிறார்கள். அவர்கள் எப்படி சொன்னாலும் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இரட்டை வேடம் போட்டார்கள். தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வந்ததற்கு என்ன காரணம்? காஞ்சிபுரத்தில் அவர் கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றாத காரணத்தால்தான் காங்கிரசை விட்டு வெளியேறி வந்தார்

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ; துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.. இரட்டை வேடம் என்று சொன்னார். எப்படி இரட்டை வேடம் ஆகும்?

Chempakam Durairajan vs. State of Madras.

என்ற வழக்கிலே தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பின்படி, பின் தங்கிய சமுதாயத்திற்கென்று தனி இடம் ஒதுக்க முடியாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொன்னதற்குப் பின்னால், அது தவறு, பின்தங்கிய மக்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமை என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. காங்கிரஸ்தான் அதை நிறைவேற்றியது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இது காங்கிரஸ் என்றோ, தி.மு.க. என்றோ கட்சி பிரிந்து கொண்டு அணுக வேண்டிய பிரச்சினையல்ல. பிற் படுத்தப்பட்ட மக்கள் அனைவரின் சார்பிலும்—அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும்—அவர்கள் சார்பிலே அணுக வேண்டிய, பாராட்ட வேண்டிய, நன்றி கூறவேண்டிய ஒரு தீர்மானம் என் பதை உணர்ந்து நம்முடைய தம்பி இரகுமான்கான் அவர்கள் பேசுவது நல்லதென்று நான் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சியிலே அன்றைக்கு கட்சி சார்பாக முழுமையாக அதை ஆதரிக்க முன் வராவிட்டாலும், இதே மாமன்றத்தில் அன்றைக்கு வீற்றிருந்த கோசல்ராம் போன்றவர்கள், ஆர். வி. சாமிநாதன் போன்ற வர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பதற்காக வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வாதாடி இருக்கிறார்கள். அன்றிருந்த காங்கிரஸ் அமைச்சரவையில் இருந்த கோபால் ரெட்டி அவர்கள் அதற்கான உறுதி மொழியெல்லாம் கூடக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதிலே காங்கிரஸ் என்றோ, கழகம் என்றோ பிரிக்காமல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிராக இன்றையதினம் எப்படியெல்லாம் பத்திரிகைகள் எழுது கின்றன, எப்படியெல்லாம் போராட்டங்கள் நடைபெறுகின் றன, எப்படியெல்லாம் போராட்டங்கள் தூண்டிவிடப்படு கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, இந்த ஒரு பிரச்சினை யிலாவது நாமெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு பேச்சுக்களை இந்தத் தீர்மானத்தில் அமைத்துக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் கூட, காமராஜர் அவர்கள் பின்தங்கிய மக்களுக்காக ஆற்றிய சேவை யைக் கருத்தில் கொண்டுதான் அவரை பச்சைத் தமிழர் என்று அன்றைய தினம் குறிப்பிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, எனவே மண்டல் கமிஷனுடைய அறிக்கையிலே நீதிக்கட்சி அந்த நாட்களில் கொண்டு வந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கை இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நீங்கள்

1990 ஆகஸ்ட் 21] [திரு. அ. இரகுமான்கான்]

பார்ப்பீர்களானால் மத்திய சர்க்கார் அலுவலகப் பணிகளில் இந்த இட ஒதுக்கீடு கொள்கை பிற்படுத்தப்பட்டோருக்கு இருக்கிறதா என்றால் மலை ஜாதியினருக்கு இருக்கிறது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் தியாகராய நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லியதைப் போல ஜனாதிபதியின் மாளிகையில் கூட நூற்றுக்கு மேற்பட்ட பதவிகள் இருந்தாலும் ஒருவர் கூட பிற்படுத்தப்பட்டவருடைய பட்டியலில் இல்லை. ஆகவே அந்த அளவிற்கு மத்திய சர்க்காருடைய வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடமில்லாத சூழ்நிலை தான் இதுவரையிலும் இருந்து வந்தது. தொலைக் காட்சியை எடுத்துக் கொண்டாலும் சரி, வானொலியை எடுத்துக் கொண்டாலும் சரி, தபால் இலாக்காவை எடுத்துக் கொண்டாலும் சரி, ரிசர்வ் பாங்கை எடுத்துக் கொண்டாலும் சரி, இரயில்வேயை எடுத்துக் கொண்டாலும் சரி, பிற்படுத்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. வேண்டுமானால் ஒரு எஞ்சின் டிரைவரைப் பார்க்கலாம். டிக்கட் பரிசோதகரிலிருந்து பெரும் பெரும் உத்தியோகங்கள் வரை ஒரு குறிப்பிட்ட மேல் ஜாதிக்காரர்கள் தான் தொடர்ந்து அங்கம் வகித்து வருகிறார்களே தவிர, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறதா என்றால் கிடையாது. ஆனால் ஆகஸ்ட் ஏழாம் தேதிக்கு பிறகு தொலைக்காட்சியிலும், வானொலியிலும், அதைப்போல தபால் ஆபீஸ்களில், அதைப் போல மத்திய சர்க்கார் நிறுவனங்களில் 100 இடங்களுக்கு, வேலை வாய்ப்பு என்றால் 27 பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கியே தீர வேண்டும் சட்ட ரீதியாக என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பது சாதாரண விஷயமல்ல. அது ஒரு மிகப் பெரிய சமுதாயப் புரட்சி. அண்ணாவின் கனவுக்கு, ஐயாவின் கனவுக்கு, தலைவர் கலைஞர் அவர்களின் கனவுகளுக்கு கால் முளைத்து ஒரு சமுதாய மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல, இன்றைக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக பல சர்ச்சைகளைக் கிளப்புகிறார்கள்.

11.40 மணி

இன்னும் சொல்லப்போனால், 1953-ஆம் ஆண்டு திரு. காகா கலேல்கர் அவர்களுடைய தலைமையிலே போடப்பட்ட பிற்படுத்தப்பட்டோர்களுடைய கமிஷனுடைய அறிக்கை மிகத் தெளிவாகச் சொல்கிறது. நம்முடைய சமுதாயம் வர்ணாசிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜாதிகளை அடிப்படையாகக் கொண்டது. பொருளாதார ரீதியான எக்கானமிக் டெஸ்ட் பொருந்தி வராது, ஆகையினாலே, சமுதாய ரீதியாக, கல்வி ரீதியாகத்தான் பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்று டெஸ்டுக்கு, ஒரு டெபனிசனுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று, 1953-வது வருடத்திலேயே சொல்லியாகிவிட்டது. ஆனாலும் என்ன காரணத்தாலோ, மத்திய சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளாமல், பொருளாதாரம் தான் காரணம்

என்று சொல்லிவந்தார்கள். அதனால்தான் நம்முடைய மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் ஜனதா ஆட்சிக் காலத்திலே அது போடப்பட்டும் கூட, 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, அதை நிறைவேற்றாமல் இருந்தார்கள்.

இப்போது நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, அவர்கள் கேட்ட கேள்வி, மேல் ஜாதி ஏழைகளுக்கு ஏன் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை? கீழ் ஜாதியிலும் ஏழைகள் இருக்கிறார்கள். ஆனால் நான் பத்திரிகையிலே படித்ததைச் சொல்கிறேன். மேல் ஜாதி ஏழைகளுக்கு ஏன் இல்லை என்று கேட்கிறார். இன்னும் சொல்லப் போனால், நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஏழைகள் பிரச்சினை என்பது வேறு, ஏழ்மையை ஒழிப்பதற்கு சமூக நலத் திட்டங்களைக் கொண்டு வரலாம். ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கலாம். அன்றைக்கு காமராஜர் அவர்கள் 10-வது வரை இலவசக் கல்வி கொடுத்தார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், பி.யு.சி. வரை இலவசக் கல்வி என்று கொடுக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி சலுகைகளைச் செய்யலாம். ஆனால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற கோரிக்கையாகும். ஜாதியின் பெயரால், சனாதனதர்மத்தின் பெயரால், மதத்தின் பெயரால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு இல்லாமல், தற்குறிகளாக ஆக்கப்பட்டதற்குக் காரணம், பொருளாதாரக் காரணம் அல்ல. இன்னும் சொல்லப் போனால், நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். தயவு செய்து யாரும் தப்பான கண்ணோட்டத்திலே பார்க்கக்கூடாது. வரலாற்றைச் சொல்வதற்காக இங்கே மன்னிக்க வேண்டும். அம்பேத்கார் அவர்கள் கல்லூரி நாட்களிலே படித்துக் கொண்டிருந்தபோது, தன்னுடைய சொந்த கிராமத்திற்கு மாட்டு வண்டியில் போனபோது, அந்த வண்டியை ஓட்டுபவன், நீ, இந்தக் கிராமத்திலே யாருடைய மகன் என்று கேட்டு, தாழத்தப்பட்ட மகனுடைய மகனா என்று கேட்டவுடனே, நள்ளிரவு, 12 மணிக்கு வண்டியை குடை சாய்த்துவிட்டு, நீயா என் வண்டியில் ஏறினாய், தீட்டுப் பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அம்பேத்கார் அவர்கள் அறிவுலக மேதை. ஆனாலும் அவர் தாழந்து போனதற்குக் காரணம் ஜாதி அடிப்படைதான். சமூக அமைப்புதான்.

அதுமட்டுமல்ல, நம்முடைய பாபு ஜகஜீவன்ராம் அவர்களுடைய சிலை தீட்டுப்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டது. அவர்கள் பணக்காரர்தான், வசதியானவர்தான். ஆனாலும் சமுதாயத்திலே அவர்களுடைய நிலைமை அப்படி. திரு. காகா கலேல்கர் அதைத்தான் சொன்னார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் 'எக்கனாமிக்கலி' என்ற வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இதைத்தான் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அதைப்போலவே, ஆலயங்களில் அர்ச்சகர்களாக ஆதி திராவிடர்களும் இருக்கலாம் என்று, தி.மு.க. ஆட்சியிலே, கலைஞர் அவர்கள் இங்கே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் சுப்ரீம்கோர்ட்டிலே அது செல்லுபடியாகாது என்று சொல்லி விட்டார்கள். அந்த சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பை நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதிலே சொல்கிறார்கள், ஜாதி இருக்கிறது, ஆகமம் இருக்கிறது, முறைகள் இருக்கின்றன. என்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகையினாலே, ஒருவன் தாழ்ந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் இருப்பதற்குக் காரணம், சமுதாயத்திலே இன்றைக்கு ஜாதிகள், இந்திய சமுதாயத்தைப் பொறுத்தமட்டிலும் ஒரு காரணமாக இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. நான் ஒரு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், இவைகளைத் தப்பான கண்ணோட்டத்திலே பார்க்கக்கூடாது. காரணம் சமூக அமைப்பின் அடிப்படை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பொருளாதாரத்தைக் காரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கான வாதத்தை சொல்வதற்காகத்தான் நான் இவைகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, திரு. இரகுமான் கான் அவர்கள் இங்கே சொல்கிறபோது, அந்த தீர்ப்பை நான் படித்திருப்பேன் என்று சொன்னார்கள். தீர்ப்பு எவ்வாறு இருந்தாலும், ஆலயங்களிலே அர்ச்சகர்களாக ஆதி திராவிடர்கள் வரவேண்டும் என்றும், அன்னைத் தமிழிலேகூட அது நடைபெறவேண்டும் என்றும் இடைவிடாது சொல்லி வருகின்றவர்கள் நாங்கள்.

அதுமட்டுமல்ல, தாங்கள் சார்ந்திருக்கிற சமுதாயத்தை நான் சாராது இருந்தாலும் கூட, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மைனாரிட்டி என்று சொல்கிறபோது, இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும், கூட இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தப்பான ஒரு கருத்திலே இந்த ஜாதி ஒதுக்கீடு என்று கருதுகிறார்கள். புத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு, சீக்கியர்களுக்கு, முஸ்லீம்களுக்கு, கிருத்துவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் இட ஒதுக்கீடு உண்டு. இந்துக்கள் என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். அதிலே பல ஜாதிப் பிரிவுகள் இருக்கிற காரணத்தால், அதிலே பேக்வார்டு, மோஸ்ட் பேக்வார்டு, மற்றும் அதர் பேக்வார்ட் கிளாசஸ் என்று சொல்கிறபோது, இந்து ரிலிஜீயன் என்று சொல்கிறபோது, கேஸ்டை கிரைடிரியனாக வைக்கிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். எனவே ராஜீவ் காந்தி அவர்கள் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த மக்களைப் பற்றிக் கவலைப்படுவதாகச் சொன்னார்கள். இன்

றைக்கு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நபிகள் நாயகம் அவர்களுடைய பிறந்த நாளை அரசாங்க விடுமுறையாக, சம்பளத்துடன் கூடிய அரசாங்க விடுமுறையாக அறிவித்தார்கள். இன்றைக்கு தேசிய முன்னணி சர்க்கார் ஆகஸ்டு 15-லே தெரிவித்திருக்கிறார்கள் சிறுபான்மை மக்களுக்காக என்பதை மறந்துவிடக்கூடாது. சிறுபான்மை மக்களுக்காக ஒரு கமிஷன் போட்டு, இன்றைக்கு அதிலே பல பேர்களை உறுப்பினர்களாக இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு போட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அதிலே சிறுபான்மைப் பட்டியலிலே முஸ்லீம்களிலே லப்பைப் பிரிவைச் சேர்ந்தவர்களை, இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைத்திருக்கிறார்கள். இவைகளை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், பொருளாதாரம், பொருளாதாரம் என்று சொல்வது பிரச்சினையை ஏமாற்றுவதாகும்.

11-45 மணி

திரு. குமரி அனந்தன் : இப்போது வந்திருக்கிற அரசாங்கம், மைனாரிட்டி கமிஷன் என்று சொல்வதே இந்த அரசாங்கத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற பி. ஜே. பி. அதை ''ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷன்'' என்றுதான் சொல்ல வேண்டுமென்பதை நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொண்டுள்ளாரா ?

திரு. அ. இரகுமான்கான் : ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மை சமுதாயத்தினுடைய உரிமைகளாக இருந்தாலும், பெரும்பான்மை மக்களுடைய உரிமைகளாக இருந்தாலும், மொத்தத்தில் இரண்டும் மனித உரிமைகள்தான். மெஜாரிட்டி, மைனாரிட்டியை, ''எக்ஸ்பிளாய்ட்'' பண்ணக் கூடாது என்பதுதான் சிறுபான்மை நலம். அதுதான் ''டெமாகிரசி'' அதுதான் முறை என்று தலைவரும் கருதுகிறார். அண்ணா அவர்களும் கருதினார். ஆகவேதான் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி பாரதீய ஜனதா கட்சியைச் சுட்டிக்காட்டுகிறார்கள். நம்முடைய வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென்று சிறுபான்மை மக்கள் பாரதீய ஜனதா கட்சியை நாம் எப்போதும் சிந்தித்துப் பார்ப்பதும் இல்லை. அவர்களை எதிர் நோக்கவும் இல்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், காங்கிரஸ் கட்சியை விட பாரதீய ஜனதா கட்சியைத் தான் அதிகமாக எதிர் நோக்குகிறார்கள் என்பது அவருடைய பேச்சிலிருந்து தெரிகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் எழுந்திட வேண்டாம் என்று நினைத்தேன். நான்

1990 ஆகஸ்ட் 21] [திரு. குமரி அனந்தன்]

காங்கிரஸ்காரன். அதிலே கால் ஊன்றி அழுத்தமாக நிற்கின்றவன். என் கண்ணிலே படுகிறவைகளை எல்லாம் பார்த்து, விமர்சிப்பதற்குரிய உரிமையும், அதிலே இருப்பவைகளையும் தெரிந்து கொள்வதற்கு உரிய உரிமையும் உண்டு என்கிற வகையில்தான் நான் பார்க்கிறேன். நான் ஊன்றி இருக்கின்ற இடமும் அதுதான். தொடர்ந்து நிற்கின்ற இடமும் அதுதான்.

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு தகவலையும் சொல்ல விரும்புகிறேன். காரணம் இந்த இட ஒதுக்கீடு தவறானது என்று சொல்கின்றவர்கள் இரண்டே கருத்துக்களை வலியுறுத்துகிறார்கள். ஒன்று பொருளாதார அடிப்படையில் ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு வேண்டாமா ? (2) தகுதி, திறமை பார்க்க வேண்டாமா ? எனவே இந்த இட ஒதுக்கீடு வேண்டாம் என்பதே—சுற்றிச் சுற்றிப் பார்த்தால்—அவர்களுடைய விவாதத்தினுடைய சுருக்கமாக இருக்கிறது. எனவே தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இரண்டையும் எடுத்துக்கொள்வீர்களேயானால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ''ரிசர்வேஷன்'' வைத்திருக்கிறோம். ஏற்கெனவே 2 முறை. இப்போது மூன்றாவது தடவை ''எக்ஸ்டென்ஷன்'' கொடுத்து விட்டோம். 15 ஆண்டு, 15 ஆண்டு, 15 ஆண்டு என்று. 15 ஆண்டுதான் அவர்களுக்கு ''ரிசர்வேஷன் பிரியட்'' மூன்றாவது முறையாக இப்போது ''எக்ஸ்டென்ஷன்'' கொடுக்கிறோம், ஏன் ?

இப்போது ஆதி திராவிடர்களிலே சில பணக்காரர்கள் இருக்கலாம். ஆதி திராவிடர்களிலே சில பேர் முன்னேறியிருக்கலாம். ஆதி திராவிடர்களிலே சில பேர் எம். எல். ஏ.க்களாக இருக்கலாம். சில பேர் மந்திரிகளாக இருக்கலாம். ஆனாலும் அம்பேத்கார் என்ன சொன்னார் ? அரசியல் நிர்ணய மன்றத்திலே பேசுகிறபோது தெளிவாகச் சொன்னார். ஆதி திராவிட மக்களிலே சில பேர் வசதி படைத்தவர்கள் என்பதற்காக பொருளாதாரத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. நீண்ட நெடுங் காலமாக நாங்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி விட்டு, அவர் சொல்லிய கொட்டேஷனைத் தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ''சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே, எங்கள் வீட்டுப் பிள்ளை படிக்க முடியவில்லை'' என்று சொல்கிறார்கள். அடுத்து சொல்கிறார், ''மதம் பிடித்த யானையையும், குடித்த குதிரையும், படித்த சூத்திரனையும் பக்கத்தில் வைத்துக்கொள்ளாதே'' என்று. இப்படிப்பட்ட சமூக அமைப்பில் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் எப்படி படிக்க முடியும் ? எப்படி டாக்டர் ஆக முடியும்? இஞ்சினியர் ஆக முடியும்? வக்கீல் ஆக முடியும்? ஆகவே தான் நாங்கள் காலம் காலமாக, யுகம் யுகமாக அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறோம்.

எங்களுக்கு கல்வி வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டு, ஒரு கடிதத்தை இங்கே காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதனுடைய கருத்தை 1610-லே ராபர்ட் நொபிலி என்பவர் ஒரு கடிதக் குறிப்பிலே எழுதியிருக்கிறார்கள். அதில் சொல்லியிருக்கிறார். மதுரையை திருமலைநாயக்க மன்னன் ஆள்கிறபோது குருகுலத்திலே 1,000 பேர் படிக்கிறார்களாம். ஒரு வகுப்பிலே 200 பேர் இருக்கிறார்களாம். அந்த ஆயிரம் பேரும் யார் என்று கேட்டால்—மன்னிக்க வேண்டும்—மேல் சாதிக்காரர்கள். ஒரு தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவருக்குக் கூட இடம் கிடையாது. காரணம், கல்வி புரொஹிபிடெட், அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பு புரொஹிபிடெட், மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நாம் தற்குறியாகப் போனதற்குக் காரணம், இன்னும் கூட பிற்பட்ட சமுதாயத்திலே, ஆண்களுக்கு கக்கூஸ், பெண்களுக்கு கக்கூஸ், என்று மெட்ராசிலேயே எழுதிக் காட்ட வேண்டிய அவல நிலை இருப்பதற்குக் காரணம், பண வசதியில்லாத காரணமல்ல, அது மறுக்கப்பட்ட காரணத்தினால்தான். எனவே பொருளாதார அளவுகோல் என்பது வேறு சப்ஜெக்ட். அதற்காக அரசாங்கம் பல திட்டங்களை வைத்திருக்கிறது. கல்வியிலே சலுகை வைத்திருக்கிறது. ஆனால் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது எந்த ஜாதியினாலே அடிமைப் படுத்தப்பட்டோமோ, அந்த ஜாதியின் பெயரால் நமக்கு அந்த உரிமை கிடைக்க வேண்டும். அப்படியானால் அது கொள்கை விரோதம் இல்லையா என்று கேட்டபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழகாக பதில் சொல்லியிருக்கிறார்கள். ஊனமுற்றோர்களை எப்படி நாம் பார்க்கிறோம், அவர்களுக்கு சலுகை கொடுக்கிறோமே, கால் இல்லாதவர்களுக்கு, கை இல்லாதவர்களுக்கு அரசாங்கம் சலுகை கொடுக்கிறது. நன்றாக இருப்பவர்களுக்குப் போய் சலுகை காட்டலாமா? காது நன்றாக கேட்பவர்கள் போய் எனக்குக் காது கேட்கும் கருவி கொடுங்கள் என்று கேட்கலாமா? நன்றாக இருப்பவர்கள் நான் நொண்டியா இருக்கிறேன், சக்கர வண்டி கொடுங்கள் என்று கேட்கலாமா? அது மாதிரி ஊனமுற்றவர்களுக்கு அரசாங்கம் எப்படி செய்கிறதோ, அது போன்று சமுதாயத்திலே எவர்கள் ஊனமுற்றவர்கள் என்று அவருக்கே உரிய அற்புதமான உதாரணத்தோடு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

11-50 மணி.

முந்தாநாள் கூட்டத்திலே கூட சொன்னார்கள். ஒரு பாலம் கட்டுகிறோம், இன்னும் சொல்லப்போனால் ஒரு ரோடு போடுகிறோம். ரோடு ரிப்பேர். ரோடு ரிப்பேர் என்கிற போது வண்டி எப்படி போகும். டைவர்ஷனாகத் தான் போகும். அப்ப எப்போதுமே டைவர்ஷனா? இல்லை. ரோடு ரிப்பேர் ஆனதற்குப் பிறகு டைவர்ஷனை எடுத்து விடலாம் என்று சொன்

னார்கள். அது போல இப்பொழுது சமுதாயம் ரிப்பேராக இருக்கிறது. இன்னும் முன்னேற வேண்டிய அளவிற்கு பிற்பட்டவர்கள் முன்னேறவில்லை. ஆகவேதான் இந்தச் சலுகை அல்ல உரிமை வேண்டும் என்று சொல்லி அது தமிழக அரசாங்கத்தில் மட்டுமல்ல, மாநில அரசாங்கத்தில் மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலும் அது வேண்டும் என்று போராடி நம்முடைய முதல்வர் அவர்கள் இன்னும் சொல்லப்போனால் இதற்காக மாநில பட்டியலினுடைய லிஸ்டையே நீங்கள் பேக்வார்டு கிளாஸுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்த ஜாதிகளை எடுத்துக் கொள்ளலாம். பிரிவை எடுத்துக் கொள்ளலாம். மண்டல் கமிஷனில் சொல்லியிருக்கக் கூடிய அந்த ஜாதி அடிப்படையையும் எடுத்துக் கொள்ளலாம். இதிலே முரண்பாடு ஏற்பட்டால் ஒரு குழு போட்டு அதை பரிசீலிக்கலாம் என்று மத்திய சர்க்காரிடத்திலே எடுத்துச் சொல்லி அன்றைக்கு தேவிலால் இருந்த போது அவருக்கும் விளக்கம் சொல்லி, பிரதமருக்கும் விளக்கம் சொல்லி இது வெற்றி பெறுவதற்கு, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதி வெற்றி பெறுகின்ற விதத்திலே இன்றைக்கு இதை கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே நான் உங்களை இந்த பேரவை சார்பாக, இந்த மிகப்பெரிய உன்னதமான நுணுக்கத்திற்காக பாடுபட்ட நம்முடைய தமிழக முதல்வருக்கு, கட்சிக்கு அப்பாலே இன்ன கட்சியின் சார்பாக ஒரு நன்றித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திறமை என்று சொல்கின்ற போது அதுவும் ஒரு மோசடித்தனம் என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவார்கள். மார்க்கு வாங்குவதும், மனப்பாடம் செய்வதும், வாத்தியாரைப் பார்த்து மார்க்குகளைப் பெற்றுக்கொள்வதும், காப்பியடிப்பதும், இதுதான் திறமையா என்றால் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன், எனவே திறமை என்பதன் பெயரிலே கிராமப்புறத்திலே மாடு ஓட்டுகின்றவனுடைய மகன், இன்னும் சொல்லப்போனால் வண்டி இழுக்கக் கூடியவனுடைய மகன், சாலையோரத்து சாதாரணமானவர்களின் பிள்ளைகள் படித்து முன்னேறி வருவதே பெரிய காரியம். ஆனால் அதிகாரி வீட்டு பிள்ளைகள் படித்து திறமையைக் காட்டுவது பெரிய விஷயம் அல்ல. எனவே முன்னேற விரும்புகின்ற அந்த பிள்ளைகளோடு முன்னேறியவர்களை ஒப்பிடாதீர்கள் என்று ஐயா அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். மண்டல் கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன்பாகவே 1950—லேயே அவர் சொல்லிய வாசகத்தோடு என் பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: இது ஏதோ நாங்கள் எல்லோரும் பிற்படுத்தப்பட்டோருக்கோ, அல்லது ஆதி திராவிடருக்கோ ஒதுக்கீடு வேண்டாம் என்று சொல்கிறதைப் போல நமது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அதைச் சொல்ல

வில்லை. அவர்கள் கடைசியிலே முடிக்கின்ற போது கூட அந்த வார்த்தையைச் சொன்னார்கள். இங்கே சில பேர் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் களாக இருக்கிறார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அப்படி வாய்ப்பை பெற்று அரசு அதிகாரிகளாக இருக்கிறார்கள். நாங்கள் என்ன சொல் கிறோம் என்று சொன்னால் பிற்படுத்தப்பட்டோருக்குள்ள இட ஒதுக்கீட்டை அப்படியே வைத்துக் கொள்ளுங்கள், ஆதிதிராவிட ருக்குள்ள இட ஒதுக்கீட்டை அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஒதுக்கீட்டிலே இங்கே அமைச்சராக இருக்கின்றார் ஒரு ஆதிதிராவிடர். பிற்படுத்தப்பட்ட துறைக்கு அமைச்சராக இருக்கின்றார். அவருடைய பிள்ளைகளும், அங்கே ஊரிலே கிராமத்திலே ஒரு இருட்டிலே விளக்கு இல்லாமல் குடிசையிலே படித்துக் கொண்டிருக்கின்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த வனும் ஒரே ஒதுக்கீட்டிற்குள் போட்டி போட்டால் யாருக்கு கிடைக்கும்? அதைத் தான் நாங்கள் சொல்கிறோம். அந்த ஒதுக்கீட்டை நாங்கள் மறுக்கவில்லை. You have reservation for backward classes; You have reservation for scheduled castes; ஆனால் அதிலே வாய்ப்பை பெற்ற ஒரு சிலர் மீண்டும் மீண்டும் அந்த ஒதுக்கீட்டை தாங்களே பயன்படுத்திக்கொள்வதை விட்டு விட்டு அந்த வாய்ப்பு யாருக்கு கிடைக்கவில்லையோ அவர்களுக்கு அது கிடைப்பதற்கு இந்த அரசு சிந்திக்க வேண்டும். அதைத் தான் நாங்கள் சொல்கிறோம். But don't think that—நாங்கள் அதற்கு எதிராக அல்ல. நாங்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறோம், இந்தத் தீர்மானத்தை பாராட்டுகிறோம். அந்த ஒதுக்கீட்டை ஒரு சில செக்ஷன்ஸ் எக்ஸ்ப்ளாயிட் பண்ணுவதை நாங்கள்.................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி பட்டதாரி கள் வீட்டுப் பிள்ளைகளே பட்டதாரிகளாக வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் இங்கே நம்முடைய குமரி அனந்தன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, பட்டதாரிகள் அல்லாத குடும்பத்திலிருந்து—பெற்றோர்களோ அல்லது உடன் பிறப்புகளோ பட்டதாரிகள் இல்லாத குடும்பத்திலேயிருந்து—வருகின்ற முதல் பட்டதாரி மாணவன் எந்தக் குடும்பத்தை, எந்தக் குலத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் அவர்களுக்கு 5 மதிப்பெண்கள் அதிகம் கொடுக்கப்படலாம் என்று இந்தியாவி லேயே முதல் முதலில் அறிவித்து அதை நிறைவேற்றி வருகின்ற மாநிலம் நம்முடைய மாநிலம். இது இந்தியா முழுமையும் பரவ வேண்டும் என்கின்ற எண்ணத்தையும் நாம் கொண்டிருக்கி றோம்.

*திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: முதலமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன், நாங்கள் என்ன இன்னும்

ஒரு படி அதிகம் சொல்லுகிறோம் என்று சொன்னால் ஒரு turn அதாவது ஆதி திராவிடர் என்ற ஒதுக்கீட்டைப் பயன் படுத்தி, ஒரு குடும்பம் பயன்படுகிறது என்று சொன்னால் அதற்கு அடுத்து அவர்களுடைய வாரிசுகளுக்கு அந்தப் பலனை நிறுத்தி விட்டு அடுத்த ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க முடியுமா? ஒரு தடவை அந்தப் பலனை அனுபவித்தவர்கள்—நான் முதலமைச்சர் சொன்ன கருத்துக்கு நான் அட்வான்ஸாகப் போகிறேன். இப்போது 5 மார்க்குகள் கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்கள். நான் என்ன சொல்கி றேன் என்றால் ஒரு ஐ. ஏ. எஸ். ஆபீசர் இருக்கிறார். ஷெட் யூல்டு கேஸ்ட் மேன் அல்லது பேக்வார்டு கிளாஸ் மேன். அவர் களுடைய பிள்ளைகள் டான்பாஸ்கோவில் படிக்கிறார்கள். கிராமப்புறத்திலே இருக்கின்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த வர்கள் வயல்களிலே உழுதுகொண்டு தினசரி பேப்பர் கூடப் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். இந்த இரண்டு பேரும் நாளைக்கு வேலைக்குப் போனால் அல்லது ஐ. ஏ. எஸ். தேர்வுக்குப் போனால் யாருக்குக் கிடைக்கும்? ஆகவே Once you enjoy for benefit that benefit should be stopped for that family.

11-55 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப் பினருடைய கருத்துப்படி ஒரு பொறியாளர் வீட்டுப் பையன் அல்லது ஒரு ஐ. ஏ. எஸ். காரருடைய வீட்டுப் பையன் பரீட்சை எழுதுவதே தடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறாரா ?

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: அது என்னுடைய கருத்து அல்ல. அவர்களுக்கு அந்த பெனிபிட் கிடைக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். அந்த பெனிபிட் இதை விட லெஸ் பிரிவிலெஜ்ட் ஆளுக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் பரீட்சை எழுதக் கூடாது என்று சொல்லவில்லை. அவர் ஆதி திராவி டரா என்று கன்சிடர் பண்ணாமல் Let him go to the general pool. எந்த வாய்ப்பும் இல்லாமல் கிராமத்திலே வசிக்கக் கூடிய ஆதித் திராவிட மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் படிச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது தமிழ் நாடு அரசு நிறைவேற்றி வருகிற வகுப்புவாரி தீர்மானத்தின் அடிப்படையில் கிராமப்புறத்து மக்கள் நிரம்பப் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதில் இந்த 5 மார்க் அதிகம் கொடுப் பது என்ற அடிப்படையில் எவ்வளவு பேர் பலன் பெற்றார்கள் என்பதை நான் பதில் அளிக்கும் போது புள்ளி விவரங்களோடு சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, தோழர் சொல்லுகிற வாதம் ஒன்றும் புதியது அல்ல. பிற்படுத்தப்பட்டோர்களுக்கு செல்லுகிற வாய்ப்பை அல்லது ஒதுக்கீடு சதவிகிதத்தை அதிலே இருக்கக் கூடிய வசதி படைத்தவர்கள் தான் அனுபவிக்கிறார்கள். மற்றவர்கள் கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் அனுபவிக்காமல் போய் விடுகிறார்கள் என்று சொன்னார். அந்தக் குறைகளைப் போக்குகின்ற விதத்திலே தான் இப்போது பொறுப்பேற்றிருக்கிற கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு இந்த ஐந்து மார்க் என்று எடுத்துச் சொன்னார்கள். அதைப் போல பல குற்றச்சாட்டுகள் வருகிற போது அவற்றை நாம் சரி செய்யலாம். ஆனால் அடிப்படையையே மாற்றுவது என்பது வேறு.

இன்னொன்றை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ''மற்றொரு சங்கதி என்னவென்றால், இதுவரை அனுஷ்டிக்கப்பட்டு வந்த வகுப்பு வாரி திட்டம் கூட சென்னை மாகாணத்து சர்க்காராலே தானே தவிர (அப்போது நீதிக்கட்சி ஆட்சி) மத்திய சர்க்காரால் அனுஷ்டிக்கப்படவில்லை. மத்திய சர்க்கார் அதிகாரத்திற்கு உட்பட்ட உத்தியோகங்களில் எல்லாம் மேற்படி மேல் ஜாதிக்காரர்களே நிறைந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் இலாகாவின் பெரிய பதவிகள் எல்லாம் மேற்குறிப்பிட்ட மேல் ஜாதிக்காரர்களுக்குத்தான் கிடைக்கின்றன. ஆகவே பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களோடு சேர்த்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று பாடுபடுகிறேன்'' என்று சொல்லி இருக்கிறார்கள். அது இப்போது, இன்றைக்கு நனவாகி இருக்கிறது.

ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒன்றைச் சொல்லி என் பேச்சை முடிக்கிறேன். தினமணிப் பத்திரிகை, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டும் ஒரே இடத்தில் இருந்து தான் வருகிறது. ஒரே முதலாளி. ஆனால் தினமணிப் பத்திரிகையிலே ''நாங்கள் இதை வரவேற்கிறோம், இது ஒரு சமூக நீதி'' என்று ஓரிரண்டு பேராவில் வரவேற்று விட்டு, கடைசியாக நம்முடைய ஆல்போன்ஸ் அவர்கள் சொல்லிய விதத்தைப் போல சொல்லி, மொத்தத்திலே வரவேற்கிறோம் என்று சொல்லி விட்டார்கள். ஆனால் இரண்டு எடிட்டோரியல்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே எழுதப்பட்டிருக்கிறது. டெல்லியிலேயும் மற்ற பகுதிகளிலேயும் நடைபெறுகிற கலவரங்கள் குறித்து தீ பரவட்டும் என்பது போல், வன்முறைகள் பரவட்டும், இது அநீதியானது, அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்று வன்முறையை தூண்டுகின்ற விதத்திலே அந்த தினமணிப் பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது. இதுவெல்லாம் வன்முறையை தூண்டுவதற்கு மேலும் மேலும் வகுப்புவாதக் கலவரங்களை தூண்டுவதற்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிராக..............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தவறாகப் பேசிக் கொண்டிருக்கிறார். தினமணி அதை ஆதரித்து எழுதியிருக்கிறது. இந்தியன் எக்ஸ் பிரஸ் தான் கிளர்ச்சி நடத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

திரு. அ. இரகுமான்கான் : முதல்வர் அவர்கள் சொன்னது சரிதான். நான் அவசரத்திலே மாற்றி சொல்லிவிட்டேன். தினமணிப் பத்திரிகை இது சமூக நீதி என்று சொல்லி வரவேற்று இருக்கிறது, என்று எழுதிவிட்டு கடைசி பாராவிலே பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடையிலே 2 அணி உருவாகி, அது சரியாகச் செயல்படவில்லை என்று நம்முடைய ஆல்போன்ஸ் சொன்ன குற்றச்சாட்டோடு முடிக்கிறது. ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இரண்டு எடிட்டோரியல் இருக்கிறது. அந்த இரண்டிலும் நடைமுறையிலிருக்கிற இட ஒதுக்கீட்டிற்கு எதிராக வன்முறையைத் தூண்டுகிற போராட்டங்களை ஆதரித்து, பொருளாதாரம் தான் இதற்கு அளவு கோலாக இருக்கவேண்டுமே தவிர, திறமைதான் அளவு கோலாக இருக்க வேண்டுமே தவிர, இது கூடாது என்று சொன்னால்—கருத்துக்கு கருத்து என்றால் கூட பரவாயில்லை—ஆனால் வன்முறையைத் தூண்டுகின்ற அளவுக்கு எழுதப்பட்டிருக்கிறது. எனவே, அந்த ஏட்டின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகைக்கு தன்னுடைய கருத்துக்களை எழுத சுதந்திரம் உண்டு. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் பேசுவது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு அழகு அல்ல. இந்த ஆளும் கட்சி அப்படிப்பட்ட முறையை நிச்சயமாக மேற்கொள்ளாது. இன்னொரு நம்பிக்கையை நாம் வைக்க வேண்டும். வேறு மாநிலங்களிலே இது போன்று பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடுகளை எதிர்த்து எழுதி முயற்சிகளை உருவாக்கி கிளர்ச்சி களை உருவாக்கலாம். ஆனால் நம்முடைய தமிழ் மாநிலத்தில் அது முடியாது. ஏனென்றால் இது பெரியார், அண்ணா, காமராஜர் ஆகியவர்களையெல்லாம் உருவாக்கிய, பக்குவப்படுத்திய மாநிலம் இது. இங்கே அப்படிப்பட்ட கிளர்ச்சி எதுவும் நிச்சயமாக நடைபெறுவதற்கு வழியே இல்லை. அப்படி வந்தால் இங்கு அமர்ந்திருக்கின்ற எல்லோரும் சேர்ந்து அந்தக் கொடுக்கை நறுக்கி விடுவோம்.

12-00 மணி

திரு. கே. ரமணி : மதிப்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் பரிந்துரையை மத்திய அரசு ஏற்று 7—8—1990-ல் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து.

அதை அமல் ஆக்குவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு, அதனுடைய உத்தியோகங்களில் எல்லாம் 27 சதவிகிதம் ஒதுக்கீடு என்று ஒதுக்கிட, அந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதை ஆதரித்து, அதற்கு நன்றி தெரிவிக்கும்படியான தீர்மானத்தை நமது அரசாங்கத்தினுடைய முதல்வர் அவர்கள் இங்கே முன் மொழிந்துள்ளார். இந்தத் தீர்மானத்தை, மண்டல் கமிஷன் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட மத்திய அரசாங்கத்தினுடைய இந்த நடவடிக்கையை சி. பி. எம். கட்சி ஆதரிக்கிறது. சி.பி.எம். கட்சிக்கு பொருளாதாரத் துறையில் இருக்கும்படியான கருத்து இருக்கிறது. ஆனால் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறது. வரவேற்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். அதைச் சொல்லும்போதுதான், நமது மதிப்பிற்குரிய குமரி அனந்தன் அவர்கள் பேச்சில் ''ஏதோ வெளியில் இருந்து ஆதரிக்கிறார்கள், அந்த சர்க்காரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று ஆதரிக்கிறார்கள், அது போய் விடக்கூடாது என்பதற்காகக் கொடுக்கிற ஆதரவு, அப்படி என்று சொன்னால், ஆதரவு என்பது உண்மையானது அல்ல, ஏதோ ஒரு சந்தர்ப்பவாத நோக்கத்தோடு அந்த அரசை அங்கே ஓட்ட வைத்து நிறுத்தினால் எங்களுக்கு ஏதோ இலாபம் இருக்கிறது என்பதற்காக ஆதரிக்கிற'' மாதிரி அதற்கு உள்ளுக்குள்ளே இருக்கிற ஒரு சாராம்சம் அப்படிப் போகிறது. அது சரியல்ல, முற்றிலும் தவறு. மார்க்சிஸ்ட் கட்சி அப்படிப்பட்ட இரட்டை முக நடவடிக்கையை எப்போதும் கையாளுவதில்லை. தெளிவாகவே சொல்லி விடுகிறோம்.

அவர்களுக்கே தெரியும். அந்த தேசிய முன்னணியினுடைய, என்ன தேர்தல் அறிக்கையை அவர்கள் முன்வைத்திருக்கிறார்களோ, அந்தத் தேர்தல் அறிக்கையை நீங்கள் நிறைவேற்றினால் போதும். அதற்கு எங்களுடைய ஆதரவு. மார்க்சிஸ்ட் கட்சியோ அல்லது இடதுசாரி அணியோ அவர்கள் வைத்துள்ள தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று நம் ஆதரவு இல்லை. ஏனென்றால், அவர்களாலே முடியாது. அவர்களுடைய தேர்தல் அறிக்கைக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம் என்று சொன்ன அந்த ஒரு விஷயம், அதை குமரி அனந்தன் யோசித்துப் பார்த்தால் போதும். ஏன் இந்த அரசாங்கத்தை நாம் ஆதரிக்கிறோம், இதை ஏன் சொல்லவேண்டி வந்தது என்றால்—இதைச் சொல்லி இருக்கவேமாட்டேன்—இந்த விவாதத்தோடேயே நாம் போய் இருக்கவேண்டியது தானே-அவர் சொன்னதனாலே தெளிவுபடுத்த வேண்டி இருந்தது.

காகாகலேல்கர் தலைமையில் முதலில் கமிட்டி அமைக்கப் பட்டது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு—மற்ற பிற்படுத்தப் பட்ட மக்கள்—ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப்ஸ், அது செப்பரேட்—அது வேறு இருக்கிறது. அவர்களுக்காக அமைக்கப்பட்ட கமிஷன். அந்தக் கமிஷனுடைய தீர்ப்பு 23

வருஷம் தூங்கியது. என்ன காரணம்? அப்போது யார் மத்திய சர்க்காரில் இருந்து நாட்டை ஆண்டார்கள்? அது ஒன்று. இரண்டாவது, அதற்குப் பிறகு மறுபடியும் இந்தக் கிளர்ச்சியும், நடவடிக்கைகளும் பலமாக ஆகி, ஆகி, மண்டல் கமிஷன் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த மண்டல் கமிஷன் தீர்ப்பு வந்ததற்குப் பிறகும், இன்றைக்கு மதிப்புமிக்க மத்திய முதலமைச்சர் வி. பி. சிங் அவர்கள் அதை ஒத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்து பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுகிற வரைக்கும் மத்தியிலே ஆண்ட காங்கிரஸ் கட்சியினுடைய மாபெரும் தலைவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை? அதுவே, திட்டவட்டமாக இன்றைக்கு நீங்கள் வரவேற்பது நிச்சயமாக நமக்கு மனப்பூர்வமாக சந்தோஷப்படவேண்டிய விஷயம்.

தமிழ்நாட்டில் இந்தச் சட்டமன்றத்தில் நாம் அத்தனை பேரும் இதை வரவேற்கும்படியான ஒரு பொதுவான, நல்ல ஒருமைப்பாட்டோடு நிற்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால், இந்தக் குறைபாடு, காங்கிரஸ் கட்சியினுடைய சென்ற கால மத்திய சர்க்காருடைய, ஆட்சியினுடைய விளைவு அல்லவா? அதற்கு நீங்கள் பதில் கண்டுபிடித்தால் நீங்கள் பிற்பட்ட மக்களைப் பற்றியும், மிக, மிகப் பிற்பட்ட மக்களைப் பற்றியும், தாழ்த்தப்பட்ட மலைஜாதி மக்களைப்பற்றியும், உங்களுடைய கண்ணோட்டமும், நடைமுறையும் அரசியல் சட்டத்தையே மீறிப் போகக்கூடியதல்லவா என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். மலைஜாதி மக்களுக்கு தனிப்பட்ட உரிமையைக் கொடுத்து, அவர்களுக்கு மாவட்ட கவுன்சில்களை அமைப்பதற்கு அரசியல் சட்டம் கொடுத்திருக்கும்படியான உரிமையைக் கூட நீங்கள் நிறைவேற்றவில்லை. மார்க்சிஸ்ட் கட்சியினுடைய ஆட்சி திரிபுரா மாநிலத்தில் தான் அந்தச் சட்ட உரிமையை உபயோகம் பண்ணி அங்கே மலை ஜாதி மக்கள் தங்களுடைய ஆட்சியை நடத்துவதற்கு கவுன்சில் அமைக்கப்பட்டது. ஆகவே, இது சரித்திர உண்மை என்பதற்கு நான் எடுத்துக் காட்டாக காட்டுகிறேன். அதோடு இந்த விஷயத்தை நிறுத்தி விடுகிறேன்.

12-05 மணி

சி. பி. எம். கட்சி, பிற்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடுகளை மத்திய அரசு முன்வைத்து இருப்பதையும், இந்தத் தீர்மானத்தின் மூலமாக நாங்கள் அதை ஆதரிக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பகுதியினர் பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின் தங்கியவர்கள். ஜாதியை நிரந்தரமாக்குவது என்பது மார்க்சிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. ஜாதி என்றென்றைக்கும் இருக்கும் இந்த உலகம் இருக்கும் அளவுக்கும் இருக்கும் என்ற அடிப்படையை ஏற்றுக்கொள்கிறதில்லை. அதை உடைக்க

வேண்டும். அதை உடைக்கிற வரைக்கும் அந்த மக்களை அந்த ஜாதியின் பெயரால் சுரண்டப்படுவதிலிருந்து மீட்டு முன்னேறு கிற பலத்தை அந்த மக்கள் சமுதாயத்திற்குக் கொடுக்க வேண்டும். அந்த ஒற்றுமை சக்தியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதற்கு நீங்கள் பொருளாதார பலத்தை கொடுக்காமல் அந்த சக்தி கிடைக்காது. அதுதான் நான் சொல்லக்கூடிய லைன். இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பெரும்பகுதியினர் 'பல்க்' அவர்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின்தங்கியவர்கள். இருந்தபோதிலும் மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டில் உள்ளதுபோல் அல்லாமல் மற்ற பிற்பட்ட பிரிவுகள் விஷயத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் ஒரு பொருளாதார அளவுகோல் கிரைட்டிரியா, எக்கனாமிக் கிரைட்டிரியா இருக்க வேண்டும் என்று சி. பி. எம். தெளிவாக எடுத்துச் சொல்கிறது. அவர் களுக்கு இப்போது இந்த ஒதுக்கீடுகளை எல்லாம் நாம் ஆதரித்து அதைக் கொடுத்து அவர்களுக்கு சக்தியை உருவாக்கி கொண்டு வரவேண்டியதும், முன்னேற வேண்டியதும் கடமை. ஆனால் மற்ற பிற்பட்ட பகுதியினர் என்றதில் பல பகுதிகள் இருக்கிறார் கள். அதையெல்லாம் நாம் கணக்கில் எடுக்கும்போது ஒரு பொருளாதார அளவுகோல், எக்கனாமிக் கிரைட்டிரியா இஸ் எ நெசசரி'' என்பது எங்களுடைய கருத்து.

அதற்கு என்ன காரணம் என்றால், பிற்பட்ட பிரிவினர் களில் பொருளாதாரத்தில் முன்னேறிய, நிலம் மற்ற செல்வா தாரங்களை சொந்தமாகக் கொண்ட பல பகுதியினர் உள்ளனர். பிறகு இப்படிப்பட்ட போராட்டங்களும், நடவடிக்கைகளும் வந்ததற்குப் பிறகு பலப்பட்டு இருப்பவர்கள் இருக்கிறார்கள். பரம்பரையாக அப்படிப்பட்ட சொத்துக்களை வைத்துக்கொண்டு ஆனால் ஜாதியின் ஒடுக்க முறையின் கீழ் அகப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அந்த உண்மைகளும் இருக்கின்றன என்பதை நாம் கணக்கில் எடுக்கவேண்டும். இந்த சமூகத்தில் ஒதுக்கீடுகள் மூலம் உண்மையாகவே நன்மை அடைய வேண்டியவர்கள் இருக் கிறார்கள். இந்தப் பிற்பட்ட சமூகத்தில் மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய அந்தப் பகுதிகள் உண்மையாகவே நன்மை அடைய வேண்டியவர்கள் அதை அடைய வேண்டுமானால் அவர்களை பொருளாதார ரீதியில் முன்னேறியவர்களிடமிருந்து பிரித்துக் காட்டிட ஒரு பொருளாதார அளவு கோல் எக்கனாமிக் கிரைட்டி ரியா, கட்டாயமாகத் தேவைப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட பகுதியினர் Scheduled Castes மலை ஜாதியினர் Scheduled Tribes விஷயத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எந்த விதமான பொருளாதார அளவு கோலும் பாராமல் ஒதுக்கீடுகளை ஆதரிக் கிறது. ஆனால், அதனுடைய தன்மை வேறு என்பதால் அதை ஆதரிக்கிறது. ஏன் என்றால், நூற்றாண்டுகளாக படுமோசமான சமூக ஒடுக்க முறைகளை இன்று வரை தொடர்ந்து வருகிற

1990 ஆகஸ்ட் 21] [திரு. கே. ரமணி]

ஜாதி முறையின்கீழ் அகப்பட்டு அனுபவித்து வருகிற விஷேசமான பிரிவினர் ஆவார்கள். இதுபோல், மற்றவர்களுக்கு ஜாதி ஒடுக்க முறை இல்லையா ? இருக்கிறது. ஆனால் ஜாதி ஒடுக்க முறையை எதிர்த்துப் போராடுவதற்கு இருக்கும்படியான சக்தியை அவர் களுக்குக் கொடுப்பதற்கு திட்டவட்டமாக அவர்களுக்கு கல்விச் சலுகையும், பொருளாதார வளர்ச்சியும், அதன் மூலம் ஜாதியை உடைத்து எரிவதற்கு ஜாதி பிடிப்புகளை தகர்த்து எறிவதற்கு மக்களுடைய ஒன்றுபட்ட பிரம்மாண்டமான கிளர்ச்சியும் நட வடிக்கைகள் மூலமாக செய்ய முடியும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து. ஆகவே, எங்களுடைய கண்ணோட்டம் இது. இதை நம்முடைய காங்கிரஸ் கட்சியி யினுடைய தலைவர்கள் புரிந்து கொள்வது நல்லது. அதனால் தான் இந்த தீர்மானத்தை வரவேற்பதில் எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை. இதை நாங்கள் ஆதரிக்கக்கூடியவர்கள். அந்த முறையில் இந்த விஷயங்களை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

12-10 மணி

பிற்பட்ட பிரிவினருக்கு மத்திய அரசின் சர்வீஸ்களில் இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து சில பகுதிகளில் இன்று கலகங்களும், குழப்பங்களும் நடக்கின்றன. இது வன்மை யாகக் கண்டிக்கத்தக்கது மட்டுமல்ல, இப்படிப்பட்ட நிலையைப் பரவவிடாமல் எதிர்த்துப் போராட வேண்டும். அதற்குக் கார ணம் என்னவென்றால், மேல் ஜாதி, கீழ் ஜாதி என்பதுதான். பிரச்சினையே அதுதான். அந்த முறையிலே ஜனங்களைத் தூண்டி விடுகிறார்கள். அதிலும் படுபாதகமான நிலைமை என்னவென்று கேட்டால் ஏழை மக்கள் எல்லா ஜாதிகளிலும் இருக்கிறார்கள். உயர்ந்த ஜாதியிலும் ஏழை மக்கள் இருக்கி றார்கள். உயர்ந்த ஜாதியில் இருப்பவர்கள் மண்வெட்டியும், கடப்பாரையும் எடுத்து வேலை செய்கிறவர்கள். கிராமங்களிலே லட்சோப லட்சம் மக்கள் கூலிக்காரர்களாக இருக்கிறார்கள். ஜாதியைப் பற்றி பேசினால், ஜாதி சோறு போடாது. ஜாதியி னுடைய பெயரால், குறிப்பிட்ட ஜாதிக்காரனுடைய நிலத்திலே வேலை செய்தால் கூலியும் அதிகம் கொடுக்கமாட்டான். எல்லா இடத்திலும் சுரண்டல்காரர்களின் எக்கனாமிக் கிரைடீரியன் இருக்கிறது. நாம் விட்டாலும் அவன் விடுவதாக இல்லை.

ஜாதிப் பெயரைச் சொல்லியே சுரண்டல் நடக்கிறது. ஏன் ஜாதி உருவாக்கப்பட்டது என்கின்ற ஆராய்ச்சிக்கு நான் போக வில்லை. உலகம் எப்படி உண்டாயிற்று ? மனிதன் எப்படி உண்டானான் ? சமூகத்தின் எக்கானமி எப்படி ஃபார்மேஷன் ஏற்பட்டது ? அதிலே சொத்து என்பது எப்படி வந்தது ? மூல தனம் எப்படி வந்தது ? இதையெல்லாம் ஆராய நான் விருமப வில்லை. அப்படிப்பட்ட மக்களுடைய பொருளாதார துறை யிலே அவர்களுடைய படுமோசமான நிலைமைகளை மாற்று

வதற்கு நடக்கின்ற இந்தப் போராட்டத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து சில பகுதிகளில் அவர்களைத் தாக்குகிறார்கள். அதற்கு அவர்கள் ஜாதியைக் காட்டினாலும் அவர்களுடைய நோக்கம் என்னவென்று சொன்னால் பொருளாதாரத் துறையில் ஏழைகளாகப் பின்தங்கிக் கிடக்கிற, தாழ்த்தப்பட்டு கிடக்கிற, பிற்பட்டு கிடக்கிற, அதிலும் மேல் ஜாதியாக இருந்தாலும், உழைப்பாளியாக இருக்கக்கூடிய உழைப்பாளி மக்களையும் படிப்பாளி மக்களையும் ஜனநாயக முறையில் முன்னேற விடாமல் அவர்களுடைய ஒற்றுமையைத் தகர்த்து எறிவது என்ற பிளவு உண்டாக்கும் முயற்சியாகும். மேல் ஜாதி என்ற பெயரால் தொழிலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலே மோதல் ஏற்படுத்தப்படுகிறது. விவசாயிகள் மத்தியிலே ஜாதியின் பெயராலே அவர்களிடத்திலே மோதல்கள் உருவாக்கப்படுகின்றன. இதற்கு வேண்டி அத்தகைய காரியங்கள் நடக்கின்றன. பீகாரிலும், உத்திரபிரதேசத்திலும் நடக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட சில ஜாதிகளுக்கும் மற்ற பிற்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு செய்வதனால் மட்டும் இந்தப் பிரச்சினை இறுதியாகத் தீர்க்கப்படுவது இல்லை. இன்றைக்கு அந்த மக்கள் முன்னேறுவதற்கு இந்தக் கட்டத்தில் நாம் எடுக்கக்கூடிய தீவிரமான நடவடிக்கை இது.

இதை எதிர்க்கின்றவர்கள் என்ன சொல்கிறார்கள்? இப்படிப்பட்ட அடிப்படையே கூடாது என்று ஜாதியின் பெயரைச் சொல்லியே அந்த மக்களை ஒருவருக்கொருவர் மோத விடுகிறார்கள். அந்த மோதல்களைக் கட்டாயமாகத் தடுக்க வேண்டும். அது நம் எல்லோருடைய கடமையாகும். தமிழ்நாட்டிலே கூட ஜாதியின் பெயரால் ஒடுக்குமுறைகள் இருக்கின்றன. அந்த ஒடுக்குமுறையின் மூலம் அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடை செய்கிறார்கள். எந்த முறையிலெல்லாம் அந்த ஒற்றுமையை உடைக்க முடியுமோ அத்தனையும் செய்கிறார்கள். அந்த ஜாதித் தன்மை, மூடநம்பிக்கை, அப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் சமுதாய ஒடுக்குமுறைகள் போன்றவற்றுக்குள்ளே இருக்கிற மக்களை வெளியிலே கொண்டு வருவதற்கு போராட்டத்தையும் பொருளாதாரத் துறையிலே அவர்களை முன்னேற்றுவதற்கான நடவடிக்கையையும் எடுக்கவேண்டும். இதுதான் எங்களுடையக் கருத்து. நமது முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கும் தீர்மானத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. அதனால்தான் அதை வரவேற்கிறோம். எங்களுடைய அடிப்படையான நிலை இது என்பதை நாங்கள் சொல்லவேண்டும். எல்லா ஜாதிகளையும் சேர்ந்த கோடிக்கணக்கான கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு தீவிர நில சீர்திருத்தத்தின் மூலம்தான் அடிமட்டத்திலே ஜனநாயகத்தினைக் காண முடியும். இந்த ஜாதி ஒடுக்குமுறையை உடைத்துத் தூளாக்க முடியும். எதை வைத்துக்கொண்டு அவர்கள் ஜாதி ஆதிக்கம் செய்கிறார்கள்? சமுதாய பிடிப்பை அவர்கள் எப்படி ஏற்படுத்துகிறார்கள், ஜாதி மதத்தை உபயோகப்படுத்துவது மட்டுமல்ல, அதெல்லாம் இன்றைக்கு தகர்ந்துகொண்டு வருகிறது. கொஞ்சம் கல்வியறிவு பெற்ற

வர்கள், இயக்கங்களில் பங்கெடுத்தவர்கள், போராட்டங்களிலே பங்கு பெற்றவர்கள், ஸ்தாபன ரீதியாக திரண்டு சுரண்டலை எதிர்க்கக்கூடிய வர்க்கங்கள், அந்த வர்க்கங்களெல்லாம் இதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் இதை எதிர்க்கிறார்கள். ஜாதி முறைகளையும், வர்ணாசிரம முறைகளையெல்லாம் எதிர்த்து நின்று போராடுகிறார்கள். அந்தச் சக்தி மேலும் மேலும் வளருகிறது. இன்னும் விஞ்ஞான அறிவும், கல்விச் சலுகையும், பொருளாதார முன்னேற்றமும் கிடைக்கும்போது அந்தப் போராட்டத்தினுடைய சக்தி அதிகமாகும். அப்போது ஜாதிகள் இருக்கிற இடம் தெரியாமல் போக வேண்டி வரும். அதனுடைய மிச்சசொச்சங்கள் இருக்கிறதே அவைகளை எங்காவது காட்சிசாலையிலே வைக்கவேண்டி வரும். அதையும் தூக்கிக்கொண்டு பலர் வருவார்கள். அதையும் நாம் எதிர்த்து நின்றாக வேண்டும். அப்படிப்பட்ட முறையிலே அந்தப் போராட்டம் இன்றைக்கு நடைபெறுகிறது.

12-15 மணி

எல்லா ஜாதியையும் சேர்ந்த கோடிக்கணக்கான கிராம மக்கள் - இந்திய நாட்டிலே இன்றைக்கும் 70 சதவிகிதமான மக்கள் அவர்கள். அந்தக் கிராமத்தில்தானே, நிலப் பிரபுக்கள், மிட்டாமிராசுதார்கள், செல்வந்தர்கள் என்ன சொல்லி அவர்களை அடிக்கிறார்கள்? ஒரு தாழ்த்தப்பட்ட அரிஜனை 'முழங்காலுக்குக் கீழ் நீ உன் துணியைக் கட்டாதே' என்று இன்றைக்கும் சொல்லக் கூடிய கிராமங்கள் எத்தனை இருக்கின்றன? சைக்கிளிலே போனவனை தடுத்து நிறுத்தி, அடித்து, ஆஸ்பத்திரிக்கு அனுப்புகிற எத்தனை இடங்கள் இருக்கின்றன? நான் பார்த்தேன். இங்கே.. (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)..

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோவியத் ரஷ்யாவிலே இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையிலா? மற்ற சலுகைகளின் அடிப்படையிலா?

திரு. கே. ரமணி: சோவியத் ரஷ்யாவில் இந்த ஜாதி என்ற பிரச்சினையே இல்லை. ஒரு சோஸலிஷ்ட் சமூதாயத்தில், பொருளாதார ஒதுக்கீட்டிற்கு, பொருளாதார அடிப்படையிலே சுரண்டலை எதிர்த்து, சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைத்த, சமுதாயத்தினுடைய அளவுகோல்தான் அது. அதேமாதிரி உங்களுக்கு.. (குறுக்கீடு) இன்னொரு வார்த்தையைக்கூட சொல்லி விடுகிறேன்...

திரு. அ. இரகுமான்கான்: தவறான தகவல் தருகிறார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இது நாம் 'கோர்ட்'டில் வக்கீல் போடுகிற மாதிரி கேள்வி போடுவது அல்ல. "It is a political question" உங்களுக்கு ஒரு விஷயத்தை நான் சொல்கிறேன். அதை நீங்கள் கேட்டால் தெரியும். நீங்கள் அதற்கப்புறம் கேளுங்கள்.. (குறுக்கீடு) நான் திரும்பவும் சொல்கிறேன். நான் சொல்கிற வார்த்தையை முடிக்கவில்லை. சீனாவில் நாம் தூது கோஷ்டியாக சென்றோம். அவர்கள் விடுதலை பெற்று, 7 வருடத்திற்குப் பிறகு, நான் என்னுடைய மதிப்பிற்குரிய தோழர் திரு. ஜோதிபாசு அவர்கள் தலைமையிலே 30 பேர்கள் கொண்ட ஒரு 'டெலிகேஷன்' போனோம். அங்கே போனபோது, அங்கிருந்த கல்வியமைச்சரை அவருடைய 'பீஜிங்' கோட்டையிலே சந்தித்துப் பேசினோம். அப்போது அவர் கேட்டார். "What is meant by caste? It is prevalent in your country. You are having many troubles" அதாவது-ஜாதி என்றால் என்ன என்று கேட்கிறார். அங்கே ஜாதி அடிப்படையிலே ஒதுக்கீடு என்றால், சோஷலிஷ்ட் நாடுகளில் அப்படிப்பட்ட ஜாதி அடிப்படையிலே ஒதுக்கீடு இல்லை.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'சோஷலிஸ்ட் நேஷனாலிட்டீஸ்' என்ற அடிப்படையில், சோவியத் நாட்டிலே, பல மாநில மக்களுக்கு தனிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

திரு. கே. ரமணி : அதுதான். நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. "Linguism" இருக்கிறதே, "Stalin on Linguism" என்ற ஒரு சின்னப் புத்தகம், தயவுசெய்து, அதைப் படியுங்கள். அப்புறம் உங்களுக்கு முடிந்தால் கொஞ்சம் "dialtic Meterials" -ஐயும் படியுங்கள். அப்போது நீங்கள் உண்மையைப் புரிந்துகொள்வீர்கள்..(குறுக்கீடு) கேளுங்கள். தயவுசெய்து இன்னும்..(குறுக்கீடு) தயவுசெய்து நான் உங்களுக்கு பதில் சொல்கிறேன். தேசிய இனம் என்பது ஜாதி அடிப்படையில் அமையவில்லை. மத அடிப்படையில் அரசை அமைக்க முடியாது. தேசிய இனங்களுடைய அரசுகள் என்பது சமூதாய வளர்ச்சியினுடைய ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உலகம் முழுவதிலும் வளருகிறது. முற்காலத்தில் அதற்குமேல் சக்ரவர்த்திமார்களும், அவர்களுக்குக் கீழ் இருக்கின்ற நாட்டு ராஜாக்களும் இருந்தார்கள்..(குறுக்கீடு).

திரு. அ. இரகுமான்கான் : ஜாதி இல்லை சோவியத் ரஷ்யாவில் என்பது உண்மை. ஆனால் பொருளாதார அடிப்படையிலே சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள், வசதி உடையவர்கள், வசதி இல்லாதவர்கள் என்ற நிலைமைகள் அங்கே இல்லை

மாறாக பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் சோவியத் ரஷ்யாவில் காலங்காலமாக சோவியத் பொது மொழியினாலும், அடுத்து இனங்களினாலும் 'சப்ரெஸ்' செய்யப்பட்டவர்கள் என்பதற்காக, அவர்களை மேலே தூக்கி விடுவதற்கு ஏற்கனவே வளர்ச்சி பெற்ற இனங்களோடு இந்த வளர்ச்சிப் பெறாத இன மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஜாதியின் பெயரிலே இங்கே கொடுப்பதைப் போல.

திரு. கே. ரமணி : நம் மதிப்பிற்குரிய இரகுமான்கான் அவர்கள் சொன்னதிலே கடைசி பகுதிகள் சரியானவை. ஆனால் 'ஜாதியின் பெயராலே கொடுப்பதைப் போல' என்பது உங்களுடைய சேர்க்கை. சோஸலிஸ நாட்டில் அல்ல. ஜாதியைப் போல தேசிய இனங்களுக்குக் கொடுக்கிறார்கள் என்பது தவறு. தேசிய இனங்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட, கீழ் மட்டத்தில் என்பது சரியல்ல. பொருளாதாரத்தில் கீழ் மட்டத்தில் இருக்கிறது; மேல் மட்டத்தில் இருக்கிறது. நீங்கள் இப்படி கேள்வி கேட்பது தவறானது.

திரு. அ. இரகுமான்கான் : குறிப்பிட்ட தேசிய இனங்களுக்கு மட்டும் ஏன் அந்தச் சலுகைகள் ?. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருவருக்குமே நான் சொல்லிக் கொள்வது . . (குறுக்கீடு).

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, சோவியத் ரஷ்யாவிலே பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றுக்கொன்று இணையாக இருக்கிறபோது, குறிப்பிட்ட தேசிய இனங்கள் மட்டும் காலங்காலமாக 'சப்ரெஸ்' செய்யப்பட்டது என்ற காரணத்தினால்தான் மற்ற இனங்களிலிருந்து மேம்பட்டு, இவர்களை மேலே உயர்த்துகின்ற முயற்சியிலே இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி செய்யப்படுவதிலே என்ன தவறு கண்டு பிடிக்கிறார் திரு. இரகுமான்கான் என்பது எனக்குப் புரியவில்லை. ஒதுக்கப்பட்டோர் அல்லது பின்தங்கியோர் இனங்களைத் கைத் தூக்கிவிட, ரஷ்யாவிலே முயற்சி எடுக்கப்படுவதை ஆதரிக்க வேண்டுமேயல்லாமல், நம்முடைய தீர்மானத்தை ஆதரிக்கப் போகிற திரு. ரமணி அவர்களிடமே மோதுவது ஏன் என்று புரியவில்லை. ஒருவேளை அவரிடத்தில் வகுப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. இரகுமான்கான் விரும்பினால், திரு. ரமணி அவர்களைத் தனியே சந்தித்து, அந்த வகுப்பை எடுத்துக் கொள்ளலாம்.

12-20 மணி

திரு. கே. ரமணி பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். கீழ் மட்டத்திலே பொருளாதாரத் துறையிலே பின் தங்கியவர்களை மேலே தூக்கிவிட வேண்டியது நம்முடைய கடமை. சுதந்திர இந்தியாவிலே அதைச் செய்யவில்லை. இங்கே வந்த தகராறு அதுதான். இந்தியாவிலே அதைச் செய்யவில்லை. அதற்கு நிலப்பிரபுத்துவம் ஒழிந்தால் தான் அதைச் செய்ய முடியும். அதை நாம் செய்யவில்லை. அதனால் தான் இன்றைக்கும் இந்தச் சட்டமன்றத்தில் விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்யுங்கள், நிலத்தைப் பங்கிட்டுக் கொடுங்கள் என்று கேட்கிறோம். தஞ்சாவூரிலே இருந்த கரும்புப் பண்ணையைக் கலைத்து நமது முதல்வர் அவர்கள் அந்த நிலத்தை விநியோகம் செய்தார்கள். அதேமாதிரி தமிழ்நாடு முழுவதும் மிச்ச நிலம், கோயில் நிலம் அத்தனையும் எடுத்து விநியோகம் செய்து பிற்பட்ட நிலையில் உள்ளவர்களைத் தூக்கி விட்டால்தான் அங்கே பள்ளன், பறையன் என்ற மாதிரி இருக்கக்கூடிய ஜாதி மக்கள் மீதுள்ள ஆதிக்கம் உடைத்துத் தூளாக்கப்படும். அதுதான் பிரச்சினை. இப்போது மலைஜாதி மக்கள் இங்கே இருக்கிறார்கள்.

ஆனால் மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுக்கு உள்ள அவர்களுடைய அந்தஸ்து இல்லை. அதை உயர்த்தவேண்டுமென்றால் தலையை எண்ணி பட்ஜெட்டிலே காசு ஒதுக்கினால் முடியாது. நமக்கு வேறு வழியில்லாததால் அப்படி பணத்தை ஒதுக்குகிறோம். அந்த பிற்பட்ட தன்மையை மாற்றுவதற்கு எந்த அளவுக்கு நூற்றுக்கணக்கான கோடி பணத்தைச் செலவிட வேண்டுமோ அத்தனையும் வாரிக் கொட்ட வேண்டி வரும். அந்த அளவுக்கு நம்மிடம் செல்வம் இல்லை. சோவியத் ரஷ்யாவிலே அதைச் செய்தார்கள். அப்படித்தான் வளர்ச்சி வந்தது. இப்போதும் அசமத்துவம் கம்ப்ளீட்டாகப் போய்விட்டது என்று நான் சொல்ல முன்வரவில்லை. இதுதான் நிலைமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் விரைவில் முடித்தால் பரவாயில்லை. இன்னும் ஐந்தாறு உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை வேறு இருக்கிறது.

திரு. கே. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு நாங்கள் பொறுப்பும் அல்ல; தடையும் அல்ல. விஷயங்கள் வந்தால் இப்படி வரும்? என்ன செய்வது? திரு. இரகுமான்கான் அவர்கள் அந்தச் சந்தேகத்தைக் கைவிட்டு விடலாம். ஜாதியே சோஷலிச நாடுகளில் அவர்களுக்குத் தெரியாது. எங்களைக் கேட்டார்கள். ஜாதியைப் பற்றி சொன்னோம்,

தம் தெரியும் அவர்களுக்கு. ஜாதி தெரியாது. அது நமக்கே உரித்தானது. இங்கே இருக்கிற நமக்கு உரிய ஒருசாபக்கேடுஅது. அதை நாம் ஒழிக்கவேண்டி இருக்கிறது. இந்த நிலைமையில் எல்லா ஜாதிகளையும் சேர்ந்த கோடிக்கணக்கான கிராம மக்களுக்கு நிலச்சீர்திருத்தம் பண்ணாமல் இதற்கு இறுதியான தீர்வு இல்லை என்பதுதான் எங்களுடைய நிலைபாடு. அதற்கு இப்போது என்னென்ன சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமோ அதை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இருக்கிற படியிலே இருந்து அடுத்த படிக்குப் போகிற சூழ்நிலைக்கு நாம் வருகிறோம். முன்னேறுகிறோம். அந்தக் காரியத்தில் 43 வருஷ காலம் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் மத்தியில் இருந்த ஆட்சியில், சுதந்திரத்திற்காகப் போராடிய கட்சியின் ஆட்சியில் அவர்களுடைய வேலையான இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. ஆனால் இன்றைக்கு நாம் செய்கிறோம் அதை. அதுதான் மக்கள் எடுத்திருக்கின்ற தீர்ப்பு. இந்த முறையில் நகரங்களில் உள்ள ஏழை மக்களுக்கு வேலை, நிவாரணம் ஆகிய இரண்டும் கிடைக்கவேண்டும் என்றால் சுரண்டல்காரர்களின் செல்வக் குவியலை நாம் உடைக்கவேண்டி வரும். அது இல்லாமல் சாத்தியம் இல்லை. அதனால்தான் பெருந்தொழில்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்துகிறோம். அது எந்தத் திட்டத்தில் இருக்கிறது. அவர்கள் திட்டத்தில் இல்லை. அதாவது தேசிய முன்னணித் திட்டத்தில் அதைக் கொண்டுவர முடியாது. ஆகவே கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் ஏழ்மை இருக்கிறது. அங்கெல்லாம் ஜாதி இருக்கிறது. அந்த ஏழ்மை அகற்றப்பட வேண்டும் என்றால் நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய செல்வக் குவியலை நாம் தகர்த்தாகவேண்டும். அந்த முறையில் நம்முடைய நடவடிக்கை வேண்டும். இந்த மாற்றங்களைக் கொண்டுவர சகல மக்களின் ஒத்துழைப்பும் தேவை. உழைப்பாளி மக்களின் ஒத்துழைப்பு தேவை. உழைப்பாளிகள், விவசாயிகள், வாலிபர்கள், பெண்கள், சமுதாயத்தில் பொருளாதாரத் துறையிலும், ஜாதி ஒடுக்கு முறைகளிலும் நசுக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்து மக்களும் கிளர்ந்து எழுந்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய பாத்திரத்தை நாம் கையாளவேண்டும். அந்த முறையில் அதற்குத் தீர்வு காணவேண்டும்.

ஒதுக்கீடுகளை எதிர்த்து நடக்கிற கிளர்ச்சிகள் முழுவதையும் நாம் எதிர்க்கிறோம். கடுமையாக எதிர்க்கிறோம். இதையும் நாம் ஒன்று சேர்ந்து நின்றே எதிர்க்கவேண்டும். இந்த நிலையை மாற்ற, வேலை உள்ளவர்கள், ஒதுக்கீடு தேவை இல்லாதவர்கள் உள்பட ஒதுக்கீட்டுக்கு ஆளானவர்களும் மற்றபடி சலுகைகள் பெற்றே வாழ வேண்டுமென்ற நிலையில் உள்ளவர்களும், வசதி படைத்தவர்களாக இருந்

தாலும் சுரண்டலை எதிர்த்து நிற்கக் கூடிய, ஜாதி ஒடுக்கு முறைகளை எதிர்த்து நிற்கக்கூடிய அத்தனை மக்களும் ஒன்று திரண்டு அந்த முயற்சிகளை எதிர்க்க வேண்டும். அதாவது இந்த முடிவுகளை, நாம் நிறைவேற்றி வரக்கூடிய முறைகளை எதிர்க்கின்ற எதிர்த் தாக்குதல்களைப் பொறுத்தவரையில் உரிய நடவடிக்கை எடுத்து முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அப்போது தான் இந்தத் தீர்மானத்தின்படி அந்த மண்டல் கமிஷன் அறிக்கை, அதில் இருக்கின்ற நல்ல அம்சங்கள் நிறைவேறும் என்ற எண்ணத்தோடு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இதை வரவேற்கிறது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

12–25 மணி

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மத்திய அரசினுடைய நிறுவனங்களிலும், மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கிற அலுவலகங்களிலும், பிற்பட்ட மக்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி, அதன் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடிக் கொண்டிருக்கிற ஏழை எளிய, பிற்பட்ட சமுதாய மக்களின் வாழ்வில் தீப ஒளியை ஏற்றி வைத்திருக்கிற தேசிய முன்னணி அரசையும், அதன் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களையும், இதற்கெல்லாம் முன்னோடியாக விளங்கி யிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பாராட்டவும், அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக் கவும் கடமைப் பட்டுள்ளேன்.

அகில இந்திய அளவில் பிற்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு என்பது, பிற்பட்ட மக்களைப் பொறுத்த வரையில், அது அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற இரண் டாவது சுதந்திரம் என்றால் அது மிகையாகாது. இந்தியா வில் முதல் சுதந்திரம் அரசியல் ரீதியாக 1947-ல் கிடைக்கப் பெற்றது என்றால், அகில இந்தியாவிலும் 50 சதவீத மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் பிற்பட்ட மக்களுக்கு இன் றைக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு என்பது நிச்சயமாக அவர் களுக்குக் கிடைத்த இரண்டாவது சுதந்திரம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய முன்னணி அரசினுடைய இந்த ஆட்சிக்காலமானது, பிற்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பொற்காலம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசுப் பணிகளில் பிற்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு அட்சய பாத்திரம் என்றா லும் அது மிகையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 27 சதவீத இட ஒதுக்கீடு என்பது

1990 ஆகஸ்ட் 21] [திரு. பி. என். வல்லரசு]

ஏழை எளிய பிற்பட்ட மக்களுக்கு அகில இந்திய அளவில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். அவர்களுடைய வாழ்வில் ஏற்றி வைக்கப்பட்ட ஒளி விளக்கு என்பதை நான் தெரிவித்துக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தது யார் என்பதை எண்ணிப் பார்ப்போமேயானால், அப்படி அமைந்திருந்தது நமது தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் தான் என்றால் அது மிகையாகாது. காரணம், மாநில அளவில் அன்றைய தினம் முதன்முதலாக பிற்பட்டோர் நல வாரியத்தை ஏற்படுத்தியதும், பின்தங்கிய மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக தனி அமைச்சரையும் நியமித்தவர் டாக்டர் கலைஞர்தான் என்பதை, இந்த நேரத்தில் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்தியாவுக்கே வழிகாட்டுகிற அளவில் இன்றையதினம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலையும், சீர் மரபினர் என்ற பட்டியலையும் கலைஞர் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். அதுபோன்று தமிழகத்தின் சட்டமன்றத்திலும் இன்றையதினம் அந்த மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மத்திய அரசைக் கோரும் வகையில் தீர்மானத்தையும் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அந்த அறிக்கையை பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அதற்குத் தூண்டுதலாக தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் இன்றையதினம் தீர்மானத்தை நிறைவேற்றி, அவர்களுடைய, மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அதன் மூலம் இன்றைய தினம் வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்றாலும் அது மிகையாகாது.

இப்படி ஒரு இதயபூர்வமான, மனப்பூர்வமான, வரவேற்கத்தக்க மண்டல் கமிஷன் அறிக்கையை 10 ஆண்டு காலமாக தேங்க வைத்த நிலைமையை எண்ணிப் பார்த்தால், அது வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. இன்றையதினம் இங்கே பேசிய நமது சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குமரி அனந்தன் அவர்கள், பேசும்போது, நாங்கள் கிடப்பில் போடவில்லை என்று சொன்னதன் மூலம், தன் மனமே தன்னைச் சுடுகிறது என்கிற அளவுக்கு பேசினார்கள் என்பதை நாங்கள் அறிவோம். கிடப்பில் போட்டது யார் என்று நாம் யாரும் கேட்கவில்லை. ஆனால் அது அவர்களுடைய மனச்சாட்சியைச் சுட்ட காரணத்தால், 10 ஆண்டுக் காலம் நாங்கள் கிடப்பில் போடவில்லை என்று சொல்கிறார்கள்.

பத்தாண்டுக் காலம் மண்டல் கமிஷன் அறிக்கையைக் கிடப்பில் போட்டது, அது அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியானாலும் சரி, ராஜிவ் காந்தி அவர்கள் ஆட்சியானாலும் சரி, கடந்த பத்தாண்டுக் காலமாக அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய துரோகம் இழைக்கப்பட்டிருக்கிறது என்றால் அதுவும் மிகையாகாது என்பதை நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். மண்டல் கமிஷன் அறிக்கை, பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டுப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. 10 வருடங்களாக ஆட்சியில் இருந்த அன்னை இந்திரா காந்தி ஆட்சியிலும், ராஜீவ் காந்தியின் ஆட்சியிலும் அந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், இந்தப் பத்து வருஷ காலத்தில், லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் மத்திய அரசின் பணிகளிலும், அதன் தொடர்புடைய பணிகளிலும் சேர்ந்து, காலப் போக்கில் உயர்ந்த பதவிகளை அடைந்து இருக்கவேண்டிய நிலைமையைப் பெற்றிருப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12-30 மணி

அதுமட்டுமல்லாமல் இங்கே தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு. ''கொள்-ஐயும் தின்று குழியும் பறிக்கிறது குதிரை'' என்று சொல்லப்படுகிற பழமொழி பற்றி நாமெல்லாம் அறிவோம். அதுபோல, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றாத திரு. ராஜிவ் காந்தி அவர்கள் என்ன வியாக்கியானம் சொல்கிறார்கள் என்றால், முற்பட்ட மக்களை இது பாதிக்காதா என்று வியாக்கியானத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, கொள்-ஐயும் தின்று, குழியையும் பறித்த குதிரையின் செயலாக அவர்களுடைய நடவடிக்கை இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய நாட்டு மக்கள் தொகையில் 52 சதவிகிதம் எண்ணிக்கையுடைய பிற்பட்ட மக்கள் தொகைக்கு நன்மை செய்வதற்காக மண்டல் கமிஷன் அளித்த அறிக்கையை 10 ஆண்டுகள் அவர்கள் முடக்கி வைத்து இருந்தது அவர்கள் இந்திய நாட்டு மக்களுக்கு செய்த துரோகம். எனவே, இந்த நல்ல வேளையில் மத்திய அரசு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்திருப்பதற்கு இப்போதைய மத்திய அரசையும், மதிப்பிற்குரிய பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். இந்திய அரசுப் பணிகளில் மட்டுமல்லாமல் கல்வித் துறையிலும் இச்சலுகையை நீட்டிக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டு, இந்த மண்டல் குழு பரிந்துரைகள் பற்றிய அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

கொண்டு வந்திருக்கின்ற நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்திய பிரதமர் வி. பி. சிங் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருப்பதால் நானும் இதிலே என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் தீர்மானத்தில் தமிழ்நாட்டிலேயுள்ள எல்லோருமே கலந்துகொள்ள வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்த சட்டசபையிலே எல்லா உறுப்பினர்களும் அமர்ந்திருக்க வேண்டும். காரணம், பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குகளை வாங்கித்தான் நாம் எல்லாம் எம்.எல். ஏக்களாக, அமைச்சர்களாக வந்திருக்கிறோம் இங்கே, இந்த விவாதத்திலே, யாராவது கலந்து கொள்ளவில்லையென்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்யக்கூடிய துரோகம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு செய்யக்கூடிய துரோகம் என்பதை நான் உணர்ந்து இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஜனநாயக ரீதியில் இன்றைக்கு எல்லா கட்சிகளுமே தேர்தல் காலங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று சொல்கின்றன. பிற்படுத்தப்பட்ட மக்களின் முழு ஆதரவைப் பெற்றுதான் இங்கே நாமெல்லாம் வந்திருக்கிறோம். அப்பேர்ப்பட்ட இந்த விவாதத்தில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் இன்றைக்கு பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

1949 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் நம்முடைய நாட்டுக்கு வழங்கப்பட்ட பிறகு, அரசியல் சட்டப் பிரிவு 340 இன்றைக்குதான் முழுமையாக நம்முடைய நாட்டு மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. சுமார் 41ஆண்டு காலமாகதூங்கிக் கொண்டிருந்த அரசியல் சட்டப் பிரிவு இன்றைக்குதான் தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு, அரசியல் சட்டப் பிரிவு 16, உட்பிரிவு 4ன்கீழ் 1950 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும். சுமார் 40 ஆண்டு காலம் நாம் இந்த உரிமையை இழந்திருக்கிறோம். அதாவது அது மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமாக இருந்தவர்களை ஆண்டவனே இருந்தாலும் மன்னிக்க மாட்டான் என்பதை நான் இங்கே தெரிவித்தாக வேண்டும். காரணம் ஒரு தலைமுறை ஏமாற்றப்பட்டிருக்கிறது. ஒரு தலைமுறைக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. எத்தனையோ பேர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வந்திருக்க வேண்டும். எத்தனையோ பேர் ஐ.பி.எஸ். அதிகாரிகளாக வந்திருக்கலாம். ஆனால் இந்தச் சட்டப் பிரிவு மறுக்கப்பட்ட காரணத்தினால்தான் A generation has passed without tasting this Constitutional Provision என்பதை நான் உணர்வுபூர்வமாக இங்கே தெரிவித்தாக வேண்டும். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று நாம் பல்வேறு கருத்துக்களை

இங்கே எடுத்துச் சொல்லும்போது நிச்சயமாக சிலபேர் பாதிக்கப் பட்டிருப்பார்கள். அவர்கள் அதில் கருத்துக்களைச் சொல்லக் கூடும்.

12-35 மணி.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் சாதாரண, சாமானிய மக்கள் இன்னும் தூக்கிவிடப்படவில்லை என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்தச் சாதாரண மக்களுக்கு இந்த மண்டல் கமிஷன் பரிந்துரை உண்மையிலேயே வருங் காலத்தில் பசுமையாக, அவர்கள் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு இந்த மண்டல் கமிஷன் அறிக்கையை, அதன் பரிந்துரைகளை ஏன் அமல்படுத்த வில்லை என்று நான்கூட ஒரு முறை உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கை தொடுத்து, சென்ற அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் அது வெளிவரவில்லை. அதற்காகத்தான் சொல்கிறேன். தினத்தந்தி, தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இந்த மூன்று பத்திரிக்கைகளைத் தவிர, மற்ற பத்திரிகைகளில் அந்தச் செய்தி வரவில்லை. இதனை பிற்பட்ட மக்களின் உரிமை மறுக்கப்படுகிறது என்பதற்கு சான்றாக எடுத்துச் சொல்கிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கூடாது என்று நான் வழக்கு தொடுத்திருந்தால், பல்வேறு பத்திரிகைகள் தலையங்கம் எழுதி என்னைப் பாராட்டி யிருக்கும். இதுதான் நம்முடைய நாடு. இந்தத் தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான பிற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில், இனிமேலும் அவர்கள் அதிகம் பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் மூதறிஞர் அவர்கள் எம்.எல்.ஏ. ஆக முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட முடியவில்லை. ஏன்? அதுதான். இன்றைக்கு நிலைமை எப்படி மாறிக் கொண்டிருக்கிறது ? அந்த மாற்றத்தை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பெரிய அறிஞர் மூதறிஞர் அவர்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியவில்லை. ஆனால் இன்றைக்கு அரசியல் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது ? இதற்குக் காரணம் யார் ? நம்முடைய அரசியல் அமைப்பு எப்படி இருக்கிறது, அரசியல் கட்சிகள் எப்படி இருக்கின்றன, இந்த அவையிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என் பதை எல்லாம் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

நாட்டு மக்களைப் பற்றி இந்தப் பரிந்துரை வருகிற இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்குக் குறைந்தது 2 நாட்களாவது ஒதுக்கி இருக்க வேண்டும். அந்த அளவுக்கு ஒரு மாபெரும் வெற்றி, மாபெரும் படைப்பு, மாபெரும் வரலாற்றிலே கிடைத்த ஒரு நல்ல லாபம். எனக்கு வேறு வார்த்தை தெரிய வில்லை. அந்த அளவுக்கு இருக்கக்கூடிய இந்தப் பரிந்துரைகள், வரக்கூடிய காலங்களில் நம்முடைய சமுதாயம் வளருவதற்கு ஊக்கமாக இன்றைக்கு அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும் போது, நான் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். 5 மார்க் கொடுப்பது பற்றி ஓர் உறுப்பினர் பேசும்போது பதில் சொன்னார் கள். அதிலே என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். அரிசியைக் கொள்முதல் செய்கிறோம், விநியோகிக்கிறோம். கோதுமையைக் கொள்முதல் செய்கிறோம், விநியோகிக்கிறோம். ஆனால் மார்க்கை கொள்முதல் செய்வது கிடையாது. ஒருவருடைய உழைப்பால், படிப்பால் அவன் பெறக் கூடியது மதிப்பெண் — அவார்ட் அது. ஃபிரி கிராண்ட் அல்ல. இலவசமாக வேஷ்டி வழங்கலாம். அரிசி வழங்கலாம். இலவசமாக மார்க்கையும் வழங்குகிறோம். இப்படி இலவசமாக 5 மார்க்குகள் பெற்றதனால் பலன் அடைந் தவர்கள் எத்தனை பேர் என்பதைச் சொல்கிறேன் என்று சொல்லி யிருக்கிறீர்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நம்முடைய பிற்பட்ட மக்கள்தானே. அந்த 5 மார்க் குறைந்த காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? முற்பட்டவர்களுக்கு இவ்வளவு ஒதுக்கீடு, அதில் 5 மார்க்; பிற்பட்டவர்களுக்கு இவ்வளவு ஒதுக்கீடு, அதில் 5 மார்க். இது இன்டெலக்சுவல் பிராபர்ட்டி. சாதாரண சொத்தைக் கைப்பற்ற முடியும். No Government or Law can take away the intellectual property, it cannot be bargained or purchased in the market.

12-40 மணி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அந்த அளவிற்கு இன்றைக்கு என்னுடைய கருத்தைச் சொல் வதற்குக் காரணம். நாம் அதிகமாக நம்முடைய பிற்படுத்தப் பட்ட மக்களை டாக்டர் ஆக்க வேண்டும். இன்ஜினியர் ஆக்க வேண்டும், வழக்கறிஞர்களாக ஆக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுமேயானால் அதிகமாக கல்லூரிகளைத் திறப் போம்; அதிகமாக நம்முடைய மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்போம். ஒருவன் பாதிக்கப்பட்டு இன்னொருவன் பலன் அடைகின்றான். நம்மவர் வேறு யாரும் கிடையாது. வேறு யாருக்கோ, வேறு எந்த சமுதாயத்துக்கோ போகவேண்டிய இடத்தை வாங்கி நாம் கொடுக்கவில்லை. எங்கேயோ கஷ்டப் படக்கூடிய மாணவர்கள்தான் அதைப் பெற்றுக்கொண்டு இருக் கிறார்கள்.

இந்த நிலை முதலில் எங்கே தொடங்க வேண்டும்? ஒரு தகப்பனாருக்கு வீடு இருந்தால் மகனுக்கு வாங்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வாருங்கள். நான் எம்.எல்.ஏ. ஆக இருந்தால் என்னுடைய பையன் எம்.எல்.ஏ. ஆக வரக் கூடாது என்று சட்டம் வரட்டும். ஒருவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தால் அவருடைய மகன் வக்கீலாக வரப்போவதால், மேலே இருந்து தொடங்குவோம்; மேலே இருந்து வந்தால் தான் அது அடித்தளம் வரும்போது மக்களுக்குச் சரியாகப் போய்ச் சேரும் என்ற கருத்தைச் சொல்கின்றேன். இன்றைக்கு இதே கருத்தைத் தான் நானே நீதிமன்றத்தில் வெளிப்படுத்தி எடுத்துச் சொல்லி இருக்கின்றேன்.

இன்றைக்கு இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளைப் பற்றிச் சொல்லும்போது அரசியல் சர்ச்சைகள் எழுந்தன. நம்முடைய இந்தியத் திருநாட்டில் சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல ஆண்டுக்காலம் பிற்படுத்தப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதம அமைச்சராக வந்தது கிடையாது. ஆனால் இன்றைக்கு வந்தார். மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அமல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு வழக்கறிஞர் நண்பர் சொன்னார். ஜனாதிபதி முற்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றும், அன்றைக்கு பிரதமர், அதுபோல் சட்ட அமைச்சர், துணை ஜனாதிபதி, ஒரு 50 சதவீதம் கேபினட் — இவ்வளவு பேர் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். நாம் என்றைக்கு உயரப் போகின்றோம் என்று ஒரு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் என்னிடத்தில் பேசிக் கொண்டு இருந்தார். இதை நான் சொல்வதற்குக் காரணம் இன்றைக்குத்தான் நாம் முதல் படி எடுத்து வைத்து இருக்கின்றோம், இன்னும் இதன் பலனை அனுபவிக்க வேண்டுமேயானால் இன்னும் நூறு ஆண்டுகள் ஆகும். இன்னும் நூறு ஆண்டுக் காலம் இதைப் பாதுகாக்க வேண்டுமேயானால் இந்த அவை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அவையில் வரக்கூடியவர்கள் எப்படி இருக்க வேண்டும்? இந்த நாட்டை ஆளக்கூடியவர்கள் எப்படி இருக்க வேண்டும்? இந்த நாட்டு மக்களுக்குப் பணியாற்று வதற்கு எப்படிப்பட்டவர்கள் வர வேண்டும் என்பதை அரசாங்கம் இன்றைக்கு கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பாமர மக்களுக்கு எல்லாம் ஒன்றும் தெரியாது. சில நேரங் களில் பல்வேறு விரும்பத் தகாத விளம்பரங்களைப் பெற்று இந்த நாட்டில் அரசியலில் இருக்கக்கூடியவர்களை அடையாளம் காட்ட வேண்டும். நாட்டைப் பற்றி சிந்திக்காதவர்கள் இன்றைக்கு அரசியலில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். நாட்டைப் பற்றிய கவலை கிடையாது. அப்பேர்ப்பட்டவர்களை நம்முடைய நாட்டு மக்களுக்கு எப்படி நாம் அடையாளம் காட்டப் போகிறோம் சலுகை வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதாது. இதேபோல் ஆட்சி இருந்துகொண்டே இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட

சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நீதிமன்றத்தில் அந்த ஜி.ஓ.-வை எடுத்துக் கொண்டு போவார்கள் ; ஸ்டே ஆகும்; குவாஷ் ஆகும்; நிலைமை அப்படித்தான். ஆகவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய கிராமத்து நல்ல இரும்பு மனம் படைத்த நம்முடைய தமிழ் பெருமக்களை உருவாக்கு வதற்கு இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் பயன்பட இருக் கிறது. ஆனால் ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

இன்றைக்கு மத்திய அரசில் மாநில அரசு எத்தனையோ பங்கைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு இத்தனை தூதர் தாருங்கள் என்று ஏன் கேட்கவில்லை ? தமிழ் நாட்டுக்கு திரு. கணபதி கவர்னர் கேட்கிறார். இத்தனை கவர்னர்கள் வேண்டும் என்று ஏன் கேட்கவில்லை. இதெல்லாம் நமக்குப் பங்கு. எப்படி நம்முடைய மாநில அரசாங்கத்தின் கீழ் வாரியங்களைப் பற்றி நாம் பேசிக் கொண்டு இருக்கிறோமோ, உலக அளவில் தமிழன் உயருவதற்கு எங்களில் இந்தத் தமிழகத் திலிருந்து அரசாங்கம் பரிந்துரை செய்யக்கூடியவரை தூதராக ஆக்குங்கள். வேறு யாராவது வரட்டும். மற்றொன்று எனக்கு உள்ளே இருக்கக்கூடிய ஒரு வேகமான எண்ணத்தை முதலமைச் சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-45 மணி

மண்டல் கமிஷனின் பரிந்துரை அமுல்படுத்தப்படுகிறது. காவிரிநீர் பிரச்சினைக்கு வழக்காடுவதற்காக உங்களுக்கு தமிழர்கள் ஒருவரும் கிடைக்கவில்லையா ? பிற்பட்ட சமுதா யத்தைச் சார்ந்த ஒரு வழக்கறிஞர் கிடைக்கவில்லையா ? 25,000 பேர் இருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலிருந்து ஒரு வழக்கறிஞரை நியமித்திருக்கிறீர்கள். எங்களில் யாரையாவது ஜோதிபாசு நியமிப்பாரா ? எங்கே போயிற்று ? இதை நான் உயர்த்துவதற்காகத்தான் சொல்லுகிறேன். நம்முடைய மாநிலத் தில் இருக்கக் கூடியவர்களை நாம் மதிக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் சக்தியுள்ளவர்கள், அறிவாற்றல் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது நியமியுங்கள்.

இன்னொன்று. இது பெரிய கொலை வழக்கு அல்ல. இரண்டு தரப்பிலும் அமர்ந்து பேசப் போகிறார்கள். ஒரு வரலாற்றுச் சிறப்பு தமிழருக்கு கிடைக்கட்டும். ஆகவே இதை உணர்த்துவதற் காகத்தான் சொல்லுகிறேன். திரு. இரகுமான்கான் படிக்கும்போது சூத்திரனை பக்கத்திலே வைத்துக் கொள்ளாதே என்று சொன்ன தாக படித்தேன். நாம் அதை மாற்றிப் பார்த்து படிக்க வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பக்கத்திலே யார் ? நம்மாலே யார் பயன் அடைகிறார்கள் நம்முடைய நாட்டிலே அந்தப் பயனைப் பெற்றவர்கள் இந்த நாட்டுக்கு உதவுவார்களா என்பதை முதலமைச்சர் அவர்கள்

எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் பத்திரிகைகள் பாராட்டலாம். ஆனால் ஆட்சி இருக்கும் வரைதான். பத்திரிகைகள் விளம்பரம் தரலாம். செய்திகளைப் பெரியதாகப் போடலாம்—ஆட்சி இருக்கும் வரைதான். கண்ணாலே பார்த்தவன் நான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது ஆட்சி இருக்கும்போது எந்தப் பத்திரிகை ஆட்சியின் செய்திகளைப் பெரிதாகப் போடுகிறது என்பதை, திரு. பாண்டியன் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. பி. எச். பாண்டியன் : முதலமைச்சருடைய படத்தைப் போடாத பத்திரிகைகள், ஆட்சியில் வந்தவுடனே அவருடைய படத்தைப் போடுகின்றன. முதலமைச்சரைப் பற்றி எழுதாத பத்திரிகைகள், ஆங்கிலப் பத்திரிகைகள் இப்போது எழுதுகின்றன. ஏன் ? குதிரை ஓடுகிறது. முதலமைச்சருக்குப் புரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சரைப் பற்றி பாராட்டி எழுதுவதாக திரு. பாண்டியன் சொல்லுவது தவறு. எதிர்த்துதான் அந்தப் பத்திரிகைகள் எழுதுகின்றன. இப்போது மண்டல் கமிஷன் பற்றி கூட எழுதியிருப்பது என்ன கருத்து என்பது திரு. பாண்டியன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னுமொன்று, தமிழ்நாட்டிலே வழக்கறிஞர்கள் கிடைக்கவில்லையா என்று கேட்டார்கள். தமிழ்நாட்டை சார்ந்த வழக்கறிஞர்தான் திரு. பராசுரன் அவரைத்தான் காவிரிப் பிரச்சினையில் ஒரு வழக்கறிஞராக நியமித்திருக்கிறோம்.

திரு. பி. எச். பாண்டியன் : நான் சொல்லுவது மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில். ஒரு அரசாங்கத்தின் சார்பில் யார் இருக்க வேண்டும் ? இதையெல்லாம் உணர்த்துவதற்காகத்தான் சொல்லுகிறேன். வேறு எங்கே போய்ச் சொல்லுவது ? வேறு யாரிடத்திலே சொல்லுவது ? அவர்கள் ஒரு வேளை இங்கே இருந்தால் எங்களை நியமிப்பார்களா ? அப்படியானால் பிற்பட்ட மக்களின் நலன் என்னவாகும் ? நான் முதலமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்வது—ஆட்சியில் இருக்கும்போது பல பேர் வருவார்கள். ஆட்சியில் இருக்கும்போது பலபேர் பல யோசனைகளைச் சொல்லுவார்கள். ஆனால் ஆட்சி இல்லையென்றால் அவர்கள் எல்லாம் எங்கே இருப்பார்கள் என்பதை நான் உணர்ந்த காரணத்தால்தான் சொல்லுகிறேன். அவர்கள் எல்லாம் சில நேரங்களில் இங்கே இருப்பதால் நான் அதைச் சொல்லுகிறேன். ஒரு காலத்திலே எங்கள்

பக்கத்திலே நின்றவர்கள். இங்கே நின்று கொண்டிருக்கிறார்கள். அதே கூட்டம், அதே 'பாரசைட்', உணர்ந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; உங்கள் வாதத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : தெரியாதது அல்ல. இதைச் சொன்னாலாவது இந்த 'பாரசைட்'டுகள் உங்களிடம் வராமல் ஒதுங்குவார்கள், வருவதற்குப் பயப்படுவார்கள், வெட்கப் படுவார்கள் என்று சொல்லுகிறேன். வெட்கம் வேண்டாமா ? அதற்காகத்தான் சொல்லுகிறேன். பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள். இன்னும் பல்வேறு நடவடிக்கைகள் தமிழநாட்டுக்குத் தேவை. திட்டங்கள் வேகமாகப் போக வேணடும். ஆனால் போகும்போது நமமுடைய நாட்டினுடைய ஒழுங்குத் தன்மை இருக்க வேண்டும். சட்டம், ஒழுங்கு .இதை இங்கே முழுமையாகத் தெரிவிக்கத் தேவையில்லை. முதலமைச்சர் அவர்கள் புரிந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே மண்டல் கமிஷனன் பரிந்துரைகளை தமிழ்நாட்டிலுள்ள ஏழையெளிய மக்கள் இன்னும் 100 ஆண்டுக் காலம் கழித்துத்தான் பெறப் போகிறார்கள்.

(12.50 மணி)

இருபது ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதை 'ரெவ்யூ* பண்ண வேண்டுமென்று மண்டல் எழுதியிருக்கிறார். இப்போது பத்தாண்டுக் காலம் ஆகிவிட்டது. இன்னும் இருபது ஆண்டுக் காலம், முப்பது ஆண்டு காலம் தேவை என்று ஒரு திருத்தத்தை சொல்ல வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள் கிறேன். இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். ஆனால் பிற்பட்ட மக்களை மறந்துவிடாதீர்கள். அங்கே இருக்கின்ற காரணத்தால் நான் சொல்லுகிறேன். அந்த அளவுக்கு நம்முடைய நாட்டு மக்கள் இன்றைக்கு இன்னும் இந்த மன்றத்தின் மீது நம்பிக்கை வைத் திருக்கிறார்கள். அரசாங்கம் என்ற ஒன்று இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரசாங்கம் இருக் கிறது என்று பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக் கொண் டிருக்கக்கூடிய இந்தக் கால கட்டத்தில், இந்த மண்டல் கமிஷன் அறிக்கைகள் அமுல்படுத்தப்பட இருக்கிறது. அதை அமுல் படுத்துவதற்கு இவ்வளவு காலம் ஆகியிருக்கிறது. 41 ஆண்டு காலம் கழித்து, இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருந்

தாலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பில் வரவேற்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கின்றேன். காரணம், நான் ஒருவன்தான் என்றைக்கும், இன்றைக்கும் ஏகப் பிரதிநிதி அதற்குக் காரணம்,

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'.

இன்றைக்கு மானம் விலை போகிறது. உங்களிடம் இருந்து சாப்பிட்டு விட்டு, பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி அமைத்தபொழுது வந்து, அமர்ந்து, கொழுத்த சில பேருடைய மானம் பறி போகிறது. அதையும் உணர்ந்திருக்கிறேன். தமிழ், தமிழினம், திருக்குறள், இன்னும் சங்க இலக்கியங்களைப் பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு மானத்தை இழந்து நின்று கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் நடைபிணமாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லாம் வரவேற்றிருக்க வேண்டாமா? உங்களுடைய ஆட்சியில் அமைச்சர்களாக இருந்து, சம்பளத்தை வாங்கியதற்காகவாவது வரவேற்றிருக்க வேண்டாமா? அரசாங்கச் சம்பளத்தைப் பெற்று, தமிழ் மக்களுக்குப் பணியாற்றுவோம் என்று சொல்லி, உறுதிமொழி எடுத்தவர்கள். உறுதிமொழி பதவியோடு போவது கிடையாது. கடைசிக் காலம் வரை உறுதிமொழிதான். உறுதிமொழியை நிறைவேற்றியிருக்க வேண்டாமா? ஆகவே, அப்பேர்ப்பட்ட சுய நலமிகள் இருக்கக்கூடிய இந்தத் தமிழ்நாட்டில், இன்றைக்கு இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வரப் பிரசாதமாக டெல்லியில் இருந்து வந்திருக்கிறது. மீண்டும், யாரும் இங்கே இருந்து டெல்லிக்கு வேறு இடத்திற்குக் கொண்டு போய் அதை சர்ச்சையில் மாட்டி விடக் கூடாது என்பதை இங்கே தெரிவித்து, வரவேற்று, பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி சொல்லி, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

7. சென்னை மத்திய சிறையிலிருந்து சில கைதிகள் தப்பிவிட்டதாக வந்துள்ள செய்தி.

திரு. குமரி அனந்தன் : இன்று கூடி நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் மக்கள் பிரதிநிதிகளாக நாம் கலந்து கொண்டிருக்கிற பொழுது, வெளியே பரப்பரப்பாக ஒரு செய்தி பேசப்படுகிறது. முதல்வர் அவர்கள் இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட ஆட்டோ சங்கர் தப்பி விட்டதாகவும் அதனாலே மக்களுக்குத் துன்பம் விளையும் என்ற அச்சம் வெளியே பரவி இருக்கிறதே, மக்கள்

பிரதிநிதிகள் என்ற முறையிலே முதல் அமைச்சர் அவர்கள் எங்களுக்கு முதலிலே இதுபற்றிய தகவலைச் சொல்லி, நாட்டு மக்களுடைய அச்சத்தைப் போக்குவதற்கு வழி செய்வீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி அப்படி வந்திருக்கிறது. மேல் விவரங் களைச் சேகரிக்கச் சொல்லியிருக்கிறேன். இந்த அவையில் இந்த விவாதம் முடிந்து, இந்த அவை இன்றைக்கு நிறைவு பெறுவதற்கு முன்பு அதுபற்றிய விவரங்களைக் கூறுகிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம் (தொடர்ச்சி).

மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்த ஆணை பிறப் பித்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தல் (தொடர்ச்சி).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, திரு. பி. எச். பாண்டியன் நல்ல கருத்துக் கள் சொன்னதுபற்றி சந்தோஷப்படுகிறேன். இருந்தாலும் ஒருசில கருத்துக்களை மாறாகச் சொல்லிவிட்டார். தமிழினத் தலைவர் பராசரனை நியமித்து விட்டதாகவும், ஏதோ பெரிய தவறு ஏற்பட்டதாகவும் அதனாலே தமிழ்நாடு ஏதோ கெட்டுப் போய் விட்டதாகவும் சொன்னார்களே, அவருடைய தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு லீகல் அட்வைசர் யார்? அவர் கூட இருந்தவர் யார்? அவருடைய லீகல் அட்வைசர் என். சி. ராகவாச்சாரி யார் என்று நான் கேட்கிறேன். அவ ருடைய தலைவர் கூட யார் இருந்தது?

திரு. பி. எச். பாண்டியன் : அன்றைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரை வரவில்லை; இன்றைக்கு வந்திருக்கிறது. இன் னொன்று. நான் பேசுவது அப்படி. தலைவர் இருந்திருந்தால் சொல்லி இருப்பார். நீங்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறீர்கள். நான் பிற்படுத்தப் பட்ட சமுதாயம் என்று எங்கே சொல்லச் சொன்னாலும் சொல்வேன். அதற்காகத்தான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். ஏன் பிற்படுத்தப்பட்டவர் ஒருவரும் கிடைக்கவில்லையா? அவருக்கு அறிவு இல்லையா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அவர் சொல்வது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சி யில் பேச வாய்ப்பிருக்கிறது. திரு. பூவராகன் பேசுவார், அப்பொழுது சொல்லலாம்.

[1990 ஆகஸ்ட் 21

12–55 மணி

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். ஆனால் அதில் இருக்கிற சில குறைகளைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அது தவறானது அல்ல.

திரு. பி. எச். பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் பராசரன் எனக்கு நெருங்கிய நண்பர். நான் 20 வருடங்களாக, வக்கீலாக இருந்தபோது, நாள்தோறும் பார்த்திருக்கிறேன். நேற்றுகூடப் பார்த்தேன். அது வேறு. இது கொள்கை. பிற்படுத்தப்பட்ட சமுதாயம்.

திரு. மா. சுந்தரதாஸ் : எனக்கு முன்னாலே பேசிய துணைத் தலைவர் அவர்கள் தெளிவாக பல்வேறு கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார்கள். விட்டுப்போன ஒருசில கருத் துக்களை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய சிற்று ரையை முடித்துக்கொள்ளலாம் என்று விரும்புகிறேன். இங்கே 'மைனாரிட்டி' சமுதாயம் இருக்கிறது. இந்த மைனாரிட்டி சமுதாயத்திற்கு ஒதுக்கீடு இல்லை. இந்த மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் வரவேற்று பாராட்டியிருக்கிறார்கள். மற்ற மாநில முதலமைச்சர்களை விட நம்முடைய மாநில முதலமைச்சர் இந்த ரிப்போர்ட் வருவதற்கு அதிகமாகப் பாடுபட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோதும் கூட இதற்காகப் பாடுபட்டார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

நானும் ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வன், என்ற முறையில் இது வராதா என்று எதிர்பார்த்தவன் தான். அந்த வகையிலே எனக்கு இதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டைப் பொறுத்த வரையில் மைனாரிட்டி சமுதாயத்திற்கு ஒதுக்கீடு கொடுக்கப் படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. அதற்காகத்தான் பல்வேறு போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் ஒரு மதத்தில் இருப்பது அவருடைய பிறப்புரிமை. It is a secular State அவன் முஸ்லீமாக இருந் தாலும் சரி, கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, இந்துவாக இருந்தாலும் சரி, ஜைனனாக இருந்தாலும் சரி, எந்த மதத்துக் காரனாக இருந்தாலும் அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருக்கிறானோ அதற்குத்தான் ஒதுக்கீடே தவிர மதத்திற்கு ஒதுக்கீடு இல்லை. ஆனால் ஒருசில ஜாதிக்காரர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவர்களுக்கு ஒதுக்கீடு உண்டு. ஒரு மதத்திலிருந்து புத்த மதத்திற்கு மாறினால் ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால் அவன் முஸ்லிமாக மாறினாலோ

அல்லது கிறிஸ்தவனாக மாறினாலோ அவனுக்கு ஒதுக்கீடு இல்லை. இது மிகப் பெரிய குறை. இதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். ஆகவே நான் இந்த அவையின் மூலமாக கேட்டுக்கொள்வது அதைப் பூர்த்தி செய்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். அதன் மூலம் மைனாரிட்டி சமுதாயத்தினுடைய ரைட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ரகுமான்கான் அவர்கள் ஏதோ நாங்கள் எல்லாம் எதிராக ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு கருத்துக்களைச் சொல்வதாகக் குறிப்பிட்டார்கள். நாங்களும் அப்படிச் சொல்லவில்லை. அன்புமிக்கத் தலைவர் ராஜிவ் காந்தி அவர்களும் அப்படிச் சொல்லவில்லை. ராஜீவ் காந்தி அவர்கள் எதிராக கருத்தைச் சொல்லவில்லை. இது ஏன் தேங்கிக் கிடந்தது, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே வந்திருந்தால் பயனடைந்திருப்பார்களே என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒரு பிரச்சனை இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் பிரச்சனை இல்லை. ஆனால் வட மாநிலங்களிலே வேறுவிதமான பிரச்சனை இருக்கிறது. ஒரு நாட்டினுடைய பிரதமர் என்று சொல்லும்போது கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் உள்ள மக்களை, அவர்களுடைய பிரச்சனையைப் பார்க்கும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது. ஆகவேதான், பல முதலமைச்சர்கள் மறுத்திருக்கிறார்கள்; இப்போதுகூட ஜனதாதள முதலமைச்சர் மறுத்திருக்கிறார்; நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த போதும் வரவேற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய பிரச்சனை வேறு; மற்ற மாநிலங்களுடைய பிரச்சனை வேறு. ஒரு பிரதமர் என்ற முறையில் விவகாரங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவேதான் அவர்கள் ஒரு 'சப்-கமிட்டி' போட்டிருந்தார்களே தவிர முடியாது என்று ஒருபோதும் சொல்லவில்லை.

நம்முடைய முதலமைச்சர் கூட இங்கே சில கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் 5 மார்க் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது ஜாதியைப் பற்றிச் சொல்லவில்லை. எல்லா ஜாதிக்காரர்களுக்கும் கிடைக்கும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அந்த எண்ணம் அவர்களுடைய அறிவுப்பூர்வமான உணர்வு. அந்த அளவிற்கு நிற்கிறதே தவிர அவர் தீர்மானமாகச் சொல்லமுடியாது. திட்டமாகச் சொல்ல முடியாது. அவர் பிற்படுத்தப்பட்ட மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவ்வாறு சொல்ல முடியாது. பிற்பட்டவர்களுக்கே போட்டிருக்கலாம். ஆனால் அந்த

அளவுக்கு இல்லை. ஆகவே, உயர்ந்த ஜாதி, கீழ் ஜாதி என்று பார்க்கக்கூடாது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று பார்க்கக் கூடாது. 45 ஆண்டுகள் ஆன பின்னாலும் இதுவரையில் ஒரு குடும்பத்தில் ஒரு பட்டதாரி இல்லையே என்பதற்காக 5 மார்க் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் குடும்பத்தில் ஒருவர் டாக்டராக வரட்டும், எஞ்சினீயராக வரட்டும், ஒரு வழக்கறிஞராக வரட்டும் என்று சொல்லி 5 மார்க் கொடுத்திருக்கிறார்கள். அந்த எண்ணத்திலேதான் ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த 27 சதவீதம் பற்றி அவர்கள் சொல்லவில்லை. மீதி இருக்கிறதே, நமக்கு 50 சதவீதம் பிற்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டில்; அதைப் போன்றிருக்கிற விழுக்காட்டிலே இருந்து கொடுக்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் ஆர்டர் இருக்கிறது. ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறோம். உயர்ந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும் ஓட்டலிலே வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள் ; சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது ?

இங்கே பேசியவர்கள் எல்லாம் அக்ரகாரத்தைப்பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரியும். அக்ரகாரத்திலே உள்ள ஒருவர், என்னோடு படித்தவர் ஓட்டலிலே வேலை செய்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னார்களே தவிர வேறு எந்த விதமான கருத்தையும் சொல்லவில்லை. இதை காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் செயல் முறையிலே பிரச்சனை இருக்கிறது. அதனால்தான் பல்வேறு மாநிலங்களிலே செயல்படுத்த முடியவில்லை. இராஜஸ்தானைப் பொறுத்தவரையில் இரயிலுக்கு தீ வைக்கிறார்கள். யு.பி-யில் பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவினுடைய பிரதமர் என்று சொல்லும்போது இதை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் செய்ய முடியுமே தவிர வேண்டுமென்றே செய்யாமல் இல்லை. அதனால் பலரை கமிட்டியிலே போட்டிருந்தார்கள்.

இங்கே கூட எனக்கு முன்னாலே பேசிய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். தேவிலால் 'இஷ்யூ' வரும் வரையில் இது இல்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் வி. பி. சிங் என்று சொன்னார்கள். அவர் ராஜ்புத். அவரைப்பற்றி எங்கள் கட்சியில் இருப்பவர்களுக்குத் தெரியும். அவர் மகாராஜா ஃபேமிலி'. மகாராஜா குடும்பத்தைச் சேர்ந்தவர். பிற்பட்ட

சமுதாயம் என்று சொன்னால் அதை அவைக் குறிப்பிலிருந்து மாற்றிவிட வேண்டும். இல்லை என்றால் நம்மைப்பற்றி மோசமாக நினைப்பார்கள். மகாராஜா எந்த இடத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிச் சொல்லவில்லை.

திரு. கோ. பூவராகன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம், இராமநாதபுரம் இராஜா கூட மகாராஜா தான். அவர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் அல்ல என்று சொல்லமுடியுமா? அவர் ராஜப் பரம்பரையைச் சேர்ந்தவர் தான். இருந்தாலும் அவர் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லையா? (குறுக்கீடு) இல்லை. இல்லை. மகாராஜா ஏன் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது? அவர் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். (குறுக்கீடு) அவர் 'ஃபார் வேர்டு கம்யூனிட்டி' இல்லை. தவறான தகவல் கொடுத்தால் மறுப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லட்டும். அவர் ராஜ்புத் என்று சொல்கிறோம். அவர் எங்களோடு இருந்தவர் தான். எங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டுப் போனவர்தான். (குறுக்கீடு) காட்டிக் கொடுத்தவர்தான். இது தெரியும். நான் அந்தப் பிரச்சினைக்குள் போகவில்லை. (குறுக்கீடு) அவை முன்னவர் சொல்லட்டும் அல்லது முதலமைச்சர் சொல்லட்டும். அவர் பிற்பட்ட சமுதாயம் என்று சொன்னால் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: காட்டிக்கொடுத்தவர் என்று சொல்கிறார், யாரைக் காட்டிக்கொடுத்தார்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நம்முடைய சுந்தரதாஸ் அவர்கள் என்னை சாட்சிக்கு அழைக்கிறார். நான் சொல்ல விரும்புவது, அவர் முன்னேறிய சமுதாயமா அல்லது பிற்படுத்தப்பட்டவரா என்பது கூடப் பிரச்சினை அல்ல. பிற்படுத்தப்பட்டவராக இருந்து, இதைக் கொண்டு வந்திருந்தால் ஆச்சரியமில்லை. அவர் முன்னேறிய சமுதாயமாக இருந்து இதைக் கொண்டு வந்தது தான் ஆச்சரியம்.

13.00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் அதை எதிர்க்கவில்லை. அவருக்கு அங்கேயிருந்த சிக்கலின் காரணமாகத்தான் இதற்கு வழி பிறந்திருக்கிறதே தவிர, இல்லாவிட்டால் வந்திருக்காது. அதை நான் வர வேற்கிறேன். அங்கேயிருக்கிற தேவிலால் பிரச்சினை காரணத்தால் தான், இதை ஹரிபரியாகச் செய்ததால் தான் வட இந்தியாவில் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) காட்டிக் கொடுத்தவர் என்றால் 1972-ல் அவர் எம்.பி. ஆனார். மரியாதைக்குரிய பூவராகனைப் பொறுத்த வரையில் அவர் எங்கே இருந்தார் என்பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பொதுவான கருத்துக்களைச் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நண்பர் பூவராகன் அவர்களும் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார். அவர் பேசும்போது பதில் அளித்துக் கொள்ளலாம். இப்போது நேரமில்லை. மணி ஒன்றாகி விட்டது.

திரு. மா. சுந்தரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, யார் கொண்டு வந்திருந்தாலும் நான் வரவேற்பதற்கு தயாராக இருக்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இங்கே எனக்கு முன்னால் பேசியவர் சொன்னதால் தான் சொன்னேனே தவிர அவர்கள் கொண்டு வந்ததைத் தவறு என்று சொல்லவில்லை. மண்டல் கமிஷனைப் பொறுத்தவரையில் விவகாரத்திற்குப் போவதை விட நமக்கிருக்கிற குறைகளைத் தீர்க்கிற வகையில் தீர்மானம் அமைய வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

அதைப்போல Educationally, there is no reservation; for example, Army College இருக்கிறது. அதிலே சேர்வதைப்பற்றி இந்த மண்டல் கமிஷன் அறிக்கையில் சொல்லப்படவில்லை. நம்முடைய பிற்படுத்தப் பட்ட சமுதாயக்காரர்கள் அதிலே படிக்க வேண்டும். மண்டல் கமிஷனைப் பொறுத்தவரையில் Educational Benefit கொடுக்கப் படவில்லை. ஆனால் வேலை வாய்ப்பிலே தான் சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, அதைப்போல மோஸ்ட் பேக்வேர்டிற்கு, ஷெட்யூல் காஸ்ட்டிற்கு நாம் ஒதுக்கீடு கொடுத் திருக்கிறோம். கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆனால் மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டில் கல்விக்காக ஒதுக்கப்படவில்லை. ஆனால் கல்வி என்பது ஸ்டேட் சப்ஜெக்ட் என்று சொல்வார்கள். அது சென்ட்ரல் சப்ஜெக்ட்டிலே இருக்கிறது.

Education is in the Concurrent List. Concurrent list-இலே இருக்கிறபோது மத்திய அரசின் பொறுப்பு இருக்கிறது. இப்போது இராணுவத்திலே சேரவேண்டுமென்றால் இராணுவக் கல்லூரியில் படித்தவர்களுக்குத்தான் இடம் கொடுக்கிறார்கள். நம்முடைய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இடம் பெற வேண்டுமென்றுச் சொன்னால் அதிலும் நமக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்பதைச் சேர்த்து இந்தத் தீர்மானத்தில் வழிவகை செய்து மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எல்லோருக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்ஜினியர்களுக்கு, டாக்டர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மண்டல் கமிஷன் அறிக்கையில் ஆடிட்டர்களுக்கு ஒதுக்கப் படவில்லை. ஆடிட்டர்ஸ் என்றால் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். சமுதாயத்தின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. எல்லோருக்கும் தெரியும். ஆடிட்டர்ஸ் என்று சொன்னால் யார் கையில் இருந்து கொண்டிருக்கிறது? It is a Monopoly businees of one Community என்பதை போல இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு இந்த மண்டல் கமிஷனில் வழிவகை செய்யப்படவில்லை. ஏன், நாம் கணக்கு பார்க்க மாட்டோமா? அங்கேயிருக்கிற ஒருவர் ஆடிட்டராக இருந்தால் அவருடைய மகன், மருமகன், மகள் ஆகியோர்தான் ஆடிட்டராக வருகிறார்கள். நம்முடைய சாதாரண பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வரமுடியாத நிலை இருக்கிறது. அதற்கு ஒரு ஸ்டைபெண்ட் கொடுக்கிறார்கள். அந்த ஸ்டைபெண்டை கொடுக்கிறபோது நம்மவர்கள் இருக்கி றார்களா என்று அறிய வேண்டாமா? ஸ்டைபெண்டை கொடுக்கிறபோது அவர்களுக்கு வேண்டியவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்கள். அந்த லிஸ்டை நம்முடைய மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆடிட்டர் ஜெனரல் ஏற்றுக்கொள்கிறார். ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, நம்மவர்கள் அங்கே வர வேண்டுமென்றால் அந்த ஆடிட்டர்களில் இத்தனை விழுக்காடு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் வர வேண்டும் என்பதைச் சேர்க்க வேண்டும். இப்படியுள்ள குறைகளைப் போக்கவேண்டும். நமக்குள்ளே வேண்டும், வேண்டாம் என்று பேசுகிற பிரச்சி னைக்கு இடமில்லை. ஆகவே, அத்தகைய குறைகளைப் போக்குகிற வகையில் செய்ய வேண்டும். மண்டல் கமிஷனில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. இப்போது நேரம் இல்லாத காரணத்தால் அதிகமாகச் சொல்லவில்லை. நாங்கள் படித்துப் பார்த்தபோது அதிகமான குறைகள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் தீர்க்கிற வகையிலே செய்யவேண்டும்.

திரு. வி. பி. சிங் அவர்களுக்குப் பொறுமையில்லாத காரணத்தால், திடீரென்று போட்டதினால் தான் இந்தக்

குறைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இதைத் தெளிவான முறையில் படித்து, குறைகளையெல்லாம் போக்கி, நம்முடைய பிற்படுத்தப் பட்ட சமுதாயத்திற்கு பயனளிக்கிற வகையில் இது இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இந்த மண்டல் கமிஷன் ரிப்போர்ட் வருவதற்காக அரும்பாடுபட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர் கிறேன். வணக்கம்.

13-05 மணி

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய முதல்வர் அவர்களால் இன்றைய தினம் வைக்கப்பட்டிருக்கிற இந்த நன்றி அறிவிப்பு தீர்மானத் திற்கு ஒரு முக்கியத்துவம் வந்திருக்கிறது. நம்முடைய தமிழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு முதல் முறையாக மே மாதத்தில் மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, இன்றைய தினம் பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தருவதற்கு முன் வந்து, இந்த மாதம் ஏழாம் தேதியிலிருந்து அது நடை முறைக்கு வருகிறது என்று சொன்னார்கள். இதிலே முக்கியத் துவம் என்ன இருக்கிறது என்றால், பல மாநிலங்களிலே இன் றைய தினம் ஆங்காங்கு சிறு சிறு சலசலப்புகள் இருக்கின்றன. அந்த சலசலப்புகள் இருக்கின்றபோது, எப்பபாதும் முன் னோடியாக இருக்கிற தமிழ்நாடு 100 ஆண்டுகளுக்கு மேலாகவே மிகவும் பின்தங்கிய மக்களுக்காக பாடுபட்டு வந்திருக்கிறது. பல நேரங்களில் வெள்ளையர் ஆட்சியிலும் கூட 1885-ஆம் ஆண்டு தனியாக இதற்கு என்று கோர்ட் ஒன்று, ஆரம்பித்து, அப்போது படிக்கின்ற மாணவர்களுக்கு பின் தங்கிய மாணவர் களுக்கு பணம் ஒதுக்கி உதவி செய்ததாக இன்றைய தினம் நாம் அறிகிறோம். தொடர்ந்து பல முறையிலே கம்யூனல் ஜி.ஓ. மூலமாக, தமிழ்நாடு முன்னோடியாக இருந்து, அதை நிறைவேற்றி வருகிறது. அதைத் தொடர்ந்து பல கமிஷன்கள், கமிட்டிகள் எல்லாம் போடப்பட்டும் கூட, கடைசியாக மண்டல் கமிஷனிலே இதற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு இருக்கிறது.

மண்டல் கமிஷன் ஏதோ அவசரக் கோலத்தில் அந்த அறிக் கையை வைக்கவில்லை. ஓர் ஆண்டுக் காலம் பல இடங்களுக்குச் சென்று, பல மாநிலங்களுக்குச் சென்று, மொத்தம் உள்ள 407 மாவட்டங்களிலே 405 மாவட்டங்களுக்கு மேலே பிர யாணம் செய்து, இங்கே இருப்பவர்களை எல்லாம் பார்த்து, தனிப்பட்ட அலுவலர்களிலே இதிலே ஏதாவது குறை இருக்கிறதா என்று கேட்டு அறிந்து, அப்படி குறை இருக்குமானால்

அதையும் கேட்டு அறிந்து, அரசியல்வாதிகளைக் கேட்டு அறிந்து சோசியல் நிறுவனங்களிலே யாராவது இருந்தால், அவர்களை எல்லாம் கேட்டு அறிந்து எல்லோருடைய கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, பரிசீலனை செய்து, முன்னாலே வைக்கப் பட்ட அறிக்கைகளிலே இருந்த குறைகளை எல்லாம் போக்கி, இதை நிறைவேற்றவேண்டும் என்று மண்டல் கமிஷன் அறிக்கை சொல்லியிருக்கிறது.

அதிலே கூட நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ஏதோ ஒருவர் அதிலே டிசன்டிங் நோட் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த டிசன்டிங் நோட்டிலே கொடுத்திருப்பது கூட, முதலாவது, இதை முழுக்க முழுக்க வரவேற்றிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம், அதிலே இரண்டு பிரிவாக இந்த பேக்வார்ட் கிளாசைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒன்று டெப்பரஸ்டு பேக் வார்டு கிளாஸ், அடுத்தது, இண்டர் மீடியட் பேக்வார்டு கிளாஸ் என்று அதைப் பிரிப்பதற்காகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்த மண்டல் கமிஷனிலே குறைகள் இருக்கின்றன, அதை நிறைவேற்றக் கூடாது என்று முன்னாலே சொன்ன அந்த டிசன்டிங் நோட் மாதிரி அதிலே இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பல பேர்கள் இன்றைய தினம் இந்த அறிக்கையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்து, அதை நிறைவேற்றுகிற ஒரு நிலை வருகிறபோது, அதிலே ஏற்கனவே தொடர்ந்து அனுபவித்துக் கொண்டு இருப் பவர்களுடைய நெஞ்சு வெடித்து விடும், இதயம் நின்று விடும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இன்றைய தினம் பார்க்கிறேன். சில பேர்களுக்கு அதைப் படித்துப் பார்ப்பதிலே கூட, நடைமுறைப்படுத்துவதிலே கூட சங்கடங்கள் ஏற்பட்டு இருப்பதைப் பார்த்து, இன்றைய தினம் வியாக்கியானங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வியாக்கியானத்திலே இதை ஏன் நீங்கள் விட்டு விட்டீர்கள் என்று சொல்கிறார்கள். நான் உங்களுக்கு குறிப்பாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சி யினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ராஜீவ் காந்தியினுடைய தாத்தா அவர்களே இதை ஏற்றுக் கொண் டார்கள் என்று. தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு முன்னாலே யிருந்து நாம் இதற்காக முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கி றோம். நடைமுறையிலே நடந்து கொண்டு இருக்கிறது. இப்போது இருக்கின்ற ராஜீவ் காந்தி அவர்கள், மூன்றிலே இரண்டு மடங்கு பெரும்பான்மை பலம் பெற்று, 5 ஆண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள், ஏன் இதை அப் போது நிறைவேற்றவில்லை ? அப்போது இந்தக் குறைகள் எல்லாம் அவர்களுடைய கண்ணிலே படவில்லையா ? அப் போது பின்தங்கிய சமுதாயம் நாட்டிலே இருப்பது அவர்களுக்குத்

தெரியாதா ? அப்போது அவர்களைத் தூக்கிப் பிடிப்பதற்கு ஆள் இல்லையா ? ஏதோ எங்கள் கட்சியின் பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களை பல கட்சிகள் தூக்கிப் பிடித்துக் கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களை கட்சிகள் தூக்கிப் பிடிக்கவில்லை. மக்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். சில பேர்களை இருந்த இடத்திலே யிருந்து இறக்கி வைத்து விட்டு, அவர்களை உட்கார வைத் திருக்கிறார்கள். யாரும் தூக்கிப் பிடிக்க வேண்டிய அவசியத் திலே இல்லை. (குறுக்கீடு).

நீங்கள் குறுக்கிட்டு என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள் ளக்கூடாது. நீங்கள் பேசுவதற்கு நான் பதில் சொல்வதாக இல்லை. எல்லோருக்கும் பதில் சொல்வதாக இருந்தால் நேரம் அதிகமாகும். அதனால்தான் சொல்கிறேன். நீங்கள் அவர்களைத் தூக்கிப் பிடிப்பதாகச் சொன்னீர்களே, அவர் களைத் தூக்கி வைத்திருப்பதாகச் சொன்னீர்களே, அதற்காகச் சொல்கிறேன். ஏற்கனவே இருந்தவர்களை இறக்கி வைத்து விட்டு, மக்கள் இவரை உட்கார வைத்ததை நீங்கள் ஒன்றும் மாற்ற முடியாது. 5 ஆண்டு காலமாக அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள், ஏன் செய்யவில்லை ? ஆனால் இன் றைய தினம் இந்த மண்டல் கமிஷன் அறிக்கையிலே ஓட்டை உடைசல் இருக்கிறது என்று சொன்னார்கள். அன்றைக்கு எத்தனையோ முறை அதைப் படித்துப் பார்த்திருக்கலாம். அறிக்கை வைத்த பிறகு, அந்த ஓட்டை உடைசலை நிவர்த்தி செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்தார்கள், ஏன் செய்யவில்லை ? இப்போது ஆத்திரம் பொங்கிக் கொண்டு வருகிறது, இதைச் செய்கின்றபோது, இயற்கையிலே அவர்கள் எழுதி வைத்திருக் கிறார்கள். இதை நடைமுறைப்படுத்துகிறபோது, பல பேர் களுக்கு ஆத்திரம் வரும், அவர்கள் நெஞ்சம் வெடித்து நின்று விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைதான் இன் றைய தினம் சில பேர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கின்றபோது, நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வாறு அன்றைக்கு பொறுப்புக்கு வந்த பிறகு, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த மன்றத்திலே தீர் மானம் கொண்டு வந்தார்களோ, அதைப்போல இன்றைய தினம் அது நிறைவேற்றப்பட்ட பிறகு, இதற்கும் முன்னோடி யாக இருந்து, அவர்களுக்குப் பாராட்டும், நன்றியும் சொல்லு கின்ற நிலையை எடுத்து இருப்பதை நான் பெரிதும் வரவேற் கிறேன். பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த மண்டல் கமிஷனிலே வேலை வாய்ப்புக்கு மட்டும் தான் இன்றைக்குச் சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே எவ்வளவு பெரிய பரபரப்பு ஏற்பட்டு, எரிச்சல், வயிற்றெரிச்சல் எல்லாம் இருக் கிறது. இன்றைக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் அவரவர் களுக்கு அதிகமாகவே, மண்டல் கமிஷன் சொல்லியதை விட

அதிகமாகவே, ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்பாடு செய்யப் பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், அதிகளவிலே இதற்கு பெரிய வரவேற்பு, நல்ல முறையிலே படிப்பதற்கும், ஒவ்வொரு பகுதி வாரியாக, மிகவும் பின்தங்கிய வர்கள், பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று பல பிரிவினருக்கும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட்டு இருக்கின்றன. கல்லூரியில் சேருவது முதற்கொண்டு, படிப்பது முதற்கொண்டு, அவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் ஏற் பட்டாலும், அதைப் போக்குகின்ற வகையில், பணம் கொடுத்து, உணவு, உடை எல்லாம் கொடுத்து, சலுகைகளைக் கொடுத்து பல்வேறு வகையில் மேற்கொண்டு படிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

13-10 மணி

இன்றைய தினம் மத்திய நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் நம்மால் கொடுப் பதற்கு அரசியல் சட்டத்திலே இடம் இல்லை. அரசியல் சட்டத்தில் இன்னும் சொல்லப்பட்டிருப்பது, மிகவும் பின் தங்கியவர்கள், பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நம்முடைய அரசாங்கத்திலே தனிச் சலுகை அளிக்க வேண்டு மென்று. அதிலே பொருளாதார ரீதியை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது நியதி. படிப்பில், சமுதாயத்தில் வேறு கார ணங்களினால் பின்தங்கி இருக்கின்ற அவர்களை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நியதி. ஆனால் அரசியல் சட்டத்தில் வேறு குறை இருக்குமென்று சொன்னால், பல முறை நீதி மன்றங்களுக்குப் போயிருக்கிறார்கள். இந்த மண்டல் கமிஷனிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. நீதி மன்றத்திலே போய் நீதிமன்றத் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் எது வேண்டுமானாலும் 50 சதவீதத்திற்குள்ளே செய்து கொள்ள லாம். மண்டல் கமிஷனிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 27 சத வீதம் கொடுக்கப்படும்போது கூட, இந்த மக்கள் இந்தியா முழு மைக்கும் இரண்டு பங்கு மக்கள் 52 சதவீதத்திற்கும் மேலே இருந்தும் கூட, 27 சதவீதத்தை ஒத்துக் கொள்கிறோம் என்று மனதிலே மிகுந்த வேதனையோடு அதைக் கொடுத்திருக்கி றார்கள். அப்படியிருக்கும்போது 27 சதவீதம் ஏற்கெனவே 50 சதவீதம், 77 சதவீதம் சுதந்திரம் பெற்ற பிறகு தனிப் பட்ட நிலையிலே இருக்கின்றவர்கள் அனுபவித்துக் கொண் டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் ரூ. 40,000 கோடிக்கு மேலே செலவிட்டு, 600-க்கும் மேற்பட்ட பொது நிறுவனங் களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது ? எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ? எத்தனை பேருக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை ? கொடுக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? அது யாருடைய பணம் ? எங்கேயிருந்து வந்தது அந்தப் பணம் ? தனிப்பட்டவர்கள், பெரிய வளர்ந்த சமுதாயத்தில் இருக்கின்றவர்கள் இதனை அனுபவித்துக் கொண்டு வந்தார்கள். 77 சதவீதம் சுதந்திரம் அடைந்த

பிறகு 41 ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, இன்றைய தினம் சங்கடமும், கஷ்டமும் இருப்பதைப் பார்க்கும் போது அவர்கள் கஷ்டப்படத்தான் செய்வார்கள். அவர்கள் இதுவரை விட்டுக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் அதை விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. எங்களுக்கு உரிமை இருக்கிறது, கடமை இருக்கிறது, நீங்கள் செய்யத் தவறி விட்டீர்கள் என்று தான் நாம் குரல் கொடுக்கின்றோம். அந்தக் குரலை மதித்து நம்முடைய பாரதப் பிரதமர் இன்றைய தினம் அதை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். இந்த 27 சதவீதமும் இன்றைய தினம் நல்ல முறையில் நிறைவேற்றப் படவேண்டும்.

பல புள்ளி விவரங்களோடு எனக்குப் பின்னாலே முதல்வர் அவர்கள் பேச இருப்பதாலே எனக்கு அதிகமான நேர மில்லை. இன்றைய தினம், அந்த 27 சதவீதத்தை மண்டல் கமிஷனிலே கொடுத்து இருப்பதைப் போல, அதில் ஷெட்யூல்டு வகுப்பிலே, ஷெட்யூல்டு ட்ரைபிலே என்ன எல்லாம் விதிகள் இருக்கின்றனவோ. வயதிலே அல்லது புரமோஷனிலே, அதில் என்ன கொடுக்கிறார்களோ, அவையெல்லாம் பின் தங்கிய மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று மண்டல் கமிஷனிலே பிரிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவறாமல் பின் பற்ற வேண்டும். இப்போது ஷெட்யூல்டு கமிஷனிலே ஒரு நியதி. ஒவ்வொரு நிலையிலும், அவர்களுடைய கோட்டாக்கள் நிரப்பப்படுகின்றனவா என்று பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று தனியாக மத்திய அரசாங்கத்தாலே ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு, அந்த நிறுவனம் ஆண்டு தோறும் அல்லது அவ்வப்போது நிலைமைகளை பார்க்கும் போது, இந்தக் கோட்டா சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு சரியான நிலைமை, ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் தீர்மானத் திலே சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மண்டல் கமிஷனிலே விடப்பட்டிருக்கின்ற மற்ற காரி யங்கள் எல்லாம் தொடர்ந்து நிலைமை மாறுகின்றபோது, வருகின்றபோது அதை நிறைவேற்றுவதற்கு, அதை இப்போதே நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். படிப்பில் மற்றும் பொது நிறுவனங்களிலே வேலை செய்வதிலே, மற்ற எல்லா காரியங்களிலே மண்டல் கமிஷனிலே என்ன எல்லாம் பரிந்துரைகள் செய்யப்பட்டு இருக்கின்றனவோ, அந்தப் பரிந்துரை களை ஏற்றுச் செய்வதற்கு, ஏற்பாடு செய்யப்பட வேண்டு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தென் நாட்டைப் பொறுத்த அளவிலே, இன் றைய தினம் பல மாநிலங்களிலே மத்திய அரசாங்கம் அளித்ததைவிட அதிகமாகவே கொடுத்திருக்கிறார்கள், சலுகை அளித்திருக்கிறார்கள். படிப்பிலே, உத்தியோகத்திலே பல

1990 ஆகஸ்ட் 21] [திரு. கோ. பூவராகன்]

நிலைகளிலே என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த நிலையை குறைத்து விடக் கூடாது. 27 சதவீதம் இருக்கின்றபோது, நம்முடைய மாநிலத்திலே 30 சதவீதம் கொடுத்திருந்தாலும், அந்த 30 சதவீதத்தை குறைத்து விடக் கூடாது. 27-க்கு கொண்டு வந்து விடக் கூடாது, என்று மண்டல் கமிஷனிலே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை

நான் ஒன்றைக் கேட்டுக் கொள்வது, நம்முடைய நாயக் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். '' Depressed Backward Class and Intermediate Backward Class '' என்று. இப்போது இருக்கின்ற 27 சதவீதத்திலே நீங்கள் தமிழ்நாட்டில் சொல்வதைப் போல், 'Most Backward Class' என்று வைத்திருப்பதைப்போன்று, அதிலே 15 சதவீதமாவது, மிகவும் பின்தங்கிய மக்களுக்கு ஒதுக்கித் தர முடியுமா என்று உங்களுடைய பரிந்துரையை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்திலே நீங்கள் எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டு, முழுமையாக இன்றைய தினம், நீங்கள் மனம் உவந்து பாரதப் பிரதமர் அவர்களைப் பாராட்டுகின்ற நிலையிலே அத்தோடு எங்களுடைய கட்சித் தலைவர் திரு. தீட்சிதர் அவர்கள் கொண்டு வந்தார்கள், மொரார்ஜி தேசாய் காலத்தில் இது அமைக்கப்பட்டது, என்று அதையும், அந்தப் பெயரையும் சேர்த்துக் கொண்டீர்கள். அதற்கு நான் பெரிதும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

13-15 மணி

முழு மனதாக நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் சொன்னது போல, ஏதோ முற்போக்கு கட்சி, ராஜா, மகாராஜா என்றெல்லாம் நீங்கள் சொன்னது போல, அவர் மகாராஜாவாக இருந்தாலும், ராஜாவாக இருந்தாலும், மக்களுடைய குறையைக் கண்டறிந்து அதற்காகத்தான் இந்த ஆட்சி இருக்கிறது என்பதை உணர்ந்து இந்த நல்ல நேரத்திலே, நல்ல சமயத்திலே, என்ன நிலை வந்தாலும் அதில் உறுதியாக இருந்து இந்த மண்டல் கமிஷன் அறிக்கையை மன்றத்திலே வைத்து நிறைவேற்றுவதற்கு முன் வந்தமைக்காக பெரிதும் நான் அவர்களைப் பாராட்டுகிறேன். உங்களோடு சேர்ந்து மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி சொல்லுகிறேன். பாராட்டு சொல்லுகிறேன் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்பு மிக்க ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள். அதை வழி மொழிந்து, ஏனைய உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பேச்சுக்களோடு என்னுடைய பேச்சையும் நான் இணைத்துக்

கொள்கிறேன். என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், முழு ஆதரவையும் இந்த தீர்மானத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள், நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இது வந்திருந்தாலும், ''இது எனக்குக் கூட மனநிறைவு தருகின்ற ஒரு பரிந்துரையாக இல்லை, ஏனென்றால் நாம் மேற் கொண்டிருக்கிற பாதையிலே நாம் இன்னும் நெடுந்தூரம் நடந்து செல்லக் கூடியவர்களாக இருக்கிறோம். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை கை கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையில் வளத்தைச் சேர்க்க வேண்டுமானால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடக்கப்பட்ட சமுதாயத்தை நாம் செய்திருக்கிற பரிந்துரைகளால் ஒரு சில ஆண்டுகளிலாவது அவர்களை தூக்கி விட முடியும்என்று நான் கருதவில்லை. நான் மன நிறைவு பெற்றிருக்கிறேன் என்று கூட நான் நினைக்கவில்லை, ஆனால் ஒன்று, சட்டத்தின் அடிப்படையில் 27 சதவீதம் தான் ஒதுக்கீடு செய்ய முடியும் என்ற கட்டாயத்தின் அடிப்படையில், நான் மத்திய அரசு துறைகளிலேயும் மத்திய அரசு சார்புடைய துறைகளிலேயும் 27 சதவீதம் என்று இன்றிருக்கிற சட்டத்தின் அடிப்படையிலே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற பரிந்துரையைச் செய்கிறேன். ஆனால் இது எனக்கு மன நிறைவு தரவில்லை. இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் என்று தான் நினைக்கிறேன், என்ற ஒரு கருத்தை வெளியிட்டுத்தான் மறைந்த மண்டல் அவர்கள் தன்னுடைய பரிந்துரையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

1980-லே தான் சமர்ப்பித்தார்கள். அதற்கு முந்தி 1953லே காகா சாகிப் கலேல்கர் அவர்கள் பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த 1953லேயிருந்து இந்த இரண்டாவது கமிஷன் அமைக்கப்படுகிற வரையிலே அந்த காகா சாகிப் கலேல்கர் அவர்களுடைய பரிந்துரைகள் என்ன ஆயின என்று யாருக்கும் தெரியாது. அதற்குப் பிறகு 1980லே இந்தக் குழு அமைக்கப்பட்டபோது, அன்றைய பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களிடம் இது ஏன் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்டால், அதற்கு என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், குழுக்கள் அமைந்தன, ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் அமைக்கப்பட்ட குழுக்கள் தங்கள் ஆய்வு உரையின் அடிப்படையில் எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும், நடைமுறைப்படுத்துவதற்கான முறைகள் என்னென்ன என்று அரசுக்கு தெரிவிக்காத காரணத்தினால்தான் நாங்கள் ஆட்சியில் இருந்த போது, இந்தப் பரிந்துரைகளையெல்லாம், காகா சாகிப் கலேல்கர் குழுவாக இருந்தாலும் சரி, மண்டல் கமிஷனுடைய

பரிந்துரைகளாக இருந்தாலும் சரி, நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்கிறார்கள், என்று இங்கே பேசிய நண்பர்கள் சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் நான் தெரிவித்துக் கொள்வது, இந்தக் குழுக்கள் அமைத்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று ஒரு ஏற்பாட்டை செய்வதையே, அதைக் கிடப்பில் போடவேண்டும் என்ற ஒரு எண்ணத்தினாலே தானே தவிர வேறல்ல. குழுக்களில் யார் இடம் பெறுகிறார்கள்? அவர்களுடைய மனோ நிலை என்ன? அவர்களுடைய பரிந்துரைகளின் மீது எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதுதான் முக்கியமே தவிர குழுவி னுடைய ஆய்வு உரையினுடைய விளக்க அறிக்கை கொடுக்கப் படவில்லை ; எனவே நாங்கள் செய்யவில்லை என்று சொல்வது எல்லாம் சரியானது அல்ல என்று தான் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

13-20 மணி

என்னைப் பொறுத்த வரையில் இதைக் கட்சி அடிப்படை யிலே நான் அணுகவில்லை. இரண்டு தத்துவங்கள். அந்த இரண்டு தத்துவங்களிலே ஒன்று, அநீதிக்கு ஆளாக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு தத்துவம். அதுதான் சமூக நீதி. அந்த சமூக நீதியை எந்த அளவிற்கு இந்த நாட்டிலே நாம் வலிமைபெறச் செய்ய வேண்டும். அதற்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டும் என்ற ஒரு பிரச்சினையின் அடிப்படையிலே தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமே தவிர இது பொருளாதார அடிப்படையில் செய்யப்பட வேண்டுமா அல்லது வேறு அடிப்படையில் செய்யப் பட வேண்டுமா என்று சொன்னால் சமூக நீதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும் என்பதுதான் மிகமுக்கியமானது. ஏனென் றால் அரசமைப்புச் சட்டத்தினுடைய, மாண்புமிகு முதல்வர் அவர்களே குறிப்பிட்டிருக்கிற 340-வது விதி மிகத் தெளிவாகச் சொல்கிறது. சோஷியலி அண்டு எஜுகேஷனலி பேக்வார்டு. சமூதாய ரீதியாகவும், கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்ட வர்களுடைய நல்வாழ்வுக்காக குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஜனாதிபதி அவர்கள் அவ்வறிக்கையைப் பாராளுமன்றத்தினுடைய இரு அவைகளிலும் வைக்க வேண்டும். வைப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று இந்த ஆர்ட்டிகிள் 340-இலே சொல்லப்பட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன். என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது? ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நட வடிக்கை இன்றைக்கு எடுத்திருக்கிறார்களே, அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அரசியல் சிக்கல்கள். அந்த சிக்கல்களிலே அவர்களுக்கு உருவாகியிருக்

கிற அரசியல் பிரச்சினைகள். இதிலேயிருந்து மக்களுடைய கவனத்தை திருப்புவதற்காகத் தான் இன்றைக்கு இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது இன்றைய தேசீய முன்னணி அரசாங்கம் என்ற ஒரு வாதத்தை இங்கே நண்பர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படி என்றால் இதை விட மிகப் பெரிய சிக்கல் ஒன்று கடந்த அரசுக்கு வரவில்லையா? போஃபார்ஸ் சிக்கல் என்ற ஒன்றுவரவில் லையா? நீர்மூழ்கிக் கப்பல் சிக்கல் என்ற ஒன்று வரவில்லையா? மிகப்பெரிய ** குற்றச்சாட்டு வரவில்லையா? நாட்டுமக்கள் அனைவரும் இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தவில்லையா? (குறுக்கீடு-கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகத் தானே பேசுகிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : ** என்ற வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது, சம்பந்தமேயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ** ஒழிப்போம். அந்த ** என்ற சொல்லை மட்டும் எடுத்து விடுவோம். (குறுக்கீடு) அதைத்தான் சொல்லிவிட்டேனே. ** என்ற சொல்லை மட்டும் எடுத்துவிடுவோம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : சபாநாயகர் அவர்களே, நாட்டிலே எல்லா பத்திரிக்கைகளிலும் வந்த செய்தியைத்தான் நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பத்திரிகையிலே வந்த செய்தி எல்லாவற்றையும் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ஒழித்து விடுவோம். நீங்கள் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

திரு. எம். அப்துல் லத்தீப் : நான் அதற்குப் பதில் சொல்லவும் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் அப்புறம் பதில் சொல்வோம். இப்போது மண்டலுக்கு வாருங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : நான் கேட்கிறேன். நான் சொன்னதற்கு பதில் என்ன? (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்துல் லத்தீப் அவர்கள் அதை விட்டுவிட்டு மண்டலுக்கு வாருங்கள்.

Thiru M. ABDUL LATHEEF: I have got every right to answer. The matter was raised on the floor of the House. I have got every right to answer- (Interruption) I am not yielding.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

Thiru S. R. BALASUBRAMANIAM : If you are not going to allow us to raise a point of order, we will have to stage a walk-out.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேரும் உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அதை ஒத்துக்கொள்ள முடியாது. தேவையில்லாமல் அனாவசியமாக இழுக்கிறார்கள். This is not related to Mandal Commission Report.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதங்களை யாரும் திசை திருப்பக் கூடாது. ஒரு வாதத்திற்குத் துணை செய்வதற்காக மேற்கோள் காட்டுகின்ற செய்திகள். மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அடிப்படையிலேதான் இப்போது தீர்மானம். இப்போது நீங்கள் வேறு வாதத்திற்குப் போக வேண்டாம். அதனால் நீங்கள் நேரடியாக மண்டலுக்கு வாருங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : சபாநாயகருடைய உணர்வோடு நான் ஒத்துப்போகிறேன். அதை ஆதரிக்கிறேன். மத்திய அரசு நல்ல எண்ணத்தோடு இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவோம் என்று தேதியைக் குறிப்பிட்டது. அதை நீங்கள் வரவேற்றிருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் அதற்கு மாறாக நீங்கள் என்ன சொன்னீர்கள்? ஏற்பட்ட அரசியல் சிக்கல் ; அதனால் உருவாகியிருக்கின்ற அரசியல் பிரச்சினைகள். அந்தப் பிரச்சினைகள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அவர் பொதுவாகத்தான் பேசுகிறார். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், உட்காருங்கள். பொதுவாகப் பேசும்போதெல்லாம் குறுக்கிடக் கூடாது. நீங்கள் ஒரு தொடரை எடுக்கச் சொன்னீர்கள். எடுத்தாகிவிட்டது. பொதுவாகப் பேசுவதற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று வாதத்தை எழுப்பக்கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : திரும்பத் திரும்ப அவர் அதையே சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, இங்கே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. தங்களுடைய அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் சொன்னீர்கள். நாம் எல்லோரும் ஒட்டு மொத்தமாக இருந்து, இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். மகிழ்ச்சிப்பூர்வமான ஒரு தீர்மானம் என்று சொன்னீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன்.

13-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களும் உங்களோடு சேர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள், அதனாலே அப்படி வாருங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : சரி, ஆனால் நல்லெண்ணத்திலே செய்யப்பட்ட அந்தக் காரியத்தை, பிரதமரின் மீது ஒரு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், அரசியல் பிரச்சினைக்கு மக்களுடைய திசையைத் திருப்புகின்ற வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உங்களுக்கு ஏற்படாத சிக்கலா? உங்களுக்கு ஏற்படாத பிரச்சினைகளா? இன்றைக்கு (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இப்படிப் பேசித்தான் இந்தத் தீர்மானம் நிறைவேற வேண்டுமென்றால், நாங்கள் இந்தச் சபையிலே பங்கேற்கத் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பொதுவாகத் தான் பேசுகிறார்.

திரு. எஸ். ஆர். பசலசுப்பிரமணியம் : நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. தேவையே இல்லாமல்......(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய கொறடா அவர்கள் உணர்ச்சி வசப்படுகிறார் என்று சொன்னால், நீங்கள் சில ஆலோசனைகளைச் சொல்லி, அமைதியாக எல்லோரும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உணர்ச்சி வசப் படுகிறார் என்று சொல்லவே இல்லையே!

திரு. குமரி அனந்தன் : அதை நானும் ஒத்துக்கொண்டதாக இருந்தால் அது வேறு மாதிரி இந்தச் சபையிலே நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே இப்படிச் சொல்லக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : அவர்கள் இருக்கின்ற மனதிலேயே நானும் உணர்ந்தாலும்கூட, அதற்கு உடனேயே நாங்கள் ஒப்புச் கொண்டு விட்டால், வேறு மாதிரி ஆகிவிடும் என்பதற்காகச்

சொல்கிறேன். அவர்கள் இந்த அளவுக்கு இவ்வளவு நேரம் முயற்சி பண்ணி, முயற்சி பண்ணி, நீங்கள் சொல்கிற காரணத்தினாலே அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வி. பி. சிங் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்த ஒன்றை நாங்கள் அரசியல் காரணத்திற்காக என்று சொன்னோம் என்று எங்களைச் சொல்கிறார். நாங்கள் எடுத்து வைத்திருக்கின்ற ஆதாரம், தலைப்போடு இங்கே வைத்திருக்கிறேன். பி.ஜே.பி. சொன்னது. தேவிலால் கொண்டு வந்திருக்கின்ற, தேவிலாலால் எழுந்திருக்கின்ற எழுச்சியையும், கிளர்ச்சியையும் திசை திருப்புவதற்குக் கொண்டு வந்தது என்று பி.ஜே.பி. சொல்லி இருக்கிறதே என்றுதான் நாங்கள் சொன்னோம். பி.ஜே.பி. என்று சொல்கிறபோது, உங்களை ஆதரித்து நிற்கின்ற கட்சி உங்களுக்குச் சொல்கிறதே என்றுதான் சொன்னோம். அதைப்போலே, நமது மரியாதைக்குரிய கொறடா பேசும்போது, அங்கேயெல்லாம் போராட்டங்கள் நடக்கின்றனவே, அங்கேயெல்லாம் காங்கிரசா நடத்துகிறது, உங்களைச் சேர்ந்தவர்கள்தானே நடத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன காரணத்தினாலே, நான் அங்கிருக்கின்றபோதே கேட்டுக் கொண்டிருந்தேன், 'போஃபார்ஸைப்' பற்றி வந்தபோது, ** என்று சொல்லி, நீங்கள் மாற்றவேண்டும் என்று சொன்னீர்கள். பத்திரிகையிலே வந்ததையெல்லாம் பேசுவதாக இருந்தால், அவர் கட்சிக்காரரைப் பற்றிக்கூட பத்திரிகையிலே வந்தது. நான் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், அது மீண்டும் சண்டையை வளர்த்துக் கொண்டே போகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் ** ஒழிப்போம் என்று சொல்லி விட்டேனே!

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, பி.ஜே.பி. யினுடைய கருத்தின் அடிப்படையில், தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கின்ற பி.ஜே.பி.யே மாறுபட்ட கருத்தைச் சொல்லி இருக்கிறது. தேவிலால் உருவாக்கிய பிரச்சினையைச் சமாளிப்பதற்காக இந்த அறிக்கையை, பரிந்துரையை, அவசர, அவசரமாக அரசு ஏற்றுக்கொண்டது, பி.ஜே.பி.யும் மாறுபட்டிருக்கிறது என்ற கருத்தை மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. பி. ஜே. பி. இதை மறுத்திருக்கிறது, மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறது, அதிலே சந்தேகம் இல்லை. மைனாரிட்டி கமிஷனைப் பற்றியும் பி.ஜே.பி. சொன்ன ஒரு கருத்தை மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அதுவும் உண்மைதான். ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நான் கேட்பது, ஒரு கட்சி ஆட்சி, தேசிய முன்னணியினுடைய ஆட்சி தொடருவதற்கு பி.ஜே.பி.யினுடைய ஆதரவு இன்றியமையாதது ; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆதரவு இன்றியமையாதது ; அப்படி இன்றியமையாத ஆதரவு கொடுக்கவேண்டிய ஒரு கட்சி மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும், இந்த ஆட்சி நீடித்தாலும், நீடிக்காவிட்டாலும், நான், பி.ஜே.பி. என்ன நினைத்தாலும், சிறுபான்மை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மண்டல் கமிஷன் செய்த பரிந்துரைகளை நிறைவேற்றுவேன் ; ஆட்சியே போனாலும் பரவாயில்லை என்று சொல்கின்ற துணிவு — உங்களுடைய சொந்த வாதத்திலேயே நீங்கள் ஏற்றுக்கொண்டீர்களே, நான் உங்களைக் கேட்கிறேன்—காகா சாஹேப் கலேல்கர் பரிந்துரைகள் எத்தனை ஆண்டுகள் தூங்கிக் கொண்டிருந்தன? அவைகள் அடக்கம் செய்யப்பட்டன? மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள் 10 ஆண்டுகள் தூங்கிக் கொண்டிருந்தனவே, இன்றைக்கு ஆட்சி இருக்குமா, இல்லையா என்ற நிலையிலே கூட, எது நடந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ வேண்டும் (குறுக்கீடு) என்பதற்காகச் செய்தாரே, அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : திரும்பத் திரும்ப வருவதாலே. . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பி. சொல்லட்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே 9 ஆண்டு காலம் வி. பி. சிங் எங்கே இருந்தார்? 1987 மார்ச் மாதம் அல்லது ஏப்ரல் மாதம்வரை அந்த வி.பி.சிங் காங்கிரசிலேதான் இருந்தார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதத்தைத் திசை திருப்பக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், பேரவை முன்னவர் அவர்கள் சொல்வார்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா அவர்கள் கேட்கிறபோது, வி.பி. சிங் எங்கே இருந்தார் என்று கேட்டார். பிரதமர் ராஜீவ் காந்திக்கு அடங்கி இருந்தார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அதிலே இரண்டு ஆண்டு காலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய விளக்கத்தில் நீங்கள் கேட்ட கேள்வியே வேறு மாதிரியாகப் போய்

விட்டது. (குறுக்கீடு) திரு. அப்துல் லத்தீப், தொடர்ந்து பேசட்டும். (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது சரியாகச் சொல்லி இருந்தீர்கள் என்றால் எடுத்திருக்கலாம். வி. பி. சிங் எங்கே இருந்தார் என்று கேட்பது நன்றாக இருக்காது. (குறுக்கீடு)

13-30 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அப்போது அவர் நிறைவேற்றக்கூடிய இடத்திலிருந்தும் நிறைவேற்றவில்லை என்பது.

திரு. எம். அப்துல் லத்தீப் : எங்கே இருந்தார் என்ற கேள்வியைக் கேட்கிறார். அதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அடுத்ததற்கு வாருங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : சொல்லிச் சொல்லிப் பார்த்து கேளாக் காதினர்களாக இருந்த காரணத்தால் அவர் வெளியேறி விட்டார் அவ்வளவுதான். சொல்லிச் சொல்லிப் பார்த்தார் கேளாக் காதினர்களாக இருந்தீர்கள், மனம் இல்லாமல் இருந்தீர்கள், எனவேதான் அவர் வெளியேறினார் என்பதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : சென்ற ஆண்டுக்கு முன்னர் ஏதாவது ஒரு இடத்தில் திரு. வி. பி. சிங் இதைப் பற்றிப் பேசியிருக்கிறாரா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் செய்தி உங்கள் இரண்டு பேருக்கு மட்டும் எப்படித் தெரிந்தது என்பது தான் எனக்குத் தெரியவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : 1980 ஆம் ஆண்டு இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் திரு. வி. பி. சிங் உத்திரப் பிரதேசத்தினுடைய முதலமைச்சராக இருந்தார். செயல்படுத்தியிருக்கலாம். செயல்படுத்தினார்களா ? செயல்படுத்தவில்லை. செயற்படுத்தாதது மட்டுமல்ல. . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்போது உத்திரப்பிரதேசத்தினுடைய முதல் அமைச்சராகத்தான் இருந்தாரே தவிர இந்தியாவுக்குப் பிரதமராக ஆகவில்லை. இந்தியாவின் பிரதமராக ஆனால் தான் இதுபோன்றவற்றை அகில இந்தியாவிற்கும் நிறைவேற்ற முடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்காருங்கள். பேரவை முன்னவர் பேசும்போது எழுந்து பேசக் கூடாது, உட்காருங்கள். என்ன விளையாட்டு ?

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை இங்கேயே விட்டுவிட்டு, ஏன் என்றால் நேரம் அதிகம் இல்லை. . .

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ...

திரு. எம். அப்துல் லத்திப் : பாலு என்ன இது, உட்கார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்படி சொன்னால் உட்காரவில்லை, நட்பு முறையில் சொன்னால் உட்கார்ந்து விடுகிறார், பார்த்தீர்களா, இதுதான் கொடுமை. (சிரிப்பு)

திரு. எம். அப்துல் லத்திப் : பாலு எனக்கு பால்ய நண்பன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்குத் தெரியும், அதற்கு மேலே கிளறாதீர்கள். (சிரிப்பு) நீங்கள் இப்போது முடித்தால் நன்றாக இருக்கும். பாராட்டினுடைய உச்சத்தில் முடித்துவிட வேண்டியதுதானே !

திரு. எம். அப்துல் லத்தீப் : முடித்து விடுகிறேன். இந்தத் தீர்மானத்தை வழி மொழிந்து பேசும்போது நான் நெஞ்சார்ந்த நன்றி உணர்வோடு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்தும் அதே நேரத்தில் டாக்டர் கலைஞர் அவர்களை கலைஞராக உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுகூர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவாக எல்லோரும் தாழ்ந்த நிலையிலிருந்து அண்ணா என்றால் மேலே அண்ணாந்து அண்ணாவைப் பார்க்க வேண்டும் என்ற அளவுக்கு உயர்ந்து நிற்கக் கூடிய அன்னாந்து பார்க்கக் கூடிய அளவுக்கு உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களை இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து பார்க்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை மக்களுக்காகப் பாடுபட்ட கண்ணியமிகு காயிதே மில்லத் போன்ற தலைவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நான் நினைவு கூர்ந்து அந்தத் தலைவர்களுக்கு செலுத்த வேண்டிய மரியாதையை என்னுடைய சார்பாகவும்—இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்ற கட்சியின் சார்பாகவும் என்று கூட நான் சொல்ல மாட்டேன்— தாழ்த்தப்பட்ட,

அடக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அனைத்து மக்களின் சார்பாகவும், பெருந்தலைவர்களுக்கு நான் செலுத்தவேண்டிய அஞ்சலி முழுவதையும், மரியாதை முழுவதையும் தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

ஏன் என்றால் இதற்காக அடிப்படை இட்டதே டாக்டர் கலைஞர்தான். நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. 1975 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து டாக்டர் கலைஞர் அவர்கள் அலகாபாத் சென்றார்கள். அலகாபாத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் சென்றபோது 'ராம் கா துஷ்மன் ஆ ரஹா ஹை' என்று அவர்கள் போர்டுகளைப் போட்டார்கள். ராமனுடைய விரோதி கருணாநிதி வருகிறார். 'ராம் கா துஷ்மன் கருணாநிதி ஆ ரஹா ஹை' என்று அவர்கள் போர்டு போட்டார்கள். ஆனால் கலைஞர் சொன்னார் ராமனுடைய விரோதி கருணாநிதி அல்ல, ஏன் என்றால் கருணாநிதி என்பது ராமனுடைய மற்றொரு பெயர். (மேசையைத் தட்டும் ஒலி) ராமனுடைய விரோதி ராவணன் தான் என்று அவர்கள் சொன்னார்கள். நீதியை அடக்கி ஆண்டு கொண்டு இருக்கிற அந்த ராவணர்களுக்கு விரோத மாகப் போர் தொடுக்கத்தான் நான் அலகாபாத் வந்து இருக்கிறேன் என்று சொல்லி அந்த மாநாட்டில் மண்டல் கமிஷன் பிறகு ஏற்படுத்துவதற்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குரல் கொடுக்கின்ற முதல் அடி எடுத்துக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இன்றைக்கு நாடு அறியும். ஒருவேளை டாக்டர் கலைஞர் அவர்கள் மறந்து இருக்கக்கூடும். இப்போது அவர் களுக்கு ஞாபகப்படுத்தினால் அவரின் ஞாபகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று தேசீய முன்னணியினுடைய தேர்தல் அறிக் கையிலே கூறப்பட்டது போல் மண்டல் கமிஷன் அறிக்கை நிறை வேற்றப்பட வேண்டும். பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் (மேசை யைத் தட்டும் ஒலி) என்பதை இன்றைக்கு தேசீய முன்னணி அர சாங்கத்தில் இருப்பவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். இன்றைக்கு அவருடைய வற்புறுத்தலின்பேரில்தான் தேர்தல் அறிக்கையிலே கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதியை—10 ஆண்டு கள் அல்ல, 12 ஆண்டுகள் அல்ல, 18 ஆண்டுகள் அல்ல, பத்தாய் பறந்து பறந்துகூட ஒன்றுமே விருந்து கிடைக்கவில்லையே என்று மக்கள் தவித்துக்கொண்டிருந்த நிலை இல்லை—ஏழு மாதங்களுக்குள் இன்றைக்கு மத்திய அரசு இதை ஏற்றுக் கொள் கிறேன் என்று அறிவித்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு தூண்டுகோலாக இருந்தவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தான் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

13-35 மணி

அதுமட்டுமல்ல, முதல் தீர்மானமே இந்த சட்டசபையில் தான் நாம் நிறைவேற்றினோம். மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முதல் தீர்மானத்தை இந்தியாவிலேயே தமிழக சட்டமன்றந்தான், தலைவர் அவர்களே, தங்களுடைய தலை யாய தலைமையிலே நிறைவேற்றியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்மானத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத் தையும் இந்தியாவிலேயே நாம்தான் இன்றைக்கு நிறைவேற் றிக்கொண்டு இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மற்ற மாநிலங்களைவிட இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடையவேண்டும். எனக்குத் தெரியும், திரு. குமரி அனந்தன் போன்றவர்கள் அங்கே இருந்திருந்தால் இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். எனவே திரு. குமரி அனந்தன் மேலே மதிப்பு உண்டு. எனக்கு நம்பிக்கை உண்டு. ஏனென்றால் அவர் பச்சைத் தமிழர் என்று சொன் னாரே, அந்தப் பச்சைத் தமிழர் திரு. காமராஜரால் வளர்க்கப் பட்டவர். எனக்கு இருக்கிற ஆதங்கமெல்லாம் திரு. குமரி அனந்தன் போன்றவர்கள் எல்லாம் அங்கே இல்லாத காரணத்தால், திரு. மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் அங்கே இல்லாத காரணத்தால் வேறு யாரோ இருந்த காரணத்தால்தான் அது நிறைவேறவில்லையே தவிர, வேறல்ல. பச்சைத் தமிழர்தான், பெருந்தலைவர் காமராஜர்தான், அந்தப் பெருந்தலைவர் பச்சைத் தமிழர் காமராஜரை இன்றைக்கு நெஞ்சார்ந்த நன்றியோடு நாங்கள் இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து பார்க்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மணி அடித்துக் கொண்டே இருக்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: சரி, சரி. எவ்வளவு பேசி னாலும் அவ்வளவுதான் இல்லையா? (சிரிப்பு) எனக்குப் பிறகு பேசக்கூடிய முதல்வர் அவர்கள் எல்லாவற்றையும் முறையாகப் பேசுவார். முதல்வர் அவர்கள் ஒரு கருத்தை எவ்வளவு தெளிவாக வெளியிட்டிருக்கிறார் என்பதை தயவு செய்து இந்தப் பத்திரிகையைப் படிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்றும் பொய்யான புள்ளி விவரங்கள் அல்ல. முதல்வர் அவர்கள் சேகரித்து வைத்து, அவரே சொல்லப் போகிறார். அதனால் நான் இதைப் படிக்க வில்லை. எனவே, அதை விட்டுவிடுகிறேன்.

இன்னொன்று, என்னுடைய அருமைத் தம்பி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சிறுபான்மை பற்றி ஒன்றைச் சொனனார்கள். நான் அவருக்குச் சொல்கிறேன், கடந்த 11 ஆம் தேதி டெல்லியிலே ஒரு மாநாட்டை பிரதமர்

1990 ஆகஸ்ட் 21] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அவர்களே தொடங்கி வைத்தார்கள். நம்முடைய திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் தலைமை வகித்தார்கள். அந்தக் கூட்டத்தில் இந்தத் தொண்டனும் கலந்து கொண்டான். இந்தியா முழுவதும் இருந்து, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு, கிருஸ்துவ, முஸ்லீம், சீக்கிய, பௌத்த, சமண, பாரசீக எல்லா சிறுபான்மை மக்களும் வந்திருந்தார்கள். பிரதமர் ஒரு வாக்குறுதி கொடுத்து இருக்கிறார். அதிலே நமக்கு என்ன பங்கு கிடைக்கிறது என்று என்னைக் கேட்டால் நான் சொல்வேன், பங்கு மிக மிகக் குறைவு. எனக்கு திருப்தி இல்லை. கோபால்சிங் கமிஷன் பரிந்துரைகளை இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அந்தப் பரிந்துரைகளை—கோபால்சிங் கமிஷன் என்பது மைனாரிட்டீஸ் ப்ராபிளம்—அரசு ஏற்று அதையும் நிச்சயம் நடைமுறைப் படுத்தும் என்ற வாக்குறுதியை பிரதமர் அவர்களே அந்த மாநாட்டில் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பரிந்துரைகளிலே கூட, அவருக்கு சரியாக உச்சரிக்கத் தெரியவில்லை, ஆனால் சொன்னார், தமிழகத்திலே இதிலே யார் பயன் அடைவார்கள், கிருஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்கள், கிருஸ்தவர்களாக மாறியவர்கள், முஸ்லீம்களில் தூது குலத்தவர்கள், லப்பைகள், தக்கிணிகள்—அவர் உச்சரிப்பிலே கொஞ்சம் மாறுதல் இருந்தாலும்—குறித்து தனியாக தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் சொன்னார், வேறு மாநிலத்தைப் பற்றி அவர் விவரம் சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, போராடுபவர்கள் போராடிக்கொண்டே இருக்க வேண்டும் அழுதபிள்ளை தான் பால் குடிக்கும். எனவே திரு. சுந்தரராஜுடைய அழுகையோடு நானும் அழத் தயார். ஆனால், இந்த அரசு எப்படி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்றைக்கு நீதி வழங்கியிருக்கிறதோ அதே அடிப்படையில் Constitutional legal and statutory status will be given to the Minorities Commission என்று அவர்கள் தெளிவாக அறிவித்து இருக்கிறார்கள் மைனாரிட்டி கமிஷனுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தைக் கொடுப்போம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு நம்முடைய மைனாரிட்டி கமிஷனுக்கும் அந்த அந்தஸ்தை நம்முடைய முதல்வர் அவர்கள் கொடுப்பார்கள், நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை என்பதை உங்களுக்குத்தெரிவித்துக கொண்டு, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அமர்கிறேன்.

13-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு, அரசின் சார்பில் முன்மொழிந்துள்ள மண்டல் குழு பரிந்துரைகளை மத்தியரசு நிறைவேற்றியமைக்காக நன்றியையும், பாராட்டையும் மாமன்றத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்

என்ற கருத்து அடங்கிய தீர்மானத்தின்மீது, கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்துக்களில் அவர்கள் தெரிவித்த கோணங்கள் அல்லது பாணிகள் வேறு வேறாக இருந்தாலும்கூட, எல்லோருடைய குறிக்கோளும், இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது என்கின்ற வகையிலே அமைந்து, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளில் இழையோடிக் கொண்டிருக்கிற உண்மை என்ன என்ற அடிப்படையிலே விவாதித்திருக்கிறார்கள்; தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை, இந்த அவையிலேயுள்ள எல்லாக் கட்சியினரும், குறிப்பாக, எதிர்க் கட்சியினரைச் சார்ந்தவர்களும் இருந்து, ஆதரித் திருந்தால் நலமாக இருந்திருக்கலாம் அல்லவா என்பதைச் சொல்லாமற் சொல்லி, நமமுடைய திரு. பி. எச். பாண்டியன் அவர்கள், விட்ட குறை—தொட்ட குறை விடாத காரணத் தினால், தன்னுடைய வேதனையை இங்கே வெளிப்படுத்திக் கொண்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நீண்ட நெடுங்காலமாக, நம்முடைய கோரிக்கையாக இருந்து வந்த, மண்டல் குழு பரிந்துரைகளினுடைய நிறைவேற்றம், முதற் கட்டமாக இன்றைக்கு வெற்றி பெற்று, நம்மையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியிருக்கிறது. முழுமையாக மண்டல் குழு பரிந்துரைகளையோ அல்லது மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்கும் அப்பாற்பட்ட, இன்னும் மேலாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளையோ, சலுகைகளையோ நாம் பெற வேண்டுமென்று வாதாடுவதற்கு ஒரு அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற அளவில் இதை வரவேற்றுப் பாராட்ட அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தினுடைய தாய் நிலம், இந்தியத் திருநாட்டில்—இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையான 'தென்னகம்' என்பதும் அதுவும் குறிப்பாக, இந்தத் ''தமிழ் நிலம்'' என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நீதிக் கட்சிக் காலத்தில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்று குரல் எழுப்பப்பட்ட பின்னர், 1926–27 என்கிற கால கட்டத்தில், அன்றைய தினம் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள், அரசு ஆணை யாகப் பிறப்பித்த அந்தக் காலக் கட்டத்தின் முதற்படிதான் இன்றைக்கு அது எந்த அளவிற்கு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது ஒரு 14 அல்லது 15 உத்தியோகங்களில் யார்யாருக்கு எவ்வளவு இடம், எத்தனை பேருக்கு 4 இடம்; யாருக்கு 3 இடம்; யாருக்கு 2 இடம் என்றெல்லாம் இடங்கள் ஒதுக்கப்பட்டு, அது கூட 'ரொட்டேஷன்' முறையில்தான் வருமென்ற நிலை வகுக் கப்பட்டு இப்படி உருவானது தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

1990 ஆகஸ்ட் 21] *[டாக்டர் மு. கருணாநிதி]*

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும் கூட, இது ஏதோ காங்கிரஸ்—கழகம் இரண்டுக்குமிடையே உள்ள ஒரு போராட்டம் என்பதுபோல் எண்ணிக் கொண்டு, கருத்துக் களைப் பரிமாற வேண்டிய அவசியம் அந்தத் தரப்பிலே பேசியவர்களானாலும், இந்தத் தரப்பிலே பேசியவர்களா னாலும் இருப்பதை நான் உணராமல் இல்லை. ஆனால், என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலனில் எவ்வளவு அக்கறை உள்ளது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஆனால், காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தொடக்க காலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள் கைக்கு விரோதமாக—மாறாக, கருத்துக்களைச் சொல்லி வந்த இயக்கம் என்பதை வரலாறு கூறுகிறது. அந்தக் காரணத்தினாலே தான், காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தளபதியாக தென்னகத்திலே அன்றைக்கு உலா வந்த தந்தை பெரியார் அவர்கள் இரண்டு, மூன்று முறை நீதிக்கட்சி கடைப்பிடிக்கின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வலி யுறுத்தி அதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளாத காரணத் தினால், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டி லிருந்து, தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் தலைமை யிலே நடைபெற்ற மாநாட்டிலிருந்து, காங்கிரஸை விட்டு அவர்கள் வெளியேறினார்கள் என்பதெல்லாம் கடந்த கால சரித்திர உண்மைகள்.

13-45 மணி

அதற்குப் பிறகு திரு. ஓ. பி. ராமசாமி போன்றவர்களும், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும், காங்கிரஸ் இயக்கத்திலே பெரும் செல்வாக்கு மிக்க இடங்களைப் பெற்ற வர்கள். அந்தக் காலகட்டத்திலே தந்தை பெரியாருடைய கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக் கொண்ட திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியாரைப் பார்த்து இவர் தாடி வைக்காத ராமசாமி என்றெல்லாம் கூட கேலி பேசுகிற, எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர் களும் பெரியாருடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை களின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு பணியாற்றினார்கள். எனவே தொடக்க காலத்திலே காங்கிரஸுக்கு உடன்பாடாக அந்த இயக்கத்திலே இல்லாத ஒன்று, அதற்குப் பிறகு காங்கிரஸ் தலை எடுத்த, செல்வாக்குப் பெற்ற தலைவர் களால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, அப்போதும் அது காங்கிரஸ் கட்சியினுடைய முழு முதல் கொள்கை என்று ஏற்றுக்கொள்ளப்

படாமல், அதில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட தலைவர்களால் மாத்திரம் போற்றப்படக்கூடியதாக, பாதுகாக்கப்படக்கூடியதாக அந்தக் கொள்கை இருந்தது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

அண்மையில் கூட அ.தி.மு.க. ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 9,000 ரூபாய் என்று உச்சவரம்பைக் கொண்டு வந்த அந்தக் கால கட்டத்திலே இதை எதிர்க்கிறோம் என்று திராவிடக் கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் இயக்க ரீதியாக எதிர்ப்புக் காட்டியபோது அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை இயக்க ரீதியாக. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற நண்பர்கள், ரமணிபாய் போன்றவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்கள், மணிவர்மா போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு நாங்கள் நடத்திய கண்டனக் கூட்ட மேடைகளில் வந்து கலந்துகொண்டு 9,000 ரூபாய் உச்சவரம்பு என்று அன்றைக்குக் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கட்சி ரீதியாக இந்தக் கொள்கை எங்களுடையது என்று கூறி அதை அவர்கள் ஆதரிக்க வராவிட்டாலும் கூட, அதிலே உள்ள தனிப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் அன்றைய தினம் அதற்கு ஏற்பட இருந்த ஊனத்தைப் போக்க, ஆபத்தைத் தடுக்க, அபாயத்திலிருந்து மீட்க அவர்கள் போராடி இருக்கிறார்கள். அதைப் போல்தான் அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாத ஒன்று இது என்று அல்லாடி போன்றவர்கள் வாதாடியபோது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எல்லாம் அடிபட்டுப் போகிற நேரத்தில் இதே மன்றத்தில் நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் கோசல்ராம், ஆர். வி. சுவாமிநாதன் போன்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் இதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பேசிய பேச்சுக்கள் எல்லாம் இன்றைக்கும் பதிவேடுகளில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்போதும் நான் சொல்கிறேன். இது ஒரு கட்சியினுடைய கொள்கையாக இல்லாமல் அந்தக் கட்சியிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களால் அன்றைக்குப் பாதுகாக்கப்பட்ட ஒரு கொள்கையாகத்தான் இருந்தது என்பதற்கு இவைகள் எல்லாம் ஆதாரங்கள் ஆகும்.

இன்று இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படை அம்சமாக இருக்கின்ற பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்குப் பாராட்டு, நன்றி, என்கிற அந்தக் கருத்துக்களைப் பற்றி காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசும்போது அவர்கள் சொன்ன கருத்து ஏதோ நிலைமையை உத்தேசித்து தேவிலால் பிரச்சினைக்காக இதை

பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆதாரமாக பாரதீய ஜனதா கட்சி இப்படி சொல்லி இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். பாரதீய ஜனதா கட்சிக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையில் வேறுபாடான கருத்து உண்டு என்பதை இந்த அவையிலே உள்ள அனைவரும் மிக நன்றாக அறிவோம். இருந்தாலும் கூட நண்பர் திரு. லத்தீப் எடுத்துக் காட்டியதைப் போல தோழமையாக இருந்து ஆதரவு அளித்துக்கொண்டிருக்கிற கட்சியே எதிர்த்தாலும் கூட அதனால் வருகிற விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதை நாம் பாராட்டவேண்டும். மிகப் பெரும்பான்மையாக இருந்து அதன் காரணமாக அறிவித்தார் என்பது வேறு, சிக்கலான நேரத்தில்கூட இதை அறிவிக்கிற துணிவு, அந்த எண்ணம் அவருக்கு இருந்தது என்ற அந்த அளவில் பாராட்டுவதற்கு ஒரு தனிச் சிறப்பே இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தேவிலால் பிரச்சினைக்குப் பிறகு ஏற்பட்டதல்ல. இதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகமும் தேசிய முன்னணியில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால், இந்த வரலாறு எனக்கு மிகத் தெளிவாக முழுமையாகத் தெரியும்.

13-50 மணி

தேசிய முன்னணி, பாராளுமன்றத் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன்பு, டெல்லியிலேகூடி தேர்தல் அறிக்கையைத் தயாரித்தபோது, நானும் அந்த அறிக்கையைத் தயாரிக்கின்ற பணியிலே ஈடுபட்டு பங்கு பெற்றேன். அந்த நேரத்தில், தேவிலால் அவர்களும் இருந்துதான் இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டது.

சேர்க்கப்பட்டது மாத்திரம் அல்ல, தேவிலால் அவர்கள் தேசிய முன்னணி ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகு, துணைப்பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி ஆய்ந்து அறிக்கை தர, எப்படிச் செயல்படுவது என்பது பற்றி அறிந்து அறிக்கை தர, தேவிலால் அவர்களையே தலைவராகக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இது தேவிலால் பிரச்சினைக்காகத் தான் வந்தது என்றால், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் குழு பரிந்துரையை நிறைவேற்றுவோம் என்ற உறுதி

TRUTH ALONE TRIUMPHS

மொழி ஏற்கெனவே தரப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலிருந்தே இது தேவிலால் பிரச்சினைக்காக வந்தது என்ற வாதம் மிகத் தவறானது என்று தெரிய வரும்.

அது மாத்திரமல்ல, ஒன்றை உங்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 12–6–1990 அன்று பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதுகிறார்கள். அப்போது தேவிலால் பிரச்சினை வரவில்லை. அந்தப் பிரச்சினை ஆகஸ்டில்தான் வந்தது. கடிதம் ஜூன் மாதத்தில் எழுதப்பட்டது. எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதம் அது. எனக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அதில்,

"Dear Shri Karunanidhiji,

I am writing to you to-day on issues concerning the vital interest of the Backward Classes in our country. It has been 10 years since the Second Backward Classes Commissson headed by Sri Mandal submitted its report. This Commission has made some important recommendations on improving the conditions of the socially and educationally Backward Classes of the country. You would agree that we have to provide special safeguard for the Backward Classes. Your views on all the issues involved would therefore be of crucial importance to us. As the new Central Government is committed to taking an early decision on the recommendations of the Commission I would be grateful to hear your considered views by the end of this month. This would help us to take an early final decision on implementing the various recommendations of the Mandal Commission".

ஜூன் மாதம் 12-ந் தேதி அவர் கடிதம் எழுதி மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிடுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு, ஜூன் மாதக் கடைசிக்குள்ளாக முதலமைச்சர்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்பி, அதற்குள்ளாகக் கருத்துக்களை அறிவிக்கச் சொல்கிறார்.

அதைப் போலவே உடனடியாகத் தமிழக அரசின் சார்பில் அந்த மாத இறுதி வாரத்தில் அவருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

"Dear Prime Minister,

Thank you for your letter of 12th June calling for our State Government's views on the recommendations of the Mandal Commission I am enclosing a detailed statement, containing our views on the various recommendations of the Mandal Commission. I wouldlike to high-light a few of the salient points. As you yourself have said we have to provide special safeguards for the Backward Classes. The special

safe-guards can only be in the form of Reservation in Government services and Educational Institutions besides the various concessions for the educational and economic advancement of the Backward Classes. Such safeguards alone can ensure social justice to these disadvantaged communities as envisaged by the founding Fathers of our constitution. Regarding the list of Backward Classes to be adopted for the implementation of the concessions recommended by the Mandal Commission I would strongly urge the Government of India to adopt the State Goverments' list of Backward Classes with respect to each State. I would like to drow your particular attention to the strong recommendation of the Mandal Commission that all developmental programmes specially designed for the Backward Classes should be financed by the Central Government in the same manner and to the same extent as is being done in the case of Scheduled Castes and Scheduled Tribes. I would like to add that the urgency for the implementation of the Mandal Commission's recommendations cannot be over-emphasised and all of us look forward to your early decision on this subject which will open a new era for the Backward Classes under your dynamic leadership."

13-55 மணி

இது ஜூன் மாதத்திலே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்து, எனவே, தேவிலால் பிரச்சினைக்கும் இதற்கும் துளியும் சம்பந்தமில்லை. அதுமாத்திரமல்ல, தேவிலால் பிரச்சினையோடு சம்பந்தமுடையது என்று எண்ணுகின்றவர்களும் ஒரு விளக்கத்தைப் பெற வேண்டும். நாம் வகுத்துக் கொண்டிருக்கிற அல்லது வகுக்கப்பட்டதாய் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜாதி முறைப்படி, தேவிலால் அவர்கள் ஜாட் வகுப்பைச் சார்ந்தவர்கள். ஜாட் வகுப்பு பிற்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வகுப்பு அல்ல. எனவே, அந்த வகுப்பை தன் வயப்படுத்த வேண்டுமென்று தந்திரமாக திரு. வி.பி. சிங் அதை அறிவித்தார் என்று யாராவது எண்ணிச் சொல்வார்களேயானால் அது தவறு. பெரும்பாலான எண்ணிக்கை கொண்ட, ஜாட் வகுப்பு இதுவரையில்—நாளைக்கு சேர்க்கப்படலாம். அது வேறு விவகாரம், இதுவரை அந்த வகுப்பு—பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறாத வகுப்பு என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நான் அலகாபாத் சென்றது 1975 ஆம் ஆண்டு என்று சொன்னார். அல்ல, 1973 ஆம் ஆண்டு. மேலும் அங்கு பேசியது என்பது அல்ல. அதற்கு முன்பே திராவிட இயக்கத்தின் சார்பாக, தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா

அவர்கள், இவர்கள் எல்லாம் எடுத்து வைத்த கருத்து மாநில அளவிலே இருக்கின்ற இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்திய நாட்டின் அளவிலேயும் பரவிட வேண்டும் என்பதாகும். அந்தக் கருத்தைத்தான், பிற்படுத்தப்பட்டோர் மாநாடு அலகாபாத்தில் 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற பொழுது, அன்றைக்கு முதல்வராக ஆட்சிப் பொறுப்பிலிருந்த நான் அழைக்கப்பட்டு, அந்த மாநாட்டில் நான் பேசியபோது, மத்திய அரசு பொறுப்புகளிலும், அரசு சார்புடைய பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று அறிவித்தேன். அந்த மாநாட்டிலே அதுபோல ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து அதை நாம் வலியுறுத்திக் கொண்டு வந்த காரணத்தினால், 1978 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக ஜனதா கட்சியின் சார்பில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தபோது 20–12–1978 அன்று, மண்டல் கமிஷன் நியமிக்கப்படுமென்கின்ற அறிக்கை வெளிவந்து அது நியமிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்தப் பணி முடிவடைந்தபோது திரு. மொரார்ஜி தேசாய் பதவியில் இல்லை. அது அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம். 31–12–1980 அன்று, அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே அந்த அறிக்கை வழங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட அந்த அறிக்கை 30–4–1982 அன்று, அதாவது 2 ஆண்டுகள் கழித்துதான் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. எனவே, ஒரு பத்தாண்டுக் காலம், அந்த அறிக்கையைப் பற்றி எந்த விதமான சாதகமான பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை.

இதே மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1989 ஆம் ஆண்டு மே மாதம் மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு, பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு அவர்கள் கொடுத்த பதில் ''நீங்கள் அனுப்பிய தீர்மானம் கிடைக்கப்பெற்றோம்'' என்றுதான் வந்ததே தவிர, அதைப்பற்றிய வேறு எந்தக் கருத்தும் நமக்கு பதிலாக வரவில்லை. உண்டு, இல்லை என்று வரவில்லை. அதற்கு முன்பு கூட 1988 ஆம் ஆண்டிலேகூட மண்டல் குழு பற்றி தமிழக அரசின் சார்பாக ஒரு கடிதம் எழுதப்பட்டபோது, அதற்கு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய அரசின் சார்பில் அனுப்பப்பட்ட பதிலில் Status quo இப்பொழுது உள்ள நிலைமை நீடிக்கட்டும் பிறகு பார்க்கலாம் என்றுதான் அப்போதும் பதில் வந்திருக்கிறது.

14-00 மணி

எனவேதான் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, அது கிடப்பிலே போடப்பட்டதோ அல்லது அவர்கள் சொன்னது போல ஆராயப்பட்டதோ எனக்குத் தெரியாது. எனவே பத்தாண்டுக் காலம் மண்டல் குழுவின் பரிந்துரைகள் இந்தப் பயணத்திலே, பிற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற பயணத்திலே ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை. நான் எண்ணிப் பார்க்கிறேன், 1982 ஆம் ஆண்டிலேயே இந்தப் பரிந்துரை வந்திருக்குமானால் இன்றைய தினம் நாம் எத்தனை பிற்படுத்தப்பட்ட மக்களை மத்திய அரசு அலுவலகங்களில் பெரிய பணிகளிலே பார்த்துக் களித்திருக்க முடியும் என்று. எனவே ஒரு பத்தாண்டுக் காலத்தை இந்திய நாட்டு வரலாற்றிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் எப்படியோ இழந்து விட்டார்கள் என்பதைத் தான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது. இதைத் தான் இங்கே நண்பர் திரு. வல்லரசு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மண்டல் குழு தன்னுடைய அறிக்கையைத் தயாரித்து வழங்கியபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நிலை மத்தியிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்கி இருக்கிறது. அதை நான் புள்ளி விவரத்தோடு இங்கே சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மத்திய அரசுத் துறையிலும், தொடர்புடைய மற்றத் துறைகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பதற்கான புள்ளி விவரங்கள், மண்டல் வழங்கிய புள்ளி விவரங்கள் இவை.

பாதுகாப்புத் துறையில் கிளாஸ்—1 அதிகாரிகள் பதவி. மொத்த அலுவலர்கள் 1379 பேர். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 48 பேர். ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாச்சாரம் இல்லாவிட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 22.5 சதவிகிதம் உண்டு. 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு; 7.5 சதவிகிதம் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு. இரண்டும் இணைந்து 22.5 சதவிகிதம். அந்த 22.5 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்புத் துறையிலே என்றால், கிரேட்—1 அலுவலர் பதவியிலே அவர்களுக்குக் கிடைத்து இருக்க வேண்டியது 310 இடம். விகிதாச்சாரப்படி, உரிமைப்படி கிடைக்க வேண்டியது 310 இடம். ஆனால் அவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வில்லை. கிடைத்த இடமே 48 தான். மொத்தம் 1379-ல் தாழ்த்தப்பட்டோருக்கு 48 இடம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 9 இடம். இன்று 27 சதவிகிதம் தரப்பட்டிருக்கிறதே, இதன்படி ஏற்கனவே தரப்பட்டிருந்தால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய இடம் 372. பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய 372 இடங்களுக்குப் பதிலாக பாதுகாப்புத்

துறையிலே 9 இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஏனைய உயர் வகுப்பாருக்கு 1322 இடங்கள் கிடைத்திருக்கின்றன. பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-2 அதிகாரிகள் பதவியில் மொத்த அலுவலர்கள் எண்ணிக்கை 7752. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 803, பிற்படுத்தப்பட்டவர்கள் 187. உயர் வகுப்பினர் 6762. கிளாஸ் 3, கிளாஸ் 4, ஆக இரண்டிலும் பாதுகாப்புத் துறையில் மொத்த அலுவலர்கள் 2127. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 604. பிற்படுத்தப்பட்டவர்கள் 131. இன்று அறிவித்துள்ள 27 சதவிகிதம் கிடைக்குமேயானால் 574 பேர் அங்கே இடம் பெற்றிருக்க முடியும். பாதுகாப்புத் துறையிலே அனைத்துத் தர அதிகாரிகளையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் மொத்த அலுவலர்கள் 11258 பேர். இதிலே உயர் சாதிக்காரர்கள் 10476 பேர்; பிற்படுத்தப்பட்டவர்கள் 327 பேர்; தாழ்த்தப்பட்டவர்கள் 1455 பேர்.

நிதித் துறையில் கிளாஸ் 1 அதிகாரிகள் மொத்தம் 1008 பேர். இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 66 பேர், உயர் சாதிக்காரர்கள் 941 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 1. ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்பார்களே அதைப்போல, 1008 கிளாஸ் 1 அதிகாரிகள் உள்ள நிதித் துறையிலே உயர் வகுப்பார் 941, பிற்படுத்தப்பட்டவர்கள் ஒன்றே ஒன்று.

14-05 பணி

நிதித் துறையிலே கிளாஸ்-2 அதிகாரிகள் மொத்தம் 2,824. அதிலே உயர் சாதிக்காரர்கள் 2507 பேர், தாழ்த்தப்பட்டோர் 306, பிற்படுத்தப்பட்டோர் 11. நிதித் துறையிலே கிளாஸ்-3, கிளாஸ்-4, மொத்தம் 821 பேர். அதிலே தாழ்த்தப்பட்டோர் 202; உயர் சாதிக்காரர்கள் 606; பிற்படுத்தப்பட்டோர் 13 பேர்.

செய்தித் துறையில் மொத்தப் பணியாளர்கள் 16,505. அதில் உயர் வகுப்பார் 11,498 பேர், தாழ்த்தப்பட்டவர் 3,660, பிற்படுத்தப்பட்டவர் 1,347. திட்டத் துறை மொத்தப் பணியாளர்கள் 6,917 பேர். அதிலே உயர் வகுப்பார் 4,582 பேர். தாழ்த்தப்பட்டவர் 977 பேர், பிற்படுத்தப்பட்டவர் 358 பேர். சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் மொத்தப் பணியாளர்கள் 9,185 பேர். அதிலே உயர் சாதிக்காரர்கள் 6,463 பேர், தாழ்த்தப்பட்டவர்கள் 2,181, பிற்படுத்தப்பட்டவர்கள் 541. குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்தப் பணியாளர்கள் 307. தாழ்த்தப்பட்டவர் 47 பேர், உயர் சாதிக்காரர்கள் 260, பிற்படுத்தப்பட்டவர் இல்லை.

மண்டல் இந்த அறிக்கையைத் தயாரித்து இந்தப் பரிந்துரை வழங்கியபொழுது அவர் அளித்த புள்ளி விவரம் இது. இதற்குப் பிறகும் ஒரு சமூக நீதிக்காக நாம் போராடுவது எவ்வளவு நியாயமானது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனவே தான் இன்றைக்குக் கிடைத்து இருக்கின்ற இந்த சமூக நீதி தமிழக வரலாற்றிலே ஏற்கனவே கிடைத்த ஒன்று என்றாலும் கூட அது இன்றைக் குப் பெருகிப் பல்கி வளர்ந்து கொண்டிருக்கிறது என்றாலும் கூட, இந்தியத் திருநாட்டிலே ஒரு பெரிய சரித்திரத் திருப் பத்தை, ஒரு புதிய சகாப்தத்தை இன்றைக்கு உருவாக்கி இருக் கிறது. அதனால் தான் பிரதமர் வி. பி. சிங் அவர்கள் 7-ஆம் தேதி இதை அறிவித்து விட்டு, ஆகஸ்ட் 9-ஆம் தேதி அதைப் பற்றிப் பேசும்பொழுது, "In fact this is the realisation of the dream of Bharath Ratna Dr. Ambedkar, of the great Periyar Ramasami and Dr. Ram Manohar Lohia. It has been the aspirations of a very large section of people who in the present system are condemned to social inequity since their very birth to their last breath and whatever they may be, whatever their performance, whatever their merit, they are unable to break the shackles throughout their life." என்கின்ற முன்னுரையோடு அவருடைய பேச்சைத் தொடங்கி இந்த மண்டல் குழுவினுடைய பரிந் துரையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏன் தனக்கு ஏற்பட்டது என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின்றார்.

அவர் இதை அறிவித்ததிலேயே எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் என்பதை அவர் பயன்படுத்தி உள்ள வார்த்தை களை எல்லாம் பார்க்கும்பொழுது மிக நன்றாகத் தெளிவாக நமக்குப் புரிகின்றது. சொல்லப்படுகின்ற குறை இது. கல்விச் சாலைகளுக்கும் அங்கே கிடைக்கின்ற வாய்ப்புகளுக்கும் இதிலே இடம் இல்லை. சிறுபான்மை மக்களுக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்பது போன்ற சில கருத்துக்களைத் தான் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இது முதல் கட்டம் என்று குறிப்பிட்டு இருக்கிறார். முதல் கட்டமாக இதை அறிவித்து இருக்கின்றோம். அடுத்தடுத்து மேலும் மேலும் உணரக் கூடிய பல்வேறு யோசனைகளை, கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அதை விஸ்தரிக்க முடியும், விரிவாக்க முடியும் என்ற கருத்தோடுதான் அவைகளை எல்லாம் எடுத்துக் காட்டி இருக்கின்றார். பொருளாதார அடிப்படை வேண்டும் என்று சொல்கின்றார்கள். இதுவரையிலே போராடியது எல்லாம் பொருளாதார அடிப்படை கூடாது; சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் பின்தங்கிய மக்கள் என்று தான் இருக்க வேண்டும் என்றுதான் ஒரு எழுச்சி 1952 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன் றைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்குக் குழி தோண்டப் பட்டபொழுது தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்திலே அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்தாலும்கூட

இந்தக் கொள்கையிலே ஒன்றுபட்டு நின்று, தமிழகத்தில் அன்றைக்கு ஒரு பெரும் புயல் வீசியபொழுது தான் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதன் முதலாக அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த முதல் திருத்தத்தைக் கொண்டுவரும் பொழுது அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முன்பு கூட எனக்குத் தெரியும், நான் படித்து இருக்கின்றேன். ஓ. பி. இராமசாமி போன்றவர்கள் நேரு அவர்களிடத்திலே அணுகி பிற்படுத்தப்பட்ட மக்களை சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் என்று அறிவிக்க வேண்டும் என்று சொன்னபொழுதெல்லாம் நேரு அவர்கள் மிகக் கடுமையாகப் பதில் சொன்னார் என்பதும், அதன் காரணமாக ஓ. பி. இராமசாமி அவர்கள் பதவியையே ராஜினாமா செய்யத் தயாராக இருந்தார் என்பது வரலாறு ஆகும்.

14-10 மணி.

ஆனால் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட பெரிய கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு அந்தக் கிளர்ச்சியைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"You know what was the immediate cause for bringing the first amendment to the Constitution. You all know that there are certain happenings in Madras State which led us to make this amendment."

என்று சொல்லிவிட்டுத்தான் அந்தத் திருத்தத்தை பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்திருக்கிறார். அப்படிக் கொண்டு வருகிறபோது குறிப்பிடுகிறார். இப்போது சில பத்திரிகைகளிலே—இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கட்டம் கட்டிப் போடுகிறார்கள், ஜவஹர்லால் நேரு அப்பொழுது பொருளாதார அடிப்படையை ஒத்துக்கொள்ளவில்லை என்று. இவையெல்லாம் நேரு இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பே சொன்னது. ஆனால் திருத்தம் கொண்டுவரும் போது பண்டித நேரு என்ன சொன்னார்? பொருளாதார அடிப்படை என்று அமைத்துவிட்டால், பொருளாதார நிலை என்பது நிரந்தரமானது அல்ல. ஒருவன் இந்த ஆண்டு பணக்காரனாக இருப்பான். அடுத்த ஆண்டு அவனுக்கு வருமானம் இல்லாமல் போய்விடும். அடுத்த ஆண்டு வருமானம் வரக்கூடும். எனவே பொருளாதார அடிப்படை என்று போடக் கூடாது என்பதுதான் நேரு அவர்கள் அன்றைக்கு அளித்த தெளிவான பதிலாகும். எனவேதான் நம்முடைய தமிழகத்திலே கூட இது வரையிலே நாம் சோஷயலி, எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொன்னாலுங்கூட

1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

'சோஷயலி' என்பதைத்தான் அதிகமாக வற்புறுத்தி அந்தச் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடுகளைச் செய்து வந்திருக்கிறோம்.

இங்கே நம்முடைய நண்பர் சுந்தரதாஸ் குறிப்பிட்டதைப் போல, மற்ற நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல படித்த வீட்டுப் பிள்ளைகள்தான் மேலும் பட்டதாரிகளாக வருகிறார்கள், எனவே அதுவே ஒரு தனி சமுதாயமாக ஆகிவிடுகிறது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்திக் கொண்டு, வளர்ந்தவர்களே வளர்கிறார்கள், படித்தவர்களே மேலும் படிக்கிறார்கள், கிராமத்தில் உள்ள படிக்காத வீட்டுப் பிள்ளைகள் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள் என்றார். இந்தக் குறையைக் களைவதற்காகத்தான் இந்த ஆண்டு நம்முடைய அரசு 5 மதிப்பெண்கள் தருகிறது. திரு. பாண்டியன் சொன்னதைப் போல இலவசமாக தருவதல்ல. அவன் 230 மதிப்பெண்கள் வாங்கினால், அதற்குப் பிறகு தருவது தான் இந்த 5 மதிப்பெண்கள். திடீரென்று 230 மதிப்பெண்கள் தருகிறேன் என்று யாருக்கும் தருவதில்லை. அந்த 5 மதிப்பெண் தருகிற நேரத்தில் நல்ல மார்க் எடுத்தவன் கெடுக்கப்படுகிறான் அல்லது பாதிக்கப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். அப்படி பாதிக்கப்படுகிறவர்கள் பட்டதாரிக் குடும்பத்திலிருந்து வந்தவர்களாகத்தான் இருக்க முடியும். முதன் முதலாக ஒரு குடும்பத்திலிருந்து வருகிற பட்டதாரி என்று எடுத்துக்கொள்ளும் போது அவன் உள்ள படியே பட்டதாரியாக அந்தக் குடும்பம் இல்லாததற்கு முழு முதற் காரணம் வறுமையாகத்தான் இருக்க முடியும். அப்படி வறுமை நிலைமையிலே இருக்கிற காரணத்தால்தான் அங்கே பட்டதாரிகள் உருவாகவில்லை. அப்படி உருவாகாத குடும்பத்திலிருந்து பட்டதாரி வர வேண்டும் என்பதற்காகத்தான் 5 மதிப்பெண்கள் அதிகமாக தருவது என்று இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு அது நல்ல முறையிலே செயல்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், இந்த ஆண்டிலிருந்துதான் செயல்படுகிறது. நம்முடைய திரு. குமரி அனந்தன் எடுத்துக்காட்டியதைப் போல பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1957ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் என்ற பட்டியல் தயாரித்து இந்த அவையிலே வைத்தார்கள். நான் அந்த இடத்திலே உட்கார்ந்து படித்துப் பார்த்திருக்கிறேன். அப்படி வைக்கப்பட்ட அறிக்கை சலுகைகளுக்காகத்தான், உரிமைகளுக்காக அல்ல. ஒன்லி ஃபார் கன்செஷன். கன்செஷன் வேறு, ரிசர்வேஷன் வேறு. அதாவது இலவசக் கல்வியைப் பெற, கல்வியிலே ஊக்கம் அளிக்க, இப்படிப்பட்ட காரியங்களுக்காக மிகவும் பிற்படுத்தப்பட்

டோர் என்ற பட்டியல் அன்றைக்கு உருவாக்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கிளர்ச்சி மதிக்கப்பட்டு, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் வன்னியர்கள், முக்குலத்தோர் அதாவது சீர் மரபினர் என்ற இரண்டு பெரும் சமூகத்தினர் மற்றும் பல சிறுசிறு சமூகத்தினர் இணைக்கப்பட்டு அந்த 20 சதவீதம் என்பதை இன்றைக்கு நல்ல முழுப் பயனோடு வெற்றிகரமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

14-15 மணி

அதற்கு மேலும் ஒரு துணையாக, அவர்களை கை தூக்கி விடத்தான் ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் அல்லது உடன்பிறப்புக்கள் பட்டதாரியாக இல்லாவிட்டால் அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தர வேண்டும் என்று அறிவித்ததன் காரணமாக, நான் இங்கே பெருமையோடு, மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே வந்துள்ள பட்டியல்படி பொறியியல் கல்லூரியில் 3,876 பேர் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். அதிலே 504 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன் பெற்று இன்றைக்குப் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் இதுவரையில் வந்துள்ள பட்டியலின்படி மொத்தம் 957 பேர்களில் 212 பேர்கள் இந்த ஐந்து மதிப்பெண்ணால் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறார்கள். கால்நடை பட்டப் படிப்பில் 268 மொத்தம். அதிலே 105 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரியில் 1,348 பேர்கள். மூன்றாண்டு பட்டப் படிப்பில் 492-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 309 பேர். ஐந்தாண்டுப் படிப்பிலே 438 பேருக்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 232 பேர். மாலைக் கல்லூரியில் 418-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 212 பேர். மொத்தம் 1,348 பேர்களுக்கு 753 பேர் இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றிருக்கிறார்கள். வேளாண்மைக் கல்லூரியில் 388 பேர் மொத்தம். அதிலே இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றவர்கள் 246 பேர். இவர்கள் எல்லாம் பட்டணக் கரையிலிருந்து வந்தவர்கள் அல்ல. கிராமங்களிலிருந்து, பட்டிதொட்டிகளிலிருந்து, குக்கிராமங்களிலிருந்து, நமக்கே பெயர் விளங்காத பல ஊர்களிலிருந்து வந்துள்ள கிராமப்புறத்து இளைஞர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது இதை இலவசம் என்று சொல்லி நாம் ஒதுக்கி தள்ளிவிட முடியாது. இது இலவசம் அல்ல. நமக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குகிற பரவசம் இது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1990 ஆகஸ்டு 21]

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தாக மீண்டும் சொல்கிறேன். கருத்தாகத்தான் சொல்கிறேன், எதிர்க்கவில்லை. எதிர்ப்பு என்பது வேறு, கருத்து என்பது வேறு. இன்றைக்கு சாதாரணமாக ஒரு அரசு அலுவலகத்தில் பியூனாக இருப்பவன் கூட பட்டம் பெற்று விடுகிறான். நாம் திறந்தவெளி பல்கலைக் கழகங்களையெல்லாம் திறந்து வைத்திருக்கிறோம். ஒரு பக்கம் எல்லோரையும் பட்டம் பெறலாம் என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் பட்டத்தைப் பெற்றால் ஐந்து மார்க் உன்னுடைய குழந்தைக்கு குறையும் என்று சொல்வோமானால் முரணாக வருவதைப் போல தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஐந்து மார்க் குறைக்கப்படும் என்று சொல்லவில்லை. ஐந்து மார்க் அதிகப்படுத்தப்படும் என்று சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தைத் தருகிறோம். பட்டதாரிகள் இருக்கிற வீடுகளிலிருந்து இன்னொரு பட்டதாரி வர வேண்டாம் என்பதல்ல. அதையும் மீறி வருகிறார்கள். நான் இங்கே படித்த இந்தப் பட்டியலில் 2,000 பேருக்கு 500 பேர் வந்திருக்கிறார்கள் என்றால் மிச்சம் 1,500 பேர்கள் பட்டதாரிகள் வீடுகளிலிருந்து வந்தவர்கள் தான். எனவே, பட்டதாரிகளே இல்லாத கிராமத்து விவசாயிகளின் வீட்டிலிருந்து ஒருவன் பட்டதாரியாக வர வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட புரட்சிகரமான மாற்றம் இது. இதைக் கூட அகில இந்திய அளவிலே தேசிய முன்னணி அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துமானால் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிற இந்தப் பிரச்சினை கூட இல்லாமல் போய் விடும் என்றே கருதுகிறேன். இப்போது தான் உண்மையிலேயே 'சோசியலி' என்ற அளவோடு நின்ற இந்தப் பிரச்சினை 'எஜுகேஷனலி பேக்வேர்டிற்கும்' இது கிடைத்து இருக்கிறது. அதை நாம் செய்திருக்கிறோம். தமிழ் நாட்டிலே இந்தியாவினுடைய தென்கோடி முனையிலே உருவாகிற கருத்துக்களை இன்று அகில இந்தியாவும் ஏற்றுக் கொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு நாம் தான் விடுமுறை விட்டோம். இன்றைக்கு அகில இந்தியா அளவில் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவிற்கு விடுமுறை என்று வி. பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மே தின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று நாம் தான் விட்டோம். இன்றைக்கு அகில இந்திய அளவில் மே தின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று தேசிய முன்னணி அரசின் தலைவர் வி. பி. சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

வி. பி. சிங் காங்கிரசில் இருந்தபோது என்ன செய்தார் என்று கேட்டார்கள். காங்கிரசில் இருந்த காரணத்தால் செய்யவில்லை, தேசிய முன்னணி அரசை உருவாக்கிய காரணத்

தால் செய்கிறார் என்பதைத் தான் அதற்குப் பதிலாக அளிக்க முடியும் என்று கூறி, இவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள், வேகமான பேச்சுகள், விறுவிறுப்பான பேச்சுகள் இருந்தாலும் கூட அனைவரும் ஒருமுகமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நம்முடைய சுந்தரதாஸ் போன்றவர்கள் எனக்கும் நன்றி தெரிவித்ததற்காக அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், நண்பர் பாண்டியன், நம்முடைய லத்தீப் அவர்கள், நம்முடைய வல்லரசு அவர்கள் மற்றுமுள்ள நண்பர்கள், ஆளும் கட்சி சார்பில் ஆதரித்துப் பேசிய இரகுமான்கான் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இதை ஆதரிக்க எப்போதுமே கடமைப்பட்டவர். நல்லவேளையாக தேசிய முன்னணி அரசு கொண்டு வந்த காரணத்தால் இது போதவில்லை என்று சொல்லவில்லை. இல்லாவிட்டால் இதுவும் போதவில்லை என்று சொல்வார். இருந்தாலும் அனைவரும் மனநிறைவு அடையத்தக்க அளவுக்கு ஒரு அருமையான தீர்மானத்தை இங்கே நாம் வழி மொழிந்திருக்கிறோம். நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்த அத்தனை பேருக்கும் நன்றி கூறி இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340-வது பிரிவின்படி திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஆகஸ்ட் 7-ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் அறிவித்ததுடன் அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது.

12-5-1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை

மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது''.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, இந்தத் தீர்மானம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியில் அனைத்து மக்களின் ஒருமுகமான ஆதரவு பெற்ற அனைத்துப் பிரதிநிதிகளாலும் ஒருமுகமாக நிறைவேற்றப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

14-20 மணி

7. சென்னை மத்திய சிறையிலிருந்து சில கைதிகள் தப்பிவிட்டதாக வந்துள்ள செய்தி (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், அதைப்போலவே, ஜனதா தளக் கட்சியினுடைய நண்பர் விஜயராகவன் அவர்களும் ஒரு தகவலை என்னிடத்திலே சொல்லி, அதைப் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். முழுவதுமாக அறிந்து விளக்கம் அளிப்பதாகச் சொன்னேன். அதன்படி இந்த அறிவிப்பு.

நேற்று இரவு 12 மணிக்கு மேல் 4 மணிக்குள்ளாக சென்னை மத்திய சிறையிலே இருந்து ஐந்து கைதிகள் ஒரே அறையிலே இருந்தவர்கள் தப்பி உள்ளார்கள். இவர்கள் வைக்கப்பட்டு இருந்த அறைக்கதவு இரவு பூட்டப்படவில்லை என்றும் பின்பு பூட்டியுள்ளதா என்பதை வார்டர்கள் சரி பார்க்கவில்லை என்றும் முதல் அறிவிப்பு கூறுகிறது. இது சிறைத்துறையிலே பணிபுரியும் கிரேடு 1 மற்றும் கிரேடு 2 வார்டர்களின் கூட்டு சதியோடு கூடிய ஏற்பாடு என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் இன்றைக்குக் காலையில் 12 சிறைப் பணியாளர்களை சிறைத் துறைத் தலைவர் வேலை நீக்கம் செய்ததோடு அவர்களில் மூவர்மீது கிரிமினல் பிராசிகியூசன் செய்யப் புகார் மனு கொடுத்து, அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, அந்த மூவர் மீதும் விசாரணை நடந்து வருகிறது. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் ;

மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது''.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, இந்தத் தீர்மானம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியில் அனைத்து மக்களின் ஒருமுகமான ஆதரவு பெற்ற அனைத்துப் பிரதிநிதிகளாலும் ஒருமுகமாக நிறைவேற்றப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

14-20 மணி

7. சென்னை மத்திய சிறையிலிருந்து சில கைதிகள் தப்பிவிட்டதாக வந்துள்ள செய்தி (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், அதைப்போலவே, ஜனதா தளக் கட்சியினுடைய நண்பர் விஜயராகவன் அவர்களும் ஒரு தகவலை என்னிடத்திலே சொல்லி, அதைப் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். முழுவதுமாக அறிந்து விளக்கம் அளிப்பதாகச் சொன்னேன். அதன்படி இந்த அறிவிப்பு.

நேற்று இரவு 12 மணிக்கு மேல் 4 மணிக்குள்ளாக சென்னை மத்திய சிறையிலே இருந்து ஐந்து கைதிகள் ஒரே அறையிலே இருந்தவர்கள் தப்பி உள்ளார்கள். இவர்கள் வைக்கப்பட்டு இருந்த அறைக்கதவு இரவு பூட்டப்படவில்லை என்றும் பின்பு பூட்டியுள்ளதா என்பதை வார்டர்கள் சரி பார்க்கவில்லை என்றும் முதல் அறிவிப்பு கூறுகிறது. இது சிறைத்துறையிலே பணிபுரியும் கிரேடு 1 மற்றும் கிரேடு 2 வார்டர்களின் கூட்டு சதியோடு கூடிய ஏற்பாடு என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் இன்றைக்குக் காலையில் 12 சிறைப் பணியாளர்களை சிறைத் துறைத் தலைவர் வேலை நீக்கம் செய்ததோடு அவர்களில் மூவர்மீது கிரிமினல் பிராசிகியூசன் செய்யப் புகார் மனு கொடுத்து, அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, அந்த மூவர் மீதும் விசாரணை நடந்து வருகிறது. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் ;

ஜெயிலர்	1
அசிஸ்டன்ட் ஜெயிலர்	1
சீப் வார்டர்கள்	3 பேர்கள்
கிரேடு-1 வார்டர்	1
கிரேடு-2 வார்டர்	6
	12 பேர்கள்

தப்பியவர்கள் ஐந்து பேர்கள் ஆட்டோ சங்கர், செல்வம், மோகன், குமார், ராஜா என்கிற ஹரிகிருஷ்ணன். இவர்களில் முதல் மூவரும் ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். மற்ற இருவரும் வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். இன்று செய்தி தெரிந்ததும் காவல்துறை, தப்பியவர்களைப் பிடிக்க ஒரு சிறப்பு அணி அமைத்து, அவர்களைத் தேடும் பணியில் ஈடுபடுத்தி உள்ளது. இது தவிர, அவர்களை உடனே பிடிக்க எல்லாக் காவல் நிலையத்திற்கும் செய்தி தரப்பட்டு உள்ளது. சென்னை நகரப் போலீஸ் மிகவும் உஷார் நிலையில் வைக்கப் பட்டு உள்ளது என்பதை அவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிரா கரிக்கும் தீர்மானத்தை அளித்த பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. பி. மாரப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

* 20–8–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஜெயிலர்	1	
அசிஸ்டன்ட் ஜெயிலர்	1	
சீப் வார்டர்கள்	3	பேர்கள்
கிரேடு-1 வார்டர்	1	
கிரேடு-2 வார்டர்	6	
	12	பேர்கள்

தப்பியவர்கள் ஐந்து பேர்கள் ஆட்டோ சங்கர், செல்வம், மோகன், குமார், ராஜா என்கிற ஹரிகிருஷ்ணன். இவர்களில் முதல் மூவரும் ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். மற்ற இருவரும் வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். இன்று செய்தி தெரிந்ததும் காவல்துறை, தப்பியவர்களைப் பிடிக்க ஒரு சிறப்பு அணி அமைத்து, அவர்களைத் தேடும் பணியில் ஈடுபடுத்தி உள்ளது. இது தவிர, அவர்களை உடனே பிடிக்க எல்லாக் காவல் நிலையத்திற்கும் செய்தி தரப்பட்டு உள்ளது. சென்னை நகரப் போலீஸ் மிகவும் உஷார் நிலையில் வைக்கப் பட்டு உள்ளது என்பதை அவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிரா கரிக்கும் தீர்மானத்தை அளித்த பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. பி. மாரப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

* 20–8–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பங்கேற்பவர் ஒரே ஒருவர், மிகமிகச் சுருக்கமாக திரு. உ. ரா. வரதராசன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் முழு மனதோடு நன்றி உணர்வோடு வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலே உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகளை நகரியமாக மாற்றுவது என்பதற்கான விதி இருந்து பல்வேறு நகரியங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. நகரியம் என்பது நகராட்சிக்கு மேற்பட்ட ஒரு அமைப்பு போல ஒரு தோற்றம் அதிலே இருந்து வந்தது. ஆனால் உண்மையிலே ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற அமைப்புதான் உயர்வான அமைப்பு என்கிற காரணத்தாலே, நகரியமாக அறிவிக்கப்பட்டவை, எந்தக் கால கட்டத்திலே அறிவிக்கப்பட்டாலும், அவை தேர்ந்தெடுக்கப்படுகிற நகராட்சித் தலைவர், நகர மன்றத் தலைவர் உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சி மன்றக் குழுவாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து அம்பத்தூரை முதன்மையாக வைத்து, எனக்கு முன்னாலே இந்த மன்றத்திலே இதை வில்லிவாக்கம் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய மறைந்த தோழர் திரு. வி. பி. சிந்தன் அவர்களாலே இது வலியுறுத்தப்பட்டது. அந்தக் கால கட்டத்திலே அந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கேட்பாரிடத்திலே கேட்டால்தான் கோருகின்ற கோரிக்கை நியாயமாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு இடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்று இந்தக் குறுகிய காலக் கட்டத்திலே இதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறபோது, அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் நகரத்திற்கு சிறப்பான விதிமுறைகளோடுகூட, அவசரச் சட்டமாக இது பிறப்பிக்கப்பட்டு, வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களோடு கூடவே அம்பத்தூர் நகராட்சியாக மாற்றப்பட்டு, அதற்கும் சேர்த்து தேர்தல் நடைபெறுவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

14–25 மணி

அம்பத்தூர் நகராட்சி மட்டுமல்ல. இந்தச் சட்டத் திருத்தம் காரணமாக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வேறு பல நகரியங்களை நகராட்சிகளாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையும் இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்தால் இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டுவருவதன் மூலம், நகரியங்களாக ஆட்சி மன்றக் குழு தேர்ந்தெடுக்கப்படாமலே உள்ள, இந்த

அமைப்புகளையும் கூட, நகராட்சிகளாக மாற்றுவதற்கு இது வகை செய்கிறது என்கின்ற காரணத்தினாலே இது ஒரு துவக்கம், இன்னும் பல்வேறு நகரியங்களை நகராட்சிகளாக ஆக்குவதற்கு இது வழி வகுக்கும். மேட்டூர், பவானிசாகர், அதேபோன்று நெய்வேலி, மதுக்கரை இன்னும் செங்கை—அண்ணா மாவட்டத்திலே இருக்கக் கூடிய 7 நகரியங்கள், தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல்வேறு நகரியங்களும் நகராட்சிகளாக மாற்றப் படுவதற்கு ஒரு வழி திறந்து வைக்கும். தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை நிர்வாகத்தினுடைய வரலாற்றிலேயே இது வரை, ஒரு வழிப் பாதையாகவே இருந்து வந்தது. நகராட்சி நகரியமாக மாறும், அல்லது பேரூராட்சி நகரிய மாக மாறும். நியமன உறுப்பினர்களைக் கொண்ட நகரியம் என்பது நகராட்சியாக மாறுவது என்பது, இதுதான் உள்ளாட்சித் துறை வரலாற்றிலேயே முதன் முதலாக நடக்கக் கூடியது என்பதனாலே இது தொடர்ந்து மேலும் பல நகரியங்களை நகராட்சிகளாக மாற்றுவதற்கு வழி வகுக்க வேண்டுமென் கின்ற முறையிலே இதை வழி மொழிந்து, இந்த சட்ட திருத் தத்திற்கு, சட்ட முன்வடிவிற்கு என்னுடைய ஆதரவை—இந்தப் பசி நேரத்திலேயும் பொறுமையாக இருந்து கேட்கின்ற உங்கள் மத்தியிலே—தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளை ஏற்று செயற்படுத்தியிருக்கக் கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களுக்கும், முன்னால் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து இதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கும் தற்போது அத் துறையை நிர்வகித்து வரும் அமைச்சர், மாண்புமிகு திரு. கோ. சி. மணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அம்பத்தூர் தொகுதி மக்கள் சார்பிலேயும் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன் வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22–8–1990) 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 13–12–1989 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியல் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

45. கும்பகோணம், தூய இருதய தொழுநோய் மையத்தினருக்குச் சொந்தமான டி. ஏ. ஒ. 9195 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 23–4–1990 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

46. சென்னை, புற்றுநோய் நிலையத்தினருக்குச் சொந்தமான டி. எஸ். ஏ. 8700 எண் கொண்ட வாகனத்திற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 701 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-8-1990) 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 13-12-1989 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியல் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

45. கும்பகோணம், தூய இருதய தொழுநோய் மையத் தினருக்குச் சொந்தமான டி. ஏ. ஓ. 9195 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 23-4-1990 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

46. சென்னை, புற்றுநோய் நிலையத்தினருக்குச் சொந்த மான டி. எஸ். ஏ. 8700 எண் கொண்ட வாகனத்திற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 31-3-1990 ஆம் நாளிட்ட 701 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

47. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 30—9—1988 ஆம் நாளிட்ட 2156 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. விற்பனை அல்லது உபயோகத்திற்காக, எந்த ஒரு உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழையும் எந்த ஒரு இயக்கூர்தியின் மீது வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 20—2—1990 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

49. 1987—88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. 1987—88 ஆம் ஆண்டிற்கான அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

51. 1984—85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிருவாக அறிக்கை [(1948 ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்·

53. தமிழ்நாட்டின் மாநில பொதுத்துறை நிறுவனங்க மீதான ஆய்வுரை, 1988-89 (ஆங்கிலம்).

47. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 30–9–1988 ஆம் நாளிட்ட 2156 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. விற்பனை அல்லது உபயோகத்திற்காக, எந்த ஒரு உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழையும் எந்த ஒரு இயக்கூர்தியின் மீது வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 20–2–1990 ஆம் நாளிட்ட 06 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

49. 1987–88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. 1987–88 ஆம் ஆண்டிற்கான அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

51. 1984–85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிருவாக அறிக்கை [(1948 ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்·

53. தமிழ்நாட்டின் மாநில பொதுத்துறை நிறுவனங்க மீதான ஆய்வுரை, 1988–89 (ஆங்கிலம்).